# 276 பாடல் பெற்ற சிவஸ்தலங்கள்

முன்னுரை ..... 12
1. சிதம்பரம் - ஆகாய லிங்கம் ..... 13
2. பாசுபதேஸ்வரர் - திருவேட்களம் -கடலூர் ..... 14
3. சிவபுரி - உச்சிநாதர் -மத்யானேஸ்வரர் ..... 15
4. பால் வண்ண நாதர்- திருக்கழிப்பாலை - கடலூர் ..... 16
5. ஆச்சாள்புரம் - ருணலிங்கேஸ்வரர் & வெண்ணீறு உமையம்மை ..... 17
6. திருக்கடையூர் - அமிர்தகடேஸ்வரர் ..... 18
7. திருமேனி அழகர்- மகேந்திரப் பள்ளி ..... 19
8. முல்லை வன நாதர் ..... 20
9. சுந்தரேஸ்வரர்- அன்னப்பன் பேட்டை ..... 21
10. சாயாவனேஸ்வரர் ..... 22
11. பல்லவனேஸ்வரர் - காவிரிபூம்பட்டினம் ..... 23
12. ஸ்வேதாரண்யேஸ்வரர் - திருவெண்காடர் ..... 24
13. ஆரண்யேஸ்வரர் - திருக்காட்டு பள்ளி ..... 25
14. திருக்குருகாவூர் - வெள்ளடை நாதர் ..... 26
15. சட்டை நாதர் திருக்கோவில்- சீர்காழி ..... 27
16. சப்தபுரீஸ்வரர்-திருக்கோலக்கா ..... 28
17. வைத்தியநாதர்- வைத்தீஸ்வரன் கோவில் ..... 29
18. கண்ணாயிரமுடையார் -குறுமாணக்குடி ..... 30
19. கடைமுடி நாதர் -கீழையூர் ..... 31
20. மகாலட்சுமிபுரீஸ்வரர் -திரு நின்றியூர் ..... 32
21. சிவலோக நாதர் -திருப்புன்கூர் ..... 33
22. சோமநாதர் -நீடூர் ..... 34

23. ஆபத்சகாயேஸ்வரர் - பொன்னுர் (திரு அன்னியூர்)....35
24. கல்யாண சுந்தரேஸ்வரர் - மணவாளேஸ்வரர் ....36
25. ஐராவதேஸ்வரர்....37
26. திருமணஞ்சேரி - கீழைத்திருமணஞ்சேரி....38
27. வீரட்டேஸ்வரர் -திரு குறுக்கை....39
28.குற்றம் பொறுத்த நாதர் ....40
29. குந்தளேஸ்வரர்- திருக்குரக்கா....41
30. மாணிக்க வண்ணர் - திரு வாளப்புத்தூர் ....42
31. திரு நீலகண்டேஸ்வரர்- இலுப்பைபட்டு (நாகப்பட்டினம்) ....43
32. துயர் தீர்த்த நாதர்(தெட்ஷிணா மூர்த்தி) -ஓமாம்புலியூர் - கடலூர்....44
33. பதஞ்சலீஸ்வரர் -கானாட்டம்புலியூர்....45
34. சவுந்தரயேஸ்வரர் - திருநாரையூர் ....46
35.அமிர்தகடேஸ்வரர்-திருக்கடம்பூர்....47
36. பசுபதீஸ்வரர் - பந்தநல்லூர் (தஞ்சாவூர்)....48
37. அக்னீஸ்வரர் - கஞ்சனுர் ....49
38. கோடிஸ்வரர்- திருக்கோடிக்காவல்....50
39. பிராணநாதேஸ்வரர் - திருமங்கலக்குடி ....51
40. அருணஜடேஸ்வரர்- திருப்பனந்தாள்- தஞ்சாவூர்....52
41. பாலுகந்தநாதர்- திருவாய்பாடி-தஞ்சாவூர் ....53
42. சத்தியகிரீஸ்வரர்....54
43. கற்கடேஸ்வரர் - திருந்துதேவன் குடி- தஞ்சாவூர்....55
44. யோகநந்தீஸ்வரர் ....56
45.கோடீஸ்வரர்- கொட்டையூர் -தஞ்சாவூர்....57
46. எழுத்தறிநாதர் - இன்னம்பூர் -தஞ்சாவூர்....58
47. சாட்சிநாதேஸ்வரர் - திருப்புறம்பியம் - தஞ்சாவூர் ....60
48. விஜயநாதேஸ்வரர் - திருவிஜயமங்கை -தஞ்சாவூர்....61
49. வில்வவனேஸ்வரர்- திருவைகாவூர் -தஞ்சாவூர்....62
50. தயாநிதீஸ்வர்ர்- வடகுரங்காடுதுறை ....63

51. ஆபத்சகாயர் - திருப்பழனம் - தஞ்சாவூர்........64
52. ஐயாரப்பன் - பஞ்ச நதீஸ்வரன் திருவையாறு........65
53. நெய்யாடியப்பர் - தில்லை ஸ்தானம் தஞ்சாவூர்........66
54. வியாக்ரபுரீஸ்வரர் - தஞ்சாவூர்........67
55. வைத்தியநாதர் - திருமழபாடி........68
56. ஆலந்துறையார் - அரியலூர்........69
57. செம்மேனி நாதர் - திருக்கானூர்........70
58. சத்தியவாகீஸ்வரர்- அன்பிலாந்துறை........71
59. ஆம்ரவனேஸ்வரர் -மாந்துறை திருச்சி........73
60. திருமூலநாதர் - திருப்பாற்றுரை திருச்சி........74
61. ஜம்புகேஸ்வரர்- திருவானைக்கா........75
62. ஞீலிவனேஸ்வரர் - திருப்பைஞ்ஞீலி திருச்சி........76
63. மாற்றுரைவரதீஸ்வரர் - திருவாசி - திருச்சி........77
64. மரகதாசலேஸ்வரர் -ஈங்கோய்மலை (திருச்சி)........78
65. இரத்தினகிரீஸ்வரர் - அய்யர் மலை கரூர்........79
66. கடம்பவனேஸ்வரர் - குளித்தலை -கரூர்........80
67. பராய்த்துறை நாதர் -திருச்சி........81
68. உஜ்ஜீவன நாதர் - உய்யக்கொண்டான் மலை- திருச்சி........82
69. பஞ்சவர்ணேஸ்வரர் - திருமுக்கீச்சுரம் - உறையூர்........83
70. தாயுமானவர்- மலைக்கோட்டை -திருச்சிராப்பள்ளி........84
71. எறும்பீஸ்வரர்- திருவெறும்பூர் ( திருச்சி)........85
72. திருநெடுங்களநாதர் - திருநெடுங்குளம் - திருச்சி........86
73. அக்னீஸ்வரர் -திருக்காட்டுப்பள்ளி -தஞ்சாவூர்........87
74. ஆத்மநாதேஸ்வரர் - திருவாலம் பொழில்........88
75. புஷ்பவனேஸ்வரர்- மேலைத்திருப்பூந்துருத்தி -தஞ்சாவூர்........89
76. பிரம்மசிரகண்டீஸ்வரர் - கண்டியூர்........90
77. திருச்சோற்றுத்துறைநாதர் - திருச்சோற்றுத்துறை (தஞ்சாவூர் )........91
78. வேதபுரீஸ்வரர் - வாழைமடுநாதர்- திருவேதிகுடி........92

79. வசிஷ்டேஸ்வரர்- தென்குடித் திட்டை ........ 93
80. பசுபதீஸ்வரர் - பசுபதி கோவில் ........ 94
81.சக்கரவாகேஸ்வரர் ........ 95
82. பாலைவனேஸ்வரர்- பாபநாசம் ........ 96
83. பஞ்சவர்ணேஸ்வரர் - கல்யாணசுந்தரேஸ்வரர் -நல்லூர் ........ 97
84. பசுபதீஸ்வரர் - ஆவூருடையார்- கோவந்தகுடி தஞ்சாவூர் ........ 98
85. சிவக்கொழுந்தீசர் ........ 99
86. கர்ப்பரட்ம்பிசாம்பிகை - முல்லை வனநாதர் - திருக்கருகாவூர் ........ 100
87. தேனுபுரீஸ்வரர்- பட்டீசுவரம் தஞ்சாவூர் ........ 101
88. சோமேசர் திருக்கோவில் - கீழபழயாறை வடதளி தஞ்சாவூர் ........ 102
89. திருவலஞ்சுழி நாதர்-தஞ்சாவூர் ........ 103
90. கும்பேஸ்வரர் - மகாமகம்- கும்பகோணம் ........ 104
91. நாகேஸ்வரர் - கும்பகோணம் ........ 106
92. சோமேஸ்வரர்- கும்பகோணம் ........ 107
93. நாகேஸ்வரர் -திருநாகேஸ்வரம் ........ 108
94. மகாலிங்கம் - திருவிடை மருதூர் ........ 109
95. ஆபத்சகாயேஸ்வரர்- தென்திருகுரங்காடுதுறை ........ 110
96. திருநீலகண்டேஸ்வரர்- திருநீலக்குடி தஞ்சாவூர் ........ 111
97. வைகல்நாதர் -திருவைகல்- நாகப்பட்டினம் ........ 112
98. உமாமகேஸ்வரர் ........ 113
99. கோகிலேஸ்வரர்- திருக்கோழம்பியம் ........ 114
100.கோமுக்தீஸ்வரர் - திருவாவடுதுறை ........ 115
101. உத்தவேதீஸ்வரர்- குத்தாலம் ........ 116
102. வேதபுரீஸ்வரர்- தேரழுந்தூர் ........ 117
103.மாயூரநாதர் - மயிலாடுதுறை ........ 118
104. உச்சிரவனேஸ்வரர் -திருவிளர் நகர் - நாகபட்டினம் ........ 119
105. வீரட்டேஸ்வரர்- திருப்பறியலூர் ........ 121
106. ஸ்வர்ணபுரீஸ்வரர்- செம்பொனார் கோவில் ........ 127

107. நற்றுணையப்பர்- புஞ்சை ........ 128
108. வலம்புரநாதர் - மேலப் பெரும்பள்ளம் ........ 129
109. தான்தோன்றீஸ்வரர்- ஆக்கூர் ........ 130
110. பிரம்மபுரீஸ்வரர் - திருக்கடவூர் மயானம் - நாகப்பட்டினம் ........ 132
111. சுந்தரேஸ்வரர் - வேடமூர்த்தி திருவேட்டக்குடி -புதுச்சேரி ........ 133
112. பார்வதீஸ்வரர் - புதுச்சேரி ........ 135
113. யாழ்மூரிநாதர் - தருமபுரம் -புதுச்சேரி ........ 136
114. தர்ப்பாண்யேஸ்வரர் - திருநள்ளாறு ........ 137
115. ஐராவதீஸ்வரர்- திருக்கோட்டாறு - திருவாரூர் ........ 138
116. பிரம்மபுரீஸ்வரர்-- அம்பர், அம்பல் திருவாரூர் ........ 140
117. மகாகாளிநாதர் - திரு மாகாளம் திருவாரூர் ........ 142
118. மேகநாதர் -திருமீயச்சூர் ........ 143
119. சகல புவனேஸ்வரர் -திருமீயச்சூர் ........ 144
120. முக்தீஸ்வரர் -சிதலப்பதி (திருவாரூர்) ........ 145
121. சேஷபுரீஸ்வரர் - திருப்பாம்புரம் ........ 146
122. சூஷ்ம புரேஸ்வரர் - செருகுடி ........ 147
123. திருவீழிநாதேஸ்வரர் - கல்யாண சுந்தரேஸ்வரர் ........ 148
124. அக்னிபுரீஸ்வரர் -அன்னியூர் ........ 150
125. சற்குணேஸ்வரர் -கருவேலி (திருவாரூர் ) ........ 151
126. பிரணவேஸ்வரர் - திருப்பந்துறை ........ 152
127. சித்தநாதேஸ்வரர்- திருநறையூர் ........ 153
128. படிக்காசு நாதர் - அழகாபுத்தூர் ........ 154
129. சிவகுருநாதர்- சிவபுரம் ........ 155
130. அமிர்தகலசநாதர் -சாக்கோட்டை ........ 156
131. சற்குணலிங்கேஸ்வரர்- கருக்குடி ........ 157
132. வாஞ்சிநாதர் - திரு வாஞ்சியம் ........ 158
133. மதுவனேஸ்வரர் -நன்னிலம் திருவாரூர் ........ 160
134. பசுபதீஸ்வரர் - திருக்கொண்டீஸ்வரம் ........ 161

135. அழகியநாதர் - திருப்பனையூர் ..... 162
136. வீரட்டானேஸ்வரர்- திருவிற்குடி ..... 163
137. அக்னிபுரீஸ்வரர் - திருப்புகலூர் ..... 166
138. வர்த்தமானீஸ்வரர் - திருப்புகலூர் ..... 168
139. இராமநாத சுவாமி -திருக்கண்ணபுரம் ..... 170
140. திருப்பயற்று நாதர் -திருப்பயத்தங்குடி ..... 171
141. உத்திராபதீஸ்வரர் - திருவாரூர் ..... 172
142. இரத்தினகிரீஸ்வரர் - மாணிக்க வண்ணர் -திருமருகல் ..... 173
143. அயவந்தீஸ்வரர்- சீயாத்த மங்கை ..... 174
144. காயாரோகணேஸ்வரர் -நாகப்பட்டினம் ..... 175
145. நவநீதேஸ்வரர் - சிக்கல் ..... 176
146. கேடிலியப்பர் - கீழ்வேளூர் ..... 177
147. தேவபுரீஸ்வரர் -தேவூர் ..... 178
148. திருநேத்திர நாதர்-திருப்பள்ளி முக்கூடல் ..... 179
149. தியாகராஜர் - திருவாரூர் ..... 180
150. அசலேஸ்வரர் - திருவாரூர் ..... 181
151. பதஞ்சலி மனோகர் - திருவாரூர் ..... 182
152. கரவீரநாதர் - கரைவீரம் (திருவாரூர்) ..... 183
153. அபிமுக்தீஸ்வரர் -பிரியநாதர் - மணக்கால் ஐயம்பேட்டை ..... 184
154. நர்த்தனபுரீஸ்வரர் -திருத்தலையலங்காடு ..... 185
155. கோணேஸ்வரர் -குடவாசல் ..... 187
156. சாரபரமேஸ்வரர் -திருச்சேறை ..... 188
157. ஞான பரமேஸ்வரர் -திருமெய்ஞானம் - தஞ்சாவூர் ..... 189
158. செம்பொன் நாதர் - ஆண்டான் கோவில் ..... 190
159. ஆபத்சகாயேஸ்வரர்-ஆலங்குடி ..... 191
160. பாதாளேஸ்வரர் - அரித்துவார மங்கலம் ..... 192
161. சாட்சி நாதர் -அவளிவணல்லூர் ..... 193
162. பரிதியப்பர் -தஞ்சாவூர் ..... 195

163. வெண்ணிக் கரும்பேஸ்வரர் ........ 196
164. சதுரங்க வல்லபநாதர் -பூவனூர் - திருவாரூர் ........ 197
165. நாகநாதர் - பாமணி திருவாரூர் ........ 198
166. பாரிஜாதவனேஸ்வரர் - திருக்களர் திருவாரூர் ........ 199
167. பொன்வைத்த நாதர்-சித்தாய்மூர் ........ 200
168. மந்திரபுரீஸ்வர்ர் - கோவிலூர் ........ 201
169. சற்குணநாதர்- இடும்பாவனம் ........ 202
170. கற்பகநாதர் - கற்பகநாதர்குளம் ........ 203
171. நீள்நெறி நாதர் -தண்டலச்சேரி ........ 204
172. கொழுந்தீஸ்வரர் -கோட்டூர் ........ 205
173. வண்டுறைநாதர் - திருவண்டுதுறை (திருவாரூர்) ........ 206
174. வில்வநாதர் - திருக்கொள்ளம்பதூர் ........ 207
175. ஜகதீஸ்வரர்- ஓகைப் பேரையூர் ........ 208
176. அக்னீஸ்வரர்- திருக்கொள்ளிக்காடு ........ 209
177. வெள்ளி மலை நாதர் -திருத்தங்கூர் ........ 210
178. நெல்லிவன நாதர் - திருநெல்லிக்கா ........ 211
179. இரத்தினபுரீஸ்வர்- திருநாட்டியத்தான் குடி ........ 212
180. கண்ணாயிரநாதர் - திருக்காரவாசல் ........ 213
181. நடுதறி நாதர் - திருகன்றாய்பூர் ........ 214
182. மனத்துணை நாதர் - வலிவலம் ........ 215
183. கைச்சினேஸ்வரர்- கச்சனம் ........ 216
184. பிரம்மபுரீஸ்வரர்- திருக்குவளை ........ 218
185. வாய்மூர் நாதர் -திருவாய்மூர் நாதர் ........ 219
186. திருமறைக்காடர் -வேதாரண்யம் ........ 220
187. அகத்தீஸ்வரர்- அகஸ்தியன் பள்ளி ........ 221
188. அமுதகடேஸ்வரர்- கோடியக்காடு ........ 222
189. தூவாய் நாதர் -திருவாரூர் ........ 223
190. மீனாட்சி சுந்தரேஸ்வரர் - மதுரை ........ 224

191. திருவாப்புடையார்- மதுரை ........ 225
192. சத்தியகிரீஸ்வரர்- திருப்பரங்குன்றம் ........ 226
193. ஏடகநாதர் -திருவேடகம் ........ 227
194. கொடுங்குன்றநாதர் - பிரான்மலை ........ 228
195. திருத்தளிநாதர்- திருப்புத்தூர் ........ 229
196. விருத்தபுரீஸ்வரர் - புதுக்கோட்டை ........ 230
197. இராமநாதர் - இராமேஸ்வரம் ........ 231
198. ஆதிரத்தினேஸ்வரர் -திருவாடானை ........ 232
199. சொர்ணகாளீஸ்வரர் - காளையார் கோவில் ........ 233
200. புஷ்பவனேஸ்வரர் -திருப்புவனம் ........ 235
201. சங்காரண்யேஸ்வரர் - தலைச்சங்காடு ........ 236
202. திருச்சுழியல் - திருமேனி நாதர் ........ 237
203. குற்றால நாதர் - திரிகூடமலை ........ 238
204. நெல்லையப்பர்- திருநெல்வேலி ........ 239
205. அவிநாசிநாதர் -அவிநாசி (திருப்பூர் ) ........ 240
206. திருமுருகநாதர்- திருமுருகபூண்டி ........ 241
207. சங்கமேஸ்வரர்- பவானி ........ 242
208. அர்த்தநாரீஸ்வரர் - திருச்செங்கோடு ........ 243
209. கல்யாண விகீர்தீஸ்வரர் -வெஞ்சமாங்கூடலூர் ........ 244
210. மகுடேஸ்வரர் - திருப்பாண்டி கொடுமுடி ........ 245
211. கல்யாண பசுபதீஸ்வரர் - கருவூர் ........ 246
212. திருவட்டத்துறை- தீர்த்தபுரீஸ்வரர் ........ 247
213. பிரளயகாலேஸ்வரர்-பெண்ணாடம் ........ 249
214. நர்த்தன வல்லபேஸ்வரர் - திருக் கூடலையாற்றுர் - கடலூர் ........ 250
215. சுவேதாரண்யேஸ்வரர் - இராஜேந்திரப் பட்டினம் ........ 251
216. சிவக்கொழுந்தேஸ்வரர் -கடலூர் ........ 252
217. மங்களபுரீஸ்வரர் -திருச்சோபுரம் ........ 253
218. வீரட்டானேஸ்வரர் -திருவதிகை ........ 254

219. பக்தஜனேஸ்வரர் - திருநாவலூர் ........ 255
220. விருத்தகிரீஸ்வரர் - விருத்தாசலம் ........ 256
221. சொர்ணகடேஸ்வரர் -நெய்வணை (விழுப்புரம்) ........ 257
222. வீரட்டேஸ்வரர்-திருக்கோவிலூர் ........ 259
223. அதுல்யநாதேஸ்வரர்- அறகண்டநல்லூர் ........ 260
224. மருந்தீசர்- மருதீசர்- திருஇடையாறு ........ 261
225. கிருபாபுரீஸ்வரர் - திருவெண்ணெய் நல்லூர் ........ 262
226. சிஷ்டகுரு நாதேஸ்வரர் ........ 263
227. வடுகீஸ்வரர்- திருவாண்டார் கோவில் ........ 264
228. வாமனபுரீஸ்வரர்- திருமாணிக்குழி ........ 266
229. பாடலீஸ்வரர் -திருப்பாதிரிப்புலியூர் ........ 267
230. சிவலோக நாதர் -கிராமம் விழுப்புரம் ........ 269
231. பனங்காட்டீஸ்வரர் -பனையபுரம் ........ 270
232. அபிராமேஸ்வரர் -திருஆமத்தூர் ........ 272
233. அருணாச்சலேஸ்வரர்- அண்ணாமலையார்- திருவண்ணாமலை ........ 273
234. ஏகாம்பரேஸ்வரர் - காஞ்சிபுரம் ........ 277
235. திருமேற்றளீஸ்வரர் - காஞ்சிபுரம் ........ 278
236. ஓணகாந்தேஸ்வரர்- காஞ்சிபுரம் ........ 279
237. அநேகதங்காவதேஸ்வரர்- காஞ்சிபுரம் ........ 280
238. சத்யநாதர் - காஞ்சிபுரம் ........ 281
239. வாலீஸ்வரர்- கொய்யாமலர் நாதர் - குரங்கணில்முட்டம் ........ 282
240. திருமாகறலீஸ்வரர் - திருமாகறல் காஞ்சிபுரம் ........ 284
241. வேதபுரீஸ்வரர்- திருவோத்தூர் ........ 285
242. கயிலை நாதர் - திருக்கயிலாயம் ........ 287
243. தாளபுரீஸ்வரர் - திருப்பனங்காடு ........ 299
244. வில்வநாதேஸ்வரர் -திருவில்லம் ........ 300
245. மணிகண்டீஸ்வரர் - திருமால்பூர் ........ 301
246. ஜலநாதேஸ்வரர் - தக்கோலம் வேலூர் ........ 302

247. தெய்வநாயகேஸ்வரர் - எலுமியன்கோட்டூர் ....... 303
248. திரிபுராந்தகர் -கூவரம் -திருவள்ளூர் ....... 304
249. வடாரண்யேஸ்வரர் -திருவாலங்காடு ....... 305
250. வாசீஸ்வரர் - திருப்பாசூர் ....... 306
251. ஊன்றீஸ்வரர் -திருவள்ளூர் ....... 307
252. சிவாநந்தீஸ்வரர் - திருக்கள்ளில் ....... 308
253. காளத்தியப்பர் - காளஹஸ்தி ....... 309
254. படம்பக்கநாதர் -திருவொற்றியூர் ....... 310
255. திருவல்லீஸ்வரர் - பாடி திருவலிதாயம் ....... 311
256. மாசில்லாமணீஸ்வரர் -வடதிருமுல்லைவாயில் ....... 312
257. வேதபுரீஸ்வரர் - திருவேற்காடு ....... 313
258. கபாலீஸ்வரர் - மயிலாப்பூர் ....... 314
259. கச்சபேஸ்வரர் / மருந்தீஸ்வரர் /விருந்திட்ட ஈஸ்வரர் ....... 315
260. மருந்தீஸ்வரர் - திருவான்மியூர் ....... 316
261. இடை சுர நாதர் -ஞானபுரீஸ்வரர் ....... 317
262. வேத புரீஸ்வரர் - திருக்கழுகுன்றம் ....... 318
263. ஆட்சீஸ்வரர் - அச்சிறுபாக்கம் ....... 319
264. சந்திரமவுலீஸ்வரர் -வக்ராபுரி ....... 320
265. அரசலீஸ்வரர் -ஒழிந்தாயம்பட்டு ....... 321
266. மகாகாளேஸ்வரர் -இரும்பை ....... 322
267. மகாதேவர் -திருவஞ்சிக்குளம் ....... 323
268. மகாபலேஸ்வரர் -திருக்கோகர்ணம் ....... 324
269. மல்லிகார்ஜுனர் - ஸ்ரீசைலம் ....... 325
270. கோணேஸ்வரர்- திரிகோணமலை ....... 326
271. திருக்கேதீஸ்வரர் - மன்னார் மாவட்டம் இலங்கை ....... 327
272. புண்ணியகோடியப்பர் - திருவிடைவாய் ....... 328
273. அகஸ்தீஸ்வரர் - கிளியனுர் ....... 329
274. கேதாரீஸ்வரர் - கேதார்நாத் ....... 330

275. பசுபதிநாதர் - நேபாளம் ........ 331
276. அனேகதங்கநாதர்- கௌரிகுண்ட் ........ 332
ஜோதிர்லிங்கம்-12 ........ 333

# முன்னுரை

ஜனவரி 1 2017 ஆரம்பித்து தினம் ஒரு பாடலை எழுத நினைத்தேன். தினமும் ஈசனை நினைக்கவே இந்த முயற்சி. முதல் 15 நாட்களுக்கு விநாயகர் முதல் அனுமன் வரை பல கடவுள்களைப்பு பற்றிப் பாடினேன் . அதற்கு பிறகு மகா விஷ்ணுவின் 108 திவ்ய தேசங்களையும் 276 பாடல் பெற்ற சிவஸ்தலங்களையும் பற்றி எழுத ஆவல் பிறந்தது. ஒருநாள் விஷ்ணு ஒரு நாள் சிவன் என்று இத்தலங்களைப் பற்றி பாடல் வரிகளில் தல வரலாற்றை சொல்ல முயற்சி செய்துள்ளேன். டிசம்பர் மாதம் 31 ஆம் 365 பாடல்கள் நிறைவு பெற்றன. அதற்க்கு பிறகு 2018 இல் தொடர்ந்து எழுதினேன். எண்ணிக்கைக்கு அப்பாற்பட்டவர் அதனால் சில நாட்கள் 2 அல்லது 3 பாடல்கள் எழுதி ஜனவரி 31 2018 இன்றோடு 399 பாடல்கள் .
இந்த நேரத்தில் சிவ ஸ்தலங்களின் பாடல் கையேட்டை காஞ்சிபுரத்து காமாட்சி அம்மனும் ஏகாம்பரேஸ்வரரும் கோவிலில் நேரிடையாக ஆசிகள் அளித்தது கூடுதல் தகவல்.
இந்த இமாலய சாதனைக்குப் பல நண்பர்கள் பலர் உறுதுணையாக இருந்தார்கள். பாடலின் பாமாலையை அந்த எல்லாம் வல்ல ஈசனுக்கு சமர்ப்பிக்கிறேன் .
இதில் ஏதேனும் பிழைகள் இருந்தால் அவர் மன்னிப்பாராக!

# 1. சிதம்பரம் - ஆகாய லிங்கம்

சித்தம் அறியுமோ சிதம்பர ரகசியமே
புத்திக்குப் புரியுமோ பொன்னம்பல உருவமே

இல்லையென்று சொல்லாது இங்கிவர் ஆடிட
தில்லைப் பெருவெளியில் தினமும் திருவாதிரையே

நால்வர் வழிகாட்டிய நல்ல திருமுறையே
பால்தேன் போல் பாடிய தேவாரமே

மூலமாய் நின்றதிரு மூலநாதர் உடன்
ஆலம் விழுங்கிய அதிசய லிங்கமே

ஆடும் சிதம்பரமே அம்பல ரகசியமே
தேடும் பக்தருக்குத் தெரியும் தரிசனமே

ஆதியும் இன்றி அந்தமும் இன்றி
மீதியே இல்லாது மேவிய ஆகாயமே

எங்கும் பரவினாலும் என்கண் அறியாதே
பொங்கும் வாயுவை புலன்மட்டும் அறியுமே

ஒருநொடி காற்றின்றி ஓருயிரும் வாழாதே
அருவமாய் நின்றிடும் ஆகாய அதிசயமே

சிதம்பரம் 274 பாடல் பெற்ற சிவஸ்தலங்களில் இது முதன்மையான ஸ்தலம். சிதம்பர ரகசியம் - சித் + அம்பரம்- சித் - அறிவு அம்பரம்- வெட்ட வெளி மனிதா உன்னிடம் ஒன்றும் இல்லை என்பது அதன் பொருள். இங்கு அருவமாய் ஆகாய உருவில் இருக்கிறார் என்பது ஐதீகம் . சமீபத்தில் இவரை தரிசிக்கும் வாய்ப்பு கிட்டியது. மேலும் தகவல்களுக்கு http://temple.dinamalar.com/New.php?id=492 அணுகவும்.

# 2. பாசுபதேஸ்வரர் - திருவேட்களம் -கடலூர்

வில்லை ஏந்தியவனுக்கு வேடனாய் வந்திங்கு
இல்லையென்று சொல்லாது ஈன்ற ஈசனே
வில்லால் அடிபட்டு வேடனுருவம் கலைத்து
நல்ல நாயகிக்கும் நற்குணம் தந்தவனே

பாசுபதம் அளித்து பாண்டவனுக் கருளி
மாசுகள் நீக்கி மனிதரைக் காப்பவனே
மண் உருண்டைதனில் மகத்துவம் கொண்டு
விண்ணி லிருந்துதிரு வேட்களம் புகுந்தவனே

தடமாய் லிங்கம் தாங்கிய வடுவால்
இடப்புற நல்லாளை இதமாய் அடக்கி
உடலில் அடிபட்டு உயிர்களைத் தாங்கியவனே
கடலூரில் அமைந்த கருணைக் கடலே

நாவுக்கரசரும் சம்பந்தரும் நாவினால் பாடிட
பூவுலகில் ஈசனாய் பூத்திட்ட சுயம்பூவே
செல்வம் அளித்து செருக்கினைப் போக்கி
அல்லல் நீக்கி ஆருயிர் காப்பவனே

*தேவாரம் அல்லல் இல்லை அருவினை தானில்லை மல்கு வெண்பிறை சூடும் மணாளனார் செல்வனார் திருவேட்களம் கை தொழ வல்லராகில் வழியது காண்மினே*

மேலும் விவரங்களுக்கு

http://temple.dinamalar.com/New.php?id=855

# 3. சிவபுரி - உச்சிநாதர் -மத்யானேஸ்வரர்

சிவபுரியின் சுயம்பு சிவலிங்க உச்சிநாதரே
தவமாய் சம்பந்தருக்கு தமிழறிவு தந்தவரே

அகத்திய முனிவருக்கு அருள்காட்சி அளித்தவரே
மகத்துவம் பொருந்திய மத்யான ஈஸ்வரே

பசியால் வாடிய பரசிவ அடியாருக்கு
ருசியுடன் உணவளித்து ரசிக்க செய்தவரே

அறுபத்தி மூவருக்கும் அறுசுவை உணவளித்து
உருவத்தில் பணியாளாய் ஒளிந்த ஈசனே

திருஞான சம்பந்தர் திருவருள் பெற்றிட
திருநெல் வாயிலுக்குத் தினமும் வந்தாரே

அருமருந்தென்று உன்னருளை அடியார் பெற்றிட
திருமுறை தேவாரமென்ற தேனமது கிடைத்ததே

கனகாம்பிகை தாயாரும் கருணை பொங்கிட
மனதால் அருளிஎன் மாசுகள் களைவாளே

அன்னையும் நீயே அருள்தந்தையும் நீயே
என்னைக் காத்திடும் எம்பெருமான் நீயே

பெற்றவர் உற்றவர் பேணிப் போற்றிட
கற்றதும் அறிவதும் காண்பதும் நீயே !

*தேவாரம் மறையினார் மழுவாளினால் மல்கு பிறையினார் பிறையோடி*
*லங்கிய நிறையினார நெல்வாயிலார் தொழும் இறைவான ரெம் துச்சியாரே*

http://temple.dinamalar.com/New.php?id=846

# 4. பால் வண்ண நாதர்- திருக்கழிப்பாலை - கடலூர்

பால்வண்ண நிறத்தில் பளிங்கான பைரவரே
கால்பட்டு பிளந்ததிரு கழிப்பாலை பைரவரே

சூல்தனை காத்து சுகப்பேறுதரும் பைரவரே
மால் மருகனை மகனாய்பெற்ற பைரவரே

நீலக் கழுத்துடன் நெடுமுடிசடை பைரவரே
கோலமாய் கபிலரின் கோயில் பைரவரே

காலத்தால் அழியாத கால பைரவரே
சாலச் சிறந்த சிவஞான பைரவரே

ஆலகாலம் விழுங்கிய ஆண்டவ பைரவரே
தாளம் தப்பாது தாண்டவமாடும் பைரவரே

அண்டம் இயங்க ஆடும்ஆனந்த  பைரவரே
கண்டு களிப்போருக்கு காமதேனு பைரவரே

காமனை அழித்த கபாலி பைரவரே
சோமசுந்தர நடராஜ சிதம்பர பைரவரே

மேற்கோள் தேவாரம்

எங்கேனும் இருந்துன் அடியேன் உனைநினைந்தால்
அங்கே வந்து என்னொடும் உடனாகி நின்றருளி
இங்கே என்வினையை அறுத்திட்டு எனையாளும்
கங்கா நாயகனே கழிப்பாலை மேயானே.

மேலும் விவரங்களுக்கு

http://temple.dinamalar.com/New.php?id=849

# 5. ஆச்சாள்புரம் - ருணலிங்கேஸ்வரர் & வெண்ணீறு உமையம்மை

பாடலாகி பதிந்து பண்ணாகி உருகி
ஆடல் அரசன் அருமருந்து சிவனே
காதல்  நாயகி களங்கமில்லா உமையே
ஒத திருநீற்றை உலகுக்கு தந்தாளே

சம்பந்தர் திருமணத்தில் சகலரும் மகிழ
அம்மையும் வெண்ணீறு ஆச்சாள்புரத்தில் அளிக்க
இம்மைக்கும் மறுமைக்கும் இல்லாத வினைகள்
தம்மாலே மறையும் தாரணி மகிழுமே

காக முனிவர் கால்வைக்கத்  தயங்கி
வேகமாய் தலை வீழநடந்து வந்தாரே
நாகப் பட்டினத்திற்கு நாமும் சென்றால்
ஆகாத கடனும் ஆளை விடுமே

உடலால் போக உடனே முடியாதெனினும்
திடமாய் எண்ணி தினமும் பாடி
கடமை தவறாது கருத்துடன் ஒதி
உடமை அவனுக்கே உரித்தாக தொழுவோமே

*தேவாரம் காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி  ஓதுவார் தம்மை நன்னெறிக் குய்ப்பது வேத நான்கினு மெய்ப்பொருளாவது நாதம் நாமம் நமச்சிவாய*

*அன்புறு சிந்தைய ராகி அடியவர் நன்புறு நல்லூர்ப் பெருமண மேவிநின் இன்புறும் எந்தை இணையடி ஏத்துவார் துன்புறுவார் அல்லர் தொண்டு செய்வாரே*

http://temple.dinamalar.com/New.php?id=410

# 6. திருக்கடையூர் - அமிர்தகடேஸ்வரர்

ஆபரணத்தில்  தோன்றிய அபிராமி அதிசயமே
ஆபரணத்தை பௌர்ணமி ஆக்கிய அதிசயமே
ஆயுளை நீட்டிடும் அதிசய லிங்கமே
பாயும் ஒளியான பரவச லிங்கமே

அந்தி வேளையில் அமாவாசை தினத்தில்
அந்தாதி பாடிய அபிராம பட்டர்
வந்தனம் செய்திட வானில் வந்த
சந்திர பிம்பமே சரித்திரத் தலமே

கதியென்று உன்னைக் கட்டிய மார்க்கண்டேயனுக்கு
பதினாறு வயதில் பருவத்தை நீட்டினாய்
அதிரடியில் காலனும் ஆங்கே மடிந்திட
விதிப்படி  இயங்காது வையம் தவித்ததே

சூலத்தால் எமனைவதம் செய்த சிவனே
காலடியில் கிடந்த காலனை உயிர்ப்பித்து
மறுபடி உலகம் மாற்றங்களுடன் இயங்க
திருக்கடையூர் தலத்தில் திகழும் அமிர்தமே

மறைந்து இருக்கும் மகேந்திர யந்திரமே
வரையறை இல்லாது வளரும் காலமே
அழியாது காக்கும் அமிர்த லிங்கமே
எழிலான தலத்தில் எழுந்த சுயம்புவே

மேலும் விவரங்களுக்கு

http://temple.dinamalar.com/New.php?id=639

*அபிராமி அந்தாதி பாடல் 79அமாவாசை அன்று  பௌர்ணமி போல் அம்பாளின் தோடை வானில் நிலவாய் வரவைத்த பாடல்*
*விழிக்கே அருள் உண்டு, அபிராம வல்லிக்கு, வேதம் சொன்னவழிக்கே வழிபட நெஞ்சு உண்டு எமக்கு, அவ்வழி கிடக்க,பழிக்கே சுழன்று, வெம் பாவங்களே செய்து,  பாழ் நரகக்குழிக்கே அழுந்தும் கயவர் தம்மோடு, என்ன கூட்டு இனியே*

# 7. திருமேனி அழகர்- மகேந்திரப் பள்ளி

அழகான திருமேனி அழகர்  கொண்டிட
அழகான வடிவுடன் அம்மன் இணைந்திட
திருமேனி அழகன் திருக்கோவிலில்  அமர்ந்து
இருவரும் இணைந்த எழிற்கோலம் என்னே

இந்திரன் சாபத்தை இனிதே போக்கி
மந்திரம் முழங்க மகேந்திர ஈசனே
அந்தியில் சந்திரனும் அவனைத் தொழுதிட
தந்திரமாய் பேரொளி தானாக விழுமே

பங்குனி மாதத்தில் பாயும் ஒளியாய்
லிங்கம் பளபளக்க லீலைகள் செய்யும்
இங்கும் அங்கும் எங்கும் பரவி
பொங்கும் கருணை பொலிவாய்ப்  பொழியும்

மதியைக் காத்து மனதைக் கட்டி
விதியை மாற்ற வழிகள் காட்டி
அதிசயம் செய்து ஆட்கொண் டெம்மை
துதிக்க செய்யும் தூய உணர்வே !

மேலும் விவரங்களுக்கு
http://temple.dinamalar.com/New.php?id=833

# 8. முல்லை வன நாதர்

கிள்ளி வளவன் கீறிய வாளில்
உள்ளிருக்கும் லிங்கம் உருவத்தைக் காட்டிட
முல்லைக் கொடியில் மறைந்த லிங்கம்
முள்ளை நீக்கி முக்தியைக் கொடுக்கும்

மாசிலா மணீஸ்வரர் மாறாத உண்மையை
ஆசியுடன் கோதை அம்மைக்கு அருளிட
பள்ளியறை இல்லாத பரமேஸ்வரன் கோயில்
பள்ளியாய் மாறி பஞ்சாட்சர குருவாகும்

தோல்நோய் நீங்கிட தொல்லைகள் நீங்கிட
வாள்கொண்ட தழும்பை வாங்கிய லிங்கம்
ஆள்உயர மூன்றடியில் ஆளான லிங்கம்
தாள்பணிய வாமதேவர் தகப்பனுக்கு முக்திதரும்

ஆதியும் அந்தமும் ஆனந்தமும் ஆகிய
யூதிகா பரமேஸ்வரர் யௌவன அழகோடு
இறப்பின்றி பிறப்பின்றி இம்மைக்கும் மறுமைக்கும்
உறவாகி நம்முள் உறைந்திடும் அன்பே !

கருவினைக் காத்திடும் கர்ப்ப ராட்சம்பிகை
முறுவலைத் தந்திடும் முல்லை வன நாதர்
வேதிகை அன்று வேண்டிய தாயே
ஆதியும் அந்தமுமான அர்த்த நாதனே

மேலும் விவரங்களுக்கு
http://temple.dinamalar.com/New.php?id=507

# 9. சுந்தரேஸ்வரர்- அன்னப்பன் பேட்டை

அழகிய ரூபம் ஆங்கே கொண்டு
பழகிய வடிவில் பரசிவம் நின்றனன்
கடலில் மீனவன் கண்ட அம்பிகையுடன்
உடலின் நோயை உடனே போக்கினன்

சக்தியின் காலம் உதிரனால் உதிர்ந்ததே
பக்தியுடன் யாகபலம் பராசரன் பெற்றானே
அசுரனைக் கொன்று ஆனந்தம் அடைந்தான்
செய்வினை அகன்றிட சிவனை நாடினான்

வில்வவன நாதரால் வினைகள் தீருமே
சொல்லி மாளுமோ சுந்தரேஸ்வரன் அழகே
மூன்று விநாயகர்கள் முத்தாய் காத்திட
சான்றாய் தீர்த்தத்தில் சக்தியும் நீராடுவாளே

கோவில் சிறியதே கீர்த்தி பெரியதே
மாவிலை தோரணத்தில் மாசிலா தலமே
என்னப்பன் என்னையன் எழுந்தருளிய தலமே
அன்னப்பன் பேட்டை ஆலய தலமே

http://temple.dinamalar.com/New.php?id=305

# 10. சாயாவனேஸ்வரர்

சாயா வனத்தில்  சாத்திரம் படைத்தவனே
ஓயாத மனத்தை ஒடுங்க வைப்பவனே
வில்லினைத்  தாங்கிய வேலனுடன் நின்று
மல்லுக்கு நிற்பவரை மண்ணிலே அழிப்பவனே

தந்திரமாய் கோவிலை தாயின் பக்திக்கு
இந்திரனின் ஐராவதம் இழுக்க முயற்சிக்க
நந்திஉயர விநாயகர் நாயகராய் நிற்க
மந்திர ஐந்தெழுத்து மண்ணினைக் காக்குமே

இயற்பகை நாயனார் இனிதே தொழுதிட
உயர்சிவ பக்தியுடன் உன்னைப் பணிந்திட
இனிய மனைவியை இயற்பகை அனுப்பிட
பணிந்த தம்பதியை பதவிசாய் காத்தவனே

குயிலினும் இனிய குரலுடை அம்மையுடன்
கயிலை சிவனைக்  கண்முன் கண்டிட
மேலையூர் வந்து மேவியவனை  வணங்கி
திருச்சாய்காடு கோவிலில் திருநீறு பெறுவோமே

மேலும் விவரங்களுக்கு
http://temple.dinamalar.com/New.php?id=506

# 11. பல்லவனேஸ்வரர் - காவிரிபூம்பட்டினம்

ஆண்டவன் இங்கே அனுதினம் அருளிட
தாண்டவ சிவன் தாளடி பணிந்த
அடியவர் உற்சவம் ஆடியில் கொண்டாட
வடிவாய் லிங்கம் வகையாய்க் காக்குமே

வெட்டிய விறகின்றி வேகாத பசுமரத்தை
தட்டியே தீமுட்டி  தாயுடல்  தகனம்செய்
பட்டினத்தில் பிறந்தவர்  பாட்டாய் எழுதிட
பெட்டியிலே எருவுடன் பேணிய எழுத்தே

வெட்டியாய் நாம் வேண்டிய செல்வமே
கட்டிக் காத்தாலும் காதற்ற ஊசியே
சுட்டிக் காட்டிய சுடரான மருதுவே
கட்டிய கோவிலில்  காட்சிதரும்  ஈசனே

இல்லறத்தை துறந்து இங்கே இறுதிவரை
சொல்லால் மாலை சோமாஸ்கந்தருக் களிக்க
பல்லவனேஸ்வரர் சவுந்தரி பக்கத்தில் அருளி
அல்லதை நீக்கிடும் அழகான திருக்கோயிலே

பூம்பட்டினத்தில் காவிரி புகுமே கடலுள்
பூம்புகாரில் புதிதாய் பூத்த புன்னகையே
ஆம்பல் மருந்தாகி ஆவியை சுகமாக்கி
சாம்பல் சிவனுள் சங்கமிக்கும் உடலே

http://temple.dinamalar.com/New.php?id=210

# 12. ஸ்வேதாரண்யேஸ்வரர் - திருவெண்காடர்

சித்திரைத்  திருவோணம் சிவபாத அபிஷேகம்
வைகாசி திருநாளில் வெண்யானை விமோசனம்
ஆனி உத்திரம் ஆடியசிவ அபிஷேகம்
ஆடித் திருநாளில் அடியார் மோட்சம்

ஆவணி உற்சவம்  அம்பாள் திருவிழா
புரட்டாசி நவராத்திரி புத்திரஷஷ்டி ஐப்பசி
கார்த்திகை தீபஒளி கண்குளிர கண்டுகளி
மார்கழி திருவாதிரை மாசில்லா தரிசனம்

தைமாத பொங்கல்  தடையில்லா அறுவடை
மாசியில்  இந்திரவிழா மகத்தான திருவிழா
பங்குனியில் அகோர பரசிவன் அர்ச்சனை
இங்கனம் வருடத்தில் எப்போதும் திருவிழா

கல்வியை அளித்திடும்  காட்சிக்கு புதன்
அல்லதை அழித்திடும்  அகோர சிவன்
வெண்ணிற ஸ்படிகமே  வெளியிடும் கோரமே
மண்ணை காக்குமே  மகேசன்  பாதமே

கல்வியை பிரம்மனுக்கு கற்பித்த அம்பிகை
சொல்லால் பாடினாரே  சுந்தரர் சம்பந்தர்
மகிஷனை அழித்த மாதேவி அழகே
அகிலம் காத்த அம்பாள் பீடமே

முன்வைத்த இடக்கால் முக்காலம் உணர்த்துமே
பின்எடுத்த வலக்கால் பிற்காலம் காட்டுமே
நடையழகை சொல்லவா நடராஜனைச் சொல்லவா
சடைமுடியைப் பாடவா சாகசத்தைப் பாடவா

மேலும் விவரங்களுக்கு

http://temple.dinamalar.com/New.php?id=530

# 13. ஆரண்யேஸ்வரர் - திருக்காட்டு பள்ளி

ஆரண்ய நடுவில் அமைந்த ஈசனே
காரண உருவாய் காட்டினிடை ஈசனே
தாரணி காத்திடும் தாண்டவ ஈசனே
வாராத பதவியை வரவழை ஈசனே

காட்டிலே குடிகொண்ட கட்டழகு ஈசனே
நாட்டிலே நியாயத்தை நவின்றிடும் ஈசனே
பாட்டிலே சம்பந்தர் பாடியே ஈசனே
ஓட்டிலே திருநீறு ஒளிரும் ஈசனே

நண்டு விநாயக நந்தியுடன் ஈசனே
அண்டம் காக்கும் அகிலாண்ட ஈசனே
உண்ட நீலத்தை உள்வாங்கிய ஈசனே
தண்ணென்று கங்கையைத் தாங்கிய ஈசனே

இந்திரன் வணங்கிய இத்தல ஈசனே
மந்திர இருலிங்க மகத்தான ஈசனே
பத்திரமாய் லிங்கம் பத்துடை ஈசனே
சித்தருக் கருளிய சிவஏழு ஈசனே

வித்தையாய் ஆடிய விளையாட்டு ஈசனே
ருத்திர மந்திரம் ரூபமான ஈசனே
தத்துவத்தை சொல்லும் தசலிங்க ஈசனே
இத்தலத்து சுயம்பு இறையான ஈசனே

மேலும் விவரங்களுக்கு
http://temple.dinamalar.com/New.php?id=211

# 14. திருக்குருகாவூர் - வெள்ளடை நாதர்

திருக்குரு காவூரில் திகழும் தலமே
திருப்பதிக தேவாரமாய் தித்திக்கும் தலமே

வருடத்தில் ஒருநாள் வழிகாட்டும் தலமே
திருஞான சம்பந்தர் திருநீராடும் தலமே

வனத்தில் மறைந்த வாசமிகு தலமே
மனத்தில் குடிகொண்ட மகேசன் தலமே

அன்னத்தை சுந்தரருக் கருளிய தலமே
பொன்னம்பல சிவனை புரியவைத்த தலமே

சாந்த துர்வாசர் சந்நிதி தலமே
காந்தமாய் இழுக்கும் கைலாய தலமே

பால்கிணறு கொண்ட பரசிவன் தலமே
கால்பதியாது காசியைக்  காட்டிய தலமே

பொங்கிய கிணற்றில் பொலிவான தலமே
ஆங்கே கங்கை அதிசயித்த தலமே

வெள்ளடை நாதராய் வீற்ற தலமே
கொள்ளை அழகுடன் கொண்ட தலமே

http://temple.dinamalar.com/New.php?id=223

# 15. சட்டை நாதர் திருக்கோவில்- சீர்காழி

தோடுடை சிவனாகி துணைவி உமையாகி
பாடுடை பாலாகி பசியினைப் போக்கியவனே
ஆடும் பாதமாகி அழியாத சீர்காழியே
தேடும் விழிகளுக்கு தேவார ஒளியே

அரியாகி அரனாகி அறியாத பொருளானவனே
திரியும் சிவனாகி திருமுடி சடையானவனே
தெரியும் மறையாகி தெரியாத பிரணவமே
எரியும் கனலாகி எழுந்தருளும் ஜோதியே

சட்டை அணிந்து சத்தியம் சொன்னவனே
பட்டை திருநீறில் பவித்திரம் ஆனவனே
குட்டை குன்றாகி குன்றிலே நின்றவனே
மட்டை தோணியான மகேச அப்பனே

ஆணாகி பெண்ணாகி அர்த்தநாரி ஆனவனே
காணாத பொருளெல்லாம் காணும்படி செய்பவனே
வானாகி மதியாகி வையகம் காப்பவனே
தேனாகி அமுதாகி தித்திக்கும் பாலானவனே

திருமுலைப் பாலளித்து திருஞானம் தந்தவனே
அருமருந்தென அடியாருக் கருளிய பெருமானே
தென்னாட்டு கைலாயத்தில் திகழும் பைரவனே
என்நாவில் நமச்சிவாய என்றே வருபவனே

ஓம் நமச்சிவாய !

http://temple.dinamalar.com/New.php?id=495

# 16. சப்தபுரீஸ்வரர்-திருக்கோலக்கா

பாலுண்ட.பிள்ளையின் பாட்டுக்குத் தாளமே
வேலுடை பிள்ளையான் வீரதந்தை ஈசனே
சீலமான கோவிலில் சுயம்பு லிங்கமே
காலத்தால் அழியாத கவிராய கடவுளே

அசையும் உலகம் அசையும் உன்னாலே
இசையும் பிறந்திடும் ஈசனருள் இருந்தாலே
ஓசையும் எழுந்திடும் ஓசைநாயகி உமையாலே
ஆசைகள் அகற்றிடும் அஞ்செழுத்து மந்திரமே

சித்திரை திருவாதிரையில் சிவனருள் பெற்று
முத்தமிழ் பாடலை மூன்றுவயது சம்பந்தர்
வித்தையாய் பாடிட வேந்தனும் கேட்டிட
இத்தலத்தில் தங்கதாளத்தை ஈந்த கதையுண்டே

வாயினில் வார்த்தை வணங்கிட வருமே
கோயிலுக்குள் வந்தால் கிட்டிடும் புண்ணியமே
கலைகளில் சிறக்க கவிதைகள் பிறக்க
மலையரசி அருளும் மாறாது கிட்டுமே

ஓம் நமச்சிவாய!

# 17. வைத்தியநாதர்- வைத்தீஸ்வரன் கோவில்

வைத்தியம் செய்து வையத்தைக் காக்க வேண்டுமே
வைத்து விட்டறை வேத்தியத்தில் நலங்கள் தந்திட வேண்டுமே

தைலத்தை தந்திடும் தையல் நாயகி வேண்டுமே
கைலநாதன் காத்தருள கட்டிகளை கரைய வேண்டுமே

தன்வந்தரி சித்தர் தனியருள் புனுகு வேண்டுமே
உன்னருள் தனில் உடற்பிணி மறைய வேண்டுமே

உப்பும் மிளகும் உடலைக் காக்க உன்னருள் வேண்டுமே
தப்பாது காத்து தயவும் காட்டி நோய்தீர்க்க வேண்டுமே

மருந்தாக திருச்சாந்து மாயங்கள் செய்ய வேண்டுமே
முருகன் அருளில் முழுதாய் நோய்கள் கரைய வேண்டுமே

கேட்ட வரம் கொடுத்திடும் கற்பக விநாயகர் வேண்டுமே
பாட்டாய் பாடிட பாக்கியம் நானும் பெற்றிட வேண்டுமே

நோயின்றி நொடியின்றி நோகும் வலியின்றி இருக்க வேண்டுமே
வாயினால் நமச்சிவாயம் வகையாய்ப் பாடிட வலுவும் வேண்டுமே

நேசமாய் உன்னை நித்தம் தொழுதிட நினைவும் வேண்டுமே
பாசமாய் உன்புகழ் பாடி மகிழ்ந்திட சத்சங்கம் வேண்டுமே

# 18. கண்ணாயிரமுடையார் -குறுமாணக்குடி

மகப்பேறு வேண்டி மக்கள் நின்றிட
சுகப்பேறு தனை சுகமாய் தந்திட
மணமும் மனமும் மங்கலமும் கூடிட
குணம் கொண்ட குறுமாணக்குடி போற்றி

செருக்குடன் இந்திரன் செய்த தவற்றை
பொறுப்பின்றி அகலிகை புரிந்த தவற்றை
மறுப்பின்றி கவுதமர் மாற்றிய விதியை
உருவத்தில் மாற்றிய உண்மையே போற்றி

ஆயிரம் குறிகள் ஆங்கே இந்திரன் பெற்றிட
வாயினால் கவுதமர் வைது அவனை சபித்திட
கோயிலாய் அமைந்த குறுமாணக்குடி அவன் வந்திட
ஆயிரம் கண்ணை அழகாய் பெற்றவனே போற்றி

இந்திரன் வணங்கிய இத்தல ஈசன் போற்றி
தந்திர குற்றம் மன்னித்த மகேசன் போற்றி
கவுதமர் சாபம் காத்த கபாலி போற்றி
பவித்திர உடலில் பதிந்த கண்கள் போற்றி

கண்ணாயிரம் கொண்ட கயிலைவாசா போற்றி
பெண்ணாசை பேராசை போக்குவாய் போற்றி
மண்ணாசை மனத்தாசை மாற்றுவாய் போற்றி
எண்ணத்தில் எழுத்தாய் எழுந்தருள்வாய் போற்றி

http://temple.dinamalar.com/New.php?id=857

# 19. கடைமுடி நாதர் -கீழையூர்

கடைமுடி நாதராய் கருணா தீர்த்த கயிலைவாசா
சடைமுடி நாதராய் சங்கடம் தீர்ப்பாய் சாம்பசிவா
விடையாய் கேள்விக்கு வித்தாய் அமைவாய் விஸ்வேஸ்வரா
தடைகளை நீக்கி தாண்டவம் ஆடுவாய் திகம்பரா

ஆணவ பிரம்மனின் அகந்தை அழித்த அம்பலவாணா
காணவும் மகரிஷி கண்ணுவர் வந்திட கபாலிபைரவா
காதில் வளையம் கழுத்தில் சர்ப்பம் கடைமுடி நாதா
ஆதியும் அந்தமும் ஆனந்த ரூபமும் அண்டவாணா

தாலியைக் காத்திடும் தாயின் சந்நிதி தாயுமானவா
வேலியாய் எங்களை வேளையில் காத்திடும் வீரபத்திரா
பட்டைகள் பதினாறு பதமாய் அணிந்த பரமேஸ்வரா
சட்டை நாதராய் சாகச லிங்கமாய் சதாசிவா

எண்கோண வடிவில் எண்ணிலா உயர்விலே எரும்பீசா
எண்ணத்து முடிவிலே எழுத்தான வடிவிலே எழுத்தறிநாதா
மண்ணிலே தானாக மகத்துடன் தோன்றிடும் மணவழகா
அண்ணாந்து பார்த்தால் ஆகாயம் பாய்ந்திடும் அண்ணாமலையா

ஆயிரம் நாமங்கள் அடியேன் பாடிட அந்தமில்லாதவா
வாயினால் பாடிட வழிக்குத் துணையான வஜ்ரஹஸ்தா
கோயிலில் நந்தியுடன் குடிகொண்டு நின்றிடும் குண்டலினா
சேயினைக் காத்திடு சித்தம் புகுந்திடு சர்வேஸ்வரா

மேலும் விவரங்களுக்கு
http://temple.dinamalar.com/New.php?id=454

சிவனின் 108 நாமங்கள்
http://www.rudraksha-ratna.com/articles/108-names-of-shiva

சிவனின் தமிழ் பெயர்கள்
https://ta.wikipedia.org/wiki/சிவனின்_தமிழ்ப்_பெயர்கள்#.E0.AE.A4

பொருளடக்கம் செல்ல

276 பாடல் பெற்ற சிவஸ்தலங்கள்

# 20. மகாலட்சுமிபுரீஸ்வரர் -திரு நின்றியூர்

ஈசனாய் நின்று இவ்வுலகம் காத்திடு
பாசங்கள் பந்தங்கள் பாதைகள் காத்திடு
ஓசையாய் ஒலியாய் ஒளியாய் காத்திடு
ஆசைகள் ஆயிரம் அகிலம் காத்திடு

எரியும் தீயாய் எம்மைக் காத்திடு
திரியும் அணைந்தால் திரும்ப வந்திடு
சோழ மன்னனை சுயம்பு காத்திடு
வாழ எங்களுக்கு வழிகள் சொல்லிடு

நின்ற திரியோடு நிலைத்து காத்திடு
கொன்ற பரசுராமன் குணமும் காத்திடு
செய்த தவற்றை செவ்வனே மன்னித்திடு
மெய்யாய் மேனியை மீண்டும் காத்திடு

கோரிய ஜமதக்கனி குலமும் காத்திடு
ஊரிலே ஒளியாய் உலகைக் காத்திடு
முத்தான மாதுளை முதல்வன் பெற்றிடு
வித்தாய் வினையாய் விதியாய் காத்திடு

மகாலக்ஷ்மி வணங்கிட மனமார காத்திடு
தகாத வழியில் தடுமாறாது காத்திடு
அச்சுறுத்தும் உலகில் அன்பாய் காத்திடு
உச்சி முதல் உள்ளங்கால் வரை காத்திடு

http://temple.dinamalar.com/New.php?id=276

# 21. சிவலோக நாதர் -திருப்புன்கூர்

புங்கமர நிழலில் பூத்திருக்கும் அழகா
மங்காத செல்வமாய் மாறாத அழகா
புற்றென வீற்றப்  பொலிவான அழகா
மற்றவை தந்திடும் மகேச அழகா

மனதிற்கு அமைதி மந்திர அழகா
இனத்தைக் காத்திடும் ஈசனே அழகா
திருமேனி திகழ திருப்புன்கூர் அழகா
அருளைச் சொரிந்த அற்புத அழகா

நந்தனார் தரிசிக்க நலம்புரிந்த அழகா
விந்தையாய் பிள்ளைகுளம் வெட்டிய அழகா
நந்தியை விலக்கிய நடேச அழகா
அந்தியில் ஒளிரும் அருணாசல அழகா

நாகதோசம் விலகிட நல்லருள் அழகா
மோக தாகம் நீங்கிட முக்திதரும் அழகா
பஞ்சலிங்க வடிவில் பசுபதி அழகா
அஞ்சேலென அடியாருக் கருள்புரி அழகா

http://temple.dinamalar.com/New.php?id=511

# 22. சோமநாதர் -நீடூர்

வினைகள்  தீர்க்கும் விநாயகர் உண்டு
முனைய வந்திடும் மூர்த்திகள் உண்டு
பெரியவர் பழையவர் புனிதவர் உண்டு
அரியவர் அறியாதவர் ஆண்டவர் உண்டு

கயிலை சிவலோக காசிவிஸ்வேஸ்வர் உண்டு
பயில முடியா பரமேஸ்வரர்  உண்டு
ஆனந்த தாண்டவ அதிசயமூர்த்தி உண்டு
கானத்திற்காடிய சங்கரன் கால்பாதம்  உண்டு

நண்டாய் பிறந்து நல்முக்தி பெற்றதுண்டு
கண்டதும் துளைத்த கற்கடக பூஜையுண்டு
ஆவணியில் சூரியஒளி அதிசயமாய் விழுவதுண்டு
காவல்  செய்யபத்ர காளியும்  உண்டு

ஆதித்ய அபயவரத அம்பிகை உண்டு
ஓதிய தேவார ஒலிகளும்  உண்டு
இந்திரன் பாடலுக்கு  எழில்நடனம் உண்டு
மந்திர அஞ்செழுத்தில் மாயை அழிவதுண்டு

http://temple.dinamalar.com/New.php?id=216

# 23. ஆபத்சகாயேஸ்வரர் - பொன்னுர் (திரு அன்னியூர்)

அக்னியாய் எழுந்த ஆபத்சகா ஈஸ்வரனே
பக்தியில் பெருகிடும் பரமசகா ஈஸ்வரனே

மன்மதனை எரித்த மகா ஈஸ்வரனே
அன்பினால் ரதிக்கு அருளிய ஈஸ்வரனே

கல்வியை அளித்திடும் காருண்ய தட்சனே
சொல்லிலே வந்திடும் சோம சுந்தரனே

ஒளியாய் வந்திடும் ஓங்கார மூர்த்தியே
விழிக்கு  தெரிந்திடும் விசேஷ மூர்த்தியே

வருணனும் அரிச்சந்திரனும் வழிபட்ட ஸ்வரூபமே
இருளை நீக்கிடும் இவ்வுலக ஒளியே

http://temple.dinamalar.com/New.php?id=217

# 24. கல்யாண சுந்தரேஸ்வரர் - மணவாளேஸ்வரர்

திருவேள்விக் குடியில் திருமணம் புரிந்தவனே
திருமங்கை பார்வதியை திருமணம் புரிந்தவனே
திருமணத் தடைகளை தீங்கின்றி நீக்குபவனே
உருவத்தில் பாதியை உடையவளுக்கு ஈந்தவனே

மண்ணில் லிங்கமான மணவாள ஈஸ்வரனே
கண்கள் மூன்றுடை  கல்யாண சுந்தரனே
பெண்ணோடு ஆணாய் பின்னிப் பிணைந்தவனே
விண்ணிலே எழிலாய்  வீற்றிடும் வேந்தனே

சுந்தரர் தோல்நோய் சுகமாக்க செய்தவனே
விந்தையாய் செயல்களை விளையாட்டாய்  செய்பவனே
முதுமையும் நோயும் முன்னின்று காத்தவனே
புதுமையாய் சுயம்பு புவனத்தில் பூத்தவனே

ஒன்றே உருவாய் ஒளிரும் ஜோதியே
அன்றே இரண்டான  அர்த்த நாரீஸ்வரனே
நெற்றியில் மூன்றாய் நீதியைக் காப்பவனே
கற்றறிந்த நால்வரின்  காவியத் தலைவனே

அங்கம் காத்திடும் ஐந்தெழுத்து மந்திரமே
தங்கமகன் ஆறுமுகன் தந்தை ஆனவனே
எழுலிங்க வடிவாய் எழுந்தருளும் ஈசனே
எட்டு திசையிலும் ஏற்றிய தீபமே

ஒன்பது கிரகமும் ஒருங்கே காப்பவனே
அன்பால் பத்துதலை அஞ்சாது  அளித்தவனே
எண்ணி லடங்கா எழிலான ஈசனே
உன்னில் அடங்கும் உலகை காப்பவனே

http://temple.dinamalar.com/New.php?id=234

# 25. ஐராவதேஸ்வரர்

அம்பிகை மணவாளனே ஐராவத ஈஸ்வரனே
பிம்பத்தில் லிங்கமே பிறைநிலா பெருமானே

திருமணம் முடித்து திருத்தலம் வருவாயே
விரும்பினால் திருமணம் வேண்டிட தருவாயே

கல்யாணத் தடைநீக்கி கடிமணம் அருள்வாயே
இல்லாது போக்கியே இன்னலை தீர்ப்பாயே

சீரும் சிறப்புமாய் சேர்ந்தருள் புரிவாயே

ஊரும்உறவும் வாழ ஒருங்கே இணைப்பாயே

சிவலோக தலவீரனே பரதமுனி மருமானே
தவமுனி தலைவோனே தாண்டவ பெருமானே

எதிர்கொள் ஓடிவந்த என்னருமை பெருமானே
மதிகொண்ட சடையோனே மான்தோல் முதல்வனே

http://temple.dinamalar.com/New.php?id=505

# 26. திருமணஞ்சேரி - கீழைத்திருமணஞ்சேரி

தேவி கல்யாண வைபோகமே
அம்பாள் கல்யாண வைபோகமே

கைலாய துதி சிவனே காருண்ய ரூபனே
ஒயிலாய் கை சேர ஒன்றாய் இணைபவனே
(தேவி)
பசு உரு கொண்ட பார்வதி தன்னை
திசுவில் இணைத்த திகம்பர ஈசனே
(தேவி)
திருவேள்விக் குடியில் திருமணக் கங்கணம்
குறுமுலைப் பாளை பாலிகை ஸ்தாபனம்
(தேவி)
திருவாடுதுறையில் திருவருள் புரிய
திருமணஞ் சேரியில் திருமணம் நடக்க...
(தேவி)
மன்மத மதம் அழிய மறுபடி அவன் பிறக்க
அன்பே சிவமென்று அகிலம் காப்பவனே
(தேவி)

http://temple.dinamalar.com/New.php?id=273

# 27. வீரட்டேஸ்வரர் -திரு குறுக்கை

காமனை அழித்து காலத்தை வென்றவன்வாழி
தாமரை மலர்சூழ ஆவுடையூர் ஈசன்வாழி
வீரதீர செயல்புரியும் வீரட்டே ஸ்வரன்வாழி
மாரனின் கணைகளை மலராய் மாற்றினவன்வாழி

கங்கணம் மன்மதன் கட்டிய திருகுறுக்கைவாழி
இங்கிருந்து வில்விட ஐவநல்லூர் தலம்வாழி
அம்பினை மன்மதன் அங்கிருந்து ஏவிட
சம்புவின்  தவம்கலைய சாம்பலாய் ஆனானே

அன்பினால் ரதியும் அழுது கலங்கிட
உன்னையே சரணம் உரைத்து அடைந்திட
மன்மதனை மீண்டும் மண்ணிலே தந்தவன்வாழி
அன்பை பாசத்தை அனுதினம் தந்தருள்வாழி

நெற்றியில் திருநீறு நித்தமும் பூசிடவாழி
கற்றதும் கல்லாததும் கருத்தினில் நின்றிடவாழி
உற்றது யாவும் உன்னையே சேரவாழி
மற்றதும் காக்கும் மகேசனே வாழிவாழி

http://temple.dinamalar.com/New.php?id=482

# 28.குற்றம் பொறுத்த நாதர்

குற்றம் பொறுத்த கோவில் நாதரே
சுற்றம் காக்கும் சுயம்பு நாதரே
வெற்றியைத் தந்திடும் வீரசிவ நாதரே
கற்றறிந்த நால்வர் கருத்திடை நாதரே

கோல்வளை நாயகி கொலுவிருக்கும் நாதரே
சூல்காத்து தினம் சுகம்தரும் நாதரே
ஞாயிறு வணங்கிய ஞானத்திரு நாதரே
வாயினால் பாடிதினம்  வணங்குவோம்  நாதரே

அனுமனின் தோஷம் அகற்றிய நாதரே
அனுதினம் எமக்கு ஆசிதரும் நாதரே
மேகநாதன் குற்றம் மெச்சிமறந்த நாதரே
சோகங்கள் நீக்கி சுபம்தரும் நாதரே

நெற்றியில் கண்கொண்டு நிலம்காக்கும் நாதரே
பற்றினை அறுத்து பாதைகாட்டும் நாதரே
இற்றைக்கும் நமச்சிவாய எற்றைக்கும் நாதரே
மற்றதோடு மறவாதிருக்க மனமருள் நாதரே

http://temple.dinamalar.com/New.php?id=220

# 29. குந்தளேஸ்வரர்- திருக்குரக்கா

மணலிலே எழுந்த மாணிக்க வடிவமே
குணமான அன்பர்கள் கும்பிடும் வடிவமே

குண்டலம் வாங்கிய கோல வடிவமே
மண்டலம் காக்கும் மகேச வடிவமே

ஆஞ்சநேயருக்கு மனமுருகி அருளிய வடிவமே
ஆஞ்சநேய சிவமாகி அன்பான வடிவமே

சீதை பிடித்த சிவலிங்க வடிவமே
பாதை காட்டிடும் பவித்திர வடிவமே

குந்தள நாயகியுடன் குடிகொண்ட வடிவமே
மங்களம் பொங்கிடும் மகத்தான வடிவமே

நாவுக்கரசர் பாடிய நாகப்பட்டின வடிவமே
மூவுலகிலும் பெரிதான மூத்த வடிவமே

குரங்குகள் வந்து கும்பிடும் வடிவமே
குரக்கா நகர கலியுக அதிசயமே

http://temple.dinamalar.com/New.php?id=834

# 30. மாணிக்க வண்ணர் - திரு வாளப்புத்தூர்

மாணிக்கக் கல்லை மலர்போல் தூவியே
காணிக்கை வாசுகி கருத்தாய் பூஜிக்க
ஆணித்தரமாய் அருளை அன்பர்க்கு வழங்கி
பேணியே எங்களுக்கு பேரின்பம் தருவாய் !

பஞ்சத்தை தீர்க்கவே பரிசாய் மாணிக்கம்
கெஞ்சிய மன்னனுக்கு கீர்த்தியுடன் அளித்தாய்
அஞ்சாது உன்னையே அல்லும் பகலும்
தஞ்சமென்று நாங்கள் தாளடி பணிவோம்

உண்ட விடம் உன்கண்டத்தில் நிற்க
அண்டம் காக்க ஆடிய தாண்டவமே
அகிலத்தை காக்கவே அன்னையும் எழுந்து
மகிஷனை அழிக்க மரியாதை செய்தாள்

வழியறியாது அர்ச்சுனன் வாடியே நிற்க
வழிப்போக்கன் உருவில் வாட்டம் நீக்கினாய்
அழியாத சக்தியை அருகிலே கொண்டு
செழிப்புடன் இருக்கும் சிவலோக நாதனே !

http://temple.dinamalar.com/New.php?id=277

# 31. திரு நீலகண்டேஸ்வரர்- இலுப்பைபட்டு (நாகப்பட்டினம்)

பஞ்ச பாண்டவர் பூஜித்த லிங்கமே
பஞ்ச வடிவ பரிசுத்த லிங்கமே

தருமன் வழிபட தரமான நீலகண்டமே
உருவத்தில் உயரிய உத்தம லிங்கமே

அர்ச்சுனன் வழிபட அழகான படிகரைநாதரே
அர்ச்சிக்க இலுப்பைப்பூ ஆர்வமாய் பூக்குமே

பீமனும் வழிபட பேரின்ப மகதீஸ்வரரே
காமனும் அழிந்திட கண்கள் வீசுமே

நகுலன் வழிபட நல்லதொரு பரமேஸ்வரரே
மகுடம் பூண்ட மகத்தான ஈச்வரே

சகாதேவன் வழிபட சக்தியுடை முத்தீஸ்வரரே
தகாது செய்தவரை தண்டித்து காப்பவரே

ஏழரை சனியையும் இல்லாது செய்பவரே
வாழ வைக்க வழிசொல்லும் லிங்கமே

கண்டத்தில் விடத்தை காத்த நாயகியே
அண்டம் காத்த அமிர்தவல்லி அம்பாளே

பஞ்ச பாண்டவர் பூஜித்த லிங்கமே
பஞ்ச வடிவ பரிசுத்த லிங்கமே

http://temple.dinamalar.com/New.php?id=209

# 32. துயர் தீர்த்த நாதர்(தெட்ஷிணா மூர்த்தி) - ஓமாம்புலியூர் - கடலூர்

ஓம்  என்ற மந்திரத்தை ஓதிய தலமே
ஓம் என்ற மந்திரத்தை ஓதிய குருவே

துயரங்கள் யாவையும் துடைக்கும் தலமே
அயராது நமக்கு அருளும் தலமே

மனிதப் பிறவியெடுத்த மாதேவி தலமே
இனிதாய் அன்னைக்கு எடுத்துரை தலமே

வியாக்ரபாத முனிவர் வணங்கும் தலமே
வியாக்ர புரீஸ்வர பெயருடை தலமே

என்றும் ஹோமம் இங்கு நடக்குமே
அன்றதனால்  ஓமாம் புலியூர் ஆனதே

அன்னையாய் தந்தையாய் ஆசானாய் ஆனவரே
உன்னையும் என்னையும் உலகையும் காப்பவரே

http://temple.dinamalar.com/New.php?id=1067

# 33. பதஞ்சலீஸ்வரர் -கானாட்டம்புலியூர்

ஆதிசேஷன் காணவே ஆனந்த தாண்டவமே
ஜோதியான சுடரே சொக்கிடும் அழகே

பதஞ்சலி  முனிவருக்கு பரதம் ஆடியவரே
பதங்களுக் கஞ்சலியே பக்தரின் அண்ணலே

கோல்வளைக் கையம்பிகையே கொலுவிருக்கும் குழலியே
நால்வரோடு பதஞ்சலியும் நற்கோவிலில் நின்றாரே

மண்ணெல்லாம் சிவனாக மாயமாய் மாறியதே
கண்காணும் திசையாவும் காட்சி தருபவரே

இடக்கால்  தூக்கியே இடர்களை அழிப்பவரே
உடலை சாய்த்தபடி உலகை காப்பவரே

கானாட்டம்  புலியூரில் கடலூரில் நின்றவரே
தானாட தசையாட தாண்டவமாடும்  மூர்த்தியே

http://temple.dinamalar.com/New.php?id=58

# 34. சவுந்தரயேஸ்வரர் - திருநாரையூர்

மருவில்லா மைந்தன் மகேசன் கைப்பிள்ளை
உருவத்தில் களிறு உலகத்து முதற்பிள்ளை
பொல்லாப் பிள்ளையாரை போற்றி வணங்குவோம்
எல்லாக் கவலையும் இறையிடம் சேர்ப்போம்

நம்பியாண்டார் நம்பி நம்பிக்கை காத்திடவே
அம்பிகை மைந்தன் அறுசுவை உண்டகதையே
அறுபடை வீட்டை அண்ணனும் கொள்ளவே
திருமறை கேட்டிடவே  தில்லையும் காட்டினாரே

இராஜஇராஜ சோழனுக்கு இரங்கிய  இறையே
கஜராஜஇராஜனே கணேசனே கருணை வள்ளலே
பண்ணோடு திருமுறை பதிகங்கள் பாடிட
பெண்ணினை முறையாய் பேசவும் வைத்தவரே

கடுந்தவம் துர்வாசர் கருத்தாய் செய்வதை
தடுத்த கந்தர்வனுக்கு தந்தாரே சாபமே
நாரையாய் மாறிய நல்கந்தர்வனை வாழ்த்தி
இறையாய் காக்கும் ஈஸ்வர சவுந்தர்யமே

http://temple.dinamalar.com/New.php?id=848

# 35.அமிர்தகடேஸ்வரர்-திருக்கடம்பூர்

கடம்பூர் வாசியை கருத்தில் கொள்வதே
கடமை அதுவென கவிதை உரைப்பதே
உன்புகழ் பாடி உள்ளம் மகிழ்வதே
என்கடன் எனபணி செய்து கிடப்பேனே

வணங்கா தேவருக்கு விளங்க வைக்க
மணக்கும் அமிர்தத்தை  மைந்தன் தூக்கிட
ஒருதுளி அமிர்தம் ஓங்கார லிங்கமாக
உருவத்தில் சுயம்புவாய் உதித்த லிங்கமே

தேனமுதம் பருகவே தேவரும் வந்திட
கானகத்து தேவா கடம்பூர் ஈஸ்வரா
அதிதி அனுதினம்  அதிதியாய் வந்திட
விதியினை மாற்றிட வினையால் முடியுமோ

கோவிலைத்  தூக்கிட கோமகன் முயன்றிட
தாவியே தேரினை தாங்கி அழுத்தினன்
ஆரவார விநாயகர் அருமை புரிந்திட
வீரசூர இந்திரன் கோடிலிங்கம் செய்தனன்

ஆணவம் இல்லாது அருள்நாம லிங்கமே
காணவும் பெறுமோ கண்கள் இரண்டுமே
ருத்ரகோடி லிங்கமே  ரூபமய லிங்கமே
உக்கிரம் குறைத்து உலகை காக்குமே

வித்யஜோதி நாயகி வினைகள் களைந்திட
நித்யகடவுள் நடராஜர் நர்த்தனம் செய்திட
புத்திரன் முருகனும் பீடத்தில் பார்வதியும்
மத்தியில் ரங்கனுமான  மகேசன் கோவிலே

கடம்பூர் வாசியை கருத்தில் கொள்வதே
கடமை அதுவென கவிதை உரைப்பதே
உன்புகழ் பாடி உள்ளம் மகிழ்வதே
என்கடன் எனபணி செய்து கிடப்பேனே

http://temple.dinamalar.com/New.php?id=986

# 36. பசுபதீஸ்வரர் - பந்தநல்லூர் (தஞ்சாவூர்)

வேதங்களை பந்தாக்கி விளையாட தந்ததில்
பாதங்களை புற்றாக்கி பாலை கேட்டதில்
மறையாத கதிரவன் மாயமாய் ஒளிவீச
குறையில்லா உலகிலே கடமையும் தவறுமோ

பசுவாய் மாற்றி பார்வதியை அனுப்பி
பசுவின் பதியாகி பாரினில் மணந்தாய்
இடையனாய் விஷ்ணுவும் இவ்வுலகில் வந்திட
தடைகள் அகன்றிட தலத்தில் அருளினாய்

பால்சுரந்த புற்றில் பரவசம் சுரக்க
கால்பதித்த தலத்தில் கல்யாணம் நடக்க
பந்தணை ஊரிலே பரசிவன் கோவிலில்
கந்தனும் சரஸ்வதியும் கணபதியும் நின்றனர்

வேணுபுஜ அம்பிகை வேண்டியதை அளிக்க
காணாத கண்கள் காட்சியைக் காணும்
பந்தநல்லூர் கோவிலில் பசுபதி அருள்
பந்தங்கள் யாவையும் பாரினில் காக்கும்

http://temple.dinamalar.com/New.php?id=517

# 37. அக்னீஸ்வரர் - கஞ்சனுர்

சித்தபிரமை போக்கி சிந்தையுள் நிறைந்து
உத்தம சுதர்சன் உடலைக் காத்து
சுத்தமான பக்திக்கு சுடுகஞ்சி அருந்திஹர
தத்தருக்கு அருளி தனிக்கோவிலில் நின்றாய்

பாதி சுரைக்காய் பசிக்குதவ உன்னருளால்
மீதி சுரைக்காய் மண்மீது விதையானதே
புல்கட்டு வீசிய புவனத்தில் பசுதோஷம்
கல்நந்தி புல்லுண்டு காணாமல் போனதே

சுக்கிரனுக்கு சந்நிதி சுகமாய் இருக்க
அக்கினியின் சோகை அறவே நீங்க
பக்கத்தில் வளமாய் பார்வதி நிற்க
சிக்கென நின்று சிந்தை கவர்ந்தாயே

முக்தி தாண்டவ மூர்த்தியே போற்றி
சக்தியை மணந்த சங்கரா போற்றி
அக்னி ஈஸ்வர அண்ணலே போற்றி
பக்தனை காக்கும் பரசிவனே போற்றி

பஞ்சாட்சர மந்திரம் பாடி மகிழ்ந்தால்
அஞ்சல் என்று அருளடி பணிந்தால்
நெஞ்சம் உன்னை நினைத்து நின்றால்
பஞ்சாய் கவலைகள் பறந்து போகுமே

http://temple.dinamalar.com/New.php?id=907

# 38. கோடிஸ்வரர்- திருக்கோடிக்காவல்

திருக்கோடிக்காவில் அமைந்த திருக்கோடி நாதரே
திருக்கோடிக் காவின் அழகிய திரிபுர சுந்தரியே

காலனைத்  தடுக்கும் கால சக்தியே
பால சனியுடன் பாலிக்கும் கருடனே

ஆயிரம் ஈஸ்வரர்கள் அரவணைக்கும் தலமே
ஆயிரம் வருடமான ஆனந்த தலமே

அடுத்தடுத்த மன்னர்கள் ஆலயம் புதுப்பிக்க
தடுத்தாட் கொள்ளும் தாண்டவ மூர்த்தியே

யமபயம் இல்லாது யாவரும் வாழ்ந்திட
சமமே இல்லாத சாகச மூர்த்தியே

அரிஜனனாய் வந்த அர்த்த நாரீஸ்வரரே
அரியாகி வந்த அம்பாளின் அருளே

சிவமாகி சக்தியாகி சிந்தை கவர்ந்தவனே
தேவனாகி பாடலான  தேவார மறையே

http://temple.dinamalar.com/New.php?id=1064

# 39. பிராணநாதேஸ்வரர் - திருமங்கலக்குடி

பங்குனி உத்திர பாங்கான பிராணநாதனே
மங்கலக் குடியின்  மங்களாம் பிகையே

கிரங்கங்களின் தோஷம்  கிருபையுடன் போக்குபவனே
மரகத லிங்கமுடன் மாறாத ஈஸ்வரனே

எருக்கு இலையில் ஏற்றமிகு  தயிர்சாதமே
அருளும் மங்கலத்தில் அனுக்ரக ஆயுளே

திருமணப் பெண்கள் தீர்க்க சுமங்கலியாக
உருவத்தில் சந்தனம் உயிர்தரும் காப்பே

அலைவாணர் உயிரை அம்பிகை மீட்டு தர
கொலையுண்ட மந்திரி கொண்டாடிய ஈஸ்வரனே

உயரிய பாணம் உகந்தது என்றே
சுயம்பு மூர்த்தி சொல்லியே எழுந்தாயே

http://temple.dinamalar.com/New.php?id=518

# 40. அருணஜடேஸ்வரர்- திருப்பனந்தாள்-தஞ்சாவூர்

அருணனின் ஒளிக்கீற்று அன்பில் சிவனே
திருமணக் கோலத்து திருத்தம்பதி சிவனே

நாக்கன்னி வணங்கிய நான்மறை சிவனே
சோக்கங்கள் போக்கிடும் சுயம்பு சிவனே

தாடகை மானம்காக்க தலைசாய்ந்த சிவனே
பாடவந்த நாயன்மார் பக்திக்கிரங்கிய சிவனே

நமச்சிவாய மந்திரத்தில் நாயன்மார்காத்த சிவனே
காமனை வென்று காத்துநிற்கும் சிவனே

உயிரைப் பணயம் உனக்காகவைத்து சிவனே
கயிறால் இழுக்க கருணைபுரிந்த சிவனே

பக்தனுக்கிரங்க தலைசாயும் பரம சிவனே
பக்தனுக்காக தலைநிமிர்த்தும் பரவச சிவனே

http://temple.dinamalar.com/New.php?id=369

# 41. பாலுகந்தநாதர்- திருவாய்பாடி- தஞ்சாவூர்

திருவாய்பாடி பற்றிஇத் தினம்வாய் பாட
திருவருள் தந்த திருபாலு கந்தநாதரே

உருவாய் அருளி உரைத்திடும் கதையே
வருவாய் தந்தையாய் வாழ்க்கை முழுவதும்

எச்சதத்தன் மகனுக்கு எழுந்தருளிய சிவனே
அச்சமின்றி உன்னடி அடைந்தவரின் தந்தையே

விசாரசருமன் பாலினை விரும்பி ஏற்றதால்
விசாரமின்றி பாலுகந்தன் வீற்ற தலமே

ஆவினை மேய்த்தால் ஆப்பாடி ஆனதே
ஆவியினை நீமேய்ப்பதால் ஆனந்தம் கொண்டோமே

அன்னையாய் தந்தையாய் அரவணைத்து எம்மை
உன்னுள் இணைத்து உவகை தருவாயே

இங்கும் அங்கும் எங்கும் பரவி
பொங்கும் அருளில் புவனம் காப்பாயே
http://temple.dinamalar.com/New.php?id=372

# 42. சத்தியகிரீஸ்வரர்

வாயுவுக்கும் ஆதிசேடனுக்கும் வாக்குவாதம் நடந்திட
மேருவும் சற்றேஉடைய மேலெழுந்த தலமே

சண்டிகேஸ்வர தலமாகி சடைபிறை கூடி
அண்டத்தைக் காக்க அர்த்தநாரி ஈசனே

கோலும் மழுவாகி கால்களை வெட்ட
பாலும் பெற்று பக்தியை மெச்சினாய்

மகனுக்கு சீடனாகி கற்றாய் பிரணவத்தை
அகத்தின்தோஷம் அறவேநீக்கி ஆறுமுகனுக் கருளினாய்

இத்தலம் வழிபட்டு எல்லோரும் நலமாக
சத்திய கிரியாகி சாத்திரம் காத்தாய்

பாடல்கள் பாடியே பரவசம் பெற்றிட
ஆடலழகன் உந்தன் அர்த்தங்கள் புரியுமே

http://temple.dinamalar.com/New.php?id=380

# 43. கற்கடேஸ்வரர் - திருந்துதேவன் குடி- தஞ்சாவூர்

மருந்தை அளித்து மன்னனை குணமாக்கி
திருந்து தேவனாய் இந்திரன் மாறிவிட
அருமருந்து நாயகி அருகில் இருக்க
உருவான சுயம்பு உறுதுணை கற்கடேஸ்வரரே

நண்டு வடிவில் நாயகன் கந்தர்வன்
அண்டம் காக்கும் அண்ணல் ஈசனே
உண்ட ஆலகாலம் உலகைக் காக்க
மண்ணிலே எழுந்த மகத்தான கற்கடேஸ்வரரே

பிணியை நீக்கிட பிறந்த நாதரே
அணியாய் நிலவை அணிந்த நாதரே
தனியாய் இல்லாது தம்பதியாய் வந்தவரே
மனிதரைக் காத்திடும் மகேஸ்வர நாதரே

அம்பிகை இருவர் அருளைப் பொழிய
கும்பிடும் மக்கள் குலமும் காக்க
தஞ்சாவூர் மண்ணில் தங்கிய தேவரே
அஞ்சல் என்றே அடிபணிவோம் அனுதினமே

http://temple.dinamalar.com/New.php?id=386

# 44. யோகநந்தீஸ்வரர்

நான்கு யுகங்களாக நலம்தரும் தலமே
சான்றாய் விளங்கும் சரித்திரத் தலமே

கிருதயுகம் கண்ட கீர்த்திபெறு புராதனேஸ்வரரே
உருவான திரேதாயுகத்தில் உண்டான வில்வாரணயேஸ்வரரே

துவாரபாக யுகத்தில் தோன்றிய யோகநந்தீஸ்வரரே
கலியுகத்தில் கண்கவர் சிவயோகி நாதரே

ஏழுயோகியர் வணங்கி எழுந்தருளும் சிவனே
பாழும் இவ்வுலகில்  பாவங்கள்நீக்கும் சிவனே

பாவங்கள் செய்தவன்உன் பாதங்கள் சரணடைய
பாவங்கள் போக்கிட பார்த்த நந்தியே

தருணத்தில் எமனை தள்ளி வைத்து
அருளிய நற்தினமே அன்று பிரதோஷதினமே

பசிக்கு உணவளித்து பரிவு காட்டி
புசிக்க வைத்த புண்ணிய அய்யாவாள்

தவறிய கடமைக்கு தானாக வருந்திட
அவர்வீட்டுக் கிணற்றில் அருளிய கங்கையே

பலகதைகள் சொல்லிவிட பரமசிவன் அருளே
உலகத்தில் அழியாத உண்மை சுயம்புவே

http://temple.dinamalar.com/New.php?id=397

# 45.கோடீஸ்வரர்- கொட்டையூர் -தஞ்சாவூர்

கொட்டையூர் கோவிலில் குடிகொண்ட கோடிஸ்வரரே
கொட்டையின் கீழ்வெளிவந்த கைலாய நாதரே

பந்தாடும் காலால் பாவங்களை முறிப்பவளே
பத்திரிமுனிவருக்கு பலகோடி தரிசனம் தந்தவரே

அழகில்லா வடிவத்தை அழகாக்கிய தலமே
அழகினை தந்துவிடும் அமுதக்கிணறு உன்வசமே

விளையாடும் பக்தருக்கு வீரமளிக்கும் தலமே
தளைகளை அகற்றி தவமளிக்கும் தலமே

அன்பே சிவமென்று ஆறுதலளிக்கும் தலமே
தன்பால் அணைத்திட தானாகவந்த சிவமே

கோடியாக புண்ணியம் குலம்காத்து பெருகுமே
கோடிபாவம் யாவும் கோவிலில் காணாதோடுமே

பக்தரைக் காக்கும் பரமசிவ தலமே
முக்தியை அளிக்கும் முதன்மை தலமே

http://temple.dinamalar.com/New.php?id=865

# 46. எழுத்தறிநாதர் - இன்னம்பூர் -தஞ்சாவூர்

அகரமாகி ஆதியாகி  ஆணாய் ஆனவரே
ஆயிரமாகி அந்தமாகி பெண்ணாய் ஆனவரே

இகரமுமாகி எண்ணாகி இன்னம்பூராகி நின்றவரே
ஈசனாகி கனவிலே எழுந்தருளி வந்தவரே

உயிராகி உணர்வாகி உண்மையாகி அருள்பவரே
ஊனாகி அன்பாகி உதிரமாகி உறைபவரே

எழுத்தாகி அடியாரை எழுத வைப்பவரே
ஏட்டாகி படிப்பாகி ஏணியாகி உயர்பவரே
ஐயங்கள் அகன்றிட அறிவை வளர்ப்பவரே

ஒயிலாகி அழகாகி ஒளிரும் நித்யகல்யாணியே
ஓங்கார குந்தல ஒய்யார நாயகியே

ஔகார வடிவாகி ஓம்கார ஒலியாகி
அஃதாகி இஃதான ஆயுத சூலமே

கரமாகி படைப்பாகி காக்கும்  நாதரே
காற்றாகி அருளாகி கைலாயம் ஆனவரே

கிருபையாகி அழிக்கும் சக்தியான சிவமே
கீர்த்தியாகி எமக்கு கிடைத்த சுயமே

குலம்காக்க கோவிலில் குடியான நாதரே
கூடாத எண்ணத்தை கொட்டத்தை அழிப்பவரே

கெஞ்சிய சுதன்மனுக்காய் கணக்கராய் வந்தவரே
கேள்வியின் நாயகனாய் கேடறக்கும் தலைவரே
கைலாய நாயகன் காருண்ய சீலரே

கொலுவான அன்னையுடன் கோலமிடும் தந்தையே
கோரிக்கை யாவையும் கொண்டாடும் தலைவரே

கௌமார புதல்வனான கைமாறாய் தந்தவரே
உயிராகி மெய்யாகி உயிர்மெய் ஆனவரே

ஒன்றாகி ஒன்பதாகி ஓராயிரம் ஆனவரே
என்றும் நெஞ்சினில் எழுத்தறிவாய் நின்றவரே

http://temple.dinamalar.com/New.php?id=674

# 47. சாட்சிநாதேஸ்வரர் - திருப்புறம்பியம் - தஞ்சாவூர்

பிரளயத்தில் காத்த பிரதம விநாயகரே
பிரமன் நால்வர் விசுவாமித்திரர் வணங்கினாரே

அரித்துவசன் முயலகநோய் அழித்த நாயகரே
விறகுவிற்பவனுக்கு தரிசனம் தந்த நாதரே

புறம்பாய் அமைந்த புதிய தலநாதரே
இறந்த கணவனை எழவைத்த நாதரே

சாட்சியாய் எழுந்த சான்றான நாதரே
காட்சி கொடுக்கும் கல்யாண நாதரே

திருவிளையாடி எங்களை திறம்பட காத்தவரே
திருத்தலத்தில் அமைந்த திருப்புறம்பய நாதரே

தானாக எழுந்த தஞ்சாவூர் சுயம்புவே
ஆணாகி பெண்ணாகி அர்த்தநாரி நாதரே

http://temple.dinamalar.com/New.php?id=962

# 48. விஜயநாதேஸ்வரர் - திருவிஜயமங்கை - தஞ்சாவூர்

மல்லுக்கு வந்த மகேச வேடனே
வில்லாளன் அர்ஜுனன் வேண்டியது தந்தாய்

பாசுபத அஸ்திரம் பார்த்தனுக் களித்து
மாசுகள் நீங்கிட மங்களம் தந்தாய்

நோயும் பாவமும் நொடியில் நீக்கி
ஆயுளை நீட்டி அண்டினோரைக் காப்பாய்

காயத்தைக் கொண்ட கருலிங்க வடிவமே
மாயங்கள் பலசெய்து மக்களைக் காப்பாய்

செல்வமும் செழிப்பும் சேர்ந்திட தருவாய்
கல்வியும் வேலையும் காத்து அருள்வாய்

விஜயனுக் கருளிய விஜயநாத ஈஸ்வரனே
எஜமானாய் எப்போதும் எங்களை காப்பாய்

http://temple.dinamalar.com/New.php?id=384

# 49. வில்வவனேஸ்வரர்- திருவைகாவூர் - தஞ்சாவூர்

தவநிதி முனிவர் தான்காத்த மானை
அவமதித்து துரத்தி அலைந்த வேடனை
புலியாய் தாக்கி பூமரம் தங்கினாய்
கலியில் அவ்வேடன் கண்மூடாது பூஜித்தான்

சிவராத்திரி கண்முழித்த சீரிய பலனுடன்
தவப்பேறாய் அவனும் தானங்கு பெற்றான்
வில்வமர வேடன் வீடுபேறு அடைந்தான்
செல்வமும் செழிப்பும் சீலமாய் பெற்றான்

திருவைகாவூர் தலத்தில் திருவருள் புரிந்தாய்
திருக்கோலேந்தி மூர்த்தி திருக்காவல் செய்தாய்
எமனை அடக்கிட எழுந்த நந்தியின்
மமதை அடக்கிடும் மகேச சுயம்புவே

சகலமும் அளிக்கும் சர்வஜன நாயகியே
மகரந்த ஜோதியாய் மங்கள முருகனே
வாயிலில் காக்க விஷ்ணுவும் பிரம்மனும்
கோயிலில் மும்மூர்த்தியாய் குடிகொண்ட ஈசனே

http://temple.dinamalar.com/New.php?id=395

# 50. தயாநிதீஸ்வர்ர்- வடகுரங்காடுதுறை

வாலிக்கு  வால் வளர வைத்தவனே

வாலியின் பக்திக்கு செவி சாய்த்தவனே

சிட்டுக் குருவிக்கும் சீலனாய் அருளியவனே
விட்டு விடுதலையாக வீடுபேறு அளித்தவனே

செட்டிப்பெண் கர்ப்பத்தை சிறப்பாய் காத்தவனே
தட்டாது தண்ணீரால் தாகம் தீர்த்தவனே

எட்டுகர துர்க்கையாய்  எட்டாது நிற்பவளே
கிட்டாத அருளையும் கிட்ட வைப்பவளே

கொட்டும் பாலிங்கு குளிரும் நீலமே
பட்டுப் பாவாடை பார்வதி ஜடாமுகியே

குலை வணங்கி குலம் காத்தவனே
மலையாய் வீற்ற மங்கள நாயகனே

குரங்காடு துறையில் கோவில் கொண்டவனே
வரங்களை அள்ளி வழங்கி அருள்பவனே

கருணை வெள்ளமாய் காக்கும் ஈஸ்வரனே
தருணத்தில் காக்கும் தயாநிதி ஈஸ்வரனே

http://temple.dinamalar.com/New.php?id=398

# 51. ஆபத்சகாயர் - திருப்பழனம் - தஞ்சாவூர்

ஆபத்தில் ஓடிவந்து அணைக்கும் ஈசனே
சாபத்தை போக்கிடும் சகாய ஈசனே

சந்திரன் வணங்கிடும் சத்திய ஈசனே
மந்திரம் ஓதும் மகத்தான ஈசனே

திருமாலும் தொழுதிடும் திருத்தல ஈசனே
திருப்பழன தலத்தில் திருவருள் ஈசனே

வாழையும் வில்வமும் வளமாய் சூழ்தலமே
ஏழைக்கும் அருளிடும் எழிலான ஈசனே

எருதேறி வந்த எமனை தடுத்தவனே
மறுப்பின்றி சிறுவனுக்கு மரணம் தடுத்தவனே

வேதங்கள் ஓதிடும் வேள்வியின் ஈசனே
பாதங்கள் இரண்டையும் பற்றுடன் தொழுவோமே

http://temple.dinamalar.com/New.php?id=959

# 52. ஐயாரப்பன் - பஞ்ச நதீஸ்வரன்
# திருவையாறு

ஐயங்களை நீக்கிடும் ஐயாரப்ப ஈசனே
ஐயாரப்பா என்றால் அதிரும் ஏழுமுறையே

பெண்கள் தருமத்தை பெருமையுடன் செய்யவே
மண்ணில் அவதரித்த மங்கை ஈஸ்வரியே

அன்பு கொண்ட அர்ச்சகர் இல்லையேயென்று
தன்மேல் அபிஷேகம் தானாக செய்தவரே

அங்கே மூழ்கிய அப்பரை உன்னருளால்
இங்கே குளத்தில் எழுந்திட செய்தவரே

ஜடாமுடி விரித்து ஜனங்களை காப்பவரே
அடாது செய்பவரை அழித்துக் காப்பவரே

ஆமை மிதித்த அருள்மிகு மூர்த்தியே
சீமைக்குப் புரியாத சித்தரின் வித்தையே

சத்தமிடும் குரலுக்கு சன்னதி விடையே
சித்தத்தில் தெரிந்திடும் சிவனான சக்தியே

சுற்றாத சன்னதியும் சுயம்புவும் நீயே
உற்றார் உறவினர் உலகிற்கு நீயே

http://temple.dinamalar.com/New.php?id=677

# 53. நெய்யாடியப்பர் - தில்லை ஸ்தானம் தஞ்சாவூர்

தினமும் சுரக்கும் திகட்டாத பாலே
தினமும் பாடும் தித்திக்கும் தமிழே

வெயிலும் மழையும் மாற்றும் நறுநெய்யே
கையிலை மயிலை கைவண்ண சிவமே

காமதேனு வந்திங்கு கனிவாய் சுரக்குமே
காமனை அழித்த கைவல்ய சுகமே

இடையனும் வந்திட எங்கோ மறையுமே
உடையவன் உன்னை ஊருக்கு காட்டுமே

நித்தம் அபிஷேகம் நெய்யினால் செய்வோமே
சித்தம் குளிர்ந்திட சிறக்கும் சுயம்புவே

பலனாய் கீரையை பறித்த பக்தரே
உலகில் கணக்கு உபயம் உன்னாலே

தில்லை ஸ்தானத்து திகம்பர ஈசனே
இல்லை என்ற சொல்லே இல்லாதவனே

வற்றாத ஜீவநதியாய் வந்திடும் பாடலே
பெற்றவராய் என்னைப் பேணிடும் அருளே

அம்மையாய் அப்பனாய் அன்பான சிவமே
எம்முள் தினமும் எழுந்தருளும் எழுத்தே

http://temple.dinamalar.com/New.php?id=382

# 54. வியாக்ரபுரீஸ்வரர் - தஞ்சாவூர்

புலிபாதம் பெற்றவருக்கு புவனத்தில் அருளியவரே
கலியுக மக்களுக்கும் கருணை தருபவரே

ஆணாகி பெண்ணாகி அர்த்நாரியாய் ஆனவரே
தானாக எழுந்த தாண்டவ ஜோதியே

மரங்களில்ஏறி மணமான பூக்களை பறிக்க
வரமாய் புலிக்காலகள் வியாக்பாதர் பெற்றாரே

அருளினை பெற்றிட அனுதினம் உம்மை
கருத்துடன் பூஜித்து காவியம் படைத்தாரே

பதஞ்சலி முனிவரும் பாதங்களை பற்றினாரே
இதமாய் எல்லோரையும் இத்தலத்தில் காண்போமே

வாகன பூஜையும் வகையான பூஜையும்
சாகச அற்புதமும் சாத்தியம் ஆகுமே

பஞ்சபுலியூர் தலங்களில் பரவச தலமே
தஞ்சம் என்றடைய தருமம் காக்குமே

http://temple.dinamalar.com/New.php?id=378

# 55. வைத்தியநாதர் - திருமழபாடி

பொன்னார் மேனியனே புதுப்பொலிவு தருபவனே
அன்னார் நோயை அறவே ஒழிப்பவனே

இருமலும் ரோகமும் இல்லாது செய்பவனே
அருமருந்தாய் எல்லா அணுக்களிலும் கலந்தவனே

பெட்டியில் குழந்தையாய் பிறந்த நாயகனே
மட்டில்லா மகிழ்வோடு மாறாது வளர்ந்தவனே

பதினாறு வயதை பருவத்தை நீட்டிவிட
அதிரடி தவமிருந்து அருளை பெற்றாரே

நந்தியின் திருமணம் நாட்டினில் கண்டிட
முந்திவிடும் திருமணம் முத்தாக நடக்குமே

கொடும் நோய்களும் குறைகளும் தீர்ந்திடுமே
அடும் காலன் அண்டாது ஓடிடுவானே

நமச்சிவாயா என்று நாமத்தைச் சொல்லிட
மமதை அழிந்து மனமும் குளிருமே

http://temple.dinamalar.com/New.php?id=438

# 56. ஆலந்துறையார் - அரியலூர்

கண்களை பார்வதி கையினால் மூடிட
விண்ணிலே சந்திரசூரியன் வாராது இருளிட
மண்ணிலே வாடும் மக்களைக் காத்திட
பண்ணிலே பாட்டாய் பவனி வருபவரே

விளையாட்டாய் செய்தது வினையாய் மாறிட
சிலையாய் ஒருகாலில் சிவனேயென தவமிருக்க
யோகவனத்தில் இணைய யோகியாய் வந்தவரே
சாகச தாண்டவத்தில் சாத்திரம் படைத்தவரே

தாயினைக் கொன்றவன் தன்பாவம் தொலைந்திட
கோயிலுக்கு வந்தவுடன்  குறையும் பாவமே
சிறியதொரு லிங்கமாய் சிந்தை கவர்ந்தவரே
பெரிய கீர்த்தியுடன் பேணிக் காப்பவரே

ஆலமாய் பக்தரை ஆலிங்கனம் செய்பவரே
கோலவிழி அம்மையுடன் கொலுவிருந்து காப்பவரே
வேலனை பெற்று வேண்டியது அளிப்பவரே
காலத்தை வென்ற கபாலி பைரவரே

http://temple.dinamalar.com/New.php?id=10

# 57. செம்மேனி நாதர் - திருக்கானூர்

செந்நிற வண்ணத்தில் செம்மேனி நாதரே
பொந்நிற தேவியின் பொலிவான கணவரே

உருவான நோய்குறைய உயரிய வில்வஇலையே
திருமணத் தடைநீங்க செவ்வரளி மாலையே

மழலைஇன்பம் மகிழ்வாய் பெருக எருக்கமாலையே
பிழம்பான அக்னி பிறந்த பெருமேனியனே

காமதேனுவைக் அசுரன் கவர்ந்த கதையே
சோமனின் அருளில் பரசுராமன் மீட்டகதையே

அசுரனைக் கொன்ற அப்பாவம் நீக்கிய தலமே
பசுவினை மீட்ட பரசுவுக்கு அருளிய தலமே

அரசனாய் கரிகாலனை ஆக்கிய தலமே
வரங்களை வாரி வழங்கும் தலமே

திருக்கானூர் கரும்பாய் தித்திக்கும் ஈஸ்வரனே
திருவாய் தமிழில் திகட்டாத திகம்பரனே

http://temple.dinamalar.com/New.php?id=387

# 58. சத்தியவாகீஸ்வரர்- அன்பிலாந்துறை

அன்பே சிவம் அன்பே சிவம் அன்பே சிவம்
அன்பில் ஊரில் அமைந்த அன்பே சிவம்

சத்தியத்தைக் காத்த சாத்திர ஈசனே
பத்திரமாய் அமைந்த பரமசிவ ஈசனே
அன்பே சிவமென்று அறமான ஈசனே
அன்பில் ஊரில் அமைந்த ஆலந்துறை ஈசனே
அன்பே சிவம் அன்பே சிவம் அன்பே சிவம்
அன்பில் ஊரில் அமைந்த அன்பே சிவம்

அம்மையின் பால்குடித்த அருளில் அன்றுபாடிய
சம்பந்தரை சோதிக்க காவிரியும் புரண்டதே
நெருங்க முடியாத நிலையிலவர் நின்றிட
உருவத்தைக் காண உருகி இசைபிறந்ததே
அன்பே சிவம் அன்பே சிவம் அன்பே சிவம்
அன்பில் ஊரில் அமைந்த அன்பே சிவம்

இளைய பிள்ளையார் இசைப்பதைக் கேட்க
வளைத்த செவியுடன் விநாயகர் அமர்ந்தாரே
செவிசாய்த்த பிள்ளையாரை சேவித்து எழுவோமே
புவியில் அவர்சிற்பம் பொலிவாய்க் காண்போமே
அன்பே சிவம் அன்பே சிவம் அன்பே சிவம்
அன்பில் ஊரில் அமைந்த அன்பே சிவம்

ஒருகால் மடக்கி ஒருகாலில் அமர்ந்த அழகென்னே

அருமை சிற்பத்தை அமைத்த எழிலென்னே

ஆலந்துறை சென்றிடுவோம் அம்பாளைக் கண்டிடுவோம்

சாலச்சிறந்த சத்தியவாகீஸ்வரரை வணங்கிடுவோம்

அன்பே சிவம் அன்பே சிவம் அன்பே சிவம்

அன்பில் ஊரில் அமைந்த அன்பே சிவம்

http://temple.dinamalar.com/New.php?id=283

# 59. ஆம்ரவனேஸ்வரர் -மாந்துறை திருச்சி

மாமரங்கள் சூழ்ந்த மாந்துறை தலமே
பூமரங்கள் பூத்த பொலிவான தலமே
பால் சொரிந்த பாலாம்பிகைத் தாயாரே
சூல் காத்த சுடரொளி சுயம்புவே

சூரியனின் சமுக்யா சூட்டினைத் தாங்காது
கோரிக்கை விட்டு கொண்டவனைப் பிரிந்தாள்
நிழலிலே சாயாதேவியை நிஜமாக்கி சென்றாள்
அழகான உன்னையே அனுதினம் தியானித்தாள்

தவத்தினைக் காத்து தாண்டவ மூர்த்தியாய்
அவனியில் அருளிய ஆண்டவ மூர்த்தியே
முற்பிறவி பயனாய் முனிவரும் மானாக
அற்புதம் செய்து அமுதூட்டிய அன்னையே

மானைக் காத்திடவந்த மாந்துறை மாயனே
சோலை வனத்தின் சுயம்பு ஈசனே
சொல்லிவிட மாளாத சொக்கநாத ரூபமே
அள்ளிவிட முடியாத அளவில்லா ஆனந்தமே

http://temple.dinamalar.com/New.php?id=151

# 60. திருமூலநாதர் - திருப்பாற்றுரை திருச்சி

ஆதியும் அந்தமுமாய் அண்டத்தின் மூலமே
பாதிஆணும் பெண்ணுமான பார்வதி சிவனே

புற்றில் பால்கசிந்து பிறந்த லிங்கமே
கற்றறிந்த முனிவரும் காணாத அதிசயமே

வெண்ணிற பறவையாய் விண்ணில் பறந்தவரே
கண்ணால் அநீதியைக் கரியாய் எரிப்பவரே

தண்ணீர் இல்லாத தடங்கல் போக்கிட
வெண்ணிற பாலை விழவைத்த நாயகனே

சந்ததிவளர அருளும் சந்நிதி சிவனே
கந்தனின் தந்தையாய் கவலை போக்குபவனே

புதுமணத் தம்பதியர் பொலிவுடன் வணங்கிட
எதுவும் வழங்கிட எழுந்த எம்பிரானே

அன்னையாய் தந்தையாய் அருளும் ஈசனே
என்னில் கலந்த ஏகாம்பர ஈசனே

http://temple.dinamalar.com/New.php?id=116

# 61. ஜம்புகேஸ்வரர்- திருவானைக்கா

பஞ்சபூத தலங்களில் பவித்திர நீரே
பஞ்சமுக விநாயகருடன் பரமசிவன் நீரே
அம்பாள் உருவில் ஆள்மாறிவந்த சிவமே
அம்மை உருமாறி அப்பனாய்வந்த சக்தியே

வரங்கள் தந்திடுவாய் வாத்தியங்கள் இன்றியே
பிரம்மன் தியானிக்க பிரம்மோத்சவ நேரமே
மகிமையைப் படித்த மாணவி நீயே
அகிலத்தைக் காத்திடும் அகிலாண்டேஸ்வரி தாயே

விடியவிடிய பண்டிகை விமரிசன ஆடியே
அடியாரைக் காத்திடும் ஆண்டவனும் நீயே
ஒன்பதுதுளை உடைய ஒருஜன்னல் சன்னதியே
துன்பங்கள் போக்கி துயர்நீக்கும் உன்னதமே

சித்தராய் வந்து சித்தம்கவர் சிவனே
பத்திரமாய் பிரகாரம் பக்தருக்கு கட்டியவனே
திருநீற்றான் எழுப்பிய  திருமதில் சுவரே
திருநீராய் அமைந்த திருவானைக்கா தலமே

ஆதிசங்கரர் அணிவித்த அம்பாளின் தாடகங்களே
காதில் அணிவிக்க கண்கள் சாந்தமாகுமே
சிலந்தியும் யானையும் சிவனையே நினைக்க
உலகில் எல்லா உயிரையும் காப்பவரே

வாயிலே வெற்றிலை வளமார உமிழ்ந்து
கோயிலில் கவிஞனை கும்பிட வைத்தவளே
கவிபாடும் திறனைக். காளமேகப் புலவருக்கு
புவியினில் அளித்து பூரிக்க வைத்தவளே

எப்படி பாடினாரோ அப்படிநான் பாடிடவே
தப்பாது அருள் தருவாய் என் தகப்பனே
தினமும் ஒருபாடல் திறம்பட எழுதிடவே
மனமும் உடலும் மன்றாடி வணங்குமே

http://temple.dinamalar.com/New.php?id=314

# 62. ஞீலிவனேஸ்வரர் - திருப்பைஞ்ஞீலி திருச்சி

ஞாலத்தைக் காத்திடும் ஞானத்தைத் தந்திடும்
காலத்தை வென்றிடும் காலால்எமனைக் கொன்றிடும்
பாலமாய் அமைந்திடும் பாதையைக் காட்டிடும்
கோலத்தை உணர்த்திடும் கோவிலில் அமர்ந்திடும்

தாளத்திற் காடிடும் தாண்டவம் புரிந்திடும்
மேளத்தைக் கொட்டிடும் மேற்பதவி தந்திடும்
ஏளனம் எரித்திடும் எதிரியைத் தாக்கிடும்
மீளமுடியா ஆபத்தை மெத்தன போக்கிடும்

திருநாவுக் கருளிடும் திருத்தலம் காட்டிடும்
திருப்பைஞ்ஞீலி வந்திடும் திருவருள் புரிந்திடும்
பசியினைப் போக்கிடும் பால்சோறு தந்திடும்
கசிந்துருகி காத்திடும் கல்யாணத்தடை போக்கிடும்

நடுஇரவில் ஆடிடும் நடனம் காட்டிடும்
தடுக்காது காத்திடும் தடைகள் அகற்றிடும்
ஏழுகன்னிக்கும் திருமணம் எழிலாய் நடந்திடும்
ஆழும் மண்ணில் அவைகள் வாழையாகிடும்

வாழையின் மறுபெயர் வார்த்தை ஞீலியே
வாழையடி வாழியாய் வாழும்ஞீலி ஈஸ்வரரே
ஏழைக்கு அருளும் ஏகாம்பர ஈஸ்வரரே
பேழையில் பொதிந்த பெரிய கடவுளே

http://temple.dinamalar.com/New.php?id=299

# 63. மாற்றுரைவரதீஸ்வரர் - திருவாசி - திருச்சி

அய்யனே அப்பனே ஆனந்த ஈசனே
மெய்யான வடிவே மேவிய உண்மையே

அன்னம் இடவே அடியார் வேண்டிட
பொன்னைத் தராது பொறுக்க வைத்தவரே

சினமும் பொங்க சிலேடை பதிகமே
மனமும் கொதித்து மன்றாடி பாடினாரே

இகழ்ந்து பாடியதில் இரங்கி வந்தவரே
தகதகக்கும் பொன்னை தடவிய சந்தேகமே

இருவராய் வந்திங்கு எடுத்து உரைத்தவரே
திருவருள் புரிந்து திண்ணமாய் மாற்றுரைத்தவரே

மன்னனின் மகள் மாறாத நோயில்வாட
இன்னல் அகற்ற இன்னிசைக்கு நீயாட

கட்டிய சடைமுடி காலின்கீழ் நாகமே
மட்டில்லா புகழுடன் மகேச தாண்டவமே

வாதங்கள் அகற்ற வையத்தில் வந்தவரே
வாதங்கள் இல்லாது வெற்றிகள் பெற்றவரே

சுழலும் உருளையில் சுற்றும் அதிசயமே
உழலும் மனதைமாற்ற உரையும் தருவாயோ

http://temple.dinamalar.com/New.php?id=118

# 64. மரகதாசலேஸ்வரர் -ஈங்கோய்மலை (திருச்சி)

மரகதாசலேஸ்வரர் -ஈங்கோய்மலை (திருச்சி)
தினம் ஒரு பாடல்
நாள்- 145
276 பாடல் பெற்ற சிவஸ்தலங்கள் -64

அறிவுக் கடலே  சரணம் சரணம் ஆண்டவ மூர்த்தி சரணம் சரணம்
விரிந்திடும் வான வில்லே  சரணம்  வீர மகேசா சரணம் சரணம்

**மரகத** சுயம்பு சரணம் சரணம் மங்காத ஒளியே சரணம் சரணம்
வரங்களைத்  தந்திடும் வரதா சரணம் வசமான ஒளியே  சரணம் சரணம்

உரமான **வைரமே** சரணம் சரணம் உயர்வான **முத்தே** சரணம் சரணம்
தரமான **கோமேதகமே** சரணம் குளிர்வாய் நிலவே சரணம் சரணம்

கழுத்தில் **நீலமே** சரணம் சரணம் காலபைரவா சரணம் சரணம்
தழுவும் சக்தி மாலை சரணம் தவறாத அன்பே சரணம் சரணம்

புளியமரத்து **பவளம்** சரணம் புரியாத புதிரே  சரணம் சரணம்
எளிதில்  ஈ யும் காணும்  சரணம் ஏகாந்த **மாணிக்க**வாசா  சரணம்

அகத்தில் தெரியும் ஆனந்த சரணம் ஆடும் **புஷ்பராகமே** சரணம்
முகத்தில் மூன்று கண்கள் சரணம் முடிவில்லா சடைமுடியே சரணம்

வையத்தைக் காத்திடும் **வைடூர்ய** சரணம் வானத்தில் மேவிய மலையே  சரணம்
ஐயம் அகற்றிடும் அறிவே சரணம் அமுதாய்ப் பொழியும் தமிழே சரணம்

நவரத்தின மாலை சரணம் நடனம் ஆடும் சிவனே சரணம்
அவனியில் அர்த்தநாரியே சரணம் ஆடும் சிவனே சரணம் சரணம்

http://temple.dinamalar.com/New.php?id=841

# 65. இரத்தினகிரீஸ்வரர் - அய்யர் மலை கரூர்

ஒன்பது இரத்தினங்களாய் உயர்ந்த மலையே
தன்பால் பக்தரை தவறாதிழுக்கும் மலையே

குலதெய்வம் இல்லாதவர்கள் கும்பிடும் மலையே
உலகினைக் காக்க உருவான மலையே

மணிமுடி இழந்த மன்னரைக் காத்த மலையே
அணிகலனாய் இரத்தினம் அளித்த மலையே

அபிஷேக பால் அதிகநேரம் கெடாத மலையே
அபிஷேகம் முடிந்தால் ஆகும்கெட்டி தயிர் மலையே

சிரசை அளித்த சிருங்கார பெருமாள் மலையே
வரங்கள் அளித்து வாதம்தீர்க்கும் மலையே

காகம்தட்டி பால்குவளை கவிழ்ந்த மலையே
காகம் பறவாத கடிமணல்  மலையே

படிகள் பலகொண்ட பரமசிவன் மலையே
படிக்க படிக்க பரவசம் தரும் மலையே

ஒருநாளில் மூன்று ஊர்கள் சிறப்பு மலையே
திருவருளை தந்திடும் திருவாட்போக்கி மலையே

http://temple.dinamalar.com/New.php?id=553

# 66. கடம்பவனேஸ்வரர் - குளித்தலை -கரூர்

கஷ்டங்கள் போக்கி காக்கும் கடம்பவனேஸ்வரரே
துஷ்டரை விலக்கி தூரவைக்கும் கடம்பவனேஸ்வரரே

சப்தகன்னிகள் காத்திட  சன்னதியில் நின்றவரே
தப்பாமல் காக்கும் தாண்டவ ஈஸ்வரரே

தூம்ரலோசனை அழிக்க துணிந்த கன்னியரே
தூம்ரலோசன்  ஒளிந்த தூரத்து ஆசிரமமே

முனிவரைக் கொன்ற முதற்பாவம் அழியவே
இனிதாய் உன்னையே ஈரமுடன் தொழுதாரே

அசுரனை அழித்த ஆண்டவ மூர்த்தியே
விசுவாசமோடு கன்னியர் வேண்டிய சுயம்புவே

பாவங்கள் போக்கும் பரமசிவ கடம்பனே
கோவத்தில் அசுரனை கொந்தளித்து அழித்தவரே

காலைக் கடம்பரே மதியம் சொக்கரே
மாலை ஈங்கோய்நாதனே மாறாத மகேசனே

பெண்களைக் காத்திடும் பிரம்மாண்ட ஈசனே
கண்ணிலே அழித்திடும் கனகசபை ஈசனே

தென்காசி என்றே தேவாரம் பாடினாரே
உன்புகழ் பாடவே ஓடிவருவேனே குளித்தலமே

http://temple.dinamalar.com/New.php?id=83

# 67. பராய்த்துறை நாதர் -திருச்சி

பேரழகனாய் வந்து பெருநாடக பிட்சாடநாதரே
ஆராவமுது மோகினியாய் அதிசய விஷ்ணுவே

ரிஷிகளை மயக்கிய ரம்மிய மோகினியே
ரிஷிபத்தினிகள்  மயங்கிய ராஜகம்பீர பிட்சனே

தொல்லை தரும் தோல்நோய் நீங்கவைப்பவரே
இல்லையென்று சொல்லாத எழிலரசு நாயகனே

புற்றுநோயைக்  காணாது போகடிக்கும் தெய்வமே
பெற்ற குழந்தையை பேசவும் வைப்பவரே

பராய் மரங்கள்சூழ பாதையில் எழும்சுயம்புவே
அராஜகம் அழித்திடும் அழகான சிவனே

அகண்ட காவிரி அணைக்கும் தலமே
அகண்ட இவ்வுலகில் அணைக்கும் என்னப்பனே

அன்னையாய் தந்தையாய் ஆருயிர் நாதரே
உன்னழகை சொல்லிவிட ஒருபாடல் போதுமோ

நித்தம் பாடினாலே சித்தம் குளிருமே
உத்தம குணங்களை உரைக்க உருகுமே

எப்படி பாடினாரோ அப்படியே  பாடிட
தப்பாது தினமும் தருவாய் அருளை !

http://temple.dinamalar.com/New.php?id=117

# 68. உஜ்ஜீவன நாதர் - உய்யக்கொண்டான் மலை- திருச்சி

ஏறும் படியாகி எண்ணத்துசுடராகி எரியும் ஜோதியே
கூறும் பொருளாகி என்னை .கும்பிடவைக்கும் மலையே

உள்ளிருக்கும் ஜீவனுக்கு உயிர்தரும் உஜ்ஜீவனநாதரே
அள்ளிடும் கண்ணழகில் அருளிடும் அஞ்சனாட்சியே

இடர்களை நீக்கி இனிமைதரும் இடர்காத்தநாதரே
உடலிலே உயிராகி உணர்வாகும் உய்யக்கொண்டானே

விபத்தினை தடுத்து வினைகளை அகற்றும் மூதேவியே
சுபத்தினை தந்து சுமைகளை குறைத்திடும் பாலாம்பிகையே

ஜேஷ்ட தேவியாகி ஜெகத்தைக் காக்கும் தங்கையே
கேட்டதை அளிக்கக் கோவிலில் நின்ற கற்பகநாதரே

கரங்கள் கூப்பி கரன்தொழுத கற்பக ஜீவனே
வரங்கள்தந்து  மார்கண்டேயனை வாழவைத்த தேவனே

அழிக்க வந்த எமனை அண்டாது தடுத்தவனே
அழியாத விளக்காய் ஆகாயத்தில் தெரிபவனே

மாடனும் சேடியும் மாறாத அகிலாண்டேஸ்வரியே
ஆடல்அழகன் ஆடிய ஆனந்த தாண்டவமே

திருப்புகழைப் பாடும் திருவருள் தந்த திருமுருகனே (என்)
திருவாய் பாடிட தினமும் அருள்வாய் கந்தனே

http://temple.dinamalar.com/New.php?id=154

# 69. பஞ்சவர்ணேஸ்வரர் - திருமுக்கீச்சுரம் - உறையூர்

உறையூரில் உறையும் உண்மையை உரைப்பேனே
மறைகள் போற்றும் மகேசனைப் பாடுவேனே
குறைகள் இல்லாது கோவிலில் குடிகொண்டவனே
வரையறை இல்லாத வண்ணமாய் நின்றவனே

வெண்மை நிறமாகி வெளிநீராய் பரவியவனே
கண்ணுக்கு புகையாகி கலையாத வானமானவனே
பொன்னிற மேனியாகி புதுப்பொலிவு மண்ணானவனே
செந்நிற நெருப்பாகி  செழிப்பாய்  எரிபவனே

கருமை நிறமாகி காற்றாய் கலந்தவனே
ஒருவனாய் பஞ்சவர்ணம் உலகில் சுமந்தவனே
திருவானைக்காவல் நீராகி திருக்காஞ்சி நிலமாகி
திருவண்ணாமலை தீபமாகி திருச்சிற்றம்பல  ஆகாயமே

காளஹஸ்தி காற்றாகி கவலைகள் தீர்ப்பவனே
காலத்தால் அழியாத கரைகளில்லாது விரிந்தவனே
வேதங்கள் படித்த வித்தகர் உதங்கருக்கு
பேதங்கள் இல்லாது பேரருள் புரிந்தவனே

காலையில் இரத்தினமாய் கடுமுச்சியில் ஸ்படிகமாய்
மாலையில் பொன்னாய் முதல்ஜாமத்தில் வைரமாய்
அர்த்தஜாமத்தில் சித்திரமாய் அருள்புரிந்து நின்றவனே
அர்த்தங்கள் புரியவைக்கும் அர்த்தநாரி சிவனே

கோழியாய் யானையின் கொட்டம் அடக்கியவனே
வாழிய தேவாரம் வாழ்த்த நின்றவனே
மதம் பிடித்த மனயானையை அடக்குபவனே
இதமாய் எங்களுக்கு இனிமை அளிப்பவனே

http://temple.dinamalar.com/New.php?id=153

# 70. தாயுமானவர்- மலைக்கோட்டை - திருச்சிராப்பள்ளி

செவ்வந்தி மலரால் சிவனை பூஜிக்க
செவ்வென பூசையை சாரமாமுனி செய்திட
மலரினை வணிகன் மன்னருக்கு தந்திட
மலர்மேல் ஆசையுற்று மன்னர் கேட்டான்

தடைபட்ட பூசையில் தவமுனிவர் வாடிட
கடைக்கண் உக்கிரத்தில் கணநேரம் பார்த்திட
மண்மழை பொழிந்து மண்டலம் அதிர
உன்பெருமை மன்னன் உடனே உணர்ந்தானே

தனகுத்தன் மனைவிக்குத் தாயாய் வந்தாய்
மனமிரங்கி மங்கையின்  மகப்பேறு பார்த்தாய்
சித்திரை ஐந்தாம்நாள் சிவன்பார்க்கும் பிரசவம்
முத்தாய் பிள்ளைவைபவம்  முன்னின்று காண்போம்

சுகந்த குந்தளாம்பிகை சுகப்பிரசவம் செய்திட
உகந்த வேளையில் உள்ளமுருகி தொழுவோம்
வாழையடி வாழையாய் வாழவைக்கும் நாயகரே
ஏழைக்கும் அருளும் எளியோனாய் நிற்பவரே

மெச்சிய ரங்கனை மெதுவே கீழ்வைத்து
உச்சியில் நின்ற உயரிய பிள்ளையாரே
சிறுவனாய் வந்து சிறுவிளையாட்டு விளையாடி
அருமை விநாயகரை அனுதினம் தொழுவோம்

சங்குச்சாமி நின்றிட சங்கடம் தீர்த்திட
லிங்கம், சிம்மம் ரிஷபம்தும்பிக்கை தெரிந்திட
எங்கும் நிறைந்த என்னருமை தாயே
பொங்கும் அன்பினைப்  பொழிவாய் நீயே

அன்னையை இழந்தவருக்கு அன்னையாய் ஆனவரே
என்னைப் போன்றோருக்கு என்றும் பெற்றவர்ஆனவரே
தாயுமாகி தந்தையாகி தட்டாத கதவுதிறந்து
பாயும் ஒளியாய் பரவும் காற்றாய் வந்தவரே

http://temple.dinamalar.com/New.php?id=313

பொருளடக்கம் செல்ல



# 276 பாடல் பெற்ற சிவஸ்தலங்கள்

# 71. எறும்பீஸ்வரர்- திருவெறும்பூர் ( திருச்சி)

சிவனோடு இணைந்த சிவகாமி சக்தியே
புவனத்தில் எறும்பு புற்றான லிங்கமே

எறும்புகள் ஏறிவிட எளிதான மண்புற்றே
உருவத்தில் இரண்டாய் உருவான சிவசக்தியே

சரிந்து சற்றே சாய்ந்தே லிங்கமே
அறியா அறிவியலை அறிய வைப்பவரே

தேவர்களைக் காக்க திவ்யமாய் வந்தவரே
தேவர்களும் எறும்பாய் தினமும் வருவாரே

கோபத்தைக் குறைத்து குணத்தை தருபவரே
சாபங்கள் நீக்கி சங்கடங்கள் போக்குபவரே

நறுமணம் கமழும் நறுங்குழல் நாயகியே
கருவறையில் குடிகொண்டு காக்கும் ஈஸ்வரனே

http://temple.dinamalar.com/New.php?id=152

# 72. திருநெடுங்களநாதர் - திருநெடுங்குளம் - திருச்சி

காசியைப் போலவே காணஇரு கோபுரங்கள்
மாசில்லா சிவனின் மகிமையைச் சொல்லும்

இடபாகம் சக்திக்கு இனிதே அளித்து
இடப்புறம் வழிவிட்டு இத்தலத்தில் லிங்கம்

இருக்கும் சிவனுள்  இருக்கும் சக்தியே
அருவமாய் அமைந்தாலும் ஆக்கும் சக்தியே

அடியவருக்கு மாறுவேடத்தில் அருளவந்த சிவனே
அடியவர் வழக்கிலே அருள்சாட்சி சொன்னவரே

மன்னனும் அறியாது மாறுவேட சிவன்விரல்
துண்டித்த கதையும் தொடரும் தலமே

பெரிய ஊரில் பெரும்பேறு பெற்றதலமே
அரிய நெடுங்குள அர்த்தநாரி சிவசக்தியே

http://temple.dinamalar.com/New.php?id=571

# 73. அக்னீஸ்வரர் -திருக்காட்டுப்பள்ளி - தஞ்சாவூர்

திருமால் வணங்கிய திருமூர்த்தி ஈஸ்வரனே
அருமை சூரியன் அடிபணிந்த அக்னீஸ்வரனே

கருத்துடன் பகீரதன் கைதொழுத ஈஸ்வரனே
உருவத்தை பிரம்மன் உள்ளத்தால் தொழுதானே

குறையுடன் இளையவள் தான்சூடி நின்றதால்
உறையூரில் மண்மாரி ஊரிலே பொழிந்தவனே

செவ்வந்தி மலரை மூத்தவள்  சூடியதால்
செவ்வனே இவ்வூரை செழிப்பாய் காத்தவனே

கிணறு வடிவத்தில் கிடக்கும் தீர்த்தமே
மணக்கும் செவ்வந்தி மலரால் மணந்தவனே

திருக்காட்டுப் பள்ளியில் திருவருள் புரிபவனே
அருள்மிகு அக்னீஸ்வர ஆண்டவ மூர்த்தியே

http://temple.dinamalar.com/New.php?id=956

# 74. ஆத்மநாதேஸ்வரர் - திருவாலம் பொழில்

பொற்றாமரைக் குளத்தில் பொலிவாக பூத்தவரே
குற்றங்கள் போக்கி குணங்களைத் தந்தவரே
இந்திரன் சாபம் இனிதே நீக்கியவரே
மந்திரங்கள் ஓத மண்டலம் காப்பவரே

திருவாலம் பொழிலில் திருவருள் புரிபவரே
அருளைப் பொழியும் ஆத்ம நாதேஸ்வரரே
காசிபர் வழிபட காசினியைக் காப்பவரே
ஆசிகள் வழங்கி அஷ்டவசுக்களை அணைத்தவரே

ஞானத்தை அளிக்கும் ஞான அம்பிகையே
மோனத்தை அளிக்கும் மகத்தான துர்க்கையே
ஆனந்தம் அளிக்கும் ஆண்டவ ஈச்வரே
வானத்து சந்திர வட மூலேஸ்வரே

பொன்னடியை அணுகியவருக்கு பேரானந்தம் அளிப்பவரே
உன்னடியை தொழுதாருக்கு உள்ளுக்குள் தெரிபவரே
மண்ணிலே குருவாய் மாறாது வருபவரே
கண்ணிலே தெரியும் காஞ்சி மகாதேவரே

http://temple.dinamalar.com/New.php?id=963

# 75. புஷ்பவனேஸ்வரர்- மேலைத்திருப்பூந்துருத்தி -தஞ்சாவூர்

அப்பருக்கு காட்ச்சியளித்த அப்பனே ஈசனே
தப்பாமல் நந்தியை தலத்தில் நகர்த்தியவனே

உழவாரத் தொண்டு உள்ளபடி செய்திட
அழகான மலர்மேனி ஆற்றிடை ஈசனே

ஞானசம்பந்தருக்கு காட்சிதர நகர்த்திய நந்தியே
ஞானம் தந்திடவே ஞாயிறுதோயும் திருமடமே

காகம் கவிழ்க்க காவிரி தோன்றுமே
பாகத்து நிலங்கள் கடல்போல் மூழ்குமே

கண்டியூர் அருகிலே கழுமல பூங்காவே
வண்டலும்  மணலும் வளர்பூவால் மாறுமே

நீர்வர பூந்துருத்தி நிலப்பகுதி ஆகுமே
ஊர்பெயர் துருத்தியாய் உடனே மாறுமே

இந்திரன் மலர்கொண்டு இனிதே வணங்க
இந்திரன் சாபங்கள் இத்தலத்தில் நீங்குமே

மலர்க்காடு தலத்தில் மகேசன் கோவிலே
தலத்து கிணற்றில் தண்ணெனஎழும் கங்கையே

புஷ்பவனத்தில் தானாக பூத்த சுயம்பூவே
கஷ்டங்கள் போக்கிடும் காவிரிக்கரை ஈசனே

http://temple.dinamalar.com/New.php?id=961

# 76. பிரம்மசிரகண்டீஸ்வரர் - கண்டியூர்

திருவையாறு நந்தியாருக்கு திருமழபாடியில்  திருமணமே
திருவையாறு ஐயாறப்பர்இத் திருத்தலம் வருவாரே

மாப்பிள்ளை நந்தியாருக்கு மாமனார் விருந்தே
சாப்பாடு இத்தலத்தில் சடங்காய் நடக்குமே

தான்படைத்த பெண்மீது தடுமாறி ஆசைகொள்ள
ஆண்டவன் கோபத்தில் அறுந்திடும் பிரம்மன்தலையே

பிரம்மனின் ஒருதலை பிரமிப்புடன் கொய்தவரே
இரங்கி பின்சாபம் இல்லாமல் செய்தவரே

சரஸ்வதி துணையுடன் தவமிருக்கும் பிரம்மனே
கரம்கூப்பி வணங்கிட கண்டியூர் செல்வோமே

சதாசபர் மகரிஷி சர்வேசனை வணங்கிட
விடாது பிரதோஷத்தில் விரைந்து செல்வாரே

இடியுடன் மழைபெய்ய இன்னல் வந்ததென்றன்று
அடியெடுக்க முடியாது அக்னி  பிரவேசமுற்றார்

எங்கும் நான் இருக்கிறேன் என்றங்கு
பொங்கும் நெருப்பில் பூத்தெழுந்த பெருமானே

அங்கும் இருந்து இங்கும் இருந்து
எங்கும் பரவிய எழிலான ஈசனே

http://temple.dinamalar.com/New.php?id=885

# 77. திருச்சோற்றுத்துறைநாதர் - திருச்சோற்றுத்துறை (தஞ்சாவூர் )

பசிப்பிணி தீர்க்க பாத்திர அட்சயமே
புசிக்க புசிக்க பொங்கிடும் சோறே
பிறவிப்பிணி தீர்க்கவீடு பேறும் தருவாயே
மறக்காது பஞ்சாட்சரம் மனமும் ஓதுமே

அருளாளன் பஞ்சத்தில் அலறியே தொழுதானே
அருளால் உருவான அட்சய பாத்திரத்தால்
அக்கணம் வெள்ளத்தில் அன்னம் அளித்தாயே
மக்கள் பசிபோக்க மன்னன் மகிழ்ந்தானே

தொலையாச் செல்வரால் தொலையும் வறுமையே
அலையும் மனமும் அள்ளஅள்ளக் குறையாதே
உலையில் அன்னபூரணி உணவைத் தருவாளே
விலையில்லா உண்மையாய் வீடுபேறு தருவாயே

திருமணம் முடிந்து திவ்யதம்பதிகள் நந்தியுடன்
திருவையாறு திருப்பழனம் திருச்சோற்றுத்துறை வந்திட
ஏழுதலங்களில் அருளும் எழிலான சிவனே
வாழும் வழியை வகையாய் அருள்வாயே

http://temple.dinamalar.com/New.php?id=371

# 78. வேதபுரீஸ்வரர் - வாழைமடுநாதர்- திருவேதிகுடி

வேதங்களைக் காத்த வேதபுரீஸ்வர நாதரே
சோதனைகள் நீக்கி சுகங்களைத் தருபவரே
வேதிகுடி மண்ணில் வீற்றிருக்கும் நாதரே
ஆதியந்தமாய் அன்னையுடன் அர்த்தநாரீஸ்வரே

வலப்புறம் அன்னை வாகாய் அமைந்திட
உலகத்தை காக்கும் உன்னத அப்பனே
தடைகளை நீக்கி தம்பதிகள்  ஆக்குபவரே
விடையாய் கேள்விகளுக்கு  வினயமாய் நிற்பவரே

வாழைமடுவில் தோன்றி வளர்நிலவான கடவுளே
வாளைகள் நிறைந்த வசீகரதடாக இறைவனே
சோலைவனம்  சூழ்ந்த சொக்கநாத கடவுளே
காலை மாலை காத்து நிற்பவரே

கல்வியை அளித்து கல்லாமை நீக்குபவரே
அல்லும் பகலும் அணைத்து காப்பவரே
மங்கலம் தந்திடும் மங்கையற்கரசியே
பொங்கிடும் ஆனந்தம் புதுப்பொலிவு அன்னையே

# 79. வசிஷ்டேஸ்வரர்- தென்குடித் திட்டை

குரு பகவானைதேவ குருவாக்கிய தலமே
உருவில் லிங்கமாய் ஒளிரும் தலமே

மங்கள வாழ்வுதரும் மங்களாம்பிகை தலமே
இங்கிருந்த படியே இவ்வுலகம் காக்கும்தலமே

பஞ்சலிங்க வடிவில் பவித்திர தலமே
அஞ்சாது பேசிட அருளிடும் தலமே

திட்டை ஞானமேடாக தென்குடி உடலாக
திஷ்டான மணிபூரக திருமுருக தலமே

அனாகத விசுத்த ஆக்ஞை ஆதாரமூலமே
குணாதிசய மங்கல கோவில் தலமே

நீரால் உலகம் நிலையின்றி அழிய
ஊராய் இருதலம் ஒய்யாரமாய் எழுந்திட

மூலமந்திரம் கேட்டிட முக்காலம் உணர்ந்திட
ஆலயத்தில் எழுந்த அழகான சுயம்புவே

முனிவர் வசிஷ்டர் முதற்கண் வணங்கிட
இனிவரும் காலத்தை இனிதே காப்பாயே

எங்கே போனாலும் என்னுடன் வந்திடுமே
தங்கிடும் தேசமெல்லாம் தாய்தந்தையாய் காத்திடுமே

http://temple.dinamalar.com/New.php?id=381

# 80. பசுபதீஸ்வரர் - பசுபதி கோவில்

ஆலகால விடத்தை அமுதாக்கிய தலமே
காலத்தால் அழியாத காவிரி தலமே

திருச்சக்கர பள்ளியின் திருசப்த தலமே
திருவருள் புரியும் திருபசுபதி தலமே

பசுவந்து தினமும் பால்சொரியும் தலமே
பசுமங்கைக் கருளும் பசுபதி தலமே

சிலந்தியாய் பிறந்து சிவத்தொண்டு செய்ததலமே
சிலந்திக்கும் யானைக்கும் சிவபதவி தந்ததலமே

மறுபிறவியில் சோழனாய் மாடக்கோவில் கட்டியதலமே
அருமருந்தாய் இவ்வுலகில் ஆருயிர் காக்கும்தலமே

அந்நிய மன்னர்கள் அழித்திட புதுப்பித்ததலமே
மண்ணிலே மாறாது மதம்காத்த தலமே

# 81.சக்கரவாகேஸ்வரர்

திருமாலுக்கு சக்கரத்தை திருவருள் செய்ததலமே
திருக்கோவில் வளாகத்தில் திருமந்திர சுயம்புவே

இந்திரன் மகனும் இத்தலத்தில் பூஜிக்க
மந்திர ஐந்தெழுத்தில் மண்டலம் சுகிக்குமே

ஜெயந்தனும் தேவரும் ஜெபித்த தலமே
அயராது காத்து அணைக்கும் சுயம்புவே

ஐயம்பேட்டையில் அமர்ந்த ஐயன் ஈசனே
ஐயங்கள் அகற்றி அகிலம் காப்பவரே

கல்வெட்டில் ஊர்சபை கருத்துசொன்ன தலமே
கல்வியும் கேள்வியும் அளிக்கும் தலமே

சப்தமாதர்கள் வணங்கிய சக்கரபள்ளி தலமே
சப்தம் மௌனம் சாத்தியம் ஆக்கும் தலமே

# 82. பாலைவனேஸ்வரர்- பாபநாசம்

பாவத்தைக் போக்கும் பாவநாச சிவனே
ஆவுடையாரோடு அமைந்த அழகிய சிவனே

பாலைவனத்து ஜோதியாய் பாதுகாக்கும் சிவனே
மாலை நேரத்து மதிகாக்கும் சிவனே

முனிவர்கள் உண்டாக்கிய புலியழித்த சிவனே
இனிமையை வழங்க இத்தலத்து சிவனே

புலித்தோல் உரித்து புவனம்காக்கும் சிவனே
கலியுக தருமத்தை காக்கும்கபாலி சிவனே

வில்வித்தை கற்க விஜயன்வந்த சிவனே
நெற்களஞ்சியம் கொண்ட நேர்த்திமிகு சிவனே

சொல்லவும் முடியுமோ சிறப்புகளை சிவனே
சொல்லாமல் இருக்கவும் முடியுமோ சிவனே

சிவனே என்று சித்தம் இருக்குமோ சிவனே
அவனியில் சக்தியை அளித்திடும் சிவனே

http://temple.dinamalar.com/New.php?id=960

# 83. பஞ்சவர்ணேஸ்வரர் - கல்யாணசுந்தரேஸ்வரர் -நல்லூர்

ஐந்து வண்ணங்களில் ஐம்புலன்களை அள்ளுபவரே
ஐந்தெழுத்து மந்திரமாய் ஐயங்கள் அழிப்பவரே

தங்க நவரத்தினப்பச்சை தாமிர ஈசனே
மங்காத இளஞ்சிவப்பு மறையாத ஒளியான ஈசனே

குந்தியின் தோஷம் குறைத்த எழுகுளஈசனே
அந்தியில் அருளும் அனபுடை ஈசனே

இமயத்தின் அழுத்தத்தில் இவ்வுலகம் சாய்ந்திட
சமயத்தில் அகத்தியர்மூலம் சங்கடம் நீக்கியஈசனே

திருமணம் காண திருவருள் வேண்ட
தருணத்தில் காட்சியான தலத்து ஈசனே

கல்யாணக் கோலம் காட்சியான ஈசனே
அள்ளும் அழகுடன் அகத்தியர் கண்டஈசனே

ஒளியாகி இருளாகி ஒலியான ஈசனே
வெளியாகி உள்ளாகி வேரான ஈசனே

சலனமில்லா குளத்துள் சத்தியமான தலமே
சலனமில்லா மனத்துள் சத்தமில்லா ஈசனே

பாதிவருடம் என்னுடன் பாடலான ஈசனே
மீதிவருடமும் என்னை மீளவைப்பாய் ஈசனே

http://temple.dinamalar.com/New.php?id=367

# 84. பசுபதீஸ்வரர் - ஆவூருடையார்- கோவந்தகுடி தஞ்சாவூர்

பசுவிற்கு அருளிய பசுபதீஸ்வரர் தலமே
பசுவினால் அபிஷேக பசுபதீஸ்வரர் தலமே

கோ வந்த குடியில் கொலுவான ஈசனே
கோ பூஜிக்க குலம் காக்கும் ஈசனே

பார்வதி தவமிருக்க பாரினை காப்பவரே
ஆர்வத்தை ஊட்டும் ஆவூருடை அப்பனே

மங்களாம்பிகை அருள மங்களம் தருபவளே
பொங்கிடும் அன்பினை பொலிவாய் தருபவரே

வில்லேந்திய முருகனுடன் வேதனைகளை குறைப்பவரே
அல்லும் பகலும் காக்கும் அசுவத்தன ஈசனே

பாடும் நாவினை பாவைக் களித்த ஈசனே
ஆடும் சதங்கை ஆவூருடை நாதனே

http://temple.dinamalar.com/New.php?id=1027

# 85. சிவக்கொழுந்தீசர்

சக்தி தழுவிய சதாசிவ ஈசனே
முக்தி வழங்கும் முழுமுதற் ஈசனே

கொழுந்தாய் எரிந்து குளிர்ந்த ஈசனே
எழுந்திடும் சுயம்புவின் எழிலான ஈசனே

திருச்சத்தி முத்தமிட்ட திருக்கோல ஈசனே
திருநாவுக்கரசுக்கு தரிசனம்தந்த திருவடி ஈசனே

முக்திக்கு வித்தான பக்தியளிக்கும் ஈசனே
சக்தியின் முத்தத்திற்கு சத்தியமான சிவனே

சம்சார சாகரத்தில் சமரசம்தரும் ஈசனே
அம்சமாய் பார்வதி அணைத்த சிவக்கொழுந்தீசனே

நழுவாத ஒற்றைக்கால் நற்தவத்தில் அன்னையே
தழுவிடக் குழைந்த தந்தையான ஈசனே

பிணியென்னும் பயத்தைப் போக்கிடும் ஈசனே
அணியாய் பிரதோதஷதின ஆண்டவ ஈசனே

http://temple.dinamalar.com/New.php?id=423

# 86. கர்ப்பரட்ம்பிசாம்பிகை - முல்லை வனநாதர் - திருக்கருகாவூர்

கருவினைக் காத்திடும் கர்பத்தின்  நாயகி
கருத்தினைக் காத்திடும் காருண்ய நாயகி
உருவத்தைக் காத்திடும் உன்னத நாயகி
தருணத்தில் காத்திடும் தாயுமான நாயகி

முல்லைவன  முட்களை மிதிக்கும் நாதரே
இல்லையென்ற சொல்லே இல்லாத நாதரே
சொல்லாத பாடலில் ஒளிந்த நாதரே
கல்லிலும் தெரியும் கலியுலக நாதரே

வேதிகையின் சாபத்தை விலக்கிய நாதரே
ஜோதிவடிவ நாயகியின் சோமாஸ்கந்த நாதரே
ஆதியும் அந்தமுமான அகிலாண்ட நாதரே
மீதிப்பாடலாய் வடிவெடுத்த மெத்தன நாதரே

பாடல் எண்ணிக்கையில்  படிப்படியாய் வளர்நாதரே
பாடப்பாட புதுப்பாடலாய் வடிவெடுக்கும் நாதரே
முயன்றாலும் அளக்க முடியாத நாதரே
வியத்தகு பெருமைகள்  வீற்ற நாதரே

எத்தனை  எண்ணினாலும்  கணக்கில்லா நாதரே
பித்தனாய் என்னை மாற்றிடும் நாதரே
சித்தம் மயக்கும் சிவலோக நாதரே
புத்திக்கு எட்டாத புவிநிறை நாதரே

விட்டுப்போன பாடலாய் வித்தக நாதரே
தொட்டுவிடும் தென்றலாய் தொடரும் நாதரே
மட்டிலா பெருமை கொண்ட நாதரே
கட்டுபட்டு பக்தரின் கருத்தில்வரும் நாதரே

# 87. தேனுபுரீஸ்வரர்- பட்டீசுவரம் தஞ்சாவூர்

பட்டிகன்று வழிபட்ட பட்டீஸ்வர தலமே
பட்டபகலில் சம்பந்தருக்கு பந்தலான தலமே
சுட்டெரிக்கும் வெயிலில் சுகமான பந்தலே
எட்டுகர துர்கையின் எழில்வடிவ சாந்தமே

முத்துப் பந்தலை முதன்மையாய் தந்தவரே
சித்தருக் கருளி சித்தம் குளிர்விப்பவரே
புத்திக்குப் புரியாத புத்தம்புது வித்தே
வித்தாகி முளைக்கும் வீரிய சக்தியே

தாமதம் இல்லாது தாயவள் தவத்திற்கு
சாமத்தில் வந்த சடைமுடி ஈசனே
காமதேனு கன்றும் கருத்தாய் பூஜிக்க
சோமனின் சடைமுடி சோபித்து ஜொலிக்குமே

நாய்வடிவில் காத்த நல்லதொரு பைரவரே
தாய்வடிவில் காக்கும் தளிர்மேனி துர்கையே
நோய்கள் போக்கிடும் நூதன அறிவியலே
வாய்பாடி வாழ்த்துமே வகைமிகு பாடல்களே

http://temple.dinamalar.com/New.php?id=663

# 88. சோமேசர் திருக்கோவில் - கீழபழயாறை வடதளி தஞ்சாவூர்

சுயம்பு மூலவரான சோமேச ஒருவரே
வியக்கும் அம்பிகை வீரதுர்கை இருவரே

கருடன் கலயத்து அமிர்ததுளி மூன்றே
உருவான தீர்த்தம் சடாயு ஆனதே

அப்பர் விரதமிருந்த ஆலயத்து நால்வரே
தப்பாது காக்கும் மந்திரம் ஐந்தெழுத்தே

அருணகிரி பாடிய திருப்புகழ் ஆறுமுகனே
அருளைத் தந்திடும் நாட்கள் வாரத்திலேழே

அன்பால் பரவிடும் ஆலயங்கள் திக்கெட்டே
உன்னைப் பணியும் கிரகங்கள் ஒன்பதே

பாடப்பாட  பாடல் வரிகளும் பத்தே
ஆடலழகனைப் பாடி அனுதினம் களிப்போமே

http://temple.dinamalar.com/New.php?id=954

# 89. திருவலஞ்சுழி நாதர்-தஞ்சாவூர்

பிள்ளையாய் சிவனுக்குப் பிறந்தவர் அவரே
பிள்ளையார் எனவும் பேரினைப் பெற்றவரவரே

பிள்ளையாரை வணங்கிட பெற்றவர் ஆணையிட
பிள்ளையை தேவரும் பேர்சொல்லி வணங்கினாரே

பிள்ளையும் வெள்ளையாய் பாற்கடலில் தோன்றிட
பிள்ளையின் அருளில் பிறந்தது தேனமுதே

பிள்ளையை தூக்கியே பெரியதேவன் சுற்றிட
பிள்ளையை கீழிறக்க பிள்ளையாய் வந்தீரே

பிள்ளையை பூஜிக்க பெரியதேவன் சதுர்த்தியில்
பிள்ளையை வணங்கி பேறுகள் பெறுவானே

பிள்ளையின் அருளிலே பெருங்காவிரி வழிந்தோட
பிள்ளையின் அருகிலே பிலாத்துவார சுழியானதே

பிள்ளையின் தகப்பன் பெரியவாக்கு சொல்லிட
பிள்ளையில்லா சடைமுடியன் பிலாத்துவாரம் நுழைந்தாரே

பிள்ளையும் சித்தியுடன் புத்தியை மணக்க
பிள்ளையின் மணத்தில் பூமியும் மணந்ததே

பிள்ளையின் அருளாலே பிள்ளைகள் நாமும்
பிள்ளைகளைப் பெறுவோமே பெருமையும் அடைவோமே

பிள்ளையின் சுழியை பிழையின்றி போட்டிட
பிள்ளையின் அருளைப் பெற்றிட முடியுமே

பிள்ளைகள் நாம் பிள்ளையாரை வணங்கிட
பிள்ளையாரும் தடைகளை பிழையின்றி நீக்குவாரே

http://temple.dinamalar.com/New.php?id=664

# 90. கும்பேஸ்வரர் - மகாமகம்- கும்பகோணம்

மாசி மகத்து மகாமக கும்பமே

மாசில்லா தலத்து மாணிக்க கும்பமே

நீரிலே உலகம் நிலையின்றி அழிய

பாரிலே காத்த பைரவ கும்பமே

மண்ண்ணிலே படைப்பை மகேசன் அடைக்க

கண்ணாய்க் காத்த காவல் கும்பமே

ஆவணி மாதத்து அருள்ஞாயிறு பூஜையில்

காவலாய் நிற்கும் களிப்பான கும்பமே

பங்குனி மகத்து தெப்பத்து கும்பமே

தங்கு தடையின்றி தரணியாளும் கும்பமே

வலஞ்சுழி விநாயக வளர்மங்கள கும்பமே

குலத்தைக் காக்கும் குளத்து கும்பமே

ஆறுமுகனின் அழகிய ஆறுகர கும்பமே

சேரும் அடியாரின் செல்வ கும்பமே

பருத்து சிறுத்த பரமசிவ கும்பமே

திருக்குட மூக்கின் திருவான கும்பமே

மாசி மகத்து மகாமக கும்பமே

மாசில்லா தலத்து மாணிக்க கும்பமே

http://temple.dinamalar.com/New.php?id=591

# 91. நாகேஸ்வரர் - கும்பகோணம்

நாகத்தின் இராஜனாய் நாட்டினைக் காப்பாய்
மோகத்தின் மன்மதனை முக்கண்ணால் எரிப்பாய்
ஆனந்த தாண்டவம் அழகாய் ஆடுவாய்
வானத்தை வில்லாய் வளைத்தாடு பாம்பே
தானந்த தானந்த தத்தித்தோம் தானந்த

கும்பத்தின் வில்வம் குலம்காக்க விரையும்
அம்பாளின் தாளத்தில் அண்டமும் அசையும்
பூமியின் பாரத்தை ஆதிசேடன் தாங்கிட
சாமியின் அருளில் சதிராடு பாம்பே
தானந்த தானந்த தத்தித்தோம் தானந்த

நாயகியின் கரங்கள் நலமாய் காக்கும்
காயங்கள் போக்கி கருணையும் பொழியும்
ஆயகலைகள் கற்றிங் காடும் சதங்கையில்
மாயங்கள் செய்து மகிழ்ந்தாடு பாம்பே
தானந்த தானந்த தத்தித்தோம் தானந்த

நடராஜ மண்டபம் நடுவினில் நின்றிட
இடரின்றி இவ்வுலகில் இன்பங்கள் ஈன்றிட
குடந்தை கீழ்கோட்டத்து கும்பம் காத்திட
இடபாகம் சுமந்து இருந்தாடு பாம்பே
தானந்த தானந்த தத்தித்தோம் தானந்த

http://temple.dinamalar.com/New.php?id=365

# 92. சோமேஸ்வரர்- கும்பகோணம்

திங்கள் கிழமை திருவருள்தரும் லிங்கமே
திங்களை சுமந்த திகம்பர லிங்கமே

குருவியாழ கிழமை குலம்காக்கும் லிங்கமே
குருவாய் மகனை கொண்ட லிங்கமே

அமுத கலசம் ஆருயிர் காக்கும் லிங்கமே
அமுதாய் இனிக்கும் ஆனந்த லிங்கமே

உறிவிழுந்த இடத்தில் உதித்த லிங்கமே
உரித்தான பெருமை உனக்கே லிங்கமே

எல்லா வாசலிலும் எழிலாய்அருளும் லிங்கமே
இல்லாத இடமே இல்லையிந்த லிங்கமே

காணாது போனால் நட்டம்தரும் லிங்கமே
கோணாது காத்து குறைதீர்க்கும் லிங்கமே

http://temple.dinamalar.com/New.php?id=366

# 93. நாகேஸ்வரர் -திருநாகேஸ்வரம்

ராகுவிற்கு விமோசனம் ரம்மியமாய் தந்தவனே
பாகுபாடின்றி அருளும் பக்தனின் நண்பனே
உமையை பாதி உடலில் சுமந்தவனே
சுமைகளை தாங்கிடும் சுயம்பு வடிவனே

நீலவிடத்தை கண்டத்தில் நிற்க வைத்தவனே
நீலமாய் பாலை நிறம்மாற வைப்பவனே
கிரிகுஜாம்பிகை உடன்வர கீர்த்தி பெற்றவனே
கிரிவலம் வந்திட கிருபை அளிப்பவனே

முத்தேவியர் அருளிட முக்காலம் உணர்ந்தவனே
சத்தியம் காத்திட சன்னதி கொண்டவனே
நாகத்தின் தலைவனாய் நலங்களை தருபவனே
ராகுதோஷம் நீங்க(சிவ) ராத்திரியில் அருள்பவனே

அர்த்தங்கள் புரியவைக்கும் அர்த்த நாரீஸ்வரரே
கர்த்தாவாய் செயலின் காரணம் ஆனவனே
நாகேஸ்வர தலத்தின் நாயகன் ஆனவனே
பாகேஸ்வரி மூர்த்தியாய்  பாருலகம் காப்பவனே

http://temple.dinamalar.com/New.php?id=918

பொருளடக்கம் செல்ல

# 94. மகாலிங்கம் - திருவிடை மருதூர்

மண்டலத்தை காத்திடும்  மகாலிங்கமே
அண்டத்தை அணைத்திடும் ஆதிலிங்கமே

மருதூரில் அமைந்த மகாலிங்கமே
திருவிடையில் விடையான திருலிங்கமே

மூகாம்பிகை அன்னையின் மூர்த்திலிங்கமே
வாகாய் வந்த வளர்ஜோதிலிங்கமே

அகத்தியரின் அகத்தில்வந்த அழகுலிங்கமே
அகத்திலே அசையாத ஆன்மலிங்கமே

பூசித்த அடியாராய் பூத்தலிங்கமே
பூசையின் பரம்பொருளான புனர்லிங்கமே

பட்டினத்தார் பார்த்த பரம்பொருள்லிங்கமே
பத்திரகிரி யாரை படைத்தலிங்கமே

பந்தங்கள் விட்டுவிட பாசலிங்கமே
சிந்தையில் எழும் சித்திலிங்கமே

மருதரை வணங்கும் மண்டலலிங்கமே
கருத்தினில் கரையும் கண்ணிமைலிங்கமே

ஒருமண்டல அரைமண்டல உயர்லிங்கமே
குருவாய் வந்தருள் குமரலிங்கமே

கால்மண்டல வரையரை காலலிங்கமே
கால்சுற்ற அசுவமேத காட்சிலிங்கமே

நொடியில் மாறும் நுண்ணியலிங்கமே
துடிப்பில் மாறாத தூயலிங்கமே

எண்ணமாய் எழுந்திடும் எழில்லிங்கமே
என்னுள் வந்திடும் எழுத்துலிங்கமே

http://temple.dinamalar.com/New.php?id=396

# 95. ஆபத்சகாயேஸ்வரர்- தென்திருகுரங்காடுதுறை

ஆபத்தை போக்கும் ஆனந்த தோழனே
சாபத்தை போக்கும் சத்திய நண்பனே

சுக்ரீவனுக் கருளிய சுந்தர தோழனே
பக்தருக் கருளும் பாசமிகு நண்பனே

அரத்தருக்கு துணையான அரனான தோழனே
அறங்களை வழங்கும் அன்பான நண்பனே

கர்ப்பணிக்கு தாயான கனிவான தோழனே
கர்மவினை காக்கும் கடவுளான நண்பனே

அனுமனுக்கு இசைநினை ஊட்டிய தோழனே
அனுமானம் இல்லாத அறிவான நண்பனே

அகத்தியருக்கு ஆடிய தென்னாட்டு தோழனே
சுகங்கள் அளித்திடும் சோமசுந்தர நண்பனே

பயணத்தில் வந்திடும் பாங்கான தோழனே
அயராது காக்கும் அண்ணாமலை நண்பனே

http://temple.dinamalar.com/New.php?id=1046

# 96. திருநீலகண்டேஸ்வரர்- திருநீலக்குடி தஞ்சாவூர்

திருநீல கண்டம் கொண்ட திருவருள் சிவனே
திருமேனி சொரசொரக்க திகழும் சிவனே

திருமுழுக்கு எண்ணெய் திருமேனி சிவனே
திருநீலக்குடி தலத்தில் திகட்டாத சிவனே

மார்க்கண்டேயனுக் கருளிய மகேசன் சிவனே
சோர்வை நீக்கிடும் சுந்தர சிவனே

வில்வமும் பலாவும் விருட்சமான சிவனே
கல்லிலும் கருத்திலும் காட்சியான சிவனே

தட்சன் யாகத்து தாட்சாயினி சிவனே
அட்சரம் நாமத்து ஐந்தெழுத்து சிவனே

அம்மையும் அப்பனுமாய் அரவணைக்கும் சிவனே
இம்மைக்கும் மறுமைக்கும் ஈசனான சிவனே

http://temple.dinamalar.com/New.php?id=393

# 97. வைகல்நாதர் -திருவைகல்-நாகப்பட்டினம்

மாடக்கோவிலாய் அமைந்த மாறாத தலமே
ஆடப்பெருமான் அமைந்த அதிசய தலமே

இடிந்து விழும் தறுவாயில் ஈசன் தலமே
அடிக்கல்லாய் ஆன அருமை தலமே

திருமாலை திருமகளுடன் இணைத்த தலமே
திருவைகல் நகர்த்து திருவருள் தலமே

முக்கண்ணாய் அமைந்த மூன்றுகோவில் தலமே
எக்கணமும் காக்கும் எழிலீசன் தலமே

விசாலாட்சி வலக்கண்ணாய் விஸ்வநாதர் தலமே
அசாத்திய இடக்கண்ணாய் பிரம்மபுரீஸ்வரர் தலமே

நெற்றிக்கண்ணாய் வைகல்நாதர் நின்ற தலமே
வெற்றிக்கண்ணாய் இருக்கும் வேந்தன் தலமே

http://temple.dinamalar.com/New.php?id=235

# 98. உமாமகேஸ்வரர்

நோய்களை தீர்க்கும் நிறைமதி ஈசனே
வாய்மணக்கும் வைத்திய நாதனே

தோல்நோய் நீக்கிடும் தூய மகேசனே
கால்தூக்கி ஆடும் கால பைரவனே

உமையின் பாகமாகி உலகை காப்பவனே
இமைக்கும் அசைவில் இமாலயம் காப்பவனே

திருமணத்தடை நீக்கி திருவருள் செய்பவனே
அருமருந்தாகி காக்கும் ஐந்தெழுத்து மந்திரமே

குழந்தைப் பேற்றையளித்து குலம் செழிப்பவனே
பழகிய ஈசனாய் பக்கத்தில் வருபவனே

குஷ்டத்தை போக்கி குறைகள் தீர்பபவனே
கஷ்டங்கள் போக்கி கவலைகள் அழிப்பவனே

வரகுண பாண்டியனுக்கு வரம்தரும் நடராஜனே
கரம்கூப்பி தொழுதிட கணத்தில் வருபவனே

http://temple.dinamalar.com/New.php?id=455

# 99. கோகிலேஸ்வரர்- திருக்கோழம்பியம்

சொக்கட்டான் ஆட்டத்தில் சோர்வின்றி ஆடியவரே
மக்களை காத்திடவே மனமுவந்து ஆடியவரே

வென்றது யாரென்று தீர்ப்பினைச் சொல்ல
அன்று நடுவராய் அன்னைபார்வதி அமர்ந்தாளே

திருமாலுக்கு சாதகமாய் தீர்ப்பை வழங்கவிட
திருக்கோழம்பியம் வந்திட திகம்மபரன் சொன்னீரே

கொடுத்த சாபத்தை குறைத்திடவே பார்வதி
தடுக்காது தரணியில் தவமும் இருந்தாளே

குயிலாய் மாறிய சந்தன் பூஜிக்க
ஒயிலாய் கோகிலேஸ்வரர் ஒருகோலம் பூண்டாரே

கோகிலம் பூஜிக்க கோகிலேஸ்வரர் வந்திட
அகிலத்தை காத்திடும் அண்ணல் ஈஸ்வரரே

அடியும் முடியும் அளக்க முடியாதவரே
படிக்கல்லாய் வாழ்வில் பாக்கியம் தருபவரே

வெம்மையைக் குறைக்க வீசிடும் தென்றலே
அம்மையப்பனாய் எம்மை அனுதினமும் காப்பீரே

http://temple.dinamalar.com/New.php?id=388

# 100.கோமுக்தீஸ்வரர் - திருவாவடுதுறை

கோ உருவில் கோமதிக்கு முக்தியளித்தவரே
கோ காத்த மூலரை முதற்கண் காத்தவரே

கோல் ஊன்றி ஆட்சி செய்யும் கோமுக்தீஸ்வரரே
பால் சொரியும் பசுவாய் பரிவான அன்னையே

அணைத்து காத்த அர்த்த நாரீஸ்வரரே
அணையா விளக்கான அண்ணாமலை தீபமே

அணையாய் மாறி அன்னையான தாயுமானவரே
அனைவரையும் அன்பாலே அணைக்கும் தந்தையே

பொற்கிழி கொடுக்க பூதகணங்களை தந்தவரே
கற்கள் பலசேர்ந்த கண்ணுயர அதிகார நந்தியே

சொக்கட்டான் விளையாடி ஜெயித்த சொக்கனே
சொக்கும் அழகில் சுந்தரசோம வடிவனே

புத்திர பாக்கியத்தை புவியில் தருபவரே
நித்திய சேர்க்கையை நிரந்தரமாய் தருபவரே

கோமுக்தீஸ்வரரே
முக்தீஸ்வரரே
தீஸ்வரரே
ஈஸ்வரரே
ஸ்வரரே
வீரரே

http://temple.dinamalar.com/New.php?id=315

# 101. உத்தவேதீஸ்வரர்- குத்தாலம்

பார்வதியை கைபிடிக்க குத்தாலம் வந்தவரே
ஊர்அறிய திருமணம் முடிக்க உதித்தவரே

இறையாய் எழுந்து அருளிய சுயம்புவே
குறையின்றி மணம்பேச குத்தாலம் வந்தவரே

மாதவம் செய்திட மகளாய் வந்தவளே
காதலை பெற்றோர் கருத்துடன் ஏற்கவைத்தவளே

காசியின் பலனை காசினியில் தந்நவரே
மாசில்லா உத்தமனான உத்த வேதீஸ்வரே

உருத்திர சன்மனுக்கு உண்மை புரியவைத்தவரே
உருவான பாம்பாட்டி உண்மையான சிவமே

பாதங்கள் பொடிபட பார்வதி மணந்தவரே
பாதங்களை தலத்தில் பார்வைக்கு விட்டவரே

குடைபிடித்த உத்தாலம் குறையில்லா விருட்சமே
விடையாகும் வித்தகர் உத்தவேதீஸ்வர நாயகரே

குற்றங்கள் போக்கும் குற்றால ஆண்டவரே
கற்றவை யாவும் கருத்தாய் ஆனவரே

மற்றவை மறந்தாலும் மறக்கா திருப்பனே
சுற்றமாய் காக்கும் சுகமான மந்திரமே

http://temple.dinamalar.com/New.php?id=213

# 102. வேதபுரீஸ்வரர்- தேரழுந்தூர்

சொக்கட்டான் ஆட்டத்து சுந்தரேஸ்வரா போற்றி
சொக்க வைக்கும் சவுந்தராம்பிகை போற்றி

புசுவாய் வந்தருளும் பார்வதியே போற்றி
பசுவினை மேய்க்கும் ஆமருவியப்பனே போற்றி

ஞானத்தை அளிக்கும் ஞானேஸ்வரா போற்றி
ஞாலத்தைக் காக்கும் ஞாயிறே போற்றி

அன்பாய் மாறிடும் ஆனந்ததாண்டவமே போற்றி
துன்பத்தைக் களையும் தூயவா போற்றி

கயிலையில் இருந்தபடி காக்கும் ஈஸ்வரா போற்றி
மயிலையில் கபாலியாய் மயக்கும் ஈஸ்வரா போற்றி

தேரழுந்தூர் ஈஸ்வரனாய் திருவருள் போற்றி
பாரங்கள் தாங்கிடும் பரமேஸ்வரா போற்றி

கம்பன் வழியில்வளரும் கன்னித்தமிழே போற்றி
அம்மை அப்பனாய் அனுதினம் அருள்வாய் போற்றி

சங்குவின் மரபில் சங்கம்வளர் தமிழே போற்றி
இங்குஎன் திருவாய் இனியமொழியே போற்றி

வேதங்களை உபதேசித்த வேதபுரீஸ்வரா போற்றி
பாதங்களை வணங்கி பாடுவோம் போற்றி

தென்னாடுடைய சிவனே போற்றி
என்னாட்டுக்கும் இறைவா போற்றி

http://temple.dinamalar.com/New.php?id=222

# 103.மாயூரநாதர் - மயிலாடுதுறை

மயிலாடு துறையில்  மயிலாய் வந்த மாயூர
  நாதரின் மகிமை சொல்லுவோம்
கயிலையின் நாயகன் காவிய தாண்டவம்
 ஆடிடும் கால்களும் அண்டமும் தாங்குமே

நேரத்தை முடக்கியே நேர்த்தியாய் அருளியே
 தம்பதி காத்திட்ட தாண்டவ மூர்த்தியே
 பாரத்தை தாங்கியே பார்வதி உடனுடன் சிறகை
 வீசிப் பறக்கும் மயிலாம்

சேலையும்  கட்டியே சிவனுடன் சேர்ந்திட
 சுகமாக கங்கையும் ஸ்நானமும் செய்வாள்
சோலையில் மயிலாய் சுந்தரி மாறிட
 சோமனும் அவளுடன் சமமான காட்சியே

சண்டியும் துர்க்கையும் சனிதோஷம் விலக்கிட
  சங்கடம் தீர்த்திடும் மயிலாடு துறையே
மண்டலம் காத்திடும் மகளுக்கு மகனான
 முருகனின் மூரிக் கலாப மயிலே

மயிலாடுதுறையின் மூரிக் கலாப மயிலே சிறகை
வீசிப் பறக்கும் மயிலாம்

http://temple.dinamalar.com/New.php?id=214

# 104. உச்சிரவனேஸ்வரர் -திருவிளர் நகர் - நாகபட்டினம்

அக்கரைக்கு செல்லுவோம் ஏலேலோ ஐலசா

அக்கறையாய் காத்திடுவார் ஏலேலோ ஐலசா

திருஞான சம்பந்தர் ஏலேலோ ஐலசா

திருவிளர்நகர் திருவருள்  ஏலேலோ ஐலசா

கரைபுரண்ட காவேரி ஏலேலோ ஐலசா

துறை காட்டும் வள்ளலார் ஏலேலோ ஐலசா

விழர்செடிகள் விழுந்ததிங்கு ஏலேலோ ஐலசா

கழலடி பணிந்திடுவோம் ஏலேலோ ஐலசா

அருள்வித்தன் பக்தியே ஏலேலோ ஐலசா

திருப்பள்ளி எழுச்சியே ஏலேலோ ஐலசா

பூக்குடை சுமந்திடுவான் ஏலேலோ ஐலசா

காக்கும் கடவுளைக்காண ஏலேலோ ஐலசா

ஆற்றிலே வெள்ளமே ஏலேலோ ஐலசா

ஊற்றெடுக்க தடுமாற ஏலேலோ ஐலசா

உன்னையே எண்ணியே ஏலேலோ ஐலசா
உன்பூஜை காக்கவே ஏலேலோ ஐலசா

பூவினை காத்திட ஏலேலோ ஐலசா
கோவிலைக் கும்பிடுவான் ஏலேலோ ஐலசா

துறை காட்ட வந்தீரே ஏலேலோ ஐலசா
மறை காட்டும் வழியே ஏலேலோ ஐலசா

அக்கரை சேரவே ஆடிவரும் ஐலசா
பக்தரை காக்கவே பறந்துவரும் ஐலசா

உச்சிர வனேஸ்வர உயர்மிகு ஐலசா
மெச்சியுனைப் பாடுவேன் ஏலேலோ ஐலசா

http://temple.dinamalar.com/New.php?id=308

# 105. வீரட்டேஸ்வரர்- திருப்பறியலூர்

108 போற்றி

ஓம் அண்ணாமலையானே போற்றி

ஓம் ஆனந்ததாண்டவனே போற்றி

ஓம் இமயவேந்தனே போற்றி

ஓம் ஈசனுக்கீசனே போற்றி

ஓம் உலகநாயகனே போற்றி

ஓம் ஊர்காக்கும் பைரவா போற்றி

ஓம் எழிலரச தேவனே போற்றி

ஓம் ஏகாந்த பிரணவமே போற்றி

ஓம் ஐயமில்லா ஆணவமே போற்றி

ஓம் ஒப்பில்லா உயர்வே போற்றி

ஓம் ஓங்கார நாதனே போற்றி

ஓம் ஔவைத் தமிழீசனே போற்றி

ஓம் கர்வமடக்கும் கர்வமே போற்றி

ஓம் காமனைஅழித்த கடவுளே போற்றி

ஓம் கிரிவடிவ நாயகனே போற்றி

ஓம் கீர்த்திமிகு நாதரே போற்றி

ஓம் குலம்காத்த குணவானே போற்றி

ஓம் கூடியதாட்சாயனி நாயகனே போற்றி

ஓம் கெடுவகற்றும் காவலனே போற்றி

ஓம் கேள்விக்கு விடையே போற்றி

ஓம் கையிலை நாதனே போற்றி

ஓம் கொலுவிருக்கும் லிங்கமே போற்றி

ஓம் கோபுர வடிவேபோற்றி

ஓம் கௌமார தந்தையே போற்றி

ஓம் சண்டிகேஸ்வரனே போற்றி

ஓம் சாமுண்டி நாயகா போற்றி

ஓம் சிலம்பரசனே போற்றி

ஓம் சீற்றமிகு சிவனே போற்றி

ஓம் சுந்தரவடிவே போற்றி

ஓம் சூரியப்பல் உடைத்தவனே போற்றி

ஓம் செருக்கை அழிப்பவனே போற்றி

ஓம் சேர்ந்த அர்த்தநாரனே போற்றி

ஓம் சைன்யவேந்தனே போற்றி

ஓம் சொல்லுக்கடங்காதவனே போற்றி

ஓம் சோமசுந்தரனே போற்றி

ஓம் சௌபாக்ய நாயகா போற்றி

ஓம் தட்சனை அழித்தவனே போற்றி

ஓம் தாட்சாயனி தலைவனே போற்றி

ஓம் திருப்பறியலூர் ஈசனேபோற்றி

ஓம் தீபத்தின் தேவனே போற்றி

ஓம் துக்க நிவாரணனே போற்றி

ஓம் தூய வெண்ணிறமே போற்றி

ஓம் தெரியாத மறையே போற்றி

ஓம் தேவார ஒலியே போற்றி

ஓம் தைரிய தேவனே போற்றி

ஓம் தொண்டரடி தேவனே போற்றி

ஓம் தோல்வியில்லா வெற்றியே போற்றி

ஓம் தௌதிக அணியே போற்றி

ஓம் வரங்களைத் தருபவனே போற்றி

ஓம் வாடாமலரே போற்றி

ஓம் வினைகளை களைபவனே போற்றி

ஓம் வீரட்டேஸ்வரனே போற்றி

ஓம் வெள்ளிமலையானே போற்றி

ஓம் வேள்வியின் தலைவனே போற்றி

ஓம் வையத்து ஈசனே போற்றி

ஓம் அகந்தை அழிப்பவனே போற்றி

ஓம் அகத்தினுள் புகுவாய் போற்றி

ஓம் அன்பான சிவமே போற்றி

ஓம் அக்ஷரமாலையனே போற்றி

ஓம் அறுபது சொல்லழகா போற்றி

ஓம் பரிமள சுகந்தமே போற்றி

ஓம் பார்வதி நேசனே போற்றி

ஓம் பிழைபொறு தகப்பனே போற்றி

ஓம் பீலிமயில் தாண்டவா போற்றி

ஓம் புரியாத புதிரே போற்றி

ஓம் பூத்திடும் புவனமே போற்றி

ஓம் பெரிய கடவுளே போற்றி

ஓம் பேணிக் காப்பவனே போற்றி

ஓம் பைரவ நாதனே போற்றி

ஓம் பொலிவான நிலவே போற்றி

ஓம் போற்றும் தமிழே போற்றி

ஓம் பௌதிக அறிவியலே போற்றி

ஓம் நமச்சிவாயனே போற்றி

ஓம் நாத ஒலியே போற்றி

ஓம் நிறைந்த பிரம்மமே போற்றி

ஓம் நீறான வெண்ணமையே போற்றி

ஓம் நுண்ணுயிர் அதிசயமே போற்றி

ஓம் நூதன அறிவே போற்றி

ஓம் நெற்றிக் கண்ணே போற்றி

ஓம் நேர்மையின் சிகரமே போற்றி

ஓம் நைதிகை மலரே போற்றி

ஓம் நொடிப்பொழுதே போற்றி

ஓம் நோக்கிய திசையே போற்றி

ஓம் நிறைமதி ஈசனே போற்றி

ஓம் மறைவழி மலையே போற்றி

ஓம் மாறாத உண்மையே போற்றி

ஓம் மிளிரும் நிலவே போற்றி

ஓம் மீனாக்ஷி சுந்தரனே போற்றி

ஓம் முத்தமிழ் வேந்தனே போற்றி

ஓம் மூலாதார ஈசனே போற்றி

ஓம் மெய்ஞான பொருளே போற்றி

ஓம் மேவிடும் இமயமே போற்றி

ஓம் மைந்தனின் சீடனே போற்றி

ஓம் மொத்தமான சக்தியே போற்றி

ஓம் மோகத்தை வென்றவனே போற்றி

ஓம் மந்திர நாமமே போற்றி

ஓம் யந்திர சக்தியே போற்றி

ஓம் யாகத்தின் ஈசனே போற்றி

ஓம் இருக்கும் இடமெல்லாம் போற்றி

ஓம் ஈசான மூலையே போற்றி

ஓம் யுகங்களின் தலைவனே போற்றி

ஓம் யூகங்களின் மன்னனே போற்றி

ஓம் எங்கும் நிறைந்தவனே போற்றி

ஓம் ஏழ்பிறப்பின் ஈசனே போற்றி

ஓம் ஐங்கர வடிவனே போற்றி

ஓம் ஒன்றான உருவே போற்றி

ஓம் யோகத்தின் மூலமே போற்றி

ஓம் யௌவன இறையே போற்றி

போற்றி போற்றி திருநாமம் போற்றி

போற்றி போற்றி தினப்பாடல் போற்றி

http://temple.dinamalar.com/New.php?id=510

# 106. ஸ்வர்ணபுரீஸ்வரர்- செம்பொனார் கோவில்

செம்பொனார் கோவிலின் செம்பொன் தலமே
அம்பலத்து இறையின் அழகுநீல தலமே
மண்டலம் காக்கும் மரகத தலமே
தண்டனை தட்சனுக் களித்த தலமே

புஷ்பளாகி அன்னையின் புஷ்பராக தலமே
கஷ்டங்கள் நீக்கிடும் கோமேதக தலமே
பார்வதி தவமிருக்க பவழமான தலமே
ஊர்காக்க சிவனிருக்க ஒளிமாணிக்க தலமே

ஸ்வர்ணமாலை அணியும் ஸ்வர்ணபுரி தலமே
கவரும் நல்லழகில் கந்தபுரி தலமே
இந்திரனுக்கு வரமளித்த இந்திரபுரி தலமே
மந்திரமாய் மணமுடித்த மகாலக்ஷ்மிபுரி தலமே

முருகனும் வெற்றிபெற்ற முத்து தலமே
வருடும் மருவார்குழலி வைரத் தலமே
வஜ்ராயுதம் அளித்த வைடூர்ய தலமே
இச்சகத்தில் ஒளிரும்நவ இரத்தின தலமே

http://temple.dinamalar.com/New.php?id=266

# 107. நற்றுணையப்பர்- புஞ்சை

நற்றுணையாகும் புஞ்சை நற்றுணை அப்பனே
பெற்றவளாய் காத்து பேணிடும் தாயுமானவரே
சுற்றமாய் உறவாடி சொந்தமாகும் அண்ணலே
குற்றத்தைத் திருத்திடும் குருவான செம்மலே

நஞ்சையும் அமுதாக்கும் நற்சிவ காவலரே
தஞ்சமென்ற அடியருக்கு தாண்டவ நடராஜரே
அஞ்சலென மக்களுக்கு அருளும் ஆண்டவரே
மிஞ்சிய அன்பில் மிளிரும் நண்பரே

பந்தங்கள் பலவாக பாரினில் வந்தவரே
கந்தனுக்கு சீடனாகி காசினியைக் காப்பவரே
அந்தம் இல்லாத ஆதியோகி சிவனே
சிந்தையில் சிறந்த சிவமான சக்தியே

கருவறையில் களிறுவர கல்யாண சுந்தரேஸ்வரரே
உருவத்தில் லிங்கமாகி உறவுகளாய் சூழ்ந்தவரே
அகத்தியர் காணவே அழகான கல்யாணமே
அகத்திலே காணவே அற்புத கருலிங்கமே

http://temple.dinamalar.com/New.php?id=265

# 108. வலம்புரநாதர் - மேலப் பெரும்பள்ளம்

திருமால் தவமிருந்த  திருத்தல நாதரே
திருவருளாய் சக்கரம் திருக்கரத்தில் பெற்றாரே
திருமகள் தோழியாக திகழ்ந்த தலமே
திருவலஞ்சுழி காவிரி திருவலம் வந்தாரே

மகதநாட்டு மன்னன் மலராக மாறினாரே
சுகமாக ஈசன் சுந்தர பிட்சாடனரே
புனிதத்தில் காசிபோல் பூத்துவிட்ட தலமே
இனிதாய் நலங்களை ஈன்றுவிடுமே

புலிஅடித்து இறந்ததாய் பொய் சொல்லிட
அளித்த தோஷத்தை  அரசன் இழக்க
ஆயிரம் அந்தணருக்கு அன்னதானம் செய்திட
கோயிலில் ஏற்பாடு கும்பிட்டு செய்தான்

பட்டினத்தார் வந்து பசியென்று கேட்க
எட்டநிற்க வைத்ததில் எஞ்சிய கஞ்சிகுடிக்க
அடிக்காத மணியும் ஆங்கே ஒலிக்குமே
விடியலாய் தோஷங்கள் விட்டு விலகிடுமே

பள்ளங்கள் கொண்ட பட்டினத்து லிங்கமே
உள்ளங்கள் கவரும் உயரிய லிங்கமே
கள்ளமின்றி எங்களை காத்திடும் லிங்கமே
அள்ளஅள்ள ஆனந்தம் அள்ளித் தருமே

http://temple.dinamalar.com/New.php?id=215

# 109. தான்தோன்றீஸ்வரர்- ஆக்கூர்

தானாக தோன்றிய தான்தோன்றி அப்பரே
வானாக விரிந்த வாள்நெடுங்கண்ணி அம்மையே

வீசம் அதிகமானதால் வீழ்சுவரும் நின்றதே
ஊசலாடும் கோவில் உயரவே எழுந்ததே

குளத்தில் கிடைத்த குன்றாத கர்ப்பகிரகமே
அளக்க முடியாத ஆக்கம் உடையவரே

மாளிகை விரும்பி மணமகள் புகுந்திட
வேடிக்கை வினையாக விரிந்த பிரிவே

சக்தியை பிரிந்து சிவனும் இருக்க
பக்தியுடன் சக்தி பாரினில் தவமிருக்க

அன்னையும் தந்தையும் ஆனந்தமாய் இணைய
கண்ணியம்மை ஆட்கொண்ட கல்யாண மூர்த்தியே

யாருக்கு ஊர் யாதென்று கேட்டவரே
பாருக்கு ஒளிதர பசியாற வந்தவரே

ஆயிரத்தில் ஒருவராய் அன்னதானம் பெற்றவரே
கோயிலில் குடியேற புற்றினில் பிறந்தவரே

இறைவனும் இறைவியும் இணைந்த தலமே
நிறைவைத் தந்திடும் நிம்மதி தலமே

http://temple.dinamalar.com/New.php?id=208

# 110. பிரம்மபுரீஸ்வரர் - திருக்கடவூர் மயானம் - நாகப்பட்டினம்

ஒட்டிய வயிறுடன் ஒய்யார விநாயகரே
மட்டில்லா அழகுடன் மருகன் முருகனே

சிங்கார வேலனாய்  சிந்தையை கவர்பவனே
மங்காத நளினமுடன் மருமகன் அம்சமே

வில்லேந்திய வேலனுக்கு விழியால் அருள்பவரே
கல்வியில் சிறந்திட தட்க்ஷிணா மூர்த்தியே

பிரம்மனுக்கு உபதேசித்த பிரம்மபுரி ஈஸ்வரரே
பிரம்மனை அழித்தாலும் பிரம்மத்தை நிலைநாட்டுபவரே

ஞானத்தை உபதேசித்து ஞானியாய் நிற்பவரே
ஞாலத்தை காத்திட ஞாயிறாய் ஆனவரே

பிறையாய் நெற்றியில் பிழையில்லா திங்களே
நிறையாய் முழுநிலவாய் நேராய் வருபவரே

அமாவாசை தினத்திலும்  ஆகாயம் நிறைபவரே
உமாபதி சிவனாகி  உருவங்கள் தருபவரே

முழுதாய்  மறைத்தாலும் முழுதாய் நிற்பவரே
விழுதாய் வேராய் விடையாய் ஆனவரே

எழுதிய கவிதையை எங்கோ மறைத்தவரே
எழுதஎழுத கவிதையாய் என்னுள் வருபவரே

http://temple.dinamalar.com/New.php?id=777

எழுதிய கவிதையை இடுகையில் இடுவதற்குள் இணைதளம் இணைப்பு துண்டித்து கவிதை காணாமல் போனது. மீண்டும் எழுதுகையில் வார்த்தைகள் வண்ணஜாலம் செய்ய விநாயகர் முதலாக வந்தார்.

# 111. சுந்தரேஸ்வரர் - வேடமூர்த்தி
# திருவேட்டக்குடி -புதுச்சேரி

வில்லுப்பாட்டு

தந்தனத்தோம் என்று சொல்லியே வில்லில் பாட ஆமாம்
வில்லில் பாட வந்தருள்வாய் சுந்தர கணபதியே
தந்தனத்தோம் என்று சொல்லியே வில்லில் பாட ஆமாம்
வில்லில் பாட வந்தருள்வாய் சுந்தரேஸ்வரரே
நல்ல நல்ல மக்கள் இருக்க ஆமாம் இங்கே இருக்க
வில்லுப்பாட்டில் சொல்லப் போறேன் வேடன் கதை ஆமாம்
வேடன் கதை சொல்லப் போறேன்

வசனம்
நானில்லாமல் நீங்களுண்டா என்று நாயகி கேட்டுவிட மீனவளாய் வந்து பிறந்தாள் பார்வதி .
தவமிருந்து சிவனை அடைய அவள் காத்திருக்க வேடனாய் வந்தருளினார் நம் தலைவர்.

பாடல்
வேடனாய் வந்தவரே வில்லுடன் வந்தார் ஆமாம்
வில்லேந்தி வந்தார் வில்லேந்தி வந்தார்
காடுமலை தாண்டி வந்தார் காதலியைக்
காண வந்தார் ஆமாம்
காண வந்தார்
மாப்பிள்ளை வேடம் பூண்டார் மணந்திட
மாலை போட்டார் ஆமாம்
மாலை போட்டார்

வசனம்
அப்பாவோடு பிள்ளையும் அழகு முருகனும் வில்லேந்தி அம்பிகாபுரியில் திருக்கோலம் காணலாம் .

பாடல்

பாரதப் போரிலே பாண்டவன் அர்ஜுனன் தவமிருக்க

அர்ஜுனன் தவமிருக்க (2)
பாசுபத அஸ்திரம் வேண்டுமென்று நின்றானே ஆமாம்
வேண்டுமென்று நின்றானே

பன்றியின் வடிவிலே வந்தானே அசுரன்
வந்தானே அசுரன் (2)
அம்பாலே அர்ஜுனன் அவனைத் தாக்க
பன்றியும் கீழே விழுந்ததே ஆமாம்
கீழே விழுந்ததே

வேடனாய் வந்தங்கு வித்தைகள் செய்தாரே
சீடனை கண்டிட சித்தம் கொண்டாரே ஆமாம்
சித்தம் கொண்டாரே ...

சிவனென்று புரிந்ததும் சித்தம் மகிழ்ந்தானே
அவனியில் உன்னை அர்ஜுனன் புகழ்ந்தானே

கவனித்து மஸ்யரேகை  கையினில் கண்டாரே
புவனத்தில் அஸ்திரத்தை புதிதாய் தந்தாரே
ஆமாம்
பாசுபத அஸ்திரம் பசுபதி தந்தாரே ...

வசனம்
இப்படியாக சுந்தரேஸ்வரர் வில்லேந்தி வேடனாகி வித்தைகள் புரிந்த கதை சொன்னேன் .

வாழிய பல்லாண்டு வாழிய பல்லாண்டு !
வேடன் கதை கேட்ட நீங்கள் வாழியவே !
வாழிய வாழிய வாழியவே !

http://temple.dinamalar.com/New.php?id=140

# 112. பார்வதீஸ்வரர் - புதுச்சேரி

பார்வதியின் நேசனாய் பாரினில் வந்தவரே  பார்வதீஸ்வரரே
சோர்வின்றி காத்துவிட சக்தியுடன் இணைந்தவரே

சமயத்தில் சம்பந்தர் சமயம்  காத்தவரே
அபயம் புரிந்துவிடும் அழியாத மூர்த்தியே

அடியாரைக்  காத்துவிட அருகினில் வருபவரே
விடியலும் வணங்கிவிடும் வீராதி வீரரே

ராஜனுக்கு வரம்தந்த ராஜாதி ராஜனே
மாறாது யுகம்கடந்த மலர்சடை முடியோனே

பல்குணன் வழிபட்ட பாஸ்கர நாதனே
நல்லாரை வாழ்த்திவிடும் நடராஜ நாதனே

கூவியே அழைத்த குமரனனின் தகப்பனே
கோவிலில் குடிகொண்ட குறையில்லா அப்பனே

விதைவிதைத்து விளையாடும் விவசாய ஈசனே
கதைகதையாய் காட்சிதரும் கைலாய நாதனே

http://temple.dinamalar.com/New.php?id=516

# 113. யாழ்மூரிநாதர் - தருமபுரம் -புதுச்சேரி

**ச**ம்பந்தர் பதிகம் பாட சாய்ந்த மூர்த்தியே
**ரி**ஷபத்தில் வந்திங்கு ரிஷிகளை காப்பவரே
**க**ர்வத்தை அடக்கிட கலையினை முடக்கியவரே
**ம**ண்ணிலே யாழெடுத்து மனம்கவர வாசித்தவரே
**ப**க்தரைக் காக்கவே பாதத்தால் எமனுதைத்தவரே
**த**ப்பாமல் காத்திட தாட்சண்யம் காட்டுபவரே
**நி**த்திய உண்மையாய் நிலைத்து நிற்பவரே
**ச**த்திய மூர்த்தியாய் சைவமாய்  நிலைப்பவரே

**ச**ரிகம ஸ்வரங்களில் சாகசம் செய்பவரே
**நி**ன்றும் ஆடியும் நிறையும் சலங்கையே
**த**வறிய எமனுக்கும் தாளடி தந்தவரே
**ப**திக்கு இணையாய் பாடிடும் பார்வதியே
**ம**னம்கவர குயிலோசை மாறாது கேட்டிடுமே
**க**லைவாணி துணையோடு கவிதையாய் வருபவரே
**ரி**ஷிகள் பலருடன் ரம்மியமாய் இசைப்பவரே
**ச**க்தியுடன் சிவமாகி சங்கமித்து காப்பவரே

http://temple.dinamalar.com/New.php?id=137

# 114. தர்ப்பாண்யேஸ்வரர் - திருநள்ளாறு

சதுர்த்தியில் பிறந்த சொர்ண விநாயகரே
புதுப்புது உருவத்தில் பூத்த நாயகரே
கந்தனும் நடுவிலே கவர்ந்திட அமர்ந்தவரே
சொந்தமாய் குழந்தை தந்திடும் சோமஸ்கந்தரே

இந்திரன் வணங்கிய ஈஸ்வர மூர்த்தியே
வந்தனம் செய்ய வந்திடும் சனிபகவானே
முதற்படியில் நின்று  முழுதாய் வணங்குவோமே
உதவிட வேண்டியே உலகத்தில்  வேண்டுவோமே

சாயாதேவிக்கு பிறந்த சனிபுத்திர மகிமையே
மாயாஜாலங்கள் செய்திடும் மந்திர கிரகமே
நளனைப் பிடித்த நாட்டுச்  சனியே
நலங்களைத் தந்திட தலத்தை நாடுவோமே

காகத்தை வாகனமாக்கி  கருங்குவளை மலராக்கி
ஏகமாய் மேற்கிலே எள்ளும் பெறுவாரே
கிழக்கை நோக்கியே கீர்த்திகள் பெற்றாரே
வழக்கத்துடன் அவரை வணங்கிச்  செல்வோமே

தீர்த்தங்கள் பலவற்றில் நீராடி மகிழ்வோமே
பூர்த்தியாகி தோஷங்கள் பொடிப்பொடி ஆகுமே
தப்புக்கணக்கு போட்டவரின் தலையறுத்த சூலமே
எப்போதும் தப்பாத எழிலான தாண்டவமே

திருநள்ளாறு தலத்தின் திருக்கோலம் பாடுவோமே
திருதர்ப்பை பெருமையை தினமும்  பாடுவோமே
திருமாலுக்கும் மன்மதனை  திருப்பிள்ளையாய்  தந்தாரே
திருக்கோவில் ஈஸ்வரனின் திருநாமம் சொல்வோமே

http://temple.dinamalar.com/New.php?id=1042

# 115. ஐராவதீஸ்வரர்- திருக்கோட்டாறு - திருவாரூர்

பல்லவி

ஆடும் ஈஸ்வரனே ஆனந்த தாண்டவம்

ஆடும் ஈஸ்வரனே

பாடும் பல்லவியில் பரதமாடும் ஈஸ்வரனே

( ஆடும்)

அனு பல்லவி

திருக்கோட்டாறு தலத்தில் திருக்கோல நடனம்

திருவாருர் ஊரில் திருக்கோவில் நடனம்

(ஆடும்)

சரணங்கள்

இந்திரன் யானை இனிதே வணங்கிட
சுந்தர அம்பிகை சுகந்தம் தந்திட

( ஆடும்)

ஐயனைக் கண்டிட ஆணவம் அடங்கிட

ஐயங்கள் அகன்றிட ஐராவதம் போற்றிட

( ஆடும்)

கதவும் அடைத்திட கண்கள் பனித்திட
சுபமகர் பறந்திட சுற்றிய தேனியோடு

( ஆடும்)

தித்திக்கும் தமிழோடு திகட்டாத தேனோடு
நித்தம் நெஞ்சில் நிறைவாய் நின்று

( ஆடும்)

http://temple.dinamalar.com/New.php?id=966

# 116. பிரம்மபுரீஸ்வரர்-- அம்பர், அம்பல் திருவாரூர்

அழலுருவாய் ஓங்கிய ஆதிமூல இறையே
குழலம்மை உடனவர குடிகொண்ட இறையே

அடிமுதல் முடிவரை காணாத இறையே
அடியார்க் கருளும் ஆனந்த இறையே

அன்னமாய் பிரம்மனை ஆக்கிய இறையே
அன்னத்தை பிரம்மமாய் மாற்றிய இறையே

அம்பரன் ஆம்பரன் அழித்த இறையே
அம்பலத்தில் நின்று ஆடிய இறையே

விமலனுக் கருளிய வித்தகன் இறையே
வம்பவன பூங்குழலியுடன் வசித்த இறையே

மன்மதன் சாபம் மறைத்த இறையே
நந்தகூபன் பிரம்மகத்தி நீக்கிய இறையே

சிலந்தியாய் வழிபட்ட சோழனின் இறையே
உலகத்தை காக்கும் உத்தம இறையே

யானைகள் ஏறமுடியா யாகசீல இறையே
சேனைகள் புடைசூழ சிறந்த இறையே

எழுபது மாடக்கோவிலில் எழுந்தருளும் இறையே
அழுதிடும் குழந்தைக்கு அமுதூட்டும் இறையே

தாயைக் காத்திடு தயாள இறையே
சேயையும் பேணிடு சுயம்பு இறையே

நோயைப் போக்கிடு நொடியில் இறையே
மாயை விலக்கிடு மகேசன் இறையே

http://temple.dinamalar.com/New.php?id=964

# 117. மகாகாளிநாதர் - திரு மாகாளம் திருவாரூர்

அன்று
மகாகாளி நாதராய் மாயங்கள் செய்தாய்
தகாத செயல்களை தண்டித்து விட்டாய்

உருவத்தை மாற்றி ஊருக்கு வந்தாய்
கருத்தினை கவர்ந்திட காளியுடன் வந்தாய்

வேதங்களை நாயாய் வேண்டுமென கொணர்ந்தாய்
பாதங்களை மறைத்து பன்றியுடன் வந்தாய்

யாகத்தை நடத்த யோகிகள் வந்தனர்
மாயத்தை அறியாது மறைந்து ஓடினர்

சோமாசி மாறர் சுயரூபம் கண்டார்
யாமாமாநீ யென யாவரும் அறிந்தார்

இன்று
அச்சத்தை தவிர்த்து அபயம் அளிப்பாய்
இச்சகத்து மக்களை இனிதே காப்பாய்

தூதாக வந்த தூதுவளை போலவே
ஆதாரமாய் வந்து அருளினைப் பொழிவாய்

வெள்ளத்தை நிறுத்திட விரைந்தே வருவாய்
கள்ளமில்லா கருணையை கரங்களில் பொழிவாய்

சொல்லணா பெருமையை சொல்லிலே கொள்வாய்
எல்லோரையும் காக்க எங்கும் எழுந்தருள்வாய்

மழையை நிறுத்தி மண்ணைக் காப்பாய்
அழைத்திட வந்திங்கு ஆதரவு தருவாய்

http://temple.dinamalar.com/New.php?id=356

# 118. மேகநாதர் -திருமீயச்சூர்

நமச்சிவாய நமச்சிவாய நமச்சிவாய நமச்சிவாய!
நமச்சிவாய ஐந்தெழுத்து நாமமே நமச்சிவாய!
நம்மை காத்திடும் நாமமே நமச்சிவாய!
அம்பிகை லலிதாவுடன் அருள்புரியும் நமச்சிவாய!

சிம்மாசன கோலத்தில் ஸ்ரீசக்ர பீடத்தில்
அம்மாவாய் அமர்ந்த அன்னை பராசக்தியே
ஆயிரம் நாமங்களை அணிகலனாய் அணிந்து
கோயிலில் குடிகொண்டு கொலுவிருக்கும் மனோன்மணியே

வினதைக்கு மகனாய் கருடன் பிறந்திட
மனதை மயக்கும் மாகாவிஷ்ணு வாகனமே
கர்த்துரு அவசரத்தில் கருவினை உடைக்க
கர்மத்தின் பலனோ குறையுள்ள அருணனே

பக்தனாய் உன்னை பாரினில் பூஜிக்க
சக்தியுடன் அவனை சாரதியாய் ஆக்கிட
உதயத்தை உலகுக்கு உல்லாசமாய் கொடுக்க
அதட்டிய சூரியனுக்கு அழகொளி குறையுமே

மேகநாதனாய் சிவனும் மேவியே வந்திட
சோகங்கள் போக்கிடும் சுயம்பு நாதரே
கிளியுடன் துர்க்கையும் கீர்த்தி பெறுவாளே
வழிகாட்டும் அன்னையாய் வாழ்க்கை துணையாவாளே

சொன்னதை சொல்லிடும் கிளிப்பிள்ளை கோவிலில்
உன்புகழ் தினமும் உற்சாகமாய் பாடிடும்
பக்தரின் கோரிக்கையை பதமாய் நினைவூட்டும்
பக்கத்தில் இருந்தபடி பறந்து களித்திடும்

நமச்சிவாய நமச்சிவாய நமச்சிவாய நமச்சிவாய!
நமச்சிவாய ஐந்தெழுத்து நாமமே நமச்சிவாய!
நம்மை காத்திடும் நாமமே நமச்சிவாய!
அம்பிகை லலிதாவுடன் அருள்புரியும் நமச்சிவாய!

http://temple.dinamalar.com/New.php?id=599

# 119. சகல புவனேஸ்வரர் -திருமீயச்சூர்

சகலரையும் காத்திடும் சகல புவனேஸ்வரரே
சுகங்களைத் தந்திடும் சவுந்தர நாயகியே

குலங்களை காத்திடும் குறையில்லா ஈசனே
வலதுகால் மடித்து வாகாய் அமர்ந்தவளே

அடுத்தடுத்த கோவிலில் அரசாளும் ஈசனே
அடுக்கும் பாடலில் அமர்ந்திடும் அன்னையே

இரண்டு சன்னதிகளில் இவ்வுலகை காப்பவனே
பிரண்டை உணவிலே பேணிக் காப்பவனே

ஒருபுறம் கோபமே மறுபுறம் சாந்தமே
ஒருமுறை தோன்றும் ஒய்யார சங்கே

அகத்திலே ஒளிரும் நவரத்தின மாலையே
அகத்தியர் வாய்வழி ஒலித்த மாலையே

ஜகத்தினை காக்கும் ஸ்ரீ சக்ர பீடமே
தகதகக்கும் திருமீயச்சூர் திருமந்திர ஜோதியே

http://temple.dinamalar.com/New.php?id=1005

# 120. முக்தீஸ்வரர் -சிதலப்பதி (திருவாரூர்)

மனிதமுக விநாயகர் மண்ணிலே இருப்பாரே
இனிவரும் காலத்தில் இனிதே காப்பாரே
கஜாமுகா அசுரனை கணத்தில் வதைப்பாரே
கஜமுக கோலத்தை பின்னர் பெறுவாரே

முன்னோருக்கு முக்தியை முன்னின்று அளிப்பவரே
தன்கரத்தால் தர்ப்பணம் தரணியில் செய்யவைப்பவரே
தர்ப்பணம் செய்ராமரின் தரிசனம் காண்போமே
கர்த்தாவாய் அமர்ந்து காட்சியும்  தருவாரே

போருக்கு நாள்குறிக்க பெரியவன் கேட்டிட
ஊருக்கு உண்மையை உபதேசம் செய்வானே
சகாதேவன் அமாவாசைநற்  சகுனமென சொல்லிட
சகாவான கண்ணன் சாகசம் செய்வானே

ஒருநாள் முன்னரே ஒய்யார தர்ப்பணம்
அருமைக் கண்ணன் அழகாய் செய்திட
தந்திரம் புரியாது  தரணிக்கு உடனே
சந்திரன் சூரியன் சேர்ந்து வந்தாரே

இன்றே அமாவாசை என்றே நினைத்து
அன்றே களபலி துரியோதனன் கொடுத்திட
விந்தைகள் செய்திடும் விளையாட்டு கண்ணனால்
அந்தோ பரிதாபம் அவனும் தோற்றானே

விரைந்த சந்திரனும் வீரிய சூரியனும்
இணைந்த சன்னதி இங்கிருக்கும் அதிசயமே
நித்ய அமாவாசை நீடிக்கும் நிஜமே
சத்ய மூர்த்தியே  சிதலப்பதி சுயம்புவே

கோலங்கள் மூன்றில் கொலுவான விஷ்ணுவே
காலங்கள் கடந்த கருவறை லிங்கமே
நாள்திதி பார்க்காது எந்நாளும் செய்யலாமே
கேள்விக்கு விடைகளை கேளாமல் பெறலாமே

http://temple.dinamalar.com/New.php?id=538

# 121. சேஷபுரீஸ்வரர் - திருப்பாம்புரம்

நாகத்தை கழுத்தில்  நவமணியாய் அணிந்தவரே
போகத்தை நீக்கிவிடும் பூஷண ஈஸ்வரரே
தோஷத்தை அழித்திடும் தூயசேஷ புரீஸ்வரரே
வேஷங்கள் களைந்திடும் வேதவித்தக நாயகரே

ஆதிசேஷன் விதமிழக்க ஆண்டவனாய் காத்தவரே
ஜோதியாய் இழந்ததை சொந்தமாய் தருபவரே
விநாயகர் வணங்கியதாய் விளையாட்டாய் கர்வப்பட
வினையாய் சுட்டதில் வேதனை பெருகியதே

நாகங்கள் பலமிழந்து  நாட்டினில் வாடிட
சோகத்தை போக்கிவிட சொக்கனை நாடிட
ராகுவும் கேதுவும் ராஜனைக் கண்டிட
பாகுபாடு இல்லாது பாவங்கள் போக்கியவரே

நலங்கள் பெற்றிட நாடுவோம் நாகேஸ்வரரை
வளங்கள் பெற்றிட வணங்குவோம் வண்டுசேர்குழலியை
இல்லாதது பெறுவோம் இருப்பது காப்போம்
எல்லாம்வல்ல  ஈசனை என்றும் நினைப்போம்

http://temple.dinamalar.com/New.php?id=359

# 122. சூஷ்ம புரேஸ்வரர் - செருகுடி

ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வெள்ளி
சனி ராகு கேதுவுடனே
கோயிலில் சம்பந்தர் குழந்தை வடிவில் இருக்க
அருளும் மங்கள நாதரே
நாளும் கோளும் நலமாய் மாற்றி தினத்தை
சரியாய் நடத்தும் சிவனே
ஆளும் பாண்டிய அரசன் கூன் காக்க
அவரும் செல்ல காத்தவனே

கோவிலில் பாடிய கோளறு பதிகம்  பாடியே
பக்தர் வணங்கி நிற்க
மேவிய கயிலையில் மெத்தன அமர்ந்து சொக்கட்டான்
ஆடியே தோற்ற சிவனே
காணாத கணவனைத் தேடியே அம்பிகை உலகில்
வாடியே நின்ற கதையே
ஆணாகி பெண்ணாகி அர்த்தத்தை புரிய வைக்க
அண்டத்தில் வந்திடும் அதிசயமே

அடக்காது அடங்காது அனுசரித்து நடந்து விட்டால்
மண வாழ்க்கை மங்களமே
இடர்கள் வந்தாலும் இணைந்த சக்கரம் இரண்டும்
செல்லும் வண்டி குடும்பமே
விட்டுக் கொடுத்திட வீட்டைக் காத்திட சொல்லிக்
கொடுத்த சூஷ்ம புரீஸ்வரரே
எட்டியே போனாலும் எதிரே வில்வத்தில் எழுந்த
எழில் வடிவான ஈசனே

செவ்வாய் தோஷம் செவ்வனே நீங்க சுகமாய்
திருமணம் கைகூடி நடக்குமே
கவ்விய கிரகங்கள் கணத்தில் அருளிட கவலைகள்
இழந்து மகிழ்வு பிறக்குமே
பிரிந்தவர் இணைந்திட பிறழாது காத்துப் பேணிடும்
அன்னையும் தந்தையும் ஆனவரே
விரிந்த அண்டத்தில் விந்தைகள் புரிந்து எங்களை
என்றென்றும் அணைத்து செல்பவரே

http://temple.dinamalar.com/New.php?id=340

# 123. திருவீழிநாதேஸ்வரர் - கல்யாண சுந்தரேஸ்வரர்

போஜனம் செய்ய வாருங்கள்
கார்த்தியாயினி சுந்தரேஸ்வர கல்யாண மண்டபத்தில்
போஜனம் செய்ய வாருங்கள்
திருவீழி மிழலை கல்யாண மண்டபத்தில்
போஜனம் செய்ய வாருங்கள்

மாசி மகத்தில்  மண்டப கோலத்தில்
ஆசிகள் தரும் அண்டம்  காக்கும்
நாட்டியம் ஆடும்  நளினம் கூடும்
பாட்டும் பரதமும் பாரினில் கண்டு
போஜனம் செய்ய வாருங்கள்

சந்தனம் செண்பகம் பலா விளா
சம்பந்தர் அப்பர் சங்கடம் தீர்க்க

பஞ்சத்தை போக்கி பசியினை நீக்க

தஞ்சம் கேட்க தந்திட்ட பொற்காசில்

போஜனம் செய்ய வாருங்கள்

மிழலைக் குறும்பர் மெத்தன அன்பில்

பழமான விளா பாதத்தில் அளிக்க

அன்பிற்கு இரங்கி அஷ்டமா சக்திகள்

தந்திட்ட மாப்பிள்ளையின் பாதாள நந்தியுடன்

போஜனம் செய்ய வாருங்கள்

சலந்தரன் பறிக்க சக்கரத்தை இழந்து
மலரால் வழிபட்டு மகாவிஷ்ணு வேண்ட
ஆயிரம் மலரில் அங்கொன்று குறைய
ஆழிமழைக் கண்மலர் ஆங்கே அளித்திட

போஜனம் செய்ய வாருங்கள்

காய்கறி கூட்டு கைநிறைய லட்டு
நெய்மணக்க உணவு நெஞ்சம் நிறைக்கும்
வாய்மணக்க வெற்றிலை வகையாற பலபந்தி
செவிகுளிர இசைதனை செவ்வனே கேட்டு

போஜனம் செய்ய வாருங்கள்
கார்த்தியாயினி சுந்தரேஸ்வர கல்யாண மண்டபத்தில்
போஜனம் செய்ய வாருங்கள்
திருவீழி மிழலை கல்யாண மண்டபத்தில்
போஜனம் செய்ய வாருங்கள்

http://temple.dinamalar.com/New.php?id=523

# 124. அக்னிபுரீஸ்வரர் -அன்னியூர்

வன்னி மலர்களால் வணங்கபட்ட ஈசரே
அன்னியூர் தலத்து அக்னி புரீஸ்வரரே
அக்னியும் வணங்க அண்டம் காத்தவரே
பக்தர்களைக் காக்க பறந்து வருபவரே

சாபத்தைப் போக்கி சாந்தம் தருபவரே
ஆபத்தை நீக்கி அபயம் தருபவரே
திருமணத் தடைகளை திருவருளால் நீக்குபவரே
இருமனம் இணைய இத்தலத்தில் அருள்பவரே

கட்டடம் கட்டவும் கட்டளை தருபவரே
துட்டனை தண்டிக்க துரிதமாய் வருபவரே
சுட்ட நோய் நீக்கி சுகத்தைத் தருபவரே
எட்டிடும் அழுத்தத்தை எழிலாய் குறைப்பவரே

நிலமாய் நெருப்பாய் நீராய் ஆனவரே
உலகத்தில் காற்றாய் உயராகாய மானவரே
புலனுக்குப் புரியாத புதிரான வேந்தரே
குலங்களைக்  காத்திட கோயிலில் நின்றவரே

http://temple.dinamalar.com/New.php?id=338

# 125. சற்குணேஸ்வரர் -கருவேலி (திருவாரூர் )

பிணிக்கு மருந்தே பிறவிக்கு பேறே
அணிக்கு அழகே ஆழ்மனத் தெளிவே
தீக்குண முடிவே நற்குண நல்லறிவே
ஆக்கையின் அழிவே அழிவில்லா நிலையே

ஆடிய பாதமே அண்டமும் அசையுமே
தேவியின் அங்கமே திவ்யமான பீடமே
உக்கிர ருத்ரமே உருக்கும் அன்பே
பக்தனுக்கு காப்பே பரமசிவ அணைப்பே

திருமாலின் திருவருளே திகழும் சாந்தமே
கருவின் வேலியே காக்கும் கவசமே
உருவாகும் லிங்கமே உயிரைக் காக்குமே
அருமருந்து மந்திரமே அணங்காகும் சிவமே

பார்வதி மணமே பரசுகம் தருமே
ஊர்வந்த கோலமே உள்ளம் ரசிக்குமே
சற்குண ஈசரே சர்வாங்க சுந்தரியே
பொற்பாதம் பணிவோமே பொய்மைகள் விலகுமே

http://temple.dinamalar.com/New.php?id=537

# 126. பிரணவேஸ்வரர் - திருப்பந்துறை

ஓம் அறியாத பிரம்மமே ஓம் ஒடுங்கிய சிறையே
ஓம் என்ற பிரணவமே ஆம் என்ற தந்தையே
ஓம் அறியும் ஆவலே ஓம் மண்டியிட்ட அழகே
ஓம் உரைத்த குருவே உன்வாய் பொத்திய மாணவனே

ஓம் உபதேசித்த கர்வமே ஓங்கிடும் ஆங்காரமே
ஓம் இல்லாத உமைமகனே ஓசை அடங்கிடும் ஊமையே
ஓம் தண்டாயுத பாணியே ஓம் தலை வளர் குடுமியே
ஓம் உணரும் உண்மையே உன்னையே எண்ணித் தவமே

ஓம் அருளிய சிவனே ஊமையும் பெறும் திறனே
ஓம் காட்டிய அன்பே ஓங்கி வளரும் மரமே
ஓம் மங்களம் பொங்குமே ஓம் மாறாத உண்மையே
ஓம் திருப்பேணு துறையே ஓம் சிவானந்த ஈஸ்வரரே

ஓம் இரட்டை விநாயகரே ஓம் இவ்வுலக பஞ்சபூதமே
ஓம் நிலனொடு வானமே ஓம் நீரோடு நெருப்பே
ஓம் வாயுவான அண்டமே ஓம் ஒய்யார அகிலமே
ஓம் பிரம்மாண்ட மெய்யே ஓம் பிறைகொண்ட சிவனே

http://temple.dinamalar.com/New.php?id=370

# 127. சித்தநாதேஸ்வரர்- திருநறையூர்

சித்தத்தில் சிந்தையாகும் சித்த நாதேஸ்வரரே
சித்தருக் கருளும் சித்த நாதேஸ்வரரே

நிலவினைச் சூடிய நித்திய  நாதேஸ்வரரே
மலரினைத் தாங்கிய மகேச  நாகேஸ்வரரே

கங்கையை அணிந்த கைலாய ஈஸ்வரரே
மங்கையை மணந்த மலையார் அண்ணலே

மழலையாய் தவழும் மகாலக்ஷ்மி அண்ணனே
குழந்தை வடிவில் கோவிலில் குடிகொண்டவளே

திருமாலுக்கு மணமுடிக்க திருவருள் செய்தவரே
திருநறையூர் கோவிலில் திகழும் ஈசனே

பிறந்தக சீர்கொடுத்து  பெருமை சேர்ப்பவரே
சிறந்த நாயகராய் சித்தத்தில் நிற்பவரே

சித்தத்தில் சிந்தையாகும் சித்த நாதேஸ்வரரே
சித்தருக் கருளும் சித்த நாதேஸ்வரரே

http://temple.dinamalar.com/New.php?id=368

# 128. படிக்காசு நாதர் - அழகாபுத்தூர்

சங்குசக்கர முருகனின் சன்னதி தலமே
பொங்கிடும் அருளாய் பூமியில் படிக்காசே
அசுரனை வதம் செய்ய ஆயுதம் கொடுத்தவரே
விசும்பலுக்கு செவிசாய்த்த விஸ்வநாத படிக்காசே

வறுமையிலும் வாடாத வாசமலர் அடியாரே
அருமையாய் கிடைத்த அத்புத படிக்காசே
புகழ்த் துணையார் பூஜித்த புவியரசரே
சுகம்தர முளைத்த சொத்தான படிக்காசே

மயங்கியவர் கனவில் மலர்ந்த திருவுருவே
சுயம்புவாய் எழுந்த சொர்ண படிக்காசே
அஞ்சலென தாளடி அடியார் பணிந்திட
பஞ்சத்தைப் போக்கிட பறந்துவந்த படிக்காசே

தவற்றினை சுட்டிட தலத்திற்கு வந்தவரே
தவநெறி புரிந்திட தனயனுக்கருளும் படிக்காசே
அன்னமிட்டு காத்திடும் அழகாபுத்தூர் நாதரே
சொன்னபடி செய்திடும் சுயம்புவான படிக்காசே

உன்னருள் பெற்றிட உலகம் வேண்டுமே
துன்பங்கள் தாங்கிட தோள்கொடு படிக்காசே
புயலும் வெள்ளமும் பூவுலக சோதனையே
கயல்விழி பார்வையில் காத்திடுவாய் படிக்காசே

http://temple.dinamalar.com/New.php?id=346

# 129. சிவகுருநாதர்- சிவபுரம்

பிள்ளையை குருவாக்கிப் பேணிடும் குருவே
உள்ளதை உணர்த்தி உண்மையாகும் குருவே

அள்ளிடும் அழகிலே ஆடிடும் குருவே
கொள்ளை போனாலும்  கிடைத்த குருவே

உள்ளத்தை அள்ளியே ஊர்கடந்த குருவே
தெள்ளத் தெளிவாய் திரும்பிவந்த குருவே

குபேரன் பூஜிக்க கோவில்வாழ் குருவே
சபேசன் செல்வமாய் சலங்கையின் குருவே

கண்ணுக்கு அழகாய் காடசித்தரும் குருவே
மண்ணுக்கு அடியிலும் மறைந்த குருவே

அங்கத்தால் சுற்றிட அலங்கார குருவே
சங்கமித்த நாயகியின் சிங்கார குருவே

நோய்தவிர் வைத்தியர் நீயே குருவே
தாய்தந்தை உறவான தஞ்சாவூர் குருவே

http://temple.dinamalar.com/New.php?id=958

# 130. அமிர்தகலசநாதர் -சாக்கோட்டை

வீசிடும் கல்லும் விழுந்திடும் மலரே
ஆசிகள் பெற்றிட அமிர்த மலரே
சாக்கிய கோலத்தில் சாத்திய மலரே
தாக்கிடும் பக்திக்கு தலைவணங்கு மலரே

பிறவிக்கடல் கடக்க உதவும் மலரே
உறவுகள் பேணிட ஓடிவரும் மலரே
மறந்தாலும் காக்கும் மந்திர மலரே
துறவியர் பூஜித்த தூயதொரு மலரே

அண்டம் அழிந்திட அமிர்த மலரே
மண்ணிலே புதைந்த மறையான மலரே
உண்ணக் கொடுக்கும் உயரிய மலரே
எண்ண வைக்கும் ஏகாந்த மலரே

உன்னை பூஜித்த ஒய்யார மலரே
பொன்னாய் மாறிய புதிரான மலரே
கல்லும் மலராக காட்சியான மலரே
எல்லாம் மலராக எங்கும்நிறை மலரே

http://temple.dinamalar.com/New.php?id=379

# 131. சற்குணலிங்கேஸ்வரர்- கருக்குடி

காற்றாகி மணலாகி கடலாகி நின்றாய்
ஊற்றாகி  உருவாகி உலராது நின்றாய்
குன்றாகி குடியாகி குணமாகி நின்றாய்
இன்றாகி நேற்றாகி என்றுமாய் நின்றாய்

நோயாகி நொடியாகி மருந்தாகி நின்றாய்
தாயாகி தந்தையாகி  தரணியிலே நின்றாய்
சேயாகி உறவாகி சிரிப்பாகி நின்றாய்
வாயாகி வார்த்தையாகி வாசமாகி நின்றாய்

பயிராகி மரமாகி பாதையில் நின்றாய்
உயிராகி உடலாகி உணர்வாகி நின்றாய்
பூவாகி காயாகி புத்துயிராய் நின்றாய்
பாவாகி பண்ணாகி பறையாகி நின்றாய்

பக்தனாகி ஈசனாகி பாட்டாகி நின்றாய்
சக்தியாகி சிவனாகி சற்குணமாக நின்றாய்
தாயாகி தந்தையாகி  தரணியிலே நின்றாய்

சேயாகி உறவாகி சிரிப்பாகி நின்றாய்
வாயாகி வார்த்தையாகி வாசமாகி நின்றாய்

அரசனாகி ஆண்டியாகி அனைத்துமாகி நின்றாய்

வரமாகி வளமாகி வடிவாகி நின்றாய்

மண்ணாகி விண்ணாகி மலையாகி நின்றாய்

கண்ணாகி காட்சியாகி கலையாகி நின்றாய்

http://temple.dinamalar.com/New.php?id=352

# 132. வாஞ்சிநாதர் - திரு வாஞ்சியம்

காஞ்சியில் கயிலையில் காசியில் கிளியே
வாஞ்சியில் வசிக்கும் நாதரிடம் கிளியே
கொஞ்சி கொஞ்சி பேசும் கிளியே
துஞ்சாது செல்வாய் தூதாய் கிளியே

அஞ்சல் என்று வந்தவர் கிளியே
அஞ்சாமல் இருக்க செய்வார் கிளியே
தஞ்சம் என்று அடைவோம் கிளியே
பஞ்சாய் பறக்கும் கவலைகள் கிளியே

கெஞ்சி நின்ற எமனுக்கும் கிளியே
எஞ்சிவிட்ட பாவம் விலகும் கிளியே
பஞ்சபூத சிவனால் பாவங்கள் கிளியே
கொஞ்சமும் இல்லாது குறையும் கிளியே

மஞ்சமென திருமகள் மார்பிலே கிளியே
வஞ்சியவள் தினம் வசித்தாளே கிளியே
ஊஞ்சலில் மாலையிட ஊர்தேடி கிளியே
வாஞ்சையுடன் திருமாலும் வந்தாரே கிளியே

விஞ்சியே காசியில் விடாது கிளியே
தஞ்சை மண்ணே தமிழே கிளியே
அஞ்செழுத்து நாமம் அதுவே கிளியே

மிஞ்சியே சொல்வாய் மெதுவே கிளியே

காஞ்சியில் கயிலையில் காசியில் கிளியே
வாஞ்சியில் வசிக்கும் நாதரிடம் கிளியே
கொஞ்சி கொஞ்சி நீயும் கிளியே
துஞ்சாது செல்வாய் தூததாய் கிளியே

http://temple.dinamalar.com/New.php?id=597

# 133. மதுவனேஸ்வரர் -நன்னிலம் திருவாரூர்

மதுவனேஸ்வரர் நன்னிலத்தில் அமைந்த நல்லதொரு தேனே
இன்னிசை வடிவாய் இசைக்கும் தேனே
முன்னின்று காக்க முந்திவரும் தேனே
தென்னாட்டு சிவனாய் திகழ்ந்திடும் தேனே

தேவர்கள் மாறிட  தேனான தேனே
பாவங்கள் போக்கிடும் பரவச தேனே
காவலாய் காத்திடும் களிப்பூட்டும் தேனே
சாபங்கள் அழிக்கும் சாகச தேனே

இந்திரன் வணங்கிடும் இத்தலத்து தேனே
மந்திரமாய் ஒலித்திடும் மதுவனத்து தேனே
தந்திரங்கள்  செய்திடும் தட்க்ஷிண தேனே
சந்திரன் சூடிய சதாசிவ தேனே

மகாமேரு விழுந்திட மாமலை தேனே
தகாத செயல்களை தட்டிடும் தேனே
சகாவை எங்களுடன் சரளமாகும் தேனே
சுகானுபாவ சைவத்தை சுகிக்கும் தேனே

அம்மை அப்பரான அண்ணாமலை தேனே
இம்மைக்கும் மறுமைக்கும் இனிய தேனே
சும்மா இருந்தாலும் சிவனான தேனே
அம்பிகை இணைய சக்தியாகும் தேனே

என்னைப் பாட வைத்த தேனே
என்னுள் தெரியாது மறைந்த தேனே
உலவும் கூட்டில் உயிரான தேனே
உலகின் கூட்டில் உறையும் தேனே

http://temple.dinamalar.com/New.php?id=355

# 134. பசுபதீஸ்வரர் - திருக்கொண்டீஸ்வரம்

பசுவின் கொம்பினால் பதம்பார்த்த ஈசனே
பசுவான பார்வதி பால்சுரந்த  ஈசனே
பசுவான காமதேனு பார்வைக்கான ஈசனே
பசுவென்ற கொண்டியும் வழிபட்ட ஈசனே

ஸ்ரீதேவி மூத்தவள் ஜேஷ்டாதேவி  தலமே
ஸ்ரீதேவி அருகிலே சித்திக்கும் தலமே
சோம்பலை நீக்கிட சோபிக்கும் தலமே
ஆம்பல் மலர்போல அழகான தலமே

காய்ச்சல் கடுமையைக் களையும் ஈசனே
ஓய்ச்சல் இல்லாது ஒளிரும் ஈசனே
திருமணத் தடையை விரட்டிடும் ஈசனே
ஒருமன இணைவில் ஒய்யார ஈசனே

திக்கெட்டும் வீசும் திகம்பர ஈசனே
பக்கத்தில் அருளும் பரசிவ ஈசனே
சொக்கட்டான் ஆடிடும் சொக்கநாத ஈசனே
அக்கரை செல்லவே அருளிடும் ஈசனே

http://temple.dinamalar.com/New.php?id=521

# 135. அழகியநாதர் - திருப்பனையூர்

சிவனேயென விழிக்கவைக்கும்  சிவராத்திரி சிவனே
இவரே என்றுஇயம்பிவிட அருளும் சிவனே

அழகினைச் சுமந்த அர்த்தநாரி சிவனே
பழகிய நடராஜ பாதசலங்கை சிவனே

கரிகாலன்  துணையான  கணபதி  தகப்பனே
அரிதான மந்திரமாய் அணைக்கும் சிவனே

மாற்று உரைத்த விநாயக தந்தையே
மாற்றங்கள் இல்லாத மலையான சிவனே

பரவையர் கேட்டிட பாடிய அடியாரே
அரங்கத்தில் ஆடிடும் அழகான சிவனே

சிவனே சிவனே சிங்கார சிவனே
இவரே என்று இயம்பவைக்கும் சிவனே

http://temple.dinamalar.com/New.php?id=1080

# 136. வீரட்டானேஸ்வரர்- திருவிற்குடி

திருவிற்குடி தலத்து திருவருள் ஈசனே
உருமாறி வந்தது உளமறியா இந்திரனே

இந்திரன் கர்வத்துடன் இத்தலம் வந்திட
தந்திரங்கள் பலசெய்த தாண்டவ சேவகனே

சேவகனாய் காவலிருந்த சிவஞான முரசே
தேவனை அடக்க திறந்த நெற்றிக்கண்ணே

நெற்றிக்கண் திறந்ததில் நிஜமறிந்த இந்திரனே
ஒற்றிய வியர்வையில் உருவான குழந்தையே

குழந்தையாய் பிரம்மனை கேலிசெய்த அசுரனே
இழப்புகள் பலவும் இவ்வுலகில் செய்தானே

செய்வினை தொடர ஜலந்திராசுரன்  தொல்லையே
ஒய்யார அசுரனுக்கு உயர்ந்த மனையாளே

மனையாள் கற்பால் மார்தட்டிய அசுரனே
கனைத்து செய்வானே கைநிறைய கொட்டமே

கொட்டங்கள் அடக்க கால்வரைந்த சக்கரமே

வட்டத்தில் வடிவெடுத்த வந்தன சக்கரமே

சக்கரம் தாக்காது சதிராடி இருந்தானே

அக்கணம் விஷ்ணுவின் அழகிய வேடமே

வேடம் தாங்கி விஷ்ணுவும் வந்தாரே

பாடம் கற்பிக்க பாரினில் வந்தாரே

வந்தவர் கணவன்போல் வகையாய் நடிக்க

தந்திரம் அறியாது இல்லத்தில் அழைத்தாளே

அழைத்தது கணவன் அல்லாது இருந்திட
பிழையால் இழந்தாள் பிரியமானவனை பிருந்தை

பிருந்தையின் சாபத்தில் பிறந்தது ராமாயணமே

இருந்து அருளிடவே இத்தல துளசியே

துளசி மாலையில் தொய்வுகள் நீங்குமே

அளவில்லா அழகும் ஆங்கே கூடுமே

கூடியவர் பிரிந்திட கொடிய சோகமே

வாடியவர் மனத்தில் வந்திடும் பித்தமே

பித்தைப் போக்கிடும் பேரழகு தாவரமே

சித்தத்தைக் காத்திடும் சிறுதாவர சிங்காரமே

சிங்காரச் சிவனால் சிக்கிடும் சக்கரமே
மங்காத வீரத்தை மண்ணில் அளிக்குமே

அளித்த வரங்களில் ஆனந்தம் பொங்குமே
களித்த மனத்திற்கு காவல் திருவிற்குடியே

http://temple.dinamalar.com/New.php?id=427

# 137. அக்னிபுரீஸ்வரர் - திருப்புகலூர்

ஒன்றா இரண்டா ஓராயிரம் நாமங்களே
இன்றே சொல்லி இயம்புவேன் கேளுங்கள்

இரண்டு முகங்களை அக்னிக்கு தந்தவரே
முரண்ட தர்க்கத்தை முறையாய் விலக்கியவரே
மூன்று கால்களை முத்தாய் தந்தவரே
சான்று பலகொண்டு சரித்திரம் ஆனவரே

நான்கு கொம்புகளை நலமாய் தந்தவரே
கூன்வாங்கி சாய்ந்து கோணபிரான் ஆனவரே

ஐந்தெழுத்து மந்திரமாய் ஐக்கியம் ஆனவரே
மைந்தன் விநாயகன் மையாமான ஞானமே
ஆறுமுகன் தந்தையாய் அகிலம் காப்பவரே
வேறுமுகம் பூண்டு வேடன் ஆனவரே

ஏழுகரம் எழுஜ்வாலை எழிலாய் செய்தவரே
ஆழும் மனதில் அடிக்கல் நாட்டியவரே

எட்டுதிக்கும் ஔிர எழுந்து நிற்பவரே
விட்டுவிலகாத பந்தமாய் வீடுபேறு தருபவரே

ஒன்பது கிரகங்களை ஒயிலாய் காப்பவரே

தன்பால் அன்பரை தளிராய் சேர்ப்பவரே
பத்துதலை அரசனும் பாலித்த ஈசரே
இத்தல இறையாய் இவ்வுலகம் காப்பவரே
வெள்ளைப் புடவையில்  வேண்டியரைக்  காப்பவளே
கொள்ளை அழகுடன் குழந்தைகளை  காப்பவளே
கருந்தார் குழலியாய் கருவினைக் காப்பவளே
உருவத்தில் ஒயிலாய் உலகை காப்பவளே
சிவப்பு நிறத்தில் சிங்கார சீமாட்டியே
அவனியை காக்க அர்த்தங்கள் பூண்டவரே

பச்சை நிறத்து பத்தினி மீனாட்சியே
இச்சைகள் விட்டுவிட இதமாய் தாங்குபவரே

நீலகண்டனாய் விடத்தை நிஜமாய் விழுங்கியவரே
சீலனாய் வேதத்தில் சிவனாய் இருப்பவரே

பழுப்பு நாகத்தை  பாங்காய் உடுத்தியவரே
அழுக்கைக்  களைந்து அழகைத் தருபவரே

மஞ்சள் புலித்தோலை மடித்து கட்டியவரே
அஞ்சலென வந்த அப்பரைக்  காத்தவரே
உரமாய் முக்தியை உடனே தந்தவரே
நிறமில்லா நிஜமாய் நெஞ்சினில் நிற்பவரே

http://temple.dinamalar.com/New.php?id=667

# 138. வர்த்தமானீஸ்வரர் - திருப்புகலூர்

ஆணாகி பெண்ணாகி ஒரு
கோணாத மனமும் கொண்ட
வர்த்தமானீஸ்வரரே

திருஞானம் பூண்ட
உருவத்தைத் தாங்கி நின்ற
வர்த்தமானீஸ்வரரே

மண்ணிலே ஒளிரும்

கண்ணொளி லிங்கமாய் நின்ற

வர்த்தமானீஸ்வரரே

முருகனார் பிறந்த ஊர்

அருளிடும் முக்தி ஊரதிலே

வர்த்தமானீஸ்வரரே

வடிவமாய் கிரகங்கள்
அடியார் பாதங்கள் அமையவே
வர்த்தமானீஸ்வரரே

சம்பந்தர் பாடிய
அம்பலவாண தலத்திலே
வர்த்தமானீஸ்வரரே

வாதாபி கணபதி

தோதாக துணை போகவே

வர்த்தமானீஸ்வரரே

சக்தி இழந்த தீ

சக்தியை  பெற்றிட உதவிய

வர்த்தமானீஸ்வரரே

நிகழும் காலத்து செயல்
சுகமாய் நடந்திடவே அருளும்
வர்த்தமானீஸ்வரரே

ஜப்பானிய  ஹைக்கூ
அப்பரின் தேவாரப் பாட்டில்
வர்த்தமானீஸ்வரரே

http://temple.dinamalar.com/New.php?id=402

# 139. இராமநாத சுவாமி -திருக்கண்ணபுரம்

அம்மைக்கும் அப்பனுக்கும் அடியவள் பாடும் தாலேலோ
இம்மைக்கும் மறுமைக்கும் இனிதாய்ப் பாடும் தாலேலோ

கருவினைக் காத்த கருந்தாழ் குழலிக்குத் தாலேலோ
உருவத்தில் நான்காக உருவான குழந்தைக்குத் தாலேலோ

பருவத்தில் மணமுடித்த பரமசிவன் அவருக்குத் தாலேலோ
இறுமாப்பை அழித்திடும் இராமநாத ஈசனுக்குத் தாலேலோ

பக்தைக்கு பிரசவம் பார்த்த பார்வதிகுத் தாலேலோ
முக்தியை அளிக்கும் முத்தமிழ் நாதனுக்குத் தாலேலோ

இராமன் பூஜித்த இராசியான சுயம்புக்குத் தாலேலோ
காமனை அழித்த கடவுளான சிவனுக்குத் தாலேலோ

வேலினைத் தாங்கிய வேலவன் தகப்பனுக்குத்
சூலினைக் காத்து சுகம்தரும் சீலனுக்குத் தாலேலோ

அம்மைக்கும் அப்பனுக்கும் அடியவள் பாடும் தாலேலோ
இம்மைக்கும் மறுமைக்கும் இனிதாய் பாடும் தாலேலோ

http://temple.dinamalar.com/New.php?id=342

# 140. திருப்பயற்று நாதர் -திருப்பயத்தங்குடி

சுங்கவரி கட்டினால் சுலபத்தில் நட்டமே
அங்கே அவர்மனதில் அண்ணாமலை நாட்டமே

பங்கம் ஏற்படுமே பரிதவித்து வேண்டினார்
மங்கள சிவனை மன்றாடி வேண்டினார்

நல்மிளகு ஏற்றியே நடுவழியே வந்தார்
அல்லும் பகலும் அவன்புகழ் பாடினார்

இல்லாத பயறாய் இருப்பதை மாற்ற
உள்ளுக்குள் சிவனை உருகி வேண்டினார்

காலை வேளையில் காவல் புரிவோர்
வேலையென திறக்க வெளிவந்தது பயறு

மிளகு பயறாகும் மீளாத்துயரம் போகும்
பளபளத்து மூட்டையில் பயறும் தெரியும்

எள்ளும் எண்ணெயாக எல்லாமே நீயாக
உள்ளத்தில் தெரியும் உயரிய ஞானமே

ஆடும் ஆட்டத்தில் அண்டமும் அசையுமே
வீடுதோறும் வந்திடுவாய் வித்தக அன்னையே

நவராத்திரி பிறந்திட நவதானியம் ஆவாய்
சிவராத்திரி சேர்ந்திட சிந்தையில் நிற்பாய்

http://temple.dinamalar.com/New.php?id=233

# 141. உத்திராபதீஸ்வரர் - திருவாரூர்

கஜமுகா சுரனை வதம்செய் கணபதி
புஜங்களுடன் உன்னை பூஜித்த தலமே

பரஞ்சோதி பக்திக்கு பரிவான  பரஞ்சோதியே
அரசாளும் மன்னனுக்கு அருளிடும் அரசனே

சீராளன் மகனாக்கிய சிறப்பான சீராளனே
ஊரார் புகழ்ந்திட ஊரில் உறைபவனே

சிவனடியார் சாப்பிட சித்தமாகும்  சிவனே
அவனியில் அன்னமாகும் அன்பான சிவனே

ஒருபொழுது  உண்பதற்கு ஒருவரும் வராதபோது
உருவமேந்தி வீடுதேடி உண்ணவும் வந்தீரே

கணவன் இல்கைலையென கைவைக்க மறுத்து
குணமுடன் கோவிலில் குடிகொண்ட குணவானே

பரஞ்சோதி வந்தங்கு பசியாற்ற விரும்பிட
அறமின்றி மகனை அறுத்திட கேட்டீர்

பக்தியின் மிகுதியில் பக்தரும் பணிந்திட
முக்தியைத் தந்திட முன்னின்று வந்தீர்

தாவெனக் கேட்டதும் தந்துவிட்ட மகன்
வாவென்று அழைக்க வந்தானே மீண்டும்

உயிருடன் இருப்பதும் உடலை பெறுவதும்
கயிலை வாழ் கடவுள் உன்னாலே

மாறாத இன்பமே மற்றதெல்லாம் பின்னரே
காணாத போதும் கருதத்தினில் வருபவரே

http://temple.dinamalar.com/New.php?id=339

# 142. இரத்தினகிரீஸ்வரர் - மாணிக்க வண்ணர் -திருமருகல்

வாழையடி வாழையாய் வாழ்ந்துவரும் உண்மையே
ஏழைக்கும் செல்வருக்கும் பொதுவான உண்மையே

வணிகருக்கும் வணிகைக்கும் வகையான உண்மையே
பிணியினைப் போக்கிவிடும் பேரானந்த உண்மையே

வேண்டிநின்ற வணிகையின் விசும்பலைக் கேட்டு
தீண்டிய  பாம்பின்விடம் நீங்கியது உண்மையே

தேடிய முக்தியும் திடமாய் கிட்ட
பாடிவிட்ட தேவாரப் பதிகம் உண்மையே

அடியவர் வேண்டிட அணுகாது பிணியே
மடிந்தவர் எழுந்தது  மாறாத உண்மையே

திருமண சாட்சியாய் தில்லையன் வந்திட
உருவான உறவு  உலகின் உண்மையே

திருமாலை திருமகள் திருமணம் செய்திட
திருமருகல்  ஓடோடி வந்தது உண்மையே

உருவான சுயம்புவுக்கு ஒருஅடியும் விழுந்திட
கருத்துடன் அரசன் கட்டியது உண்மையே

மாணிக்க வண்ணர் மனதினை தொட்டிட
காணிக்கை ஆகும் கவிதை உண்மையே

http://temple.dinamalar.com/New.php?id=232

# 143. அயவந்தீஸ்வரர்- சீயாத்த மங்கை

குற்றத்தைக் கண்டால் கொதித்திடும் கண்ணே
நெற்றியில் அமைந்த நேர்மையான கண்ணே
அம்பிகை நெற்றியிலும் அங்கமான கண்ணே
அம்சமாய்அ அமைந்த அழகான கண்ணே

நீலநக்க நாயனார் நிலமான தலமே
கோலவிழி மங்கை கூடிய தலமே
சிலந்தியும் அமர்ந்திட சிக்கிவிட்ட தலமே
குலமாது ஊதியதில் கொந்தளித்த தலமே

மனையாளை பிரிந்து மகேசனடி பணிய
இணைக்க கனவில் இதமாய் வந்தீரே
உடலின் பாகங்கள் உடனே கொப்பளிக்க
கடமையும் அன்பையும் காட்டிக் கொடுத்தீரே

அயவந்த ஈசரும் அருமை அன்னையும்
சுயமான லிங்கமும் சுகம்தரும் பாதமும்
அயராது தினமும் அடியேன் பாட்டில்
வயப்பட மனமும் வணங்கிநிற்குமே

http://temple.dinamalar.com/New.php?id=916

# 144. காயாரோகணேஸ்வரர் -நாகப்பட்டினம்

முக்தியைத் தந்துவிட முன்னின்று வருபவன்
பக்தனுக் கருளவே பக்கத்தில் வருபவன்
மீனவன் சோதிக்க மீனைத் தருபவன்
ஆனவை யாவையும் ஆட்டி வைப்பவன்

தங்கமீன் தந்து தலைவன் ஆனவன்
மங்காத செல்வத்தை மதியில் கொண்டவன்
எங்கும் பரவி ஏகாந்தம் ஆனவன்
பொங்கும் ஆனந்தம் பொலிவாய் கொண்டவன்

காயாகி கனியாகி கடவுளாய் நிற்பவன்
பேயாகி பிணமாகி பெரியதாய் நிற்பவன்
தாயாகி தந்தையாகி தமிழாகி நிற்பவன்
ஓயாத கடலிலே ஒருதோணி ஆனவன்

சித்தருக்கு அருளி சிந்தையில் நின்றவன்
பித்தம் தெளிய பேரானந்தம் ஆனவன்
காயத்தின் காயத்தை காணாது செய்பவன்
மாயத்தின் மையமாய் மண்ணிலே நின்றவன்

http://temple.dinamalar.com/New.php?id=205

# 145. நவநீதேஸ்வரர் - சிக்கல்

அல்லாத மாமிசம் அன்றே உண்டதே
புல்லைத் திங்காது புலியாய் மாறியதே
காமதேனு ஏற்பட்ட களங்கம் தீர்ந்திட
காமனை வென்ற கடவுளை நாட
வேதனை குறைய வேண்டி நின்றதே
சோதனை தீர சிக்கல் வந்ததே

மடியினில் பால் மிகுதியாய் சுரந்திட
வடிந்த பால்குளமாய் வற்றாது நிரம்பிட
வெண்ணை திரண்டிட வெளிர்நிறம் பெற்றதே
கண்ணைப் பறிக்க காரிருள் நீங்கியதே
வசிட்டர் வந்திங்கு வகையாய் லிங்கமாக்க
கசிந்த கருணையில் கைவண்ண உருவமே

வழிபாடு முடிந்து வெண்ணெய் நாதரை
அழிக்காது பெயர்க்க அனைவரும் முயல
வந்திடாது வெண்ணெய் வடிவாய் நின்றிட
மந்திரங்கள் பொதிந்த மங்காத லிங்கமாய்
நின்றபடி அருளி நிறைந்த சிவனே
அன்று பிறந்த அந்த சிக்கல்சிவனே

சிக்கலை உருவாக்கும் சுயம்பு சிவனே
சிக்கலை விடுவிக்கும் சித்தரான சிவனே
தக்க தருணத்தில் தாயாகும் சிவனே
பக்கத்தில் வந்தணைக்கும் பரம சிவனே
சொக்க வைக்கும் சொக்க நாதனே
அக்கறை காட்டிடும் அன்பான சிவனே

http://temple.dinamalar.com/New.php?id=218

# 146. கேடிலியப்பர் - கீழ்வேளூர்

பயணங்கள் முழுதும் பத்திரமாய் காப்பவளே
பயணமான வாழ்வில் பக்கத்து துணையே
உயர பறந்தாலும் உடன் வருபவளே
அயராது காக்கும் அஞ்சு வட்ட அன்னையே
அஞ்சு வட்டத்து அம்மனின் நாயகனே
கொஞ்சும் குமரனின் கீழ்வேளூர் அப்பனே
மஞ்சாடி விநாயகனின்  மறைபொருள் தந்தையே
கெஞ்சும் அடியாரின் கேடறுக்கும் கேடிலியப்பரே

கழுதை போல் கத்தியவன் கழுதையாய் மாறிட
கழுதையும் பேசியதை காதால் பலர்கேட்டிட
சாபத்தை முறித்த சரித்திர தலமே
ஆபத்தை நீக்கிடும் அட்சய லிங்கமே
நாற்திசை  காத்திடும் நாயகியின் தலைவனே
போற்றிடும் பக்தருக்கு புவியில் அருள்பவனே
காற்றிலே பறக்கும் கைவல்ய நாதரே
வீற்றிருக்கும் தலத்தில் வினைகள் அறுப்பவனே

http://temple.dinamalar.com/New.php?id=309

# 147. தேவபுரீஸ்வரர் -தேவூர்

தேவர்கள் வணங்கிய தேவபுரி தேவனே
தேவராஜனுக் கருளிய தேவூர் தேவனே
தேவகுரு பட்டம் தேவனுக்களித்த தேவனே
தேவனின் குணங்கள்நிறை தேவாரப் பாடலே

தேவவாழை கல்லிலே தேவூரில் வாழுமே
தேவவாழை மகப்பேறு திங்களில் அளிக்குமே
தேவனை வணங்க தேடியே வருவாரே
தேவனோடு பலவருடம் விராடனும் இருப்பாரே

தேவனை வணங்க திருவடியை போற்ற
தேவமுனி கவுதமர் திருத்தலம் வந்தாரே
தேவனால் அழிந்த திருத்தலத்து பஞ்சமே
தேவனின் அருளால் திகழும் வளமே

தேவனை வணங்க திருவினைத் தொலைத்து
தேவபுரி தலத்திற்கு திரும்பிய குபேரனே
தேவனின் அருளால் திருவும் திரும்பப்பெற
தேவனின் மகிமை திகட்டாத பெருமையே

http://temple.dinamalar.com/New.php?id=334

# 148. திருநேத்திர நாதர்-திருப்பள்ளி முக்கூடல்

கங்கை யமுனை சரஸ்வதி கூடுமிடமே
மங்கையை வேதியர் மணமுடித்த இடமே
முக்கூடல் தீர்த்தத்தில் முக்கோண நாதரே
சிக்கல்கள் நீக்கிடும் சிங்கார நாதரே

கயாவில் செய்யவேண்டிய கடமையும் இங்கே
தயாளு இராமன் தடையின்றி செய்வாரே
கேக்கரை தலத்தில் கிட்டிடும் முக்தியே
தாக்கிய சங்கடங்கள் தரணியில் போகுமே

முக்தியை பெற்றிட முக்கோண நாதரை
பக்தியில் வேண்டும் பறவை ஜடாயுவே
கரங்களால் இராமன் கருணையுடன் தடவ
சிறகை இழந்தாலும் சித்தம் குளிருமே

உணவருந்தும் முன்னர் உன்னையே நினைக்கும்
குணவான் சோழனை குணமறிந்த ஐயனே
உள்ளம் தவித்து உருவத்தைக் காணநினைக்க
கொள்ளுப்பையும் லிங்கமாய் கொலுவிருந்த அழகென்ன

நேத்திர நாதராய் நேர்த்தியாய் நின்றவரே
சாத்திரம் பேசிடும் சத்திய நாதரே
சேதுவின் கரையிலே சிந்திக்க வைப்பவரே
ஓதுவார் பாடிடும் ஓங்கார நாயகரே

http://temple.dinamalar.com/New.php?id=358

# 149. தியாகராஜர் - திருவாரூர்

மயன் செய்த மாய லிங்கமே
அரன் வடிவ அற்புத லிங்கமே

இந்திரன் பூஜித்த இத்தல லிங்கமே
மந்திர வடிவத்து மகேசனின் லிங்கமே

திருவாரூர் ராஜாவாய் திகழும் லிங்கமே
கருத்துடன் கண்கவர் கடவுளான லிங்கமே

பலவகை கணபதி புடைசூழ் லிங்கமே
உலகை காக்கும் உன்னத லிங்கமே

உறவை பாலமாக்கும் உற்சாக லிங்கமே
சிறகை விரிக்கும் சுயம்பு லிங்கமே

மொத்தமாய் வீற்ற முதன்மை லிங்கமே
சொத்தான லலிதாவின் சொந்தமான லிங்கமே

கமலாயத் தலத்தின் கடவுளான லிங்கமே
இமயத்து சிங்கார இறையான லிங்கமே

எட்டடி பாடலில் எழுந்த லிங்கமே
எட்டாத உயர்த்து எழில்வடிவ லிங்கமே

http://temple.dinamalar.com/New.php?id=598

# 150. அசலேஸ்வரர் - திருவாரூர்

மெய்யைக் காத்திடும் மெய்யான பொருளே
பொய்யை பொய்யாக்கும் பேரின்ப பொருளே

அயலூரில் இருக்கும் அசலான ஈஸ்வரரே
அரனாய் காக்கும் அரநெறி அப்பனே

மாலையை முகர்ந்த மங்கையின் மூக்கை
வேலையென அறுத்து வேண்டி நின்றாரே

அரசியின் அன்பினால் அருளிய அப்பனே
வரமாய் நாயன்மார் வளம்தந்த அப்பனே

நம்பிய நமிநந்தி நம்பிக்கை காக்க
வம்பிழுத்த சமணர்கள் வாயும் அடைக்க

தண்ணீரில் எரிந்த தலத்து விளக்கே
மண்ணிலே அதிசயமான மாறாத ஒளியே

எரியும் தீபமாகி எழுந்திடும் ஒளியே
அறிந்தவர் அறியாதவர் அருமறை ஒளியே

கண்டவர் கண்ணுக்கு காட்சியாகும் ஒளியே
விண்ணுக்கும் மண்ணுக்கும் விரிந்த ஒளியே

http://temple.dinamalar.com/New.php?id=536

# 151. பதஞ்சலி மனோகர் - திருவாரூர்

ஆடும் பாதமே ஆளும் பாதமே
வீடுபேறும் பாதமே விளையாடும் பாதமே

பதஞ்சலிக் கருளும் பரசிவ பாதமே
இதமாய் இன்னிசைக்  காடும் பாதமே

மதமெனும் மமதையழிக்கும் மகத்துவ பாதமே
மதமென்ற நெறியை மாறாதுகாக்கும் பாதமே

மதுரபாஷிணியாய் பேசிடும் மாத்ரு பாதமே
மெதுவாய் வருடி மேவிடும் பாதமே

மண்ணாலான சுயம்புவின் மலரான பாதமே
கண்ணுக் கொளியான கலைஜோதி பாதமே

தீபத்தின் ஒளியில் திகழும் பாதமே
பாபத்தைக் கரைக்கும் பரமேஸ்வர பாதமே

எங்கும் லிங்கமாக எழுந்திடும் பாதமே
அங்கே பாம்பாய் படுத்த பாதமே

விளங்கும் இடமான விளமல் பாதமே
களங்கமில்லா ஜோதியான கடவுள் பாதமே

காயாகி கனியாகி கரையும் பாதமே
தாயாகி தந்தையாகி தடவும் பாதமே

சேயாகி செயலாகி சிந்தைநிறையும் பாதமே
ஓயாது ஒளியாது ஒளிரும் பாதமே

http://temple.dinamalar.com/New.php?id=524

# 152. கரவீரநாதர் - கரைவீரம் (திருவாரூர்)

கரவீர நாதரே கரையில்லா நாதரே
பிரம்ம புரீஸ்வரரே பிரம்மனின் பிரம்மமே

பரசுக திருமணமே பரசிவன் அளிப்பாரே
பரமன் அருளாலே பக்தர் பெறுவாரே

திருமணம் ஆகிடவே திருத்தலம் வருவாரே
திருநாளில் தண்ணீரை திருவிருட்சத்தில் விடுவாரே

தேவகன்னியர் மணமுடிக்க திருவருள் தந்தவரே
தேவமுனிவர் கவுதமருக்கு திவ்யமாய் அருள்பவரே

தேவனைக் காணவே தேடிவந்த கழுதையே

பாவங்கள் போக்கவே பாரினில் அருள்வாரே

கழுத்தை திருப்பியே கழுதையும் கண்டிட

அழுத பிள்ளைக்கும் அமுதம் தந்தவரே

எப்பிறவி எடுத்தாலும் எங்களை காப்பவரே

தப்பாது காத்திட தரணியில் வருபவரே

வினைகள் அகற்றவே வினயம் ஆனவரே

சுனைபோல் கருணை சுரந்த சுந்தரரே

ஓரிரவு தங்கினால் ஓய்ந்திடும் வினைகளே

காரிருள் போக்கிட கரைவீரம் வருவீரே

http://temple.dinamalar.com/New.php?id=296

# 153. அபிமுக்தீஸ்வரர் -பிரியநாதர் - மணக்கால் ஐயம்பேட்டை

கங்கையின்  பாவத்தை காவிரியில் நீக்கவே
இங்கே இருக்கும் சிவன்

மங்கையின் கோலம் மனதாரக்  காணவே
இங்கே இருக்கும் சிவன்

மோகினி விஷ்ணு முறையிட்டு  வேண்டவே
ஆகிவந் தாண்ட சிவன்

லலிதா திரிசதை லாவண்ய ரூபம்
கலியுக சம்சார   மீட்பு

முருகன் வணங்க  முறையான  தீர்த்தம்
உருவத்தில் வேளூர் உயர்வு

ஒருவிகற்ப வெண்பா உயரிய சொல்லில்
இருவரி இன்ப இறை

http://temple.dinamalar.com/New.php?id=400

# 154. நர்த்தனபுரீஸ்வரர் - திருத்தலையலங்காடு

தில்லானா
பல்லவி
தலாங்கு ததிகிடதோம் தலாங்கு ததிகிடதோம்
தாம் தாம் தீம் தீம்
தலாங்கு ததிகிடதோம் நர்த்தனபுரீஸ்வரா

அனுபல்லவி

ஜனஜனஜன தனனன தோம்
நாதிந்தன்ன நாதிந்தன்ன தோம் நர்த்தனபுரீஸ்வரா

சரணம்
முயலகன் அரக்கன் முதுகிலே ஆடி
அயராது காத்து அடியவருக் கருளும்
ஆனந்த நடனேஸ்வரா
நர்த்தன புரீஸ்வரா

தோலின் நோயினை தூரப் போக்கிடும்
காலினால் ஆடியே கையினால் ஏந்திடும்
ஆனந்த நடனேஸ்வரா
நர்த்தன புரீஸ்வரா

http://temple.dinamalar.com/New.php?id=332

# 155. கோணேஸ்வரர் -குடவாசல்

கோவினை நேசித்த கோணேஸ்வர நாதரே
கோவிலில் குடிகொண்ட கோணேஸ்வர நாதரே
கோலமாய் வீற்ற கோணேஸ்வர நாதரே
கோலத்தின் குடவாயில் கோணேஸ்வர நாதரே

கோவிந்தகருடன் கும்பிட்ட கோணேஸ்வர நாதரே
கோவிக்காது குடத்தைகாத்த கோணேஸ்வர நாதரே
கோரமான அசுரன் கைமுறித்த கோணேஸ்வர நாதரே
கோரவே தாயை சிறைமீட்ட கோணேஸ்வர நாதரே

கோரிக்கை நிறையாக அம்புவிட்ட கோணேஸ்வர நாதரே
கோகிலம் இனிக்க எழிலானகோவில் கோணேஸ்வர நாதரே
கோலம்செய் விநாயகர் கோவில்கொள் கோணேஸ்வர நாதரே
கோலமுடன் குமரன் குடவாயிற் கோணேஸ்வர நாதரே

கோலாகல திருக்கோவில் கோணேஸ்வர நாதரே
கோலாகல கோஷ்டதுர்க்கை கோணேஸ்வர நாதரே
கோடியில் விழுந்த அமுதத்துளி கோணேஸ்வர நாதரே
கோடிநாம  அர்ச்சனை கொண்டாடும் கோணேஸ்வர நாதரே

http://temple.dinamalar.com/New.php?id=312

# 156. சாரபரமேஸ்வரர் -திருச்சேறை

பதினாறு செல்வங்கள் பாரினில் தருவாய்
மதியிலே **கல்வியை** மகிழ்வுடன் தருவாய்
வறுமையைப் போக்கிட வளம்**பொன்** தருவாய்
சிறுமையைப் போக்கிட சீரிய**அறிவு** தருவாய்
பூமியில் வாழ்ந்திட **புகழினை**த் தருவாய்
சேவிக்க **வலிமை** செழிப்பாய் தருவாய்
வையத்தில் பெற்றிட **வெற்றி**யும் தருவாய்
மையமாய் **நன்மக்கள்** மகிழ்ந்திட தருவாய்
உடலிலே **நோயின்றி** ஊக்கமும் தருவாய்
சுடராக **இளமை** சுகித்திட தருவாய்
இடரின்றி உலகில் **இனிமை** தருவாய்
படரும் **நல்லூழ்** பரவசமாய் தருவாய்
துன்பத்தில் நிமிர்ந்திட **துணிவைத்** தருவாய்
இன்பமாய் உண்டிட இனிய**தானியம்** தருவாய்
அன்றாடம் வாழ்ந்திட **அனுபவம்** தருவாய்
நின்று இருந்திட **நீண்டஆயுள்** தருவாய்
அழியா உலகில் **அழகும்** தருவாய்
செழிக்க பதினாறும் சேர்ந்திட தருவாய்

http://temple.dinamalar.com/New.php?id=1002

# 157. ஞான பரமேஸ்வரர் -திருமெய்ஞானம் - தஞ்சாவூர்

மெய்யினைக் காக்கும் மெய்யான ஞானமே
பொய்யினைப் போக்கும் பொய்மையில்லா ஞானமே
ஐயங்கள் அகற்றிடும் ஐயனான ஞானமே
மையமாய் நின்றிடும் மகத்தான ஞானமே

வேதங்கள் போற்றிடும் வேதமான ஞானமே
கீதமாய் ஒலித்திடும் கீதமான ஞானமே
ஆதாரம் அதுவான அரிச்சுவடி ஞானமே
ஓதுவார் ஓதிவிடும் ஓங்கார ஞானமே

முனிவரும் வணங்கிடும் முதன்மை ஞானமே
இனிவரும் காலத்திலும் இனிக்கும் ஞானமே
நான்மறை வடிவான நாயக ஞானமே
நான்மயான தலமான நால்வேதியூர் ஞானமே

ஞானத்தின் இலக்கணமான ஞாலத்து ஞானமே
வானத்துப் பிறைசூடிய வானளாவிய ஞானமே
ஆனந்த தாண்டவ ஆதிசேகர ஞானமே
தானந்த இசையின் தாளமான ஞானமே

திருசம்பந்த மெய்ஞான திருபரமேஸ்வர ஞானமே
திருநாவின் அரசான திருவாய் ஞானமே
திருமாணிக்க வாசகரின் திருவாசக ஞானமே
திருசுந்தர மூர்த்தியின் திருச்சுவை ஞானமே

http://temple.dinamalar.com/New.php?id=1030

# 158. செம்பொன் நாதர் - ஆண்டான் கோவில்

பொன்னார் மேனியனே பூவுலக ஆண்டவனே
இன்னலைத் தீர்ப்பவனே இத்தல ஆண்டவனே
வன்னிமர லிங்கமே வருகைதரும் ஆண்டவனே
அன்னமிட்ட ஆண்டவனே அருள்புரியும் ஆண்டவனே

கண்ட தேவர் கண்ட ஆண்டவனே
உண்ண தரிசனம் உடன்தந்த ஆண்டவனே
பிண்ட தலை போற்றிய ஆண்டவனே
முண்டம் அழைத்த முதலான ஆண்டவனே

தர்மத்தை அரசன் தானமாய் கேட்டிட
கர்மபலனால் மறுத்த கண்ட தேவரே
திருடன் நீயென்று திட்டியே வெட்டிவிட
கருத்துடன் தலை கத்தியதே ஆண்டவனே

தன்னையும் மாய்த்திட தன்வாள் எடுக்க
அன்னையாய் வந்தங்கு அருளிய ஆண்டவனே
உயிரை மீண்டும் உடலுக்கு அளித்து
துயரம் களைந்த தூய ஆண்டவனே

ஆண்டு முழுதும் ஆண்ட ஆண்டவனே
வேண்டுதல் யாவும் விளைக்கும் ஆண்டவனே
தாண்டவ மூர்த்தியின் தலத்தில் ஆண்டவனே
மாண்டவர் பிழைத்த மகிமை ஆண்டவனே

http://temple.dinamalar.com/New.php?id=291

# 159. ஆபத்சகாயேஸ்வரர்-ஆலங்குடி

ஓடக்கார சிவனே ஒயிலாய்வரும் சிவனே
பாடப்பாட சிவனே பக்கத்தில் வரும் சிவனே

விடத்தை உண்ட சிவனே வினைகள் தீர்க்கும் சிவனே
தடங்கல் களையும் சிவனே தரணியின் ஈசன் சிவனே

கலங்காது காத்தவன் அப்பனே கந்தனின் சிஷ்ய தகப்பனே
மலர்விழி மங்கையின் கணவனே மறைகள் போற்றும் ஆசனே

ஆலங்குடி ஆலகால நீலனே ஆடும் தாண்டவ நடராஜனே
பாலமாய் அக்கரை சேர்ப்பவனே பாரினில் காக்கும் பரமனே

ஆபத்தை விலக்கிடும் ஆபத்சகாயனே ஆனந்தம் தந்திடும் ஆரண்யனே
சாபங்கள் போக்கிடும் சங்கரனே சம்பந்தர் பாடிடும் சைவனே

குலத்தைக் காத்திடும் குருவே கும்பிட அருளிடும் குருவே
உலகத்தைப் பேணிடும் குருவே உயிராய் ஒளிவீசும் குருவே

http://temple.dinamalar.com/New.php?id=927

# 160. பாதாளேஸ்வரர் - அரித்துவார மங்கலம்

முடிவே இல்லாத முதன்மை அரனே
முடியினைக்  காண முடியாத அரனே

திருமுடி காணாது திரும்பவைத்த அரனே
திருவடி காணாது திகைக்கவைத்த அரனே

பொய்யில்லா மெய்யாகிப்  பேணிவிடும் அரனே
மெய்யோடு ஆன்மா மேவிகாக்கும் அரனே

அரியும் அன்று அறியமுடியா அரனே
அரித்துவார மங்கல ஆரண்ய அரனே

இல்லாததும் இருப்பதும் எல்லாமுமான அரனே
சொல்லாததும் சொல்லியதும் சொந்தமான அரனே

விண்ணுலகம்  மண்ணுலகம்  விரிந்த அரனே
கண்ணுக்குத் தெரியாத கால்களுடை அரனே

அண்ணாந்து பார்த்தாலும் அண்ணாமலை அரனே
என்பண்ணிலே ஒளிரும் பரமசிவ அரனே

பள்ளத்தில் இல்லாத பாதாள அரனே (என்)
உள்ளத்தில் குடிகொண்ட உயரிய அரனே

எங்கேயென்று தேட எங்கும்காணாத  அரனே
இங்கேயென்று என்னுள் இனிதாயமர்ந்த அரனே

இரண்டறக்  கலந்த ஈசனான அரனே
அறநெறியில் தெரியும் அத்வைத அரனே

http://temple.dinamalar.com/New.php?id=292

# 161. சாட்சி நாதர் -அவளிவணல்லூர்

காண கண்கோடி வேண்டுமே உந்தனைக்
காண கண்கோடி வேண்டுமே

கண்கள் இருந்தும் காணாது பலரிருக்க
கண் மூடினாலும் கருத்தினில் கண்டிட
காண கண்கோடி வேண்டுமே

கண்ணிழந்து மண்ணிலே கன்னியும் நின்றுவிட
கொண்டவன் ஏற்கமறுத்த கொடுமையில் கலங்கிட
காண கண்கோடி வேண்டுமே

அழகிழந்த மகளைக்கண்டு அழுத முனிவருக்கு

அழகை காட்டவந்த அழகு தம்பதியரை

காண கண்கோடி வேண்டுமே

அம்மை பட்டதால் அம்மையும் வாடிட

அம்மை அப்பனும் ஆங்கே வருகைதர

காண கண்கோடி வேண்டுமே

உண்மை அழகு உள்ளத்தில் இருந்திட

கண்ணிமைப் பொழுதில் கணத்தில் உருவம்

காண கண்கோடி வேண்டுமே

பெண்ணும் பேரழகு பொலிவாய் பெற்றிட
மண்ணிலே சாட்சி மகேசன் சொல்லிட
காண கண்கோடி வேண்டுமே

காண கண்கோடி வேண்டுமே உந்தனைக்
காண கண்கோடி வேண்டுமே

http://temple.dinamalar.com/New.php?id=293

# 162. பரிதியப்பர் -தஞ்சாவூர்

கதிரென வீசுபவனைக் காக்கும் கதிரே
புதிராய் தோன்றிய புதிய லிங்கமே
புல்லைத் தோண்ட முளைத்த ஞானமே
இல்லாத இடம் இல்லாது நிறைந்தவனே

பரிதியின் நோய் தீர்த்த பரிதி அப்பரே
உறுதியை அளிக்கும் உன்னத லிங்கமே
பிதுர்தோஷம் நீக்கிடும் பிரகாச நாதரே
மதுரநாயகி மங்களாம்பிகை நாயகரே

ஆயுளை விருத்தியாக்கும் ஆனந்த தாண்டவரே
பாயும் ஒளியாய் பாரெங்கும் வீசுபவரே
நோயும் விலக்கி நிம்மதி தருபவரே
தாயும் தகப்பனும் தரணியில் ஆனவரே

சிவனாகி சக்தியாகி சிந்தையில் நிற்பவரே
அவனியில் ஒளியாகி அழகு சேர்ப்பவரே
தஞ்சை மண்ணில் தாரணி காப்பவரே
தஞ்சம் வந்தோரை தாங்கி நிறுத்துபவரே

http://temple.dinamalar.com/New.php?id=377

# 163. வெண்ணிக் கரும்பேஸ்வரர்

வெண்ணீறு பூசிடும் வெண்ணிக் கரும்பேஸ்வரரே
மண்ணிலே ஒளிரும் மகேஸ்வர ரசபுரீஸ்வரரே

கரும்புக் காட்டிலே காட்சிதரும் கரும்பேஸ்வரரே
அரும்பாய் மலரவைக்கும் ஆசானின் ஈஸ்வரரே

நந்தியாவர்த்தம் விருட்சமாக நந்தியுடன் காப்பவரே
அந்திப் பொழுதிலும் அன்னையுடன் காப்பவரே

எதிரியை முறியடிக்க எழிலாய் அருள்பவரே
உதிரம் காத்து உரமும் தருபவரே

வினைகள் போக்கிட விநயம் ஆனவரே
துணையாய் என்றும் தோள்கொடுத்து வருபவரே

இன்னல்கள் களைந்து இதமும் தருபவரே
அன்பே சிவமாகி அரவணைத்து காப்பவரே

http://temple.dinamalar.com/New.php?id=310

# 164. சதுரங்க வல்லபநாதர் -பூவனுர் - திருவாரூர்

ராஜனுக்கு ராஜேஸ்வரியாய் ராணியும் இருந்திட
ராஜனின் மகளாய் ரம்மியமாய் பிறந்தவளே

சங்கும் குழந்தையாகி சதுரங்கம் தேர்ச்சிபெற
மங்காத புகழுடன் மங்கையும் வளர்ந்தாளே

முன்வைத்த காலில் முந்திவிடும் குதிரையே
பின்வாங்கும் சேனையைப் பின்னிவிடும் யானையே

தந்திரங்கள் செய்தாலும் தப்பாத விதிமுறையே
மந்திரியின் சாதுரியம் மகத்தான வெற்றியே

எல்லா பக்கமும் எளிதில்செல் ராணியே
இல்லாது போனால்ஏதுமே இல்லாத ராஜனே

ஏறிஇறங்கும் வாழ்வில் ஏக்கமும் மகிழ்வும்சமமே
மாறிவிடும் தோற்றத்தில் மனம்அறியும் உண்மையே

வேடன் கோலத்தில் விளையாட வந்தவரே
ஆடவும் பாடவும் அணியாய் நிற்பவரே

சதுரங்க வாழ்விலே சரித்திரம் படைப்பவனே
பதுமையாய் பார்வதியை பாரினில் வென்றவரே

அறுபத்தி நான்கு கலைகள் கட்டமாக
அறுபத்தி மூவர் அடியவராய் அலங்கரிக்க

சகலகலா வல்லவனை சங்கமிக்கும் தலமே
சகலரும் போற்றிடும் சதுரங்கநாதர் தலமே

http://temple.dinamalar.com/New.php?id=331

# 165. நாகநாதர் - பாமணி திருவாரூர்

ஆதிசேடன் வணங்க அருளும் நாகமே
ஆதியும் அந்தமுமான ஆதிக்க நாகமே

புற்றின் வடிவிலே புதிதான நாகமே
வெற்றியின் வடிவான வீரிய நாகமே

பாதாளம் தனிலே பாதைகாட்டும் நாகமே
ஆதாரம் அதுவாகி அகிலம்காக்கும் நாகமே

உருவாய் அருவாய் உளதான நாகமே
குருதோஷ நிவர்த்திக்கு கும்பிடுவோம் நாகமே

வாயுவுக்கும் சேடனுக்கும் வலுவான நாகமே
பாயும் வலிமையில் பாதாளம்காக்கும் நாகமே

மண்ணால் அமைந்த மகத்தான நாகமே
கண்குளிர தரிசிக்க காத்துநிற்கும் நாகமே

பாமணி ஊரிலே பரமசிவ நாகமே
மாமலை மேருவின் மாறாத நாகமே

http://temple.dinamalar.com/New.php?id=330

# 166. பாரிஜாதவனேஸ்வரர் - திருக்களர் திருவாரூர்

பாரிஜாத வனத்தே பரமசிவ தலத்தே
கோரிக்கை பலிக்கவே கோவில் கொண்டவரே

எண்பதடி இராஜகோபுரத்தே எழுந்தருளிய வடிவிலே
எண்ணுவதை நடத்தும் எழிலான எம்பிரானே

பஞ்சாட்சர மந்திரத்தே பாதை காட்டியே
தஞ்சமென வந்தோரை தாங்கிடும் அப்பனே

பதஞ்சலி முனிவருக்கே பரதம் ஆடியதை
இதமாய் கண்டிட இத்தலத்தில் தவமே

துர்வாசர் தவத்திற்கு துரிதமாய் வந்தே
கர்வங்கள் அடக்கிய களரி தாண்டவமே

ஆனந்த தாண்டவமே ஆடிடும் தாண்டவமே
வானத்து நிலவொளியே வைகறை கதிரொளியே

இருளை அகற்றிடுமே இஜ்ஜகத்துப் பேரொளியே
அருளைப் பொழிந்திடுமே அருட்ஜோதி தீபஔளியே

திக்கெட்டும் பரவிடுமே தீபத்தின் சுடரொளியே
முக்காலம் உணர்ந்திடுமே முக்தியும் அளித்திடுமே

http://temple.dinamalar.com/New.php?id=341

# 167. பொன்வைத்த நாதர்-சித்தாய்மூர்

பொன்னார் மேனியனே பிறைசூடிய தலையோனே
இன்னல் தீர்ப்பவனே இனியவார் சடையோனே

மனஇருள் நீக்குபவனே மங்காஒளி தருபவனே
குணங்கள் கொண்டவனே குன்றா ஒளியோனே

முனிவர்கள் அன்பனே முன்னின்று அருள்பவனே
கனிமொழி தமிழோனே காரிருள் அகற்றுபவனே

தெவிட்டாத அமுதோனே தேனீக்கும் அருளியவனே
பவித்திரம் நிறைந்தோனே பாரினைக் காப்பவனே

செட்டிப்பெண் செவிலியானவனே சேவையும் செய்தவனே
மட்டில்லா அன்புடையவனே மாறாத அழகோனே

பொற்காசு தந்தவனே புதுமைகள் புரிபவனே
வெற்றிகள் தருபவனே வினைகள் நீக்குபவனே

அன்னையாய் வந்தவனே அகிலாண்டேஸ்வரி ஆனவனே
பெண்ணைக் காத்தவனே பிள்ளையைப் பேணியவனே

கதவைதிறக்க வைத்தவனே கருத்துடன்பூஜை நடத்தியவனே
இதமாய் அருளியவனே இல்லத்தை வாழவைப்பவனே

http://temple.dinamalar.com/New.php?id=219

# 168. மந்திரபுரீஸ்வர்ர் - கோவிலூர்

வெண்ணிற லிங்கமான வீற்றிருக்கும் வெற்றியே
பொன்னார் மேனியனாய் பொலிவான வெற்றியே

வெற்றியை அளித்திடும் வினயமிகு வெற்றியே
குற்றங்கள் இல்லாத கோலாகல வெற்றியே

மந்திர உபதேசம் மாறாதளித்த வெற்றியே
இந்திரனும். வணங்கும் இவ்வுலக வெற்றியே

இலங்கைக்கு அணைகட்ட இராமனுக்கருளிய வெற்றியே
உலகினைக் காத்திட உரமாகும் வெற்றியே

அர்த்தஜாம பூஜையில் ஆடிடும் வெற்றியே
அர்த்த்ங்கள் புரியவைக்கும் அர்த்தநாரி வெற்றியே

அமிர்த கலசமான அதிசய வெற்றியே
குமித்த வெற்றிகளின் குன்றான வெற்றியே

நினைத்தவுடன் வெற்றியைத் தந்திடும் வெற்றியே
அணையைக் கட்டி அணைக்கும் வெற்றியே

http://temple.dinamalar.com/New.php?id=520

# 169. சற்குணநாதர்- இடும்பாவனம்

இடும்பனுக் கருளிய இடும்பாவன தந்தையே

படும்பாட்டை அழித்து பாரினில் அருள்பவரே

நற்குணங்கள் அளித்து நாட்டினைக் காப்பவரே

கற்பவை யாவும் கருத்தாய் ஆனவரே

அரக்கருக்கும் மோட்சம் அளித்து காப்பவரே

அறங்கள் பலவாகி அன்பாய் ஆனவரே

அகத்தியருக்கு திருமணக்காட்சி அருளி நின்றவரே
அககண்ணில் தெரிந்து ஆனந்தம் தருபவரே

பிரம்மனுக்கு சத்வகுணம் பிரகாசிக்க தந்தவரே
பிரம்மனும் சத்தியமும் பிரம்மாண்டமாய் ஆனவரே

சற்குணம் அளித்திடும் சற்குண நாதரே
பொற்பாதம் காட்டியே பொலிவாய் அருள்பவரே

குருவாகி வருகைதந்து குலங்களைக் காப்பவரே

உருவாகி பாதுகையில் உள்ளம் கவர்பவரே

ஹரஹர சங்கர ஜெயஜெய சங்கர
ஹரஹர சங்கர ஜெயஜெய சங்கர

http://temple.dinamalar.com/New.php?id=294

# 170. கற்பகநாதர் - கற்பகநாதர்குளம்

வேண்டும் வரங்கள் வழங்கிடும் நாதரே
தாண்டவ மூர்த்தியாய் தானங்கள் தருபவரே

கற்பக விருட்சமாய் கருணை பொழிபவரே
பொற்கால தலமாகி புவனம் காப்பவரே

எட்டு முகப்பட்டையில் எட்டாது நிற்பவரே
மட்டில்லா அழகுடன் மயக்கி ஆள்பவரே

அஷ்ட லக்ஷ்மியின் அருளைத் தருபவரே
அஷ்டமி தினத்தில் அன்பை பொழிபவரே

பாலத்தை கட்டிட பாதை காட்டியவரே
காலத்தைத் தாண்டிய கற்பக நாதரே

http://temple.dinamalar.com/New.php?id=297

# 171. நீள்நெறி நாதர் -தண்டலச்சேரி

வறுமையால் வாடினாலும் வணங்கி நின்று
அருமையாய் நைவேத்தியம் அனுதினம் செய்தாரே

அல்லும்  பகலும் அறுசுவை உணவுதந்து
நெல்லுமின்றி  கீரையுமின்றி நித்தம் வாடினாரே

பக்தனுக்கருள அன்று பக்கத்தில் வந்தவரே
அக்கணம் எழுந்த அழகான திருக்கரமே

அரிவாளால் தன்தலை அறுக்கத் துணிந்திட
அறிவான அடியாரை அணைத்த கரமே

குஷ்டம் தீர்ந்திட கோவில் கொண்டவரே

அஷ்ட திக்குக்கும் அருள்புரி ஆதிநாதரே

புல்லைத் தின்றிடும் பொலிவான கல்மாடே

கல்லாய் நின்றிடும் கருமை லிங்கமே

நீள்நெறி நாதராகி நெடுமுடி சடையோனே

நீல்கழுத்து சிவனாகி நிலத்தைக் காப்பவரே

http://temple.dinamalar.com/New.php?id=333

# 172. கொழுந்தீஸ்வரர் -கோட்டூர்

கோவிலில் அமைந்த கொழுந்தீஸ்வர நாதரே
ஆவியினைக் காத்திடும் ஆண்டவ நாதரே

இந்திரலோக ரம்பை இங்கே தவமிருக்க
மந்திரசிவனாகி மக்களை மனமாரக்  காப்பவரே

ஒற்றைக் காலிலே ஒய்யார தவமிருக்க
மற்றவை வணங்கிட மகேசன் அருளினாரே

இந்திரன் வணங்க இத்தலம் வந்திட
தந்திர ஆயுதங்கள் தவமுனிவர் முதுகிலே

பலங்கள் அதிகமாய் பாயுமொளி வஜ்ராயுதம்
குலங்கள் காக்க கொன்றிடும் அசுரனை

கோடு கிழித்து கோவிலில் ஐராவதமே
கேடுகள் நீக்கிடும் கொழுந்தீஸ்வர நாதரே

http://temple.dinamalar.com/New.php?id=311

# 173. வண்டுறைநாதர் - திருவண்டுதுறை (திருவாரூர்)

திருமாலும் வணங்க திருவண்டு துறையாக
உருவான அதிசயமே உல்லாச திருவாரூரே

நங்கையின் கண்ணுக்கு நிலமெல்லாம் சிவனாக
மங்கையின் கால்படாத மண்ணெல்லாம் லிங்கமே

சிவனையே எண்ணி சிந்தையில் கொண்டு
அவனியில் வாழ்ந்தது அழகான வண்டு

எக்கணமும் சிவனே என்தெய்வம் என்று
முக்காலமும் தொழுது முன்நின்றது வண்டு

சக்தியான உதிரமும் சதையும் அன்று
பக்தியில் மூழ்கவே பழகியது வண்டு

முனிவரை சோதிக்க மூர்த்தியுடன் இணைய
இனியவடிவை துளைத்ததே இத்தல வண்டு

துளைத்து சிவனைத் தொழுத வண்டு
உளையும் மனதில் உணரும் வண்டு

வண்டுக்கு விமோசனம் வகையாய் தந்து
அண்டம் காத்திடும் அதிசயம் உண்டு

http://temple.dinamalar.com/New.php?id=337

# 174. வில்வநாதர் - திருக்கொள்ளம்பதூர்

வெள்ளம் புரண்டோடும் வேகமான ஆற்றிலே
உள்ளத்தைக் கவரும் உத்தம ஓடையே

கொள்ளை அழகுடன் கோவிலில் அமைந்த
கொள்ளம் பதூரின் குறையில்லா ஓடையே

பதிகம் பாடிடும் பாவலர் தரிசிக்க
அதிகநீரில் ஓடிடும் அதிசய ஓடையே

கரையினைக் கண்ணுக்கு காட்டிய ஓடையே
நிறைவாய் நெஞ்சினை நிரப்பும் ஓடையே

சம்சாரக் கடலை சாகசமாய் கடந்திட
இம்மைக்கும் மறுமைக்கும் இதமான ஓடையே

நம்பியோரக் கைவிடாத நமச்சிவாய ஓடையே
அம்பலத்தில் ஆடிவரும் அழகான ஓடையே

http://temple.dinamalar.com/New.php?id=344

# 175. ஜகதீஸ்வரர்- ஓகைப் பேரையூர்

ஜகத்தைக் காத்திடும் ஜகதீஸ்வரரே
அகத்தை காத்திடும் அர்த்தநாரீஸ்வரரே
சுகத்தை அளித்திடும் சுந்தரேஸ்வரரே
மகத்தான வாழ்வளிக்கும் மகேஸ்வரரே

ஓகைப் பேரையூர் உமாபதீஸ்வரரே
வாகை சூடிடும் வில்வநாதேஸ்வரரே
கயிலை மயிலை கபாலீஸ்வரரே
உயிரை காக்கும் உத்தமேஸ்வரரே

சோழனைக் காத்த சோமேஸ்வரரே
ஆழமான உண்மை அண்ணாமலேஸ்வரரே
சேரனைக் காத்த செங்கமலேஸ்வரரே
வீரத்தை அளிக்கும் விஜயேஸ்வரரே

பாண்டியனுக் கருளிய பரமேஸ்வரரே
ஆண்டியாய் அரசாளும் அகிலாண்டேஸ்வரரே
வேண்டுதலை அளிக்கும் வீரமகேஸ்வரரே
தாண்டவ கோலத்து தயாநிதீஸ்வரரே

http://temple.dinamalar.com/New.php?id=328

# 176. அக்னீஸ்வரர்- திருக்கொள்ளிக்காடு

அஞ்சாது வாழ்ந்திட அஞ்சலென வந்தவரே
பஞ்சென துன்பங்கள் பறக்க செய்பவரே
நெஞ்சத்தில் குடிகொண்ட நிறைமதி சடையோனே
தஞ்சமென வந்தாரை தாங்கிக் காப்பவரே

கொள்ளிக் காட்டிலே கோவில் கொண்டவரே
வெள்ளி சனியும் வீற்றதோ பவடிவமே
அள்ளிய அழகிலே அக்னீஸ்வர தலத்திலே
உள்ளிருக்கும் உன்னதம் உயிரினைக் காக்குமே

அக்னிக்கு சாபம் அன்றே விலகிடுமே
பக்கத்தில் அமர்ந்த பாங்கான நவக்கிரகமே
எக்காலமும் காத்திடும் எழிலான சனிபகவானே
முக்காலும் உணர்ந்த முழுமுதற் சிவனே

நல்லதை செய்வோருக்கு நல்லதை தருபவரே
அல்லது செய்பவரை அழித்து நிற்பவரே
சொல்லும் பொருளும் செயலும் ஆனவரே
அல்லும் பகலும் அயராது காப்பவரே

http://temple.dinamalar.com/New.php?id=336

# 177. வெள்ளி மலை நாதர் -திருத்தங்கூர்

அழியும் உலகில் அழியாத வில்வவனமே
பொழியும் கருணையில் பூத்திடும் புதுஉலகமே

நாராயணன் அருளில்  நாபிக்கமல பிரம்மனே
மாறாது பிறந்த மண்டல உலகமே

ஞாலத்தை வலம் வரும் ஞாயிறு காப்பவரே
ஜாலங்கள் பலசெய்து ஜலப்பிரளயம் காத்தவரே

திகழும் சடைமுடியில்  திங்களை அணிந்தவரே
புகழும் பொலிவும் புவனத்தில் தருபவரே

செவ்வாய் பாடிட செவ்வாய்கிரகம் காப்பவரே
இவ்வுலகில் காத்திட இத்தலம் வந்தவரே

நடுநிலை புதனாகி நாட்டினைக் காப்பவரே
விடுவேல் வடிவோனின் வீரதந்தை ஆனவரே

வியாதிகள் நீங்கிடவே வியாழனை காப்பவரே
தயாள மூர்த்தியான தட்க்ஷிணா மூர்த்தியே

வெள்ளி மலைதனில் வீற்ற வெள்ளியே
அள்ளிடும் அழகான அற்புத சுயம்புவே

சங்கடம் தவிர்த்திட சனியைக்  காப்பவரே
அங்கமாய் நவக்கிரஹங்கள் அனுதினம் காப்பவரே

இருவராய் வந்திடும் இராகுகேது காப்பவரே
இருமருங்கிலும் அணையாகி இன்னலை நீக்குபவரே

http://temple.dinamalar.com/New.php?id=403

# 178. நெல்லிவன நாதர் - திருநெல்லிக்கா

காட்டு விலங்குகள் கூடிவாழ்ந்திடும் அதிசயமே
நாட்டு  மன்னர் நலமாய்கண்ட அதிசயமே

நெல்லிவன நாதராய் அமர்ந்த அதிசயமே
செல்வமாய் மங்களநாயகி சேர்ந்த அதிசயமே

மன்னரின் மகளாய் மடியில்தவழ்ந்த அதிசயமே
பெண்ணை மணக்க பேரிறைவன்வந்த அதிசயமே

திருநெல்லிக்கா வந்து திருமணம்செய்த அதிசயமே
உருவத்தில் சுயம்புவாய்  உருவான அதிசயமே

சந்தானம் கற்பகம்அரி சந்தனபாரிஜாத அதிசயமே
மந்தார மரங்கள் நெல்லியான  அதிசயமே

அள்ளிவிடும் அழகில் ஆமலகேசன் அதிசயமே
உள்ளத்தில் தங்கிவிடும் உன்மத்தமான அதிசயமே

http://temple.dinamalar.com/New.php?id=404

# 179. இரத்தினபுரீஸ்வர்- திருநாட்டியத்தான் குடி

எத்தனை உருவமய்யா உமக்கு எத்தனை உருவமய்யா
பித்தனாய் மாற்றி எம்மை பேதலிக்க வைக்க
எத்தனை உருவமய்யா உமக்கு எத்தனை உருவமய்யா

இரத்தின வியாபாரியாய் இராஜ்யம் பிரித்ததென்ன
இரத்னேந்திர சோழனுக்கு இரத்தின மதிப்பு செய்ததென்ன

கோட்புலி நாயனார் கோபமாய் மாறியதென்ன
ஆட்கொண்ட கோபத்தில் அழியும் பகைமையென்ன

நெல்மூட்டை சேர்த்து நிறைவாய் செய்த சேவையென்ன
இல்லாதபோதும் தொடாமல் இருக்க சொன்னதென்ன

பஞ்சம் வந்ததில் பசியாய் பாரினில் வந்ததென்ன
அஞ்சாது உணவை அனைவரும்  உண்ணச் செய்ததென்ன

போர்முடிந்து நாயனார் ஊர்திரும்பி வந்ததென்ன
யார்செய்த காரியம் இக்தென்று திகைத்ததென்ன

உற்றார் உறவினரை உடன்பிறந்தாரை கொன்றதென்ன
மற்றது யாவையும்கூட மழலையும்  அழித்ததென்ன

முக்தியை அளித்த முதன்மை அவர் நாயனாரென்ன
பக்தியை மெச்சி முக்தியை அவருக்கு அளித்ததென்ன

நாட்டுநடவு செய்ய நாட்டில் விவசாயியாய் ஆனதென்ன
பாட்டில் பவனிவந்து பாவையின் வாயில் தினம் குடிகொண்டதென்ன

எத்தனை உருவமய்யா உமக்கு எத்தனை உருவமய்யா
பித்தனாய் மாற்றி எம்மை பேதலிக்க வைக்க
எத்தனை உருவமய்யா உமக்கு எத்தனை உருவமய்யா

# 180. கண்ணாயிரநாதர் - திருக்காரவாசல்

கண்ணாயிரம் வேண்டுமே
கண்ணாயிர நாதரை கண்டுவிட
கண்ணாயிரம் வேண்டுமே ....

கடுக்காயாய் மாறிய ஜாதிக்காய் கதைசொல்ல
அடுக்கும் பாடலில் அவன்புகழ் அலுக்காது சொல்ல

பண்ணிலே பாடிவிட பறையடித்து ஓதிவிட
மண்ணிலே புகழ்ந்துவிட மகேசனை வணங்கிட

சிற்றுளி இல்லாத சுயம்பு நாதரை
மற்றவை யாவும் மண்ணிலே சேவித்திட

விடங்க லிங்கத்தை விடாத பிடித்திட
இடர்கள் நீங்கிட இந்திரன் நினைத்திட

செங்கழுநீர் பூவின் செங்கமல வாசத்தில்
மங்காத லிங்கத்தை மனமார வேண்டிட

வீதிவிடங்கர் சுந்தரவிடங்கர் வேதாரண்ய விடங்கரே
ஆதிவிடங்கர் நகரவிடங்கர் அவனி விடங்கரே

http://temple.dinamalar.com/New.php?id=343

# 181. நடுதறி நாதர் - திருகன்றாய்பூர்

நடுதறி நாதர்தமிழ்  நாடுதந்த நாதரே
இடும்பன் வணங்கிய இத்தல நாதரே
கயிலை மலையில் கன்னியவள் நடிக்க
மயிலை உமையும் மண்ணிலே சபிக்க

சுதாவல்லி கலங்கி சுதாரித்து நிற்க
சதாசர்வ காலம் சிவனையே  துதிக்க
மாடம் மருங்கமைத்து மங்கை துதிசெய்ய
ஊடல் கொண்டுகணவன் உதறித் தள்ளிட

கல்லும் இறையாக கட்டுத்தறியும் லிங்கமாகும்
அல்லும்  பகலும் அவள்நினைவும் சிவமாகும்
சினத்தில் கோடரி சீறித்தாக்க உதிரம்
கணத்தில் கொட்டி கண்முன் லிங்கமாகும்

கன்றின் தறியால் கன்றாப்பூர் உருவாக
அன்றே நடுதறிநாதர் அங்கே வந்தாரே
நிலமெல்லாம் கோவிலுக்கே நேர்த்தியாய் சேர்ந்திட
உலகத்தில் உள்ளபட்டா  உனக்கே சொந்தமாகும்

எல்லாமாய்  ஆகி எங்கும்நிறை பரம்பொருளே
இல்லாத பொருளாகி ஈசனான எம்பிரானே
கேள்வியே நீயாகி கேள்விக்கு பதிலுமாகி
கீழ்மேல் வானமாகி கிடக்கும் பரம்பொருளே

http://temple.dinamalar.com/New.php?id=965

# 182. மனத்துணை நாதர் - வலிவலம்

வலிவலம் தனிலுறை வலம்புரி விநாயகன் மனமே
வலிமை தரவே வழித்துணை வருவார் மனமே

மனத்துணை நாதரை மறைக்காது நினை மனமே
இனங்களைக் காப்பவரை இன்றே நினை மனமே

கரிக்குருவியாய் பிறந்து காயமடைந்த மனமே
அரிதான உபதேசம்கேட்டு அறிவான மனமே

மதுரை பெருமையை மாறாதுரைத்த மனமே
அதுவே வேண்டுமென அத்திசைபறந்த மனமே

பொற்றாமரை குளம்மூழ்கி பொலிவான மனமே
கற்றஅறிவு யாவும் கல்வியான மனமே

மகேசன் வாயினால் மந்திரம்பெற்ற மனமே
சபேசன் அவனே சாந்தமடை மனமே

வலிமை பெற்று வலிவலம் வந்த மனமே
கலியிலே எமக்கு கயிலையே துணை மனமே

http://temple.dinamalar.com/New.php?id=236

# 183. கைச்சினேஸ்வரர்- கச்சனம்

ஆசைகொண்ட இந்திரன் அகலிகை அடைய
ஓசைஎழுப்பி சேவலாய் ஒயிலாய்  வந்தான்

விடியாத பொழுதை விடிந்ததென்று நினைத்து
குடியினைவிட்டு கவுதமர் குளிக்கச்  சென்றார்

இந்திரன் உருமாறி இல்லம் வந்து
தந்திரம் புத்தியுடன்  தகாது செய்தான்

முனிவர் வீடுதிரும்ப முறைகேடு உணர்ந்தார்
இனிவரும் காலத்தில் இந்திரனை சபித்தார்

வில்லேந்திய இராமன் விதியை மாற்றிட
கல்லாய் மாறியஅகலிகை  கால்பட எழுந்தாள்

தண்டனை பெற்று தடுமாறி இந்திரன்

மண்ணிலே புலம்பி மன்றாடி நின்றான்

மன்னிக்க கதறி மண்டியிட்டு அழுதான்
மண்ணில் லிங்கம் மனமார செய்தான்

கருத்திலே உருகி கைச்சின்னம் செய்தான்
திருந்தி விமோசனம் தேவேந்திரன் பெற்றான்

கரங்கள் அழுந்த கைச்சின்னம் ஏற்றவர்
உரமாய் நம்மை உருகியே காப்பார்

http://temple.dinamalar.com/New.php?id=295

# 184. பிரம்மபுரீஸ்வரர்- திருக்குவளை

வண்டு நடனம் வந்து ஆடிய விடங்கரே
கண்டு களிக்க கார வாசல் ஆதி விடங்கரே

சப்த விடங்கராய் சந்ததி காக்கும் விடங்கரே
அப்போதும் இப்போதும் அருளிடும் விடங்கரே

கல்லிலே தெரியும் கற்பக விடங்கரே
கல்லின்றி சுயம்புவாய் காட்சியான விடங்கரே

திருக்குவளை சாற்ற திருக்குவளை விடங்கரே
கருத்தினைக் காக்கும் கண்மலர் விடங்கரே

பிரம்மனின் தோஷம் போக்கிய விடங்கரே
அறங்களைக் காக்கும் அழகான விடங்கரே

நேர்கோட்டில் அமைந்த நவக்கிரக விடங்கரே
நேர்கோட்டில் செலுத்தும் நேர்த்தியான விடங்கரே

சேவைகள் எம்மை செய்யவைக்கும் விடங்கரே
தேவைகள் யாவையும் தெளிவாக்கும் விடங்கரே

போற்றுவார் போற்றலில் பொலிவாகும் விடங்கரே
தூற்றுவார் தூற்றலில் தோயவில்லா விடங்கரே

சிந்தையாகி செயலாகி சேவையாகும் விடங்கரே
விந்தையாய் எம்முடன் விளையாடும் விடங்கரே

நினைவாகி மறதியாகி நிஜமாகும் விடங்கரே
அனைத்தாகி அண்டமாகி அருளும் விடங்கரே

http://temple.dinamalar.com/New.php?id=224

# 185. வாய்மூர் நாதர் -திருவாய்மூர் நாதர்

வாய்மை பொருந்திய வாய்மூர் நாதரே
ஓய்வின்றி எங்களை ஒயிலாய் காப்பவரே

வேட்டையாடும் முசுகுந்தன் வேண்டிய நாதரே
காட்டிலே அடியாரைக் காணவந்த நாதரே

சிவராத்திரி தினத்தில் சிந்தைகாக்கும் நாதரே
அவனியை காக்க அருளும் நாதரே

விடங்க லிங்கமாய் வீற்ற நாதரே
இடர்கள் யாவும் இல்லாதுசெய்யும் நாதரே

இந்திர லோகத்து எழில்வடிவ நாதரே
மந்திரத்தில்  பக்தனுக்கு மண்ணில்வந்த நாதரே

ஒளிவெள்ளம் திரள ஒய்யார நாதரே
அளிக்கும் அருளான ஆரண்ய நாதரே

http://temple.dinamalar.com/New.php?id=925

# 186. திருமறைக்காடர் -வேதாரண்யம்

திருமுறைகள் வணங்கிய திருத்தல இறையே
திருமுறைகள் ஓதிய திருத்தல இறையே

வேதங்கள் ஆரண்யத்தில் வீற்ற இறையே
பாதங்கள் பணிவோம் பாரினில் இறையே

பூட்டிய கதவுகளின் பின்னால் இறையே
காட்டிய வழியினில் காருண்யம் இறையே

அப்பர் பாடிட அருளித்திறந்த இறையே
தப்பாது சம்பந்தர்பாட தானாகமூடிய இறையே

யாழினும் இனிய மொழியாள் இறையே
வாழிய செந்தமிழ் வாழ்த்தும் இறையே

தாழ்திறந்த பதிகத்தின் தமிழ் இறையே
ஆழ்மனக் கதவை அசைக்கும் இறையே

பிறப்பையும் இறப்பையும் பேணிடும் இறையே
உறவையும் உணர்வையும் உணர்த்தும் இறையே

உண்மை எதுவென்று உரைக்கும் இறையே
மண்ணிலே மாறாத மகத்துவ இறையே

பக்தியில் பாடினேன் பரமசிவ இறையே
சக்தியை தந்திடு சிவனான இறையே

http://temple.dinamalar.com/New.php?id=515

# 187. அகத்தீஸ்வரர்- அகஸ்தியன் பள்ளி

அகத்திலே குடிகொண்ட அகத்தீஸ்வர நாதரே
அகத்தியர் வணங்கிய அகத்தீஸ்வர நாதரே

முகத்தினை காணவே முன்வந்த தேவரே
சுகத்தினை அளிக்கும் சுந்தரேஸ்வர நாதரே

வருகை தந்ததால் வடதிசை உயர்ந்ததே
திருமணம் காணவே தென்திசை தாழ்ந்ததே

அகத்தியரை தெற்கிலே அனுப்பிய தேவரே
அகத்தினை உயர்த்த அமர்ந்த தேவரே

ஓதிய மறைகளில் ஒய்யார நாதரே
சோதியாய் அமர்ந்து ஜொலிக்கும் நாதரே

வினைகள் அகற்றிட வெற்றியை தருபவரே
சுனைபோல் கருணை சுகமாய் பொழிபவரே

அம்மை அப்பராய் அனுதினம் காப்பவரே
இம்மைக்கும் மறுமைக்கும் இதமாய் அருள்பவரே

http://temple.dinamalar.com/New.php?id=1041

# 188. அமுதகடேஸ்வரர்- கோடியக்காடு

அமுதத்தைப் பொழியும் அமுதக் கடலே
அமுதமாய் அருளும் அமுதக் கடலே

இமயத்து தெய்வமாய் இங்கிருக்கும் கடலே
சமயத்தில் காக்கும் சைவத்தின் கடலே

இலங்கைக்குப் பின்னால் இருக்கும் கடலே
உலகினைக் காக்கும் உன்னதக் கடலே

சுப்ரமண்ய சுவாமிக்கு செவிசாய்த்த கடலே
இப்பிறவியை கடக்கவைக்கும் ஈசனான கடலே

அஞ்சனம் பூசிய கண்ணியின் கடலே
தஞ்சம் அடைந்தோரை தடவிடும் கடலே

இராமனுக்கு கருளிய ராமேஸ்வர கடலே
இராமனின் பாதம் இருக்கும் கடலே

கோடியக் காட்டில் கோவில்கொண்ட கடலே
கோடியை காட்டிடும் கோலமான கடலே

http://temple.dinamalar.com/New.php?id=583

# 189. தூவாய் நாதர் -திருவாரூர்

கண்ணை கொடுத்த காருண்ய சிவனே
மண்ணில் அமைந்த மகிமை சிவனே

தூவிய மலரில் தூவாய்நாத சிவனே ரே
கோவிலில் அமைந்த காவியநாத சிவனே

சுந்தரர் கண்ணை சொந்தமாக்கிய சிவனே
மந்திர ஒலியில் மகிமைதரும் சிவனே

பஞ்சின் மென்னடியாய் பார்வதியின் சிவனே
அஞ்சாது காத்திடும் அழகான சிவனே

அலையும் கடலை அடக்கும் சிவனே
சிலையாய் நிற்கும் சுயம்பு சிவனே

துர்வாசர் பூஜித்த தூயதொரு சிவனே
அர்த்தங்கள் புரியும் அர்த்தநாரி சிவனே

கடலும் அமைதியாக காத்த சிவனே
தடங்கல் நீக்கிடும் தயாள சிவனே

என்னுள் நிறைந்த எழிலான சிவனே
கண்தடம் கொண்டு காட்சியான சிவனே

http://temple.dinamalar.com/New.php?id=298

# 190. மீனாட்சி சுந்தரேஸ்வரர் - மதுரை

மீன்விழி மங்கை மேல்மதுரை ஈசனே

தேன் மொழி தமிழின் தேவார ஈசனே

கால்தூக்கி ஆடும் காலபைரவ ஈசனே

மேல்வைத்த கால் மாற்றியாடும் ஈசனே

பொன்னம்பல அரங்கத்து பொலிவான ஈசனே

அன்னையுடன் காத்து அருளும் ஈசனே

சங்கத்தமிழ் வளர்த்த சரித்திர ஈசனே

பொங்கும் அழகில் புலரும் ஈசனே

பொற்றாமரை குளத்து பொன்னார்மேனி ஈசனே

மற்றவை மறந்திட மதியாளும் ஈசனே

சித்தராய் அருளி சித்தம்காக்கும் ஈசனே

பக்தரைக் காக்க பறந்துவரும் ஈசனே

திருமணக் கோலம் திருவருள் ஈசனே

கருத்தினில் காட்சியாய் காண்போம் ஈசனே

http://temple.dinamalar.com/New.php?id=21

# 191. திருவாப்புடையார்- மதுரை

மலைகளில் மேருவே பசுக்களில் காமதேனுவே
சிலைகளில் சுயம்புவே சிங்காரத்தின் சின்னமே

விண்மீன்களில் சந்திரனே வீசும்ஒளியில் சூரியனே
ஆண்களில் விஷ்ணுவே கொடைகளில் மேகமே

சிறிய மூர்த்தியே சீறிடும் கீர்த்தியே
அரிய லிங்கமே அருளும் ஆப்பனூர்நாதரே

பக்தன் வேண்டிட பக்கத்தில் வந்தவரே
பக்தியை மெச்சியே பசியாற்றி சென்றவரே

இடபத்துடன் இடம்மாறியவரே இடபாகம் சுமந்தவரே
வடதிசை காத்திட வளங்கள் தந்தவரே

செல்வத்தில் குபேரனே சிந்தையில் சைவமே
அல்லது போக்கிடவே அன்புடன் அருள்பவரே

பஞ்சத்தை போக்குபவரே பசிப்பிணி நீக்குபவரே
அஞ்செழுத்து நாயகரே ஆற்றுமணல் அன்னவிநோதரே

http://temple.dinamalar.com/New.php?id=483

# 192. சத்தியகிரீஸ்வரர்- திருப்பரங்குன்றம்

பரம்பொருளே குன்றாகி பக்கத்தில் வந்தவரே
அறம்காக்க வந்திங்கு அருளி நிற்பவரே

நவராத்திரி முடிந்து நவதுர்கை வடிவிலே
சிவனாகி நின்றமலை சித்தத்தில் தெரிபவரே

மகிஷவதம் செய்தசக்தி மனமார வணங்கவே
அகிலத்தை காக்கசெய்த அழகான லிங்கமே

அன்னையாய் தந்தையாய் அன்போடு காப்பவரே
இன்னல்கள் போக்கவே இவ்வுலகில் வருபவரே

கற்பக விநாயகருடன் கருத்தினில் நிற்பவரே
நிற்கும் முருகனுடன் நிலத்தினைக் காப்பவரே

திருப்பிய பரங்குன்ற திருநாத குன்றமே
மருவிய பெயர்கொண்ட மகேச தலமே

http://temple.dinamalar.com/New.php?id=504

# 193. ஏடகநாதர் -திருவேடகம்

சம்பந்தர் மடத்திற்கு சரசரவென தீப்பிடிக்க
சம்பந்தர் தீயினை மன்னருக்கு ஏவினாரே

முதுகிலே பிடித்த முறையில்லா தீயினை
விடுவிக்க முடியாது சமணரும் தவித்தனரே

சம்பந்தர் மனமிரங்கி சௌக்கியம் ஆக்கிட
அம்பல வாணரை அரசரும் நம்பினாரே

போட்டிக்கு அழைத்து பேரவை முன்னர்
ஆட்டி வைத்தனரே  அரண்மனை சமணரே

ஏட்டிக்குப் போட்டியாய் எழுந்த சமணரே
காட்டிய வழியிலே கரைவந்த ஏடே

திருமணம் கைகூட திருவருள் செய்வாரே
கருத்தினில் நினைக்க கருணையும் பொழிவாரே

மனமார வணங்க மகேசன் அருள்புரிவாரே
இனங்கள் வளர இனிமையும் தருவாரே

http://temple.dinamalar.com/New.php?id=484

# 194. கொடுங்குன்றநாதர் - பிரான்மலை

மூன்று அடுக்கு முதன்மை சிவனே
சான்றாய் வேதங்களின் சாகச சிவனே

மேரு மலையில் மேவிய சிவனே
ஏறு மயிலோனின் எழில்தந்தை சிவனே

மங்கை பாகர் மூலிகை சிவனே
பொங்கும் அழகில் பொன்னடி சிவனே

தினம் புத்தாடையில்  திகழும் சிவனே
மனம் கவர்ந்திடும் மங்கள சிவனே

எழில்மலை வடிவான எம்பிரான் சிவனே
அழியா மூர்த்தி அகத்திய சிவனே

முல்லைக்கு தேரளித்த பாரியின் சிவனே
வில்லாளி இராமனும் வேண்டிய சிவனே

அன்பரைக் காத்திடும் அண்ணாமலை சிவனே
இன்பத்தை அளிக்கும் இத்தல சிவனே

http://temple.dinamalar.com/New.php?id=392

# 195. திருத்தளிநாதர்- திருப்புத்தூர்

திரும்பதிரும்ப பாடவைக்கும் திருப்புத்தூர் நாதரே
திருந்த வைக்கும் திருப்பூற்றீஸ்வர நாதரே

கருத்தைக் கவர்ந்து கண்கள் மயக்கும் நாதரே
அருமருந்தாய் மாறும் ஐந்தெழுத்து நாதரே

வால்மீகி முனிவரை வாழ்த்த வந்த நாதரே
கால்கடுக்க தவமிருக்க காக்கவந்த நாதரே

அசுரர்கள் இருவரை அழிக்கவந்த நாதரே
விசுவாசம் காக்கும் விசுவரூப நாதரே

காலத்தை வெல்லும் காலபைரவ நாதரே
ஞாலத்தைப் பேணும் ஞானக்கடல் நாதரே

சூரபத்மனை வதம்செய்த சுந்தரகுமார நாதரே
வீரத்திலகமாய் வாகை வெற்றிசூடும் நாதரே

யோகநாராயணர் பணியும் யோகத்தின் நாதரே
யோகநிலையில் நிற்கும் யௌவன நாதரே

http://temple.dinamalar.com/New.php?id=326

# 196. விருத்தபுரீஸ்வரர் - புதுக்கோட்டை

மூன்று முழம் ஒரு சுற்று
முப்பது முழமும் ஒரு சுற்று
ஆறு முகம் வேலவன் மயில்  சுற்று
ஆனைமுக விநாயகன் அவன் சுற்று

விருத்தபுரி ஈஸ்வரர் அமைந்த சுற்று
கருத்தினைக் கவரும் கருலிங்க சுற்று
உருவத்தில் உயர்ந்து பருத்த சுற்று
மருவில்லா மேனியுடன் மகிழும் சுற்று

உக்கிர காளியாய் உத்தமி சுற்று
பக்கத்தில் புலியழித்த பார்வதி சுற்று
நந்தியாய் அமர்ந்த நடுக்க சுற்று
அந்தியில் அருளும் அம்மன் சுற்று

பழமை பொதிந்த பழம்பதிநாதர் சுற்று
அழகைச் சொரியும் அண்ணாமலை சுற்று
உலகை உள்சுமக்கும் உமையின் சுற்று
அளவில்லாது உயர்ந்த ஆதியோகி சுற்று

http://temple.dinamalar.com/New.php?id=254

# 197. இராமநாதர் - இராமேஸ்வரம்

மணலில் அமைந்த மகத்துவ  லிங்கமே
குணங்கள் பொதிந்த குறையில்லா லிங்கமே

உப்பில் அமைந்த ஒப்பில்லா லிங்கமே
அப்பரும் சுந்தரரும் அணைத்த லிங்கமே

பக்தன் கொணர்ந்த பவித்திர லிங்கமே
சக்தி வாய்ந்த சங்கர லிங்கமே

அக்னி பிரவேச ஆகாய லிங்கமே
சொக்கும் அழகில் சுவர்ண லிங்கமே

பித்ருக்கள் வந்தடையும் பிராண லிங்கமே
சத்திய வாக்கில் சந்திர லிங்கமே

சேதுமாதவ சங்கலி சேர்ந்த லிங்கமே
ஓதுவார் தேவாரத்தில்  ஓங்கிடும் லிங்கமே

சேது பீடத்தின் ஸ்படிக லிங்கமே
தீது நீக்கும் தீபஜோதி லிங்கமே

எட்டடி பாடலில் எட்டாத லிங்கமே
மட்டில்லா உயர்வுடைய மகேஸ்வர லிங்கமே

http://temple.dinamalar.com/New.php?id=906

# 198. ஆதிரத்தினேஸ்வரர் -திருவாடானை

ஆடும் ஆனையும் ஆடாது வணங்குமே
பாடும் பாட்டில் பரவசம் பொங்குமே

வாருணி செய்த வம்பின் பாவமே
ஊரும் உறவும் ஒன்றாய் சேருமே

தவறை போக்க தலமும் உதவுமே
அவனியைக் காக்க அருளும் சொரியுமே

கதிரவன் ஒளியும் கண்ணைப் பறிக்குமே
அதிரும் ஆணவம் அவனைத் தாக்குமே

சிரசின் நந்தி சிங்காரமாய் ஜொலிக்குமே
பிரகாசம் குன்றி பகலவன் சுருங்குமே

ஆணவம் அடங்க ஆடனைக்கு வந்திடுமே
காணக்கிடையாத காட்சியும் அளிக்குமே

திருஆடனை தலமும் திருவருள் புரியுமே
அருமருந்தாய் மந்திரம் ஆயுளைக் காக்குமே

http://temple.dinamalar.com/New.php?id=181

# 199. சொர்ணகாளீஸ்வரர் - காளையார் கோவில்

காளையை  அனுப்பிய காளீஸ்வர பகவானே
வேளையில் வழிகாட்டிய வேந்தனான பகவானே
கால்பதிக்க லிங்கமில்லாவழி காட்டிய பகவானே
மால்மருகன் தந்தையாய் மறைகாட்டும் பகவானே

மூன்று சிவன் மூன்றுகாளி பகவானே
தோன்றும் வடிவில் தொய்வில்லா பகவானே
செல்வங்கள் பலதரும் சிறப்பு பகவானே
இல்லாத பொருளே இல்லாத பகவானே

சோமேசர் சவுந்தரநாயகி சுந்தரேஸ்வர பகவானே
காமேஸ்வர சொர்ணவல்லி காளீஸ்வர பகவானே
மீனாட்சி அம்மனுடன் மீட்டிடும் பகவானே
தானாக துயரங்கள் தகர்த்திடும் பகவானே

ஒளியாய் ஒலியாய் ஓங்கார பகவானே

வெளியாய் உள்ளாய் வீற்ற பகவானே

நிலமாய் நெருப்பாய் நீராய்ஆன பகவானே

உலகத்துப் பெருவெளியாய் உள்ளமர்ந்த பகவானே

http://temple.dinamalar.com/New.php?id=588

# 200. புஷ்பவனேஸ்வரர் -திருப்புவனம்

அஸ்தியும் புஷ்பமாகும் அதிசய புஷ்பமே
அஸ்தியை கரைக்கும்  ஆனந்த புஷ்பமே

காசிக்கும் வீசம் அதிகமாகும் புஷ்பமே
மாசில்லா மாணிக்க வாசக புஷ்பமே

மணலும் லிங்கமாகும் மகத்தான புஷ்பமே
உணவாய் மாறிடும் உன்னத புஷ்பமே

உயிரின் மூச்சாய் உருவாகும்  புஷ்பமே
கயிறாய் கரையேற்றும் கானக புஷ்பமே

செம்பையும் தங்கமாய் செதுக்கும் புஷ்பமே
அம்பல வாணராய்  அழகான புஷ்பமே

பொன்னையாள் மனம் கவர்ந்த பொன்மேனி புஷ்பமே
தன்னிகரில்லா தளிர்மேனி தங்க புஷ்பமே

சொக்க தங்கத்தில் சொக்கிடும் புஷ்பமே
சொக்கநாத வடிவில் சுந்தர புஷ்பமே

http://temple.dinamalar.com/New.php?id=719

# 201. சங்காரண்யேஸ்வரர் - தலைச்சங்காடு

மூன்று மூர்த்திகள் முன்னிற்கும் சங்கே
மூன்றடி சுயம்புவாய் மூர்த்தியான சங்கே

சங்கு புஷ்பங்கள் சாத்திய  சங்கே
சங்கினை அளித்த சங்கர சங்கே

சங்கு வடிவ சங்கம சங்கே
இங்க மர்ந்த எழிலான சங்கே

தலை சங்கு காடான சங்கே
அலை பேசும் அழகான சங்கே

ஐந்து விதமான ஆரண்ய சங்கே
ஐந்து பூதங்களில் ஆச்சரிய சங்கே

உயிர்களைக் காக்கும் ஒய்யார சங்கே
ஒயிலாய் ஒலிக்கும் ஓங்கார சங்கே

நல்லெண்ணெய் ஒளியில் நிலையான சங்கே
நல்லவர் எண்ணத்தில் நயமான சங்கே

அல்லதும் தீதும் அழிக்கும் சங்கே
கல்லிலும் முத்திலும் கடவுளான சங்கே

http://temple.dinamalar.com/New.php?id=221

# 202. திருச்சுழியல் - திருமேனி நாதர்

திருச்சுழியில் வீதியிலே திருமேனி நாதரே
கருத்தினைக் கவர்ந்திட கருமேனி நாதரே

சுந்தரர் கனவிலே சுந்தர காளையே
மந்திரச் சுழியிலே மனம்கவர் பூச்செண்டே

திருமணத் தடைநீக்க திருவருள் புரிபவரே
திருக்கயிலை மலைமீதே திருஉருவம் கொண்டவரே

அறிந்தோ அறியாமலோ அவரவர் பாவங்களே
மறந்தோ மறவாமலோ மறையும் தலமே

அம்மன் துணையிலே அருளும் பொழியுமே
இம்மைக்கும் மறுமைக்கும் இதங்கள் அருளுமே

பிரளய வெள்ளம் பெருக்கெடுக்க அடக்கவே
கரங்கள் சுழித்துக் காத்த தலமே

வில்வஇலை பூஜையில் வேண்டிய பலன்களே
இல்லையென்று சொல்லாது இத்தலம் அருளுமே

http://temple.dinamalar.com/New.php?id=606

# 203. குற்றால நாதர் - திரிகூடமலை

சுளையெலாம் லிங்கமாகி  சுகமாக கொஞ்சும்
 சுந்தரனின் திருமணமும் செவ்வனே  நடக்கும்
வளையோசை கேட்டபடி வாய்மொழியும் கொஞ்சும்
  வகையாக அம்பிகையின் வளங்களும் மிஞ்சும்
தென்திசையும் தாழ்ந்துவிட தேவர்களும் தவிப்பார்
  தெற்குநோக்கி அகத்தியரும்  தெளிவாக செல்வார்
மன்னவரின் மணக்கோலம் மகரிஷியும் காண
  மலைநாதர் மாறிடவே மனதார வேண்டுவார்

திருமாலின் கோவிலாம் திருத்தலம் அதுவே
 திகம்பர சைவரை தீண்டவும் மறுப்பார்
உருவத்தை மாற்றிட உத்தரவு பெற்றே
 உளமார வைணவனாய் உருகொண்டு செல்வார்
அகத்தியரும் பூஜிக்க அதிசயமும் நிகழுமே
  அணிசங்கு மானாக அத்துளசி நிலவே
சுகமான பொட்டும்  சுட்டெரி கண்ணே
  சுத்தமான ரத்தினமும் சுற்றிடும் பாம்பே

திருமாலும் சிவனாக திருவருள்  புரிந்திட
 திருமணக் கோலமும் தெரிந்திடும் அங்கே
உருவத்தில் ஒன்றான உன்னத ஈசனே
 உணர்விலே ஒன்றான உண்மை ஈசனே
உயரத்தை குறுக்கி ஒயிலான  லிங்கமே
 ஒருகை பட்டுவிட ஒடுங்கிய லிங்கமே
துயரத்தை போக்கிவிடும் தூயமான லிங்கமே
 தொலைவிலே இருந்தாலும் தொட்டுவிடும் லிங்கமே

காணவே காட்சிகள் கண்ணுக்குள் தெரியவே
 கண்கொண்ட மாட்சியாய் கண்டுவிடும் தினமே
ஆணவத்தை ஒடுக்கியே ஆண்டுவிடும் குணமே
  ஆசைகளை ஒதுக்கியே ஆசிதரும் நலமே
உற்றவரும் உறவினரும் ஒன்றான உருவே
  உணர்விலே உருகிவிடும் உண்மையான கருவே
குற்றங்கள் இல்லாத கோவிலாம்  மலையே
குற்றால திரிகூட மலையெங்கள் மலையே

http://temple.dinamalar.com/New.php?id=601

# 204. நெல்லையப்பர்- திருநெல்வேலி

நெல்லினைக் காக்க நேரத்தில்வந்த சக்தியே
அல்லதை அழிக்கும் ஆக்க சக்தியே
புல்லிலும் புதரிலும்  புதைந்த சக்தியே
துல்லியமான பொருளின் தூயதொரு சக்தியே

சக்தியை லிங்கத்துள் சங்கமித்த சக்தியே
பக்தியில் பக்தனின் பக்கம்வரும் சக்தியே
முக்தியை அளிக்க முன்வரும் சக்தியே
முக்காலமும் உணர்ந்த முக்கிய சக்தியே

பால்கொட்ட பாறையில் பதிந்த சக்தியே
கால்வைத்து வெட்ட காட்சியான சக்தியே
வேல்கொண்ட குமரனை வளர்த்த சக்தியே
மால்தங்கை மணந்து மகிழ்ந்த சக்தியே

திருமால் மார்பில் திகழும் சக்தியே
உருவத்து லிங்கதத்துள் ஒளிரும் சக்தியே
சிவனாகி சக்தியாகும்  சிங்கார சக்தியே
அவனியை காத்திடும் அழகான சக்தியே

http://temple.dinamalar.com/New.php?id=909

# 205. அவிநாசிநாதர் -அவிநாசி (திருப்பூர் )

அழிக்க முடியாத அழியாய் பொருளே
விழிக்கு அருளும் வித்தக பொருளே
வழித்துணையாய் இங்கு வந்தருளும் பொருளே
எழிலாய் எழுந்தருளும் ஏகாந்த பொருளே

காசியில் வசிக்கும் கைலாய பொருளே
மாசில்லா மாணிக்கமாய்  மனதமர்ந்த பொருளே
வீசிடும் தென்றலாய் வருடும் பொருளே
பேசிடும் பேச்சில் பிழையில்லா பொருளே

முதலைவாய் பிள்ளையை மீட்ட பொருளே
விதவித முறையில் வித்தைசெய்யும் பொருளே
முதலாய் அமைந்த முத்ததொரு பொருளே
இதமாய் அணைக்கும் இனிய பொருளே

குருவின் குருவாய் குலம்காக்கும் பொருளே
உருவாய் அருவாய் உறையும் பொருளே
விருச்சிகர் வேதனை அகற்றும் பொருளே
எருவாய் உரமூட்டும் என்னருமை பொருளே

http://temple.dinamalar.com/New.php?id=491

# 206. திருமுருகநாதர்- திருமுருகபூண்டி

வேல் முருகன் வேண்டி நின்ற நாதரே
வேல் தாங்கி வேண்டி நின்ற நாதரே

செல்வங்களை வாங்கி வந்த சுந்தரரே
நில்லாமல் சென்று விட்ட சோகமே

காத்து நிற்க காவலுக்கு விநாயகரே
பார்த்து சொன்ன திசையிலே  லிங்கமே

உரிமை கொண்ட உத்தமர் பாடலே
அரிதான செல்வமும் அழகாய் கிட்டுமே

திட்டிய பாடலிலும் திகட்டாத பொருளே
மட்டில்லா பெருமை மகேசன் அருளே

கேட்பதை அளிக்கும் கீர்த்தி நாதரே
ஆட்கொண்டு எம்மை ஆளும் நாதரே
பொன்னும் பொருளும் பொற்குவியலும் ஆனவரே
எண்ணும் எழுத்தும் இனிதாய் ஆனவரே

திருமுருகன் வணங்கிட திருமுருக பூண்டியே
அருமருந்து நமச்சிவாய ஆறுமுக தந்தையே
http://temple.dinamalar.com/New.php?id=830

# 207. சங்கமேஸ்வரர்- பவானி

தென்னாட்டு நதிகளின்  திரிவேணி சங்கமேஸ்வரரே
எந்நாட்டுக்கும் இறையாய் எழுந்த ஈஸ்வரரே

வாயிலில்  பசுவுடன் வாகான  அளகேசனே
கோயிலில் தலையிரண்டு கொண்ட அதிசயமே

நோயும் நொடியும் நீக்கிடும் மருத்துவரே
சாயும் பொழுதில் சங்கமுக நாதேஸ்வரரே

தீங்குகள்  நீங்காத திருநண்ணா வுடையாரே
பாங்குடன் அம்பிகை பவானி நாதரே

தரிசித்த குபேரனை வாழ்த்திய நட்டாற்றீஸ்வரரே
வரிசையாய் பெயர்கள் வக்கனை வக்கிரேஸ்வரரே

வேதநாயகி காத்த வில்லியம் வணங்கியவரே
வேதங்கள் காத்த விவேக வானிலிங்கேஸ்வரரே

அன்னையாய் தந்தையாய் அரவணைக்கும் நாதரே
பொன்னார் மேனியுடன் பொலிவான கைலாயமே

http://temple.dinamalar.com/New.php?id=612

# 208. அர்த்தநாரீஸ்வரர் - திருச்செங்கோடு

ஆணாகி பெண்ணாகி அர்த்தநாரியாகி நிற்பவரே
தானாகி சுயம்புவாகி தாரணியைத் தாங்குபவரே

திருநங்கை முகமாகி திருக்கோவில் அலங்கரிப்பவரே
உருவத்தை வேறாக்கி உள்ளுக்குள் இருப்பவரே

பிருங்கி முனிவருக்கு பிரம்மத்தை உணர்த்தியவரே
கருவுக்குள் காத்துநிற்கும் கைலாய நாதரே

சக்தியுடன் சிவமும் சங்கமம் ஆனவரே
பக்தியில் ஜீவனுக்கு முக்தியை அளிப்பவரே

திருச்செங்கோடு தலத்தில் திவ்யமாய் அருளியவரே
திருமலையை செந்நிறமாய் திருவருள் செய்தவரே

வாயுவுக்கும் சேஷனுக்கும் வாக்குவாதம் நடத்தியவரே
ஆயுளை காத்த்துவிட ஆன்மாவாய் நிற்பவரே

நடந்தது நடப்பது நடக்கப்போவது அறிந்தவரே
நடப்பது பறப்பது நாடாது ஊர்வதை காப்பவரே

நினைப்பது மறப்பது நெஞ்சத்தில் செய்பவரே
அணையா விளக்காய் அண்ணாமலை தீபமானவரே

http://temple.dinamalar.com/New.php?id=531

# 209. கல்யாண விகீர்தீஸ்வரர் - வெஞ்சமாங்கூடலூர்

பொன்னைத் தா பொருளைத் தா
உன்னருமை புரிந்திட உலகுக்குத் தா
என்னை மறந்திட எண்ணம் தா
உன்னை துதிக்கவே உள்ளம் தா

சுந்தரர் கேட்டுவிட சொத்தை தா
மந்திர சொல்லால் மகத்துவம் தா
கந்தனும் கணேசனும் கடனாய் தா
விந்தைகள் புரிந்து விநயம் தா

இந்திரன் கண்ணுடம்பு காணாது தா
சந்திரன் சூடியே சொக்கியம் தா
நண்பனாய் வந்திங்கு நல்லது தா
அன்பே சிவமாகி அருளைத் தா

தந்துவிடும் செவ்வாயில் தயாளம் தா
தந்துவிடும் குணத்தை தாராளமாய் தா
நாள்தோறுமென் செவ்வாயில் நாமம் தா
தோள்கொடுக்கும் நண்பனாய் துணிவைத் தா

http://temple.dinamalar.com/New.php?id=88

# 210. மகுடேஸ்வரர் - திருப்பாண்டி கொடுமுடி

திருப்பாண்டி கொடுமுடி திருஅவதார இராஜனே
திருக்கோவில் தனிலமர்ந்த திருமகுடேஸ்வர இராஜனே

மேருவின் பகுதியாய் மேவிய இராஜனே
மாறும் உலகில் மாறாத இராஜனே

மூன்றுமுக பிரம்மனின் மூவேந்த இராஜனே
தோன்றிய அண்டத்தில் தொன்மைவாய்ந்த இராஜனே

வானளாவிய கயிலையில் வாகைசூடிய இராஜனே
மாணப் பெரிதான மகேஸ்வர இராஜனே

வயதறியாது வளர்ந்த வன்னிமர இராஜனே
புயலிலும் காக்கும் புண்ணிய இராஜனே

சுயம்புவாய் ஜொலிக்கும் சொகுசான இராஜனே
அயராது காக்கும் ஆண்டவ இராஜனே

http://temple.dinamalar.com/New.php?id=64

# 211. கல்யாண பசுபதீஸ்வரர் - கருவூர்

கருத்தினில் குடிகொண்ட கருலிங்க கருவே
கருமணல் வடிவிலே கரூரின் கருவே

கருவத்தை அடக்க கதியான கருவே
கருவுக்குள் அமைந்த கல்யாண கருவே

காமதேனு வணங்கிய காருண்ய கருவே
சோமநாத வடிவ ஜோதிர்லிங்க கருவே

பால்சுரந்து வணங்கிய பசுவின் கருவே
கால்பட்டு பதிந்த களங்கமில்லா கருவே

சித்தரின் சித்தத்தில் சிங்கார கருவே
உத்தம சீலனாய் உள்ளத்து கருவே

ஆனிலை அப்பராய் ஐக்கிய கருவே
மாநிலம் காக்கும் மங்கள கருவே

கருவினைக் காக்கும் கபாலி கருவே
கருத்தினில் தெரியும் கைலாய கருவே

திருவிசைப் பாவினில் திகழும் கருவே
திருவாய் அசைக்கும் திகம்பர கருவே

# 212. திருவட்டத்துறை- தீர்த்தபுரீஸ்வரர்

ஏழுதுறைகளுக்கும் வேந்தனே
ஏழுபிறவிக்கும் தலைவனே

எழுந்தருளும் மன்னனே
தொழுதவரைக் காப்பவனே

வெள்ளத்தை வடிப்பவனே
நல்லதை தருபவனே

நீ வா என்றவுடன் நேராக வந்தவனே
நீ வா வட வெள்ளாறு நதியானவனே

ஆவது அழிப்பது அரசாள்போனே
ஓயாது ஒழியாது காப்பவனே

திருவட்டத்துறை திகம்பரனே
திருவட்டமாய் திகழ்பவனே

தீர்த்தபுரியின் ஈஸ்வரனே
கீர்த்திபெற்ற பேரரசனே

கடந்து உள்ளிருப்பவனே
மடமை போக்குபவனே

ஆண்டு அடக்குபவனே

வேண்டுதலுக்கு இணங்குபவனே

தித்திக்கும் தமிழோனே

முத்தமிழ் மன்னவனே

http://temple.dinamalar.com/New.php?id=204

# 213. பிரளயகாலேஸ்வரர்-பெண்ணாடம்

வெள்ளத்தை தடுத்திட வேறுபுறம் திருப்பிட
கள்ளமில்லா நந்தி களிப்புடன் திரும்பியதே

பிரளயத்தில் காத்திட பேரின்பம் அளித்திட
பிரபஞ்சம் மலர்வைத்த பெரிய கடவுளே

அள்ளஅள்ள குறையாது ஆனந்த உணர்வை
தெள்ளத்தெளிவாய் தந்திடும் தேனமுதே இறையே

கன்னியர் பூஜிக்க காமதேனு பூஜிக்க
மண்ணிலே ஐராவதம் மண்டியிட்டு பூஜிக்க

இந்திரன் என்னவென்று இறங்கி வந்திட
மந்திரங்கள் சொல்லியே மகேசனை பூஜிக்க

பெண்ணாகடம் உருவாகி பேணிக் காத்திட
கண்ணால் காப்பவரே காருண்யம் அளிப்பவரே

அண்ணாமலை தீபமாகி அண்டம் காப்பவரே
எண்ணத்தை எழுத்தாக்கி என்னுள் வருபவரே

http://temple.dinamalar.com/New.php?id=150

# 214. நர்த்தன வல்லபேஸ்வரர் - திருக் கூடலையாற்றூர் - கடலூர்

ஆடிப்பாடும் ஆனந்த வல்லபேஸ்வரா போற்றி
கோடிநாமம் சொல்லி கும்பிடுவோம் போற்றி

படித்தது யாவும் மறக்காதிருக்க போற்றி
அடித்தள ஞானம் அருள்வாய் போற்றி

அகத்தியர் அகத்தினில் நிறைவாய் போற்றி
மகத்தான சக்தி அருள்வாய் போற்றி

கல்வியைத் தந்திடும் ஞானசக்தி போற்றி
செல்வங்கள் தந்திடும் பராசக்தி போற்றி

தினகரன் தோஷம் நீக்குவாய் போற்றி
தினகரன் துதிக்கும் திகம்பரா போற்றி

நோய்கள் தீர்க்கும் நீர்குளம் போற்றி
வாய்உரைக்கும் புகழ் வல்லபா போற்றி

ஆற்றில் மறைந்த அம்மனே போற்றி
போற்றி உன்தாளடி பணிவோம் போற்றி

http://temple.dinamalar.com/New.php?id=850

# 215. சுவேதாரண்யேஸ்வரர் - இராஜேந்திரப் பட்டினம்

வேதாகம உட்பொருள் உபதேசித்த சிவமே
காதால் கேளாததால் சபித்த சிவமே

பரதவர் குலத்தின் பார்வதியின் சிவமே
பரமனின் அருளாய் பரவிய சிவமே

முருகனின் கோபத்தை முறியடித்த சிவமே
உருவத்தில் ஊமையாக்கி உணர்த்திய சிவமே

கருவத்தை அடக்கிடும் கைவல்ய சிவமே
மருவில்லா மாணிக்க வாசக சிவமே

திறமையை வெளிப்படுத்த தீர்க்கமான சிவமே
அறத்தை வளர்க்கும் அற்புத சிவமே

சோழனின் சந்ததியை சோபித்த சிவமே
ஆழமான உள்ளத்தில் அறிவான சிவமே

வெண்குஷ்டம் நீங்கிட வெள்ளையான சிவமே
கண்திருஷ்டி பட்டுவிட கடியெழில் சிவமே

கடலூரில் கோவில்கொண்ட கல்யாண சிவமே
உடலூரில் கோவில்கொள் ஒய்யார  சிவமே

http://temple.dinamalar.com/New.php?id=845

# 216. சிவக்கொழுந்தேஸ்வரர் -கடலூர்

கருணை பொழிந்திடும் கருவிழி கண்களே
அருளைச் சொரியும் அற்புத கண்களே

திணைப்பயிர் நட்ட திடமான கரங்களே
அணைக்கும் தந்தையாய் ஆதரிக்கும் கரங்களே

உணவை பக்தனுக்காக உண்ட விரல்களே
குணங்கள் பொதிந்த குன்றாத கோபுரமே

நாகத்தை சுமந்த நல்லதொரு கழுத்தே
யாகத்தைக் காக்கும் யோகசிவ நிலையே

சக்தியுடன் இணையும் சாகச நிலையே
முக்தியை அளிக்கும் மோட்ச நிலையே

இசைக்கு ஆடிடும் இனிய பாதமே
அசைந்து ஆடிடும் அழகான பாதமே

எதிலும் தெரியும் ஏகாந்த நிலையே
பதிலே தெரியாத பவித்திர கேள்வியே

இதுவோ அதுவோ எதுவோ அதுவே
மதிக்குப் புரியாத மகத்துவ கொழுந்தே

http://temple.dinamalar.com/New.php?id=847

# 217. மங்களபுரீஸ்வரர் -திருச்சோபுரம்

சரியான முறையில் சரித்திரம் படைப்பவரே
கமபதநி கேட்டிட கல்வியைத் தருபவரே

ஏழு ஸ்வரங்களாய் எழிலாய் அமைந்தவரே
தாழும் தென்திசையைத் தாங்கி நிறுத்துபவரே

வலியினைப்  போக்க வாகாய் வருபவரே
எழிலாய் மூலிகையில் எழுந்து அருள்பவரே

சிலையிலே ஸ்வரங்கள் சிங்காரமாய் கேட்குமே
மலையிலே திருமணம் மங்கையுடன் நடக்குமே

இசையாய் மாறிடும் இன்னிசை நாதரே
அசையும் பாதங்களில் அண்டத்தை அசைப்பவரே

மங்களம் பொங்கிட மங்களபுரி வருபவரே
குங்கும மஞ்சளில் குதூகலம் தருபவரே

http://temple.dinamalar.com/New.php?id=831

# 218. வீரட்டானேஸ்வரர் -திருவதிகை

முப்புரம் எரிசெய்த முக்கண்ண ஈஸ்வரனே
தப்பாது காத்திட தேராக வந்தவரே

அச்சும் முறிந்திட ஆனைமுகன் வழிபட்டவரே
அச்சம் நீக்கிட அசுரர் வதைத்தவரே

சிரித்த சிரிப்பிலே சீறிடும் நெருப்பிலே
தரித்த மேனியிலே தாங்கிடும் உலகமே

தேவரின் கர்வமே அசுரரின் கர்வமே
யாவும் நீங்கிடுமே ஆணவம் அடங்கிடுமே

நோயும் தொலையுமே நாவும் பாடுமே
மாயை நீங்கிடுமே மும்மலமும் தீர்ந்திடுமே

வலியும் போயிடுமே வயிறும் குளிர்ந்திடுமே
வழியும் பிறந்திடுமே வாயும் பாடிடுமே

திலகவதி தம்பியார் திசைமாற வகுத்தவரே
உலகத்தில் சைவத்தை உயர்த்தி நிறுத்தியவரே

திருவதிகை ஊரிலே திருக்கோவில் கொண்டவரே
கருத்தினில் வீரத்தை கடலூரில் தந்தவரே

http://temple.dinamalar.com/New.php?id=853

# 219. பக்தஜனேஸ்வரர் - திருநாவலூர்

திருஅமிர்த கடையலில் தீண்டிய நஞ்சுமே
திருநாவல்தி மரமாகி திருமண்ணில் முளைக்குமே

திருநாவலூர் தலத்தின் திருநாக ஈஸ்வரரே
திருநாவுக் கரசரின்  திருஞான ஈஸ்வரரே

திருக்கோவில் லிங்கமாய் திருவருள் புரிபவரே
திருஞான சம்பந்தரின் திருமந்திர ஈஸ்வரரே

திருநண்ப சுந்தரரின் திருவாய் நாயகரே
திருமால் பலம்பெறவே திருவலிமை தந்தவரே

திருநீறு பூசியவரின் திருவுடல் காப்பவரே
திரும்ப திரும்ப தீர்க்கமாய் அருள்பவரே

திருசுக்கிரர் மூலமாய்  திருவிளையாடல் செய்தவரே
திருவயிறு விழுங்கி தேவர்களைக் காத்தவரே

திருத்தமிழ் மொழியில் தேனாக இனிப்பவரே
திருவாய் தித்திக்க திகட்டாது தினம்வருபவரே

http://temple.dinamalar.com/New.php?id=685

# 220. விருத்தகிரீஸ்வரர் - விருத்தாசலம்

விருத்தம் பாடிவிட வருத்தம் இல்லையே
கருத்தினைக் கவரும் கணநாத தந்தையே

ஐந்தெழுத்து மந்திர ஐந்துருவ லிங்கமே
ஐந்துவிநாயக ஆழத்து நாயகரே

பழமை பொருந்திய பழமலை நாதரே
பழகிய சுந்தரருக்கு பணகுடி தந்தவரே

பாடமறுத்த அடியாரை பாடவைத்த ஆண்டவரே
வாடமறுத்த வன்னிமரமாய் வளர்கின்ற மலையே

அழியா தலமாய் ஆணித்தர நிலமே
எழிலான மலையாய் எழுந்தருளும் நிலையே

அறுபடை விநாயகர் அறங்கள் தருவாரே
அறுத்து பந்தத்தை ஆனந்தம் தருவாரே

திருமுது குன்றத்து திருவருள் நாதரே
திருநீறு மருந்தாகி தீரும் நோய்களே

http://temple.dinamalar.com/New.php?id=493

# 221. சொர்ணகடேஸ்வரர் -நெய்வணை (விழுப்புரம்)

பொங்கு மழை தனில் எங்கும் நீரும்
புரண்டு புரண்டோட மனம்
வெந்து புரண்டு இறையைத் தேடி
விரைந்து விரைந்தாட இனி
இங்கு தடுக்க நெல்லணையும் போட
என்று வந்த இறை நீயே
அங்கமும் மங்கை அழகாய் கொண்டு
அண்டமும் காப்பவரே

பொன்னும் துறந்து பொருளும் துறந்து
போலியை உணர்ந்து மனம்
பொன்னம்பல பெருமை தேடித்தேடி
போற்றி தினம் துதிக்க
என்னப்பர் எண்ணாது பொன்னைத் தந்து
எண்ணத்தை என்மேல் வைஎன்க
கண்ணப்பர் கண்டுவிட்ட கண்ணாயிர
கருணை சொர்ண கடேசனே

வழியும் அறியா வருந்தும் அடியாரை
வகையாய் நடத்திய வழியே
எழிலாய் வந்து எதிரும் கொண்டு
இனிதாய் வழியும் இசையே
விழியும் அறிய வித்தை புரிந்து
விழுப்புரம் வந்த ஈசனே
அழியா தலமாய் அர்த்த நாரியாய்
ஆனந்த நடன நேசனே

வசந்த வல்லி பந்து போலவே
வந்து வந்து போவாய்
கசந்த மருந்தும் காக்கும் அமுதாய்
கழுத்தில் தாங்கிக் கொள்வாய்
அசைந்து தினமாடி நெஞ்சில்
ஆழப் பதிந்து நிற்பாய்
பிசைந்த நெஞ்சப் பிழையை பொறுத்து
பேணிக் காத்து விடுவாய்

http://temple.dinamalar.com/New.php?id=157

# 222. வீரட்டேஸ்வரர்-திருக்கோவிலூர்

கயிலைக்குச் செல்லவே கணபதிக்கு பூஜையே
பயிலவே அகவல் பாட்டினைப் பாடிட
ஒயிலாய் திருக்கோவிலில் ஓங்கிய கணபதியே
கையிலே சுமந்ததில் கயிலையும் கண்டதே

கண்ணை மூடிட காரிருள் வந்திட
மண்ணிலே இருள்சூழ மாறும் உலகமே
விண்ணின் வேந்தன் விளையாட்டு பலவாகி
அண்ணலின் கோபத்தில் அந்தகன் அசுரனே

அசுரனும் ஈசனும் அதிரடி போரிட
அசுரப் படை ஆயிரம் தோன்றுமே
உசுப்பி எழுந்த உமையும் காளியாகி
அசுரரை வதைக்க ஆனந்த தாண்டவமே

தாண்டவ மாடிட தரையில் கோடுகளே
ஆண்டவன் கட்டளையில் அமைந்த சதுரங்களே
அறுபத்தி நான்கு அடுக்கடுக்கு சதுரங்களே
அறுபத்தி நான்கு ஆற்றல்மிகு பைரவர்களே

பைரவர் பலர்சூழ பாரினைக் காத்திட
வைரமாய் வீட்டினை வாஸ்துவும் காக்குமே
வீரட்ட ஈசனின் விளையாட்டு தலமே
பாரதிர வளர்ந்து பரவிய கயிலையே

http://temple.dinamalar.com/New.php?id=161

# 223. அதுல்யநாதேஸ்வரர்- அறகண்டநல்லூர்

அண்ணாந்து பார்த்தால் அண்ணாமலையார் தெரிவார்
கண்ணாலே பார்க்க காலபைரவர் வருவார்

அறையின் மேலே அணியான நாதர்கரு
அறையிலே அமைந்த கயிலை நாதர்

சம்பந்தர் கண்டுவிட்ட  சமணம் மறைத்த நாதர்
அம்பலம் வந்துவிட அசைந்த நந்தி நாதர்

நீலகண்ட முனிவர் நினைத்தவுடன் வந்த நாதர்
நீலகண்ட நாதராய் பாறையில் நின்ற நாதர்

இரமணரும் கண்ட இரம்மிய நாதர்
அமரரும் பூஜித்த அறையணி நாதர்

இங்கிருந்து கண்டுவிட இணையத்தில் வருவார்
எங்கிருந்தாலும் கண்டுவிட இதயத்தில் வருவார்

நிர்மல மனத்தில் நினைவலையில் வருவார்
கர்வத்தை அடக்க காட்சியாய் தெரிவார்

சலனமில்லா நீரில் சரியாக பிரதிபலிப்பார்
அசலமாய் அண்ணாமலை ஆனந்த ஜோதியாவார்

வா வா என்றென்னை வருடியழைப்பார்
ஆ ஆ என்றுமனம் ஆடிப்பாடி மகிழும்

அண்ணாமலையாருக்கு போற்றி
அறையணி நாதருக்கு போற்றி
எண்ணத்தில் எழும்எரி தீபத்திற்கு போற்றி
எழுத்தில் வரும் எழில்ரூபனுக்கு போற்றி

http://temple.dinamalar.com/New.php?id=158

# 224. மருந்தீசர்- மருதீசர்- திருஇடையாறு

மருதமர ஈசனை மணந்த பார்வதியோ கிளியே
அருமந்திர உபதேசம் அன்னை கேட்டாளோ  கிளியே

செவியெடுத்து முனிவர் சிரம் தாழ்த்தினாரோ கிளியே
புவியில் சாபத்தால் பிறந்தாரோ சுகரும் கிளியே

மனிதனாய் முனிவரும் மண்ணில் வந்தாரோ கிளியே
கனிச்சுளை கொண்ட கணபதி பிள்ளையோ கிளியே

இணையில்லா சிறந்த இடையாறு தலமோ கிளியே
அணையில்லா சிவஞான ஆறும் பெருகுமோ  கிளியே

கல்யாண கோலத்தில் காட்சி தருவாரோ கிளியே
கல்யாணம் நடந்திட கருணை பொழிவாரோ கிளியே

மறைஞான சம்பந்தர் மனம்கவர் ஈசனோ  கிளியே
அறையெங்கும் பறக்கும் ஆனந்த கூட்டமோ கிளியே

சொன்னதை சொல்லும் செல்லப் பிள்ளையோ கிளியே
என்குறை தீர்க்கவே என்தூதாய் செல்வாயோ கிளியே

மயிலை கண்டதுண்டு மங்கை பாரினில் கிளியே
கயிலையைக் கண்களால் காண்பேனோ கேட்பாய் கிளியே

அறிந்தால் என்னிடம் அன்பாய் உரைப்பாயோ  கிளியே
அறிவுக்கு எட்டிட அகத்தினில் வருவாயோ கிளியே

http://temple.dinamalar.com/New.php?id=238

# 225. கிருபாபுரீஸ்வரர் - திருவெண்ணெய் நல்லூர்

சித்தத்தை கலக்கிடும் சிங்கார சிவனே
பித்தனாய் ஆக்கிடும் பிறைசூடிய சிவனே

திட்டிப்  பாடவைத்த தேவார சிவனே
மட்டில்லா அடியாரின் மாணிக்க  சிவனே

சுந்தரர் ஆட்கொண்ட சோமபுரி சிவனே
மந்திரப்  பொருளாகிய மறைபுகழ் சிவனே

கிழவனாய் வந்திங்கு கிறங்கவைக்கும் சிவனே
பழகிய அன்பில் பரவசந்தரும் சிவனே

கொல்லவந்த முனிவருக்கு கிருபையருள் சிவனே
சொல்ல சொல்ல இனிக்கும் சுவைநாம சிவனே

நமச்சிவாய நாமமாகி நாடுகாக்கும் சிவனே
நமச்சிவாய நமச்சிவாய நமச்சிவாய சிவனே

http://temple.dinamalar.com/New.php?id=163

# 226. சிஷ்டகுரு நாதேஸ்வரர்

தேவநெறி அருளிய திருத்தளூர் குருவே
தேவாரம் பாடிடும் தெய்வத்தின் குருவே

முதியவராய் வந்தருளிய முத்தமிழ் குருவே
அதிசயமாய் மறைந்த அழகிய குருவே
வானத்தில் ரிஷப வாகன குருவே
ஞானத்தை அளிக்கும் ஞானபைரவ குருவே

தென்பெண்ணை ஆற்றில் தோணியான குருவே
வெண்ணெய் நல்லூரில் விளங்கும் குருவே

குருவாய் வந்து குலங்காக்கும் குருவே
உருவத்தில் உரம்கொடுக்கும் உன்னத குருவே
தவநெறி அருளும் தந்தையான குருவே
அவனியைக் காக்கும் அறிவான குருவே

குருவான ஈசனே போற்றி
குருவான நேசனே போற்றி
குருவே போற்றி குருவே போற்றி
வருவாய் போற்றி அருள்வாய் போற்றி
http://temple.dinamalar.com/New.php?id=852

# 227. வடுகீஸ்வரர்- திருவாண்டார் கோவில்

ஒன்றாகி இரண்டாகி ஓங்காரமாய் நிற்பவனே
மூன்றாகி கண்ணாகி முற்றும் அறிந்தவனே

நான்கு மறைகளாகி நலங்கள் தருபவனே
வான்புகழ் மலையாகி வடிவாகி நிற்பவனே

ஐந்து தலையில் ஒன்றை கொய்தவனே
ஐந்து தலைமுறைக்கும் அருளைத் தருபவனே

ஐந்து எழுத்தால் ஐயங்கள் போக்குபவனே
ஐந்து பூதங்களாகி அண்டம் நிறைபவனே

அறுபடை முருகனின் அன்பான சிவமாகி
தருநிழல் சீடனாகி தவநெறி கற்றவனே

ஏழு நாளாகி எழுகின்ற கதிராகி
ஏழு உலகமாகி எல்லாமாகி இருப்பவனே

எட்டு தூண்களுடன் எட்டாது நிற்பவனே
எட்டு திக்கிலும் எழுந்த லிங்கமே

ஒன்பது வடிவாகி ஒளிரும் உண்மையே
தன்பால் உலகை தண்ணென இழுப்பவனே

பத்துதலை ஆணவம் பணிந்திட வைப்பவனே
சத்திய சிவமாகி சக்தியுடன் இணைபவனே

பதினோரு தலமாகி பாரினில் பரவியவனே
அதிசயங்கள் பலவாகி அனைத்தும் ஆனவனே

பன்னிரண்டு ஜோதியாகி பறைசாற்றி நிற்பவனே
இன்னிசைப் பாடலாகி இயல்பாய் ஒலிப்பவனே

http://temple.dinamalar.com/New.php?id=139

# 228. வாமனபுரீஸ்வரர்- திருமாணிக்குழி

மூன்றடி மண்ணளந்து மூவலகம் எட்டிய விஷ்ணு
சான்றுகள் காட்டி சாகசம் செய்த பிறகு
வேண்டி உன்னை வணங்க அருளிய சிவனே

வாமன அவதார வானளாவிய விஷ்ணு
தாமதம் இல்லாது தாளடி பணிய
சோமபுரி நாத சுயம்புலிங்க சிவனே

உயிர்கள் அனைத்தும் உய்விக்க உதவி
பயிர்கள் யாவும் பாரினில் வாழ உதவி
வயிறும் வாயும் வாழ்த்த உதவும் சிவனே

சக்தியுடன் இணைந்து சங்கடம் தவிர்த்து
பக்திசெய் பக்தருக்கு பாதை காட்டி
முக்தியை அளிக்க முன்னின்று வரும் சிவனே

மூன்றடி வாமனனுக்கு முன்வந்து உதவி
மூன்றடி மண்ணுக்கு முக்காலம் உணர்ந்து
மூன்றடி பாடலில் முறுவலிக்கும் சிவனே

தினமொரு பாடலாகி திகழும் சொல்லாகி
மனமுவந்த எழுத்தாகி மங்காத ஒளியாகி
சினங்களை அறுத்து சிரம் காக்கும் சிவனே

http://temple.dinamalar.com/New.php?id=851

# 229. பாடலீஸ்வரர் -திருப்பாதிரிப்புலியூர்

பாடலீஸ்வரர் -திருப்பாதிரிப்புலியூர்
தினம் ஒரு பாடல்
நாள் -352
276 பாடல் பெற்ற சிவஸ்தலங்கள் -229

இருவிழி மூடிட
இருளும் சூழ்ந்திட
இருவரும் பிரிந்திட
இருமலராய் பூத்த
இறையே

இடது கண் துடிக்க
இடது தோள் துடிக்க
இடது புறம் கொண்டு
இடர்களை நீக்கும்
இறையே

இத்தலத்து பெருமை
இத்தலத்துப் புலமை
இப்புவியில் பிறந்தவர்
இப்போது அறிய வந்திடும்
இறையே

இனியநாவுக் கரசரும்
இனிதே பாடிட
இன்னல் நீக்கியே
இன்பம் தந்திடும்
இறையே

இடரான கல்லும்
இடரின்றி தெப்பமாய்
இனிதே கரையேற்ற
இனிதான நமச்சிவாய
இறையே

இங்கே அப்பராக
இங்கே அம்மையாகி
இங்கே இணைந்து
இங்கே உறையும்
இறையே

இப்பாடல் வடிவாக
இப்பாடல் ஈஸ்வரராக
இப்படியும் பாடவே
இப்பிறவி எனக்களித்த
இறையே

http://temple.dinamalar.com/New.php?id=548

# 230. சிவலோக நாதர் -கிராமம் விழுப்புரம்

அழகான குளத்தின் அதிசய மலரே
வழவழ இலையின் வாடாத தாமரையே

சேவகர்கள் பறிக்க முடியா மலரே
சேவிக்க பூத்த சிவலோக மலரே

மன்னவன் அம்புவிட மாறாத மலரே
செந்நிற குளத்தின் சீரிய மலரே

மலருக்குள் மறைந்த சிவலிங்க மலரே
உலகத்தைக் காக்கும் உன்னத மலரே

முடிமுதல் அடிவரை காணாத  மலரே
அடியவர் கண்டுவிட ஆடிடும் மலரே

முண்டியும் திண்டியும் வணங்கிய மலரே
அண்டியவருக் கருளும் ஆனந்த மலரே

சித்தருக்கு சக்தியாய் சித்திக்கும் மலரே
வித்தகர் வென்றிட வித்தையான மலரே

http://temple.dinamalar.com/New.php?id=149

# 231. பனங்காட்டீஸ்வரர் -பனையபுரம்

காட்டினிலே ஒரு லிங்கம்
காட்டினிலே
காட்டினிலே ஒரு லிங்கம் -பனங்
காட்டினிலே ஒரு லிங்கம்

பனைகள் சூழ்ந்திட மின்னும் லிங்கம்
மின்னி மிளிரும் லிங்கம்
காட்டினிலே ஒரு லிங்கம்

பட்ட மரங்கள் படரும் லிங்கம்
விண்ணொளி வணங்கும் லிங்கம்
சுட்ட ஒளியும் இழந்தே வருந்தி
சூரிய சுடரொளி லிங்கம்
அஞ்செழுத்தில்
அஞ்செழுத்தில் அகிலம் காக்க எழுந்து
ஆனந்தம் தரும் லிங்கம்
காட்டினிலே ஒரு லிங்கம்

சுனை வண்டுடன் சோலைப் புறாவும்
சோர்ந்தே விழுந்திட
அணைத்து மன்னன் அருளிட கண்கள்
ஐயன் அருளாலே
ஆ என் சொல்வேன் மாயப்பெருமான்
பார்வை தந்த லிங்கம்
காட்டினிலே ஒரு லிங்கம்
காட்டினிலே ஒரு லிங்கம்

நிலா மலர்ந்த சடைமுடி கங்கை
உலாவிடும் நாகத்தில்
நீல நிறத்து கழுத்துடன் ஒருவர்

ஜதிக்கு ஆடி நின்றார்
காலமெல்லாம் அவர் கருணை எண்ணி
உருகுமோ என் உள்ளம்
காட்டினிலே ஒரு லிங்கம்
காட்டினிலே ஒரு லிங்கம்
காட்டினிலே
http://temple.dinamalar.com/New.php?id=968

# 232. அபிராமேஸ்வரர் -திருஆமத்தூர்

உதிக்கின்ற செங்கதிர் ஒளிவீசி வந்திட
துதித்து வழிபட்ட தூய வேலவனே
விதியை மாற்றும் வேலைத் தந்தனளே
மதியைக் கவரும் மாணிக்க சிவனே

சிவமாகி சக்தியாகி சேர்ந்திடும் சிவசக்தியே
தவநெறி முனிவரைத் தாங்கிடும் மூலவரே
பவனிவரும் திசையில் பார்த்தபடி இருப்பவரே
அவனியைக் காத்திட அர்த்தநாரி ஆனவரே

ஆனந்த தாண்டவ அபிராம ஈஸ்வரரே
கானந்த ஆடலில் கண்ணைப் பறிப்பவரே
வானந்த வடிவுடை வளர்பிறை சடையுடை
தானந்த சரணங்கள் தலை வணங்குவோமே

வணங்கிய ஆவிற்கு வளர்ந்த கொம்பே
அணங்கும் மேற்கே ஆடலரசன் கிழக்கே
இணங்கி வாழும் இத்தலச் சிறப்பே
பிணங்கிய நெஞ்சில் பேரொளி உதிக்குமே

http://temple.dinamalar.com/New.php?id=162

# 233. அருணாச்சலேஸ்வரர்- அண்ணாமலையார்- திருவண்ணாமலை

அருணாச்சல புகழ் பாட அருளைத் தருவாய் கணபதியே
கருணை வெள்ளமாய் கண்ணுக்குள் வருவாய் கணபதியே

அகத்தினில் தெரியும் அருட்பெரும் ஜோதியே
ஆனந்த நடமாடும் அருட்பெரும் ஜோதியே
இச்சகத்தில் பெரிதான இனியமலை ஜோதியே
ஈன்றவள் போல் எனைக்காக்கும் ஜோதியே
உருவத்தில் அடிமுடி காணமுடியா ஜோதியே
ஊருக்குள் சித்தர்கள் ஓடிவரும் ஜோதியே
எங்கும் தெரியும் எரிமலை ஜோதியே
ஏழுபிறவி பாவங்களை எரிக்கும் ஜோதியே
ஐயங்கள் யாவும் அழிக்கும் ஜோதியே
ஒருமித்து அன்னையை ஒன்றாக்கும் ஜோதியே
ஓங்கி உயரே ஒளிமயமாக்கும் ஜோதியே
ஔவைக்கும் தமிழை அளித்த ஜோதியே

கண்ணுக்கு கண்ணாய் கருலிங்க ஜோதியே
காந்தமாய் வழியெங்கும் காட்சியாகும் ஜோதியே
கிரிவல பொர்ணமி கிருபையான ஜோதியே
கீர்த்திகள் பலபெற்ற கோடிவருட ஜோதியே
குலங்களை காக்க கோவில்கொண்ட ஜோதியே
கூப்பிட்டழைக்கும் கோபுர ஜோதியே
கெடுகள் அழித்து கேட்டதுதரும் ஜோதியே
கேள்விக்கு பதிலாகும் கீர்த்தியான ஜோதியே
கைலாய மலையாய் காக்கும் ஜோதியே
கொடுக்கும் தெய்வமாய் கொலுவான ஜோதியே
கோபுர தரிசனமாய் கோலமிடும் ஜோதியே
கௌரி மனோகர கருணை ஜோதியே

சமயத்தின் வடிவான சத்திய ஜோதியே
சாத்திர மறையான சரித்திர ஜோதியே
சித்தருக் கருளும் சிவஞான ஜோதியே
சீரிய அறிவை சித்திக்கும் ஜோதியே
சுடராய் எரியும் சுத்தமான ஜோதியே

சூல்தனை  காத்திடும் சுடரொளி ஜோதியே
செல்லும் வழியெங்கும் சிவமான ஜோதியே
சேர்ந்து வலம்வரும் சித்தரான ஜோதியே
சைவத்தின் வடிவான சாத்திர ஜோதியே
சொல்லவும் முடியாத சுந்தர ஜோதியே
சோர்வினைக் களையும் செந்நிற ஜோதியே
சௌந்தர்யம் பொங்கும் சடங்கான ஜோதியே

தத்துவ நெறிகளின் தலையான ஜோதியே
தானென்னும் அகந்தை தவிடாக்கும் ஜோதியே
திருவண்ணா மலையின் திருவருள் ஜோதியே
தீபத்தின் வடிவாய்  திருமால்கண்ட  ஜோதியே
துதிக்கும் அன்பருக்கு தெளிவாகும் ஜோதியே
தூயஅடியாருக்கு துன்பம் விலக்கும் ஜோதியே
தெருவெங்கும் தீபமாய் திகழும் ஜோதியே
தேடலின் முடிவாய் தெய்வமான ஜோதியே
தைரியம் தந்து தடையகற்றும் ஜோதியே
தொடுவானம் கடந்து தொலைதூர ஜோதியே
தோள்கொடு நண்பனாய் தொட்டுவிடும் ஜோதியே

நல்லார் உள்ளத்து நமச்சிவாய ஜோதியே
நாடுவர்க்கு இன்பமா நவிலும் ஜோதியே
நினைப்பவர் எண்ணத்து நெற்றிக்கண் ஜோதியே
நீங்காத உண்மையாய் நிலைத்திடும் ஜோதியே
நுண்ணுயிர் உறுப்பாய் நின்றிடும் ஜோதியே
நூற்றுக் கணக்காய் நொடித்திடும் ஜோதியே
நெஞ்சத்தில் அணையா அண்ணாமலை ஜோதியே
நேர்மை இரமணரின் நிலையான ஜோதியே
நைவினை நணுகாது நலம்தரும் ஜோதியே
நொடியாகி நிமிடமாகி நேரமாகும் ஜோதியே
நோகாது காத்தெனை ஆளும் ஜோதியே

பசியினைப் போக்கும் பழம்பெருஞ் ஜோதியே
பார்க்க முடியாத பாதஅருட் ஜோதியே
பிணியினைப் போக்கும் பேரானந்த ஜோதியே
பீதியை அகற்றும் பெரியதொரு ஜோதியே
புத்துயிர் அளிக்கும் புதியதொரு ஜோதியே
பூரண பொலிவான புதுமலர் ஜோதியே
பெயர் நினைக்கவே பெரியதவ ஜோதியே



276 பாடல் பெற்ற சிவஸ்தலங்கள்

பேச்சினில் கவர்ந்து பித்தனாக்கும் ஜோதியே
பைங்கொடி வாடாதிருக்க  புத்துயிர் ஜோதியே
பொய்மை அகற்றும்  புவனத்து ஜோதியே
போலிகள் இல்லாத பொதுவெளி ஜோதியே
பௌதிக முனிவருக்கும்  பற்றறு ஜோதியே

மங்காது பதினோருநாள் மலரும் ஜோதியே
மாறாது கார்த்திகை மாதத்து ஜோதியே
மீனவ குலத்தவர் மேலேற்றும் ஜோதியே
மீண்டும் மீண்டும் மேலெழும்பும் ஜோதியே
முக்காலமும் உணரும் முக்கண் ஜோதியே
மூத்தவர் இளையவர் முன்நிற்கும் ஜோதியே
மெல்லிய திரியின் மெத்தன ஜோதியே
மேவிடும் மலையின் மேலெழும் ஜோதியே
மையல் கொண்டு மாந்தர்கவரும் ஜோதியே
மொய்த்திடும் வண்டாய் மெய்தொடும் ஜோதியே
மோகங்கள் அறுக்கும் மெய்யான ஜோதியே
மௌனமாய் தொட்டிடும் மென்மை ஜோதியே

ஞமலிக்கும் தெரிந்திடும் ஞான ஜோதியே
ஞாலத்தைக் காத்திடும் ஞாயிறான ஜோதியே
ஞிமிறுகளின்  தேடலுக்கு மலரான ஜோதியே
யாவர்க்கும் பொதுவான யௌவன ஜோதியே
ரமணரும் ரமித்த ராப்பகல் ஜோதியே
லட்சியம் அடைய இலக்காகும் ஜோதியே
லாபம் நீயாக இலக்குமி ஜோதியே

வந்தாரைக் காக்கும் வரமகா ஜோதியே
வாழ்வளிக்கும் அண்ணாமலை வட்டார ஜோதியே
விசிறியாய் தென்றலை வீசிடும் ஜோதியே
வீற்ற மலைதனில் விளையாடும் ஜோதியே
வெற்றிடம் தனிலும் வீற்றிடும் ஜோதியே
வேறுபாடின்றி எங்கும் விசையாகும் ஜோதியே
வையகத்து மூச்சாய் பரவிடும் ஜோதியே

அணுக முடியாத அண்ணாமலை ஜோதியே
அணுகினால் அருளிடும் ஆதிமலை ஜோதியே
அணுவாகி அண்டமாகி அந்தமில்லா ஜோதியே
ஆணாகி பெண்ணாகி அர்த்தநாரியான ஜோதியே

ஆடலாகிப் பாடலாகி ஆவியாகும் ஜோதியே
இன்னிசை கலையாகி இயம்பிடும்  ஜோதியே
ஈகை மனமாகி எமக்கருளும் ஜோதியே
உருவாகி அருவாகி உலரும் ஜோதியே
ஊசலாடும் மனதிற்கு உரமாகும் ஜோதியே
எண்ணிக்கை அதிகமாகி  ஏகனாகும் ஜோதியே
ஏகாந்த நிலையில் எளிமையான  ஜோதியே
ஐந்தெழுத்து சொல்லில் ஆளும் ஜோதியே 108

அண்ணாமலை போற்றி அடியவர் வாழி போற்றி
எண்ணப் பாமாலை போற்றி எங்கும் தெரியும் ஜோதியே போற்றி ! போற்றி !

http://temple.dinamalar.com/New.php?id=22

# 234. ஏகாம்பரேஸ்வரர் - காஞ்சிபுரம்

நிலமென்னும் நங்கையின் நித்திய ஈஸ்வரரே
உலகத்தை காக்கும் உத்தம ஈஸ்வரரே
அளவில்லா உருவமாய் ஆகாய ஈஸ்வரரே
களங்கமில்லா அக்னியாய் கற்பூர ஈஸ்வரரே

நீராய் நெருப்பாய் நிலமாய் ஆனவரே
வேராய் மண்ணிலே வித்தாய் ஆனவரே
இல்லாத வெறுமையாய் எங்கும் இருப்பவரே
கல்லும் முள்ளுமாய் காட்சி தருபவரே

நாற்சுவை மாக்கனியாய் நாவில் இனிப்பவரே
நாற்திசை இடத்திலும் நலமாய் வசிப்பவரே
நான்மறை வேதத்தின் நாடியாய் துடிப்பவரே
நான்முகன் பணிந்திட நல்லதை அளிப்பவரே

மணல் லிங்கமாய் மனத்தைக் கவர்ந்தவரே
மணக்கோலம் பூண்டு மங்களமாய் ஆனவரே
மணங்கள் கமழும் மகரந்த மலரே
மனதில் நிற்கும் மந்திர திருவுருவே

கங்கையும் ஓடிவர கட்டியணைத்த அழகே
மங்கைக்கு தரிசனம் மகத்தாய் தந்தவரே
பொங்கும் அழகில் பொலிவான ஈஸ்வரரே
மங்காத கண்ணாடியில் மின்னும் ஒளியே

பஞ்ச பூதங்களாய் பாரினைக் காப்பவரே
தஞ்சம் அடைந்தோரை தயங்காது காப்பவரே
நஞ்சை விழுங்கி நல்லதை செய்பவரே
அஞ்சாது இருக்க ஆபத்தில் அருமருந்தே

http://temple.dinamalar.com/New.php?id=578

# 235. திருமேற்றளீஸ்வரர் - காஞ்சிபுரம்

சிவமாக வேண்டி சித்தம் கொண்ட ஹரியே
சிவனை வேண்டியே சிந்திக்க வைத்த ஹரனே

தவத்தில் சிறந்து தலத்தில் குளித்த ஹரியே
தவக்கோலம் கண்டு சம்பந்தர் துதித்த ஹரனே

பாடிய பதிகத்தில் மனம் பறிகொடுத்த ஹரியே
ஆடிய சிவதாண்டவத்தில் ஆனந்த நிலை ஹரனே

ஓத உருகியதில் உருவம் லிங்கமாக ஹரியே
வேதங்கள் போற்றும் வித்தைகள் புரியும் ஹரனே

பாதம் வரை உருகி பரவசமான ஹரியே
ஆதவன் வணங்கிடும் அருணாசல ஹரனே

மேற்கே நோக்கி மேவிய தளியில் ஹரியே
நாற்புறம் தெரியும் நமச்சிவாய ஹரனே

ஹரியும் உருவத்தில் ஹரனாய் மாறியே
புரியும் விளையாட்டில் புவனம் நிறையுமே

http://temple.dinamalar.com/New.php?id=259

# 236. ஓணகாந்தேஸ்வரர்- காஞ்சிபுரம்

மூன்று காலத்திற்கும் முக்கிய லிங்கமே
மூன்று பெயர்களில் முன்னிற்கும் லிங்கமே
மூன்று கண்களுடன் மூர்த்தியான லிங்கமே
மூன்று உலகங்களுக்கும் முறையான லிங்கமே

ஓணகாந்தன் வழிபட்ட ஒய்யார லிங்கமே
காணக்கிடைக்காத காட்சி லிங்கமே
வாணாசுரன் சேனாதிபதி வணங்கிய லிங்கமே
தானாக தோன்றிய சுயம்பு லிங்கமே

மண்ணிலே புதைந்த மாணிக்க லிங்கமே
விண்ணில் ஒளிபரப்பும் வித்தக லிங்கமே
பொன்னும் செல்வமும் பொருளான லிங்கமே
பொன்னாய் புளியங்காய் மாறசெய்த லிங்கமே

சுந்தரர் பாடிய சுபிட்ச லிங்கமே
மந்திரங்கள் ஓதும் மகத்தான லிங்கமே
அந்தரங்கம் அறியும் ஆன்ம லிங்கமே
சிந்தை கவரும் சிறப்பு லிங்கமே

http://temple.dinamalar.com/New.php?id=180

# 237. அநேகதங்காவதேஸ்வரர்- காஞ்சிபுரம்

அளகை நாட்டின் அரசன் குபேரனுக்கு
அளவில்லா துன்பத்தை அனுதினம் சுக்கிரன்
இன்னலாய்த் தந்ததால் இனிதே விழுங்கி
அன்பாய் கச்சியில் அமர்ந்த அநேகதங்காவதமே

வல்லபை சிவனை வணங்கிய கன்னிகையை
அல்லதை செய்யும் அரசன் கேசிபிடிக்க
துன்பத்தைப் போக்கும் தூய்மையான உருவில்
அன்பாய் கச்சியில் அமர்ந்த அநேகதங்காவதமே

செல்வமாய் வலிமை செழிப்பாய் அளித்து
வல்லமை தந்து வல்லபை மீட்டிட
உன்னை வணங்கிய உன்னத விநாயகரின்
அன்பாய் கச்சியில் அமர்ந்த அநேகதங்காவதமே

இச்சைகள் அகற்றி இச்சகத்தில் வாழ
உச்சத்தில் அமர்ந்த உயர்மலை சிவனே
அச்சத்தை விட்டகற்றி ஆனந்தம் தந்திடுக
கச்சியில் அமர்ந்த காருண்ய அநேகதங்காவதமே

http://temple.dinamalar.com/New.php?id=68

# 238. சத்யநாதர் - காஞ்சிபுரம்

சத்தியத்தை ஓதும் சத்திய நாதரே
நித்தியமாய் நிலைக்கும் நித்திய நாதரே

சந்திரன் புத்திரனுக்கு சாத்தியமான நாதரே
இந்திரன் சாபவிமோசன இத்தல நாதரே

புதனுக்கு கிரகபதவி புனைந்த நாதரே
மதங்கள் போற்றும் மந்திர நாதரே

கல்வியை தந்திடும் காருண்ய நாதரே
செல்வத்தை ஈந்திடும் சீரிய நாதரே

ஞானத்தை அளித்திடும் ஞாலத்தின் நாதரே
தானத்தை கொடுத்திடும் தயாள நாதரே

காஞ்சியில் அமர்ந்திடும் காவிய நாதரே
வாஞ்சையுடன் அணைக்கும் வையத்து நாதரே

http://temple.dinamalar.com/New.php?id=70

# 239. வாலீஸ்வரர்- கொய்யாமலர் நாதர் - குரங்கணில்முட்டம்

கொய்யா மலரை குரங்கும் பூஜிக்க
ஒய்யார கோலத்தில் ஒளிரும் லிங்கமே

காகத்தின் வடிவிலே காலனும் பூஜிக்க
நாகத்தின் தலைவனான நமச்சிவாய லிங்கமே

ஆயிரம் கண்களுடன் இந்திரன் பூஜிக்க
கோயிலில் குடிகொண்ட கொய்யாமலர் லிங்கமே

ஐந்தறிவு விலங்கும் அர்த்தமுடன் பூஜிக்க
ஐந்தெழுத்து மந்திர அர்த்தமுள்ள லிங்கமே

குரங்கணில் முட்டத்து கோடீஸ்வர லிங்கமே
அரங்கத்தில் ஆடிடும் அம்பலவாண லிங்கமே

பாடாத நாளின்றி பாவையும் பூஜிக்க
வாடாத மலராய் வருடும் லிங்கமே

வாயினால் பாடி மனத்தால் பூஜிக்க
ஆயிரம் நாமத்து சகஸ்ர லிங்கமே

சேரனும் பல்லவனும் சோழனும் பூஜிக்க

மோரோகோ நாட்டிலும் மெய்யாகும் லிங்கமே

செல்லும் இடமெல்லாம் சிந்தையில் பூஜிக்க
சொல்லும் பொருளும் சிவமாகும் லிங்கமே

http://temple.dinamalar.com/New.php?id=1003

# 240. திருமாகறலீஸ்வரர் - திருமாகறல் காஞ்சிபுரம்

அதிசயங்கள் பலவுண்டு அதிலும் பலாவுண்டு
புதிதாய் தினம் பழுப்பதுண்டு பிரம்மனும் நட்டதுண்டு

ஆண்டு தோறும் பழுப்பதுண்டு தினமும் அதை
ஆண்டவனுக்கு படைப்பதுண்டு அமுதாய் அளிப்பதுண்டு

மன்னன் அதை கேட்பதுண்டு மக்கள் பறிப்பதுண்டு
உண்ணக் கொடுப்பதுண்டு ஊரார் தருவதுண்டு

சிறுவன் ஒருவன் முறையுண்டு சித்தம் சிந்திப்பதுண்டு
தருணத்தில் ஊராரை அனுப்பியதுண்டு தானே எரித்ததுண்டு

மரமும் எரிந்ததுண்டு மன்னனுக்கில்லையென சொல்லியதுண்டு
சினமும் கொண்டதுண்டு சிறுவனை நாடு கடத்தியதுண்டு

உடும்பாய் சிவன் வந்ததுண்டு உடனே காவலாளி கண்டதுண்டு
உடும்பின் புற்றை கலைத்ததுண்டு உயரே அசரீரி கேட்டதுண்டு

மன்னன் மயங்கியதுண்டு மண்ணில் விழுந்ததுண்டு
அண்ணல் தோன்றியதுண்டு ஆங்கே கோவில் எழுப்பியதுண்டு

மாக்கிரகன் வணங்கியதுண்டு மாக்கிரன் தோன்றியதுண்டு
ஆக்கம் அழிவு ஆனதுண்டு அண்டம் யாவும் நிறைந்ததுண்டு

http://temple.dinamalar.com/New.php?id=73

# 241. வேதபுரீஸ்வரர்- திருவோத்தூர்

வேதங்களை தேவருக்கு ஓதிடும் தேவரே
வேதங்கள் ஓதிடும் வோத்தூர் தேவரே

பதிகங்கள் பாடிட பனைகள் மாற்றிய தேவரே
அதிசயங்கள் நடத்தி அண்டம் காக்கும் தேவரே

ஆண்பனைகளை மாற்றிய ஆண்டவ தேவரே
பெண்பனைகள் குலைதள்ள பேணிய தேவரே

சம்பந்தர் பாடிட சமணரும் மாறிய தேவரே
அம்பல வாணரின் அடியாராக்கிய தேவரே

வாயிலை நோக்கியே நந்தியும் விலகிடும் தேவரே
கோயிலில் தேவருக்கு உபதேசம் செய்த தேவரே

தொண்டைமானுக்கு நந்தி துணைபோன தேவரே
அண்டம் காக்கும் ஆண்டவ தேவரே

தக்கன் யாகத்திற்கு தாட்சாயிணி போக தேவரே
பக்கத்தில் தவமிருந்த பார்வதி இணைந்த தேவரே

பாம்பினை ஏவியவர் பக்தரை தாக்கிட தேவரே
பாம்பாட்டியாய் வந்து பக்தரைக் காத்த தேவரே

ஒத்து ஓதும் ஒத்துவார் தேவரே
ஒத்த மனமுடன் ஒன்றான தேவரே

தந்தையாய் தாயாகி தடவும் தேவரே
சிந்தையில் எண்ணமாகி சிறக்கும்  தேவரே

பதினொரு பதிகங்கள் பாடினார் தேவரே
பதினொரு பதிகங்கள் பாடினேன் தேவரே

http://temple.dinamalar.com/New.php?id=519

# 242. கயிலை நாதர் - திருக்கயிலாயம்

1.
திங்கள் சடைமுடி திகழும் நாதரே
எங்கள் குறை போக்கும் நாதரே
மங்காத பனிமூடி மயக்கும் நாதரே
பொங்கும் சிந்துவின் பிறப்பிட நாதரே
தங்கு தடையின்றி தமிழ்தரும் நாதரே
எங்கும் பரவிய ஏகாந்த நாதரே
இங்கு என்னுள் இறையான நாதரே

2.
செவ்வாய் தினமும் சிறப்பாகப் பாடுமே
கவ்வியப் பிணிகள் களைந்திட பாடுமே
வவ்விய அழகை வானளாவிப் பாடுமே
வெவ்விய காலனை வேண்டாது பாடுமே
அவ்வியம் களைந்து அடிபணிந்து பாடுமே
எவ்விடம் நீயுண்டென தேடிப் பாடுமே
இவ்விடம் வந்திடவே ஏங்கிப் பாடுமே

3.
புதனும் தவமிருந்த பூரணக் கடவுளே
மதங்கள் கடந்த மலையான கடவுளே
விதமாக காட்சிதரும் வீறுமலைக் கடவுளே
புதரும் பொன்னாக பொலிவான கடவுளே
இடவலம் பொம்பருக்கு இடர்நீக்கும் கடவுளே
இடபாகம் சக்தியாக இனிக்கும் கடவுளே
வலம்வரும் இந்துவுக்கு வளம்தரும் கடவுளே

4.
வியாழன் குருவாக வினையகற்றும் சிவனே
தியானிக்க நெஞ்சில் தெரியும் சிவனே
மயானம் தனிலும் மேவிய சிவனே
தயாள அறிவாகும் தாட்சண்ய சிவனே
அயராது ஆடிடும் ஆனந்த சிவனே
வியப்பான மலையில் வீற்றிடும் சிவனே
சுயம்புவாய் எழுந்து சுமைதாங்கும் சிவனே

5.
வெள்ளிப் பனியாய் வெளிச்சமாகும் லிங்கமே
அள்ளிடும் அழகான அபூர்வ லிங்கமே
கொள்ளை எழிலில்  கொலுவிருக்கும் லிங்கமே
துள்ளும் ஆடலாய் அதிரும் லிங்கமே
கள்ளம் இல்லாத கயிலாய லிங்கமே
எள்ளத்தனை அணுவிலும் அசையும் லிங்கமே
தெள்ளத் தெளிவான தேமதுர லிங்கமே

6.
சனியும் எங்களுக்கு சங்கடமின்றி காப்பவரே
இனியொரு  கவலை இல்லாது காப்பவரே
முனிவரை தேவரை முன்னின்று காப்பவரே
கனியும் காயாய் காலத்தைக் காப்பவரே
தனியனாய் வந்திங்கு தாரணி காப்பவரே
மனித நோயிற்கு மருந்தாய் காப்பவரே
குனியாத குன்றாய் நிமிர்ந்து காப்பவரே

7.
ஞாயிறு ஒளிவீச ஞாலம் காப்பவரே
ஆயிரம் உயிர்களை அண்டத்தில் காப்பவரே
கோயிலில் குடிகொண்டு கோலமாய் காப்பவரே
வாயிலில் நந்தியுடன் வாகனம் காப்பவரே
பாயிரம் பாடிடும் நாவினைக் காப்பவரே
தாயினைப் போலவே தாட்சண்யம் காட்டுபவரே
சேயினைக் காத்திட சேர்ந்து வருபவரே

8.
சித்திரை மாதத்து சித்திரா பௌர்ணமியே
சித்தம் கவர்ந்திடும் சித்திர பௌர்ணமியே
நித்தம் காத்திடும் நிலவான பௌர்ணமியே
புத்தியை புதிதாய் பொலிவாக்கும் பௌர்ணமியே
வித்தாய் மலையை  சுற்றும் பௌர்ணமியே
சத்தமாய் ஒலிக்கும் ஓம்கார பௌர்ணமியே
எத்திசையிலும் தெரியும் எழிலான பௌர்ணமியே

9.
வைகறை விடியலயாய் வைகாசி ஒளியே
கைகாட்டும் தோழனாய் வந்திடும்  ஒளியே
மையல் கொள்ளவைக்கும் மயிலை ஒளியே

தையலைக்  கவர்ந்திடும் கயிலை ஒளியே
ஐயங்கள் அகற்றும் அகத்தின் ஒளியே
ஐயனாய் அருளிய அகத்தியரின் ஒளியே
ஒய்யார ஒளியாய் ஒளிரிடும் ஒளியே

10.
மாணிக்க வாசகர் மறைபொருள் ஆனியே
காணிக்கை ஆக்குவோம் கடமைகளை பூணியே
ஏணியில் யாவரும் ஏறமுடியா மலையே
பூணிடும் உயரத்தில் பொலிவான மலையே
பாவங்கள் புரியாதவர் பாதமேறும் மலையே
தேவர்கள் பூஜிக்கும் தெய்வீக மலையே
காவலாய் பைரவர் காட்டும் மலையே

11.
ஆடிவரும் பாதத்து ஆருத்ரா தரிசனமே
தேடிவரும் பக்தருக்கு திகட்டாத தரிசனமே
ஓடிவரும் கங்கையும் ஒயிலான தரிசனமே
பாடிவரும் பாடலில் பரிமளிக்கும் தரிசனமே
வாடிவிடும் பயிருக்கு வளம்தரும் தரிசனமே
கோடிவருட தவத்திற்கு கோலமாகும் தரிசனமே
சூடிவிடும் பாமாலையில் சுடராகும் தரிசனமே

12.
சந்திரனின் ஆவணி சத்தியமாவது உன்னாலே
இந்திரனின் சாபங்கள் அகன்றது உன்னாலே
தந்திரங்கள் பலவால்  தரணியிருப்பது உன்னாலே
மந்திரங்கள்  ஒலிக்கும் மகிமையும் உன்னாலே
இந்திரியம் அடங்கி இருப்பதும் உன்னாலே
விந்தைகள் பலவும்  விளையாட்டாவது உன்னாலே
சுந்தரர் அப்பர் சுகமாய்ப்பாடியதும் உன்னாலே

13.
புரட்டிய கருமங்கள் சுமையைப் போக்கிடு
விரட்டிய எங்கள் வினையைப் போக்கிடு
மிரட்டும் பயங்களை மிரள வைத்திடு
திரட்டும் பொருளின் திரவியம் ஆகிடு
பிறப்பும் இறப்பும் இல்லாது செய்திடு
சிறப்பும் சோகமும் சின்னதாய் செய்திடு
மறக்க முடியாத மந்திரமாய் நின்றிடு

14
ஐப்பசி மாதத்து அடைமழையாய் பொழிந்திடு
அப்பசி நீக்கவே ஆன்மாவைக் காத்திடு
தப்பாமல் என்னுள் நாமமாய் நுழைந்திடு
அப்பர் சம்பந்தர் அரசராய் பாடிடு
எப்போதும் நமச்சிவாயம் என்னுள் இருந்திடு
செப்பும் மொழியாய் செவ்வாய் காத்திடு
இப்போது கயிலைக்கு எங்களைக் கூட்டிடு

15
கார்த்திகை தீபமாய் காற்றிலே தெரிவாயே
பார்க்கும் இடமெல்லாம் பரவியே தெரிவாயே
கார்மேனி லிங்கமாய் கருவண்ணம் தெரிவாயே
ஊர்கோவில் உள்ளே ஒயிலாய் தெரிவாயே
நீர்வண்ணம் அதிலே நீலகண்டமாய் தெரிவாயே
சேர்ந்த மங்கையுடன் சோபித்து தெரிவாயே
ஆர்பாட்ட திருவிழாவில் அழகாய் தெரிவாயே

16.
ஆதிரை தினத்து மார்கழி அதிசயமே
ஆதியும் அந்தமும் ஆன அதிசயமே
ஜோதி வடிவாய் ஜொலிக்கும் அதிசயமே
ஓதிடும் மறைகளில் ஒலித்திடும் அதிசயமே
வேதியர் வணங்கிடும் வேதத்தின் அதிசயமே
சாதிகள் இல்லாத சைவத்தின் அதிசயமே
பாதியில் பெண்ணாகி பாதிஆணாகும் அதிசயமே

17.
வழிபிறக்க தைமாத வழியாகும் மூலமே
விழிகள் அறிந்திட வித்தையாகும் மூலமே
அழியாத ஆதிக்க ஆண்டவ மூலமே
எழிலாய் சுயம்புவாய் எழும்பும் மூலமே
பழிகள் இல்லாத பரமசிவ மூலமே
இழிசொல் ஏதுமே இல்லாத மூலமே
வழியாய் சீனத்தில் வகையான மூலமே

18.
மாசில்லா மாணிக்க வாசகரின் பாமாலையே
தூசில்லா தூமலர் தூவிடும் பாமாலையே

கால்படாத காரைக்கால் அம்மையின் பூமலையே
வேல்முருகன் அருள்வேண்டிய ஔவை மலையே
சேரமான் பெருமாள் சேர்ந்த மலையே
பேரன்புடன் பெருமிழலைக் குறும்பர் மலையே
அப்பர் சுந்தரர் அடைந்த மலையே

19
பாங்காய் மானசரோவர் பங்கான ஏரியே
ஆங்கே தெரியும் ஆன்மீக சங்கமமே
ஓங்கிடும் அழகான ஓங்கார மலையே
தாங்கிடும் அண்டத்தை தினந்தோறும் இங்கே
சான்றாய் கூறுகள் சரித்திரம் கூறுமே
தோன்றிய சான்றோர் போற்றிய மலையே
வேண்டினேன் மனத்துள் உன்னையே இன்று

20
எந்தப்புறம் பார்த்தாலும் எழிலான மலையே
எந்தாய் அப்பனாய் இருக்கும் மலையே
சொந்தம் நீயாக சொக்கிடும் மலையே
அந்தம் இல்லாத ஆதிநாத மலையே
பந்தங்கள் பாசங்கள் அறுக்கும் மலையே
கந்தனின் தகப்பன் கயிலாய மலையே
சுந்தர மூர்த்தியின் சொத்தான மலையே

21
சுற்றளவு 29 மைலென சொன்னார் அவரே
கற்றது களிமண் அளவே ஆகுமே
சுற்றிவர நாள் மூன்று என்றாரே
பற்றறுக்க நாள் எத்தனை ஆகுமோ
அற்றைக்கு தேடும் இரையே ஆகுமே
எற்றைக்கு நான்தேடும் இறையாய் ஆவாயோ
உற்றார் உறவினர் உள்ளதும் ஆவாயோ

22
கண்ணுக்கு தெரியும் காட்சியே போற்றி
விண்ணில் ஒளிரும் பிம்பமே போற்றி
உண்ணாமலை அம்மையார் உடனுறை போற்றி
அண்ணாமலை மேவிய அருணாச்சலா போற்றி
எண்ணத்தில் நிற்கும் ஏகம்பரா போற்றி
திண்ணமாய் திகழும் திகம்பரா போற்றி

மண்ணில் கமழும் மகேசா போற்றி

23
தில்லை வாழ் திருநடராசரே போற்றி
இல்லாத இடமே இல்லை போற்றி
திருவேட்களத்து  பாசுபதி ஈஸ்வரா போற்றி
திருக்கோவில் சிவபுரி உச்சிநாதரே போற்றி
திருக்கழிப்பாலை பால்வண்ண நாதரே போற்றி
திருவெண்ணீறு சிவலோகத்தி ஆகரே போற்றி
திருமேனி அழகரின் மகேந்திரபுரம்  போற்றி

24
முல்லை வனநாதரின் முல்லைவாசல் போற்றி
அல்லல் தீர்க்கும் அன்னப்பாஈஸ்வரா போற்றி
சாயா வனத்து சாயாவனேஸ்வரரே போற்றி
மாயை நீக்கும் பல்லவனேஸ்வரா போற்றி
திருவெண் காட்டின் திருவெண்மை போற்றி
திருக்காட்டுப் பள்ளியின் திருவடியே போற்றி
திருக்குரு காவூரின் வெள்ளடை நாதரே போற்றி

25
அசட்டை செய்யாத சட்டை நாதரே போற்றி
அசடையும் கவியாக்கும் ஆண்டவா போற்றி
சப்தபுரியாய் திகழும் சாத்திரமே போற்றி
நிசப்தம் அழிக்கும் நிஜமான ஒலியே போற்றி
மருந்தாகும் வைத்திய நாதரே போற்றி
குருமாணக்குடியில்  குடிகொண்டவரே  போற்றி
கடைமுடியாய் கீழையூர் வந்தவரே போற்றி

26
திருநின்றவூரில் ஈஸ்வரராய் நின்றவரே போற்றி
திருப்புன்கூரில் உறையும் சிவலோக நாதரே போற்றி
நீடூரில் அமைந்த நீள்சடை முடியாரே போற்றி
வீடுபேறு தரும் ஆபத்சகாயரே போற்றி
கல்யாண சுந்தரேஸ்வர கடவுளே போற்றி
திருமணஞ் சேரியில் மேலான ஈஸ்வரரே போற்றி
திருமணஞ் சேரியில் திகழும் உத்வாகநாதரே போற்றி

27
குற்றம் பொறுத்த நாதரே போற்றி

சுற்றம் காக்கும் கொருக்கை நாதரே போற்றி
மண்டலம் காக்கும் குந்தளேஸ்வரரே போற்றி
அண்டம் காக்கும் மாணிக்க வண்ணரே போற்றி
கண்டத்தில் நீலமாய் காண்பவரே போற்றி
குண்டல பிரணவமாய் கோவில்கொண்டவரே போற்றி
யோகத்தின் பதஞ்சலியாய் ஆனவரே போற்றி

28
திருநாரையூரின் அழகான திருக்கோல ஈசனே போற்றி
திருக்கோவில் அமிர்தமாய் திருவருள் ஈசனே போற்றி
பந்தங்கள் காக்கும் பந்தநல்லூர் ஈசனே போற்றி
சுந்தர வடிவான சுடரொளி அக்னியே போற்றி
மந்திரக் கோடியாய் காவல்புரிபவனே போற்றி
விந்தை மூச்சாகும் பிராண நாதனே போற்றி
அந்தமே இல்லாத அருணஜடேஸ்வரா போற்றி

29
திருவாய் பாடிட திருவாய் நாதரே போற்றி
திருக்கோவில் சேங்கனுரின் சத்தியமே போற்றி
திருந்துதேவன் குடிவாழ் தேவனே போற்றி
திருவிச நல்லூரில் திருவருள் யோகமே போற்றி
கோடீஸ்வர கொட்டையூரின் கைலாச நாதரே போற்றி
கோடிகோடி பாடலெழுத எழுத்தறிநாதரே போற்றி
ஆடிக் களையாத ஆண்டவ பாதமே போற்றி

30
அனைத்திற்கும் சாட்சியான அர்த்தநாரியே போற்றி
சுனைபோல் வெற்றிதரும் விஜயநாதரே போற்றி
நல்லவரைக் காக்கும் வில்வவனேஸ்வரரே போற்றி
இல்லையென்று கொடுக்கும் தயாநிதீஸ்வரரே போற்றி
அல்லவரை அழிக்கும் ஆபத்சகாயரே போற்றி
ஐயங்கள் அகற்றும் ஐயாரப்பரே போற்றி
நெய்யில்லா தீபமான நெய்யாடியப்பரே போற்றி

31
திருப்பெரும் புலியூரின் திருவருளே போற்றி
திருமழபாடியின் அருமருந்தே போற்றி
ஆலமாய் காக்கும் ஆலந்துறையாரே போற்றி
கோலமாய் செம்மேனி சிவப்பே போற்றி
சீலனாய் சத்திய அன்பே போற்றி

பாலமாய் காக்கும் மாந்துறை அப்பனே போற்றி
மூலமாய் திகழும்  ஆதியே போற்றி

32
திருவானைக்கா அமர்ந்த திருநீரே போற்றி
திருப்பைஞ்ஞிலியில் அமர்ந்த திருஞிலியாரே போற்றி
மாற்றுரை செய்த மாயாவாசியே போற்றி
போற்றிடும் அடியாரின் ஈங்கோய்மலையே போற்றி
காத்திடும் இரத்தின அய்யர் மலையே போற்றி
பூத்திடும் கடம்பவன குளித்தலையே போற்றி
சாத்திடும் பாமாலை பராய்துறையாரே போற்றி

33
ஊழ்வினை அழிக்கும் உய்யக்கொண்டாரே போற்றி
ஆழ்மன வண்ணமாய் ஐந்து நிறமே போற்றி
உருவத்தில் தாயாய் வந்தவரே போற்றி
எறும்பையும் காத்திடும் எறும்பீஸ்வரரே போற்றி
நெடுங்காலம் காக்கும் நெடுங்கள நாதரே போற்றி
அடுங்காலன் அணுக காக்கும் அக்னீஸ்வரரே போற்றி
தெரியாமல் காக்கும் திருவாலம் பொழிலே போற்றி

34
பூவாகி காயாகி புவனம் காப்பவரே போற்றி
காவாகி காட்சியாகி கனவாகும் பிரம்மமே போற்றி
சோற்றினை அளிக்கும் சோற்றுநாதரே போற்றி
போற்றிடும் வேதிகுடி  வேதபுரீஸ்வரரே  போற்றி
ஆற்றிடும் சாதனை ஆனந்தவசிஷ்டரே போற்றி
காற்றிலே கலந்த  பசுபதிநாதரே போற்றி
சக்கர வாழ்வின் சக்கர வாகேஸ்வரரே போற்றி

35
பாவத்தை நசுக்கும் பாபநாசரே போற்றி
ஆவனசெய்து அகிலம் காக்கும் நல்லூரே போற்றி
ஆவினைக் காக்கும் ஆவூர் நாதரே போற்றி
கோவிலில்  அமர்ந்த சிவக்கொழுந்தே போற்றி
ஆவியினை அணைக்கும் தேனுபுரீஸ்வரரே போற்றி
சேவிக்கப் பொதுவான சோமேஸ்வரரே போற்றி
மேவிய வலஞ்சுழியில் மெத்தன ஈசனே போற்றி

36

கும்பத்தின் ஈசனான கும்பேஸ்வரரே போற்றி
அம்பலத்தில் நாகமேந்திய அம்பலவாணரே போற்றி
சோகத்தைக் களையும் சோமேஸ்வரரே போற்றி
நாகத்தை அணிந்த நாகேஸ்வரரே போற்றி
மோகத்தை அழிக்கும் மாக்கலிங்கமே போற்றி
யாகத்தை காக்கும் ஆடுதுறையாரே போற்றி
வேகமாய் நஞ்சுண்ட நீலகண்டேஸ்வரரே போற்றி

37
வைகறை வேளையின் வைகல் நாதரே போற்றி
செய்கை சரியாக்கும் கோகிலேஸ்வரரே போற்றி
உண்மை வடிவான உமாமகேஸ்வரரே போற்றி
கண்ணில் தெரியும் திருவாடுதுறையே போற்றி
தண் எனக் குளிர்ந்த குத்தாலநாதரே போற்றி
மண்ணில் அமைந்த மாயூர நாதரே போற்றி
விண்ணின் தேவன் வேதபுரீஸ்வரரே போற்றி

38
உச்சிமுதல் உள்ளங்கால் காத்திடுவாய் போற்றி
மெச்சி யுனைப் பாடதுயர் விரட்டுவாய் போற்றி
செம்பொன்னும் நீயே செருக்கின்மை நீயே போற்றி
புஞ்சையும் போற்றி நற்றுணையும் போற்றி
சங்காய் முழங்கும் வலம்புரி போற்றி
சங்கரா போற்றி சிவனே போற்றி
பாங்காய் தோன்றும் தான்தோன்றியே போற்றி

39
திருக்கடையூர் அமிர்த கடேஸ்வரரே போற்றி
திருமயானம் காக்கும் தெய்வமே போற்றி
திருவேட்டக்குடி சுந்தரேஸ்வரர் போற்றி
திருத்தெளிச்சேரி பார்வதீஸ்வரரே போற்றி
தருமபுரியின் தலைவன் யாழ்ரிமூரியே போற்றி
திருநள்ளாறு நமச்சிவாய திருவடியே போற்றி
திருக்கொட்டார ஐராவத ஈஸ்வரரே போற்றி

40
அகத்தில் ஆடும் அம்பலரே போற்றி
மகத்துவம் வாய்ந்த மகாகாளரே போற்றி
மேகத்தை ஆளும் மேகநாதரே போற்றி
வேகமாயாடும் மீயச்சூர் வேந்தனே போற்றி

முக்தியை அருளும் முக்தீஸ்வரரே போற்றி
பக்தனுக் கருளும் பாம்புர ஈசனே போற்றி
முக்காலம் உணர்ந்த சூக்ஷ்மபுரியே போற்றி

41
விழிக்குத் தெரியும் வீழிநாதேஸ்வரரே போற்றி
வழிக்குத் துணையாகும் அக்னிபுரியே போற்றி
அழியா சற்குண கருவேலியே போற்றி
எழிலான திருப்பந்துறை ஈசனே போற்றி
படியினை அளக்கும் படிக்காசு நாதரே போற்றி
மதிக்குப் புரியும்  சிவபுரி நாதரே போற்றி
அதிசய சாக்கோட்டை அமிர்தமே போற்றி

42
கருத்தைக் கவரும் கருக்குடியே போற்றி
வருத்தம் களையும் வாஞ்சிநாதரே போற்றி
மதுவாய் மயக்கும் மதுவனேஸ்வரரே போற்றி
பதியாய் பார்வதி மணாளனே போற்றி
பனையாய் வளர்ந்த பரமனே போற்றி
சுனையாய் அருளும் ராமநாதரே போற்றி
அனைவரும் புகலும் ஆரண்யமே போற்றி

43
பற்றறுக்கும்  பயற்றுநாதரே போற்றி
உற்ற துணையாகும் உத்திரா பசுபதியே போற்றி
மற்றவை காக்கும் மருகல் ஈசனே போற்றி
அற்றைக் குணவளிக்கும்  அயவந்தீஸ்வரரே போற்றி
காயங்கள் ஆற்றும் காயாரோகணேஸ்வரரே போற்றி
மாயச்சிக்கல் போக்கும் மகேசனே போற்றி
ஓயாது கேடறுக்கும் ஒப்பில்லா அப்பரே போற்றி

44
திருக்கோயில் வாழும் தேவபுரீஸ்வரரே போற்றி
திருப்பள்ளி முக்கூடல் நேத்திரமே போற்றி
திருவாரூர் வாழ்ந்திடும் தியாகராஜரே போற்றி
அறநெறி காக்கும் அசலேஸ்வரரே போற்றி
உரமாய் காக்கும் உள்ளத்துவாய் நாதரே போற்றி
தரமான விளமல் தயாளனே போற்றி
கரவீர நாதராய் காத்திடுவாய் போற்றி

45
நடன மாடும் நர்த்தன புரீஸ்வரரே போற்றி
சுடராய் ஒளிரும் சுயம்புவே போற்றி
குடவாசல் வசிக்கும் கோணேஸ்வரரே போற்றி
சடைமுடி தரித்த சார பிரமேஸ்வரரே போற்றி
விடையாய் தெரியும் ஞானபரமேஸ்வரரே போற்றி
அடைமழை பொன்னாகும் சொர்ணமே போற்றி
மடைதிறந்த வெள்ளமாய் ஆபத்சகாயரே போற்றி

46
பாதாளம் பாயும் பாதாளேஸ்வரரே போற்றி
ஆதாரம் ஆகிடும் அவளிநல்லூர் ஈசனே போற்றி
பரிதியாய் வந்திங்கு பாரினைக் காப்பவரே போற்றி
உறுதியாய் வந்திடும் வெண்ணிக்கரும்பரே போற்றி
சதுரங்க வாழ்வில் சதிராடும் அண்ணலே போற்றி
புதுப்புது பாமணி பூவாகும் நாகமே போற்றி
உதிரா பாரிஜாத உருவமே போற்றி

47
பொன்வைத்து புவனம் காப்பவரே போற்றி
மன்மதன் அழித்த மந்திரபுரீஸ்வரரே போற்றி
இன்னலைக் களையும் இடும்பாவனமே போற்றி
கண்ணிமையாய் காக்கும் கற்பகமே போற்றி
தண்டலச் சேரியின் தாண்டவமே போற்றி
வண்டுறை நாதராய் வளம்தருவாய் போற்றி
கொண்டலாய் கொழுந்தாய் குலம்காப்பவரே போற்றி

48
கொள்ளை அழகான கொள்ளம்பதூரே போற்றி
அள்ளிடும் ஜகதீஸ்வர ஆனந்தமே போற்றி
கொள்ளிக் காட்டின் கொழுந்தே போற்றி
வெள்ளிமலை நாதராய் வீற்றவரே போற்றி
நெல்லிவன நாதராய் நித்தம் காப்பாய் போற்றி
சொல்லாமல் ஆடிடும் நாட்டியத்தானே போற்றி
அள்ளமுடியா கண்ணாயிர ஆனந்தமே போற்றி

49
மனதுக்கு துணையான மகேசனே போற்றி
தனத்தைக் காக்கும் தறியப்பரே போற்றி
கச்சனத்தில் அமைந்த கைச்சின்னமே போற்றி

அச்சத்தை விரட்டும் அகத்தீச்வரரே போற்றி
திருக்குவளை வாழ் திருபிரம்மமே போற்றி
திருவாய் ஓதிடும் திருவெம்பாவை போற்றி
திருமறைக் காக்கும் தேவாரம் போற்றி

50
சங்கம் வளர் மதுரையே போற்றி
அங்கம் காக்கும் ஆப்புடையாரே போற்றி
எங்கும் தவழும் கோடிக்குழகரே போற்றி
குன்றத்து கோவில் சாத்தியமே போற்றி
எந்தனைக் காக்கும் ஏடகநாதரே போற்றி
சிந்தையயில் வாழும் திருத்தளியே போற்றி
மந்திரமான கொடுங்குன்ற மறைபொருளே போற்றி

51
நாமமாய் காக்கும் நமச்சிவாயமே போற்றி
ராமனும் வழிபட்ட ராமநாதரே போற்றி
ஆதியாகி அந்தமாகும் ஆதிரத்தினமே போற்றி
ஜோதிவடிவான சொர்ண காளீஸ்வரரே போற்றி
வீதியில் வலம்வரும் விருத்தபுரியே போற்றி
பாதித் திருமேனி பார்வதியே போற்றி
ஓதிடும் திருமறை ஓங்காரமே போற்றி

52
52 சுற்றளவு அதிசயமே போற்றி
52 வாரத்து அனுதினமே போற்றி
52 பாடலாய் ஆனசிவனே போற்றி
52 சக்திகளாய் அருள்வாய் போற்றி
365 பாடலைப் பாடினேன் போற்றி
அன்றும் இன்றும் என்றும் அருள்வாய் போற்றி
சென்ற இடமெல்லாம் வருவாய் போற்றி

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

திருச்சிற்றம்பலம்

http://www.shaivam.org/siddhanta/sp/spt_p_kayilayam.htm

# 243. தாளபுரீஸ்வரர் - திருப்பனங்காடு

கள்ளனாய் வந்திங்கு காட்டினில் ஒளிந்தாயே
வெள்ளமாய் கங்கையை வேகமாய் பொழிந்தாயே

சுந்தரர் பசியாற சுவையான விருந்தளித்தாயே
வந்தவர் அருந்திட வற்றாத சுனையானாயே

வம்புகள் செய்திட வாடிக்கை ஆனவரே
இம்மைக்கும் மறுமைக்கும் இனிமை ஆனவரே

அகத்தியர் வணங்கிட அற்புதமாய் வந்தவரே
புலத்தியர் வணங்கிட புதிதாய் பூத்தவரே

நீர்வார்க்க கங்கையை நிலத்தில் கொணர்ந்தவரே
பார்வைக்கு பழமாய் பனைமரத்தில் பழுத்தவரே

காட்டிலே வசிக்கும் களிப்புடை ஈசரே
வீட்டிலே தங்கிடும் வித்தக ஈசரே

புத்தாண்டில் புனைந்த புதிய கவிதையே
தத்துவம் உரைக்கும் தாண்டவ உண்மையே

http://temple.dinamalar.com/New.php?id=144

# 244. வில்வநாதேஸ்வரர் -திருவில்லம்

வில்வநாதேஸ்வரர் -திருவில்லம்
தினம் ஒரு பாடல்
நாள்-367
276 பாடல் பெற்ற சிவஸ்தலங்கள் -244

அம்மை அப்பனை வலம் வந்த விநாயகனே
தும்பிக்கை வளைத்து பழம்தூக்கிய நாயகனே

ஞானப்பழம் பெற்று அமர்ந்த நாயகரே
ஞாலத்தை காக்க தடை அகற்றும் நாயகரே

வலம் வந்து வில்லத்தில் குடிகொண்டவரே
வளம் தரவே வில்லத்தில் கோவில் கொண்டவரே

கனி வாங்கிய பிள்ளையுடன் காக்க வந்தவரே
இனிவரும் தடைகளை இவ்வுலகில் அழிப்பவரே

கஞ்சனை அழிக்க காவல் நந்தி அனுப்பியவரே
தஞ்சம் என்ற அர்ச்சகர் குறை தீர்த்தவரே

எட்டாய் விழுந்த இடங்களில் கோவிலாய் எழுந்தவரே
எட்டாத உயரத்து எழில் நாயகரே

http://temple.dinamalar.com/New.php?id=119

# 245. மணிகண்டீஸ்வரர் - திருமால்பூர்

ஆயிரம் தாமரை அளித்த திருமாலே
ஆயிரம் தாமரை வாங்கிய திருச்சிவனே

கண்ணைத்  தாமரையாய் அளித்த திருமாலே
கண்ணைத்  தாமரை போல் ஆக்கிய திருச்சிவனே

சக்கரம் பெற்றிட தவமிருந்த திருமாலே
சக்கரம் அளித்து அருளிய திருச்சிவனே

செந்தாமரை கண்ண பெருமாளான திருமாலே
செந்தாமரை ஆயிரத்தால் பூஜிக்கப்பட்ட திருச்சிவனே

ஆயிரம் நாமத்தால் முக்திதரும் திருமாலே
ஆயிரம் நாமத்தால் பக்தருக்கருளும் திருச்சிவனே

சுதர்ஸன சக்கரம் பெற்ற திருமாலே
சுயம்பு மூர்த்தியாய் எழும்பிய திருச்சிவனே

நாமங்கள் பலவால் நாராயண திருமாலே
நாமங்கள் பலவால் நமச்சிவாய திருச்சிவனே

http://temple.dinamalar.com/New.php?id=155

# 246. ஜலநாதேஸ்வரர் - தக்கோலம் வேலூர்

கங்கை சூழ்ந்திட  காட்சியாகும்  திருநீரே
பொங்கும் நீருடன் பொலிவாகும் திருநீரே

பார்வதி அணைத்து பாதுகாத்த திருநீரே
ஊர்காக்க ஓடிவரும் ஒயிலான திருநீரே

தக்கன் ஓலமிட தலைதந்த திருநீரே
பக்தர்கள் நெற்றியில் பவித்திர திருநீரே

வெண்ணிற லிங்கமாய் வீற்ற திருநீரே
கண்ணுக்கு காவலாய் காக்கும் திருநீரே

செந்நிற லிங்கமாய் செழிக்கும் திருநீரே
பொன்னாய் முகத்தில் பொலிவாகும் திருநீரே

நூறுமடங்காய் பலன்தரும் நூதன  திருநீரே
பூசும் திருநீரில் புவிகாக்கும் திருநீரே

http://temple.dinamalar.com/New.php?id=156

# 247. தெய்வநாயகேஸ்வரர் - எலுமியன்கோட்டூர்

அழகைத்  தந்திடும் அருள்மிகு அழகே
அழகான திருக்கோலம் அரம்பையர் அழகே

எழிலான யோகாவடிவாய் எழும்பிய அழகே
வழியில் மறித்து வழிகாட்டிய அழகே

பதிகம் பாடச்சொன்ன பாதையின் அழகே
அதிசய சுயம்புவாய் அருளும் அழகே

தேவரைக் காக்கும் தெய்வீக அழகே
பாவங்கள் போக்கும் பரமசிவ அழகே

மகாபெரியவா கட்டிய மகத்தான அழகே
மகாகோவிலின் தட்சிணா மூர்த்தி அழகே

தலைசாய்த்து அருளும் தெய்வமான அழகே
மலையாய் எழும்பிய மகேச அழகே

அரம்பையர் வணங்கிய ஆண்டவ அழகே
அரங்கத்தில் ஆடிடும் ஆடலரசு அழகே

http://temple.dinamalar.com/New.php?id=69

# 248. திரிபுராந்தகர் -கூவரம் -திருவள்ளூர்

அச்சினை முறித்த அச்சிறுத்த விநாயகரே
அச்சத்தை முறித்து ஆணவத்தை முறிப்பாயே

வில்லேந்திய கோலத்தில் வீற்ற சிவனே
மல்லுக்கு அசுரரை மாய்த்த சிவனே

கூரம் முறிந்து குவிந்த நிலமே
பாரத்தை நிலத்தில் தாங்கிய தலமே

மகனின் செயலை மனதில் அறிந்தவரே
அகத்தில் வேண்டி அருளைப் பெற்றவரே

திரிபுர அசுரரை திகைக்க வைத்தவரே
அறியாத ஞானத்தை அறிய வைப்பவரே

தவளை இல்லாது தவக்கோலம் பூண்டவரே
கவலை அழிக்க கால்களை தூக்கியவரே

குடும்பத்தில் ஒற்றுமை குணமாக்க வைப்பவரே
உடுக்கை நாதத்திற்கு உக்கிரமாய் ஆடுபவரே

ஆடும் காளியின் ஆணவம் அழித்தவரே
ஆடும் கால்களால் அண்டம் காப்பவரே

http://temple.dinamalar.com/New.php?id=124

# 249. வடாரண்யேஸ்வரர் -திருவாலங்காடு

காதினை தொட்ட கால்களின் ஆட்டமே
ஜோதியாய் அண்டத்தை காக்கும் ஆட்டமே

காளிக்கு ஈடாய் கால்களின் ஆட்டமே
ஆளினைக் கவரும் ஆலங்காட்டின் ஆட்டமே

ஆரண்ய ஈஸ்வர ஆனந்த ஆட்டமே
கோர தாண்டவ கோலமான ஆட்டமே

சும்பன்  நிசும்பனை தோற்கடித்த ஆட்டமே
விசுவ ரூபத்தின் விசித்திர ஆட்டமே

இடபாதம் தூக்கி இடைவிடாத ஆட்டமே
இடபாகம் சுமந்த இனிதான ஆட்டமே

ஆலங்காட்டு தலைவியுடன் ஆடிய ஆட்டமே
சாலச் சிறந்த சங்கம ஆட்டமே

http://temple.dinamalar.com/New.php?id=115

# 250. வாசீஸ்வரர் - திருப்பாசூர்

பதினோரு செல்வங்கள் பாரினில் பெற்றிட
பதினோரு விநாயகர் பக்கத்தில் வருவாரே

தலையில் அடிபட தானாக எழுவாரே
மலையில் வாழ்ந்தாலும்  மண்ணில் கிடைப்பாரே

வெட்டுப்பட்ட தடமுடன் விளங்கும்  லிங்கமே
முட்டுக்கட்டை நீங்க முன்னின்று வருவாரே

தவறுகள் மன்னித்து தாழம்பூ ஏற்பாரே
அவனியை காக்க அன்பைத்  தருவாரே

நந்தியும் விலங்கிட நடந்த காளியே
தங்காதலியாய் தாரணியில் வருவாளே

வாசி முனையில் வழிந்த குருதியே
ஆசிகள் தந்து அருளை வழங்குமே

நாசியின் வேதனை நலமாக வணங்கியே
மாசில்லா தேவனை மனதால் நினைப்போமே

http://temple.dinamalar.com/New.php?id=143

# 251. ஊன்றீஸ்வரர் -திருவள்ளூர்

கண்ணைப் பறித்து கண்ணாமூச்சி ஆடி
கண்ணொளி மின்னலாய் காணுமுன் மறைபவரே

மண்ணிலே சுந்தரர் மன்றாடி நின்றாலும்
கண்ணைத் தராது கலியில் விளையாடியவரே

வழிகாட்டிய அன்னையை வழிமறித்து தடுத்து
வழியெங்கும் ஜோதியாய் வாழ்க்கையை நடத்துபவரே

தடுமாறும் கால்களுக்கு ஊன்றுகோல் தந்து
எடுக்கும் அடியினை என்றும் காப்பவரே

கோபத்தில் நந்திமேல் கோலும் விழுந்திட
தாபத்தில் கொம்பும் தடுமாறி சாய்ந்திடுமே

ஊழ்வினை வாழ்வை உள்ளபடி நடத்த
ஆழ்மனதின் ஆன்மாவே ஆண்டுவிடு என்னை

http://temple.dinamalar.com/New.php?id=130

# 252. சிவாநந்தீஸ்வரர் - திருக்கள்ளில்

சிவனோடு சக்தி சேர்ந்த ஆனந்தமே
அவனியில் உணர்த்த அழகான ஆனந்தமே

அம்பாளை அன்புடன் அரவணைத்த ஆனந்தமே
கும்பிட பிருகுவை கூபிட்ட ஆனந்தமே

கள்ளில் மலரால் பூஜித்த ஆனந்தமே
வெள்ளி மலையின் தரிசன ஆனந்தமே

அகத்தியர் கண்டிட அருளிய ஆனந்தமே
மகத்துவம் பொருந்திய மந்திர ஆனந்தமே

குறைவில்லா இன்பத்தைக் கொடுத்திடும் ஆனந்தமே
நிறைவான மனத்தை நிலையாக்கும் ஆனந்தமே

இதுவேண்டும் அதுவேண்டும் என்றலையா ஆனந்தமே
எதுவோ அதுஇதுவென அறியவைக்கும் ஆனந்தமே

இல்லாத போதும் இருக்கும் ஆனந்தமே
சொல்லால் சொல்ல முடியாத ஆனந்தமே

சும்மா இருக்கும் சிவன் ஆனந்தமே
பம்பரமாய் சுழலும் சக்தி ஆனந்தமே

பாடப்பாட வரும் பாடல் ஆனந்தமே
தேட தேட நெஞ்சின் தீபம் ஆனந்தமே

http://temple.dinamalar.com/New.php?id=126

# 253. காளத்தியப்பர் - காளஹஸ்தி

உள்ளிருக்கும் மூச்சாய் உயிராகும் காற்றே
தெள்ளத் தெளிவாய் தெரியாத காற்றே

எங்குநீ இருக்கிறாய் எனஅறியேன் காற்றே
தங்கு தடையின்றி பரவிய காற்றே

ஆதிசேடன் சண்டையிட அதிரடி காற்றே
வாதிட வந்தாயோ வாயுவின் காற்றே

சுற்றிய கயிலையை அசைத்த  காற்றே
பற்றாய் உயிரைப்  பற்றிய காற்றே

எதிர்காற்றாய்  வலிமையை ஏற்றும்  காற்றே
மதியைச்  சுடராக்கும் மகத்தான காற்றே

வலக்காது வழியாக வழியும் காற்றே
உலகத்தை காக்க உலாவரும் காற்றே

இடமாக வலம்வரும் இத்தல காற்றே
இடர்களைக்  களையும் இத்தல காற்றே

http://temple.dinamalar.com/New.php?id=1009

# 254. படம்பக்கநாதர் -திருவொற்றியூர்

படம்பக்கநாதரைப் பார்க்கலாம் ஏலேலோ ஐலசா
விடமில்லாது வீற்றாரே ஏலேலோ ஐலசா

ஒற்றியூர் போகலாம் ஏலேலோ ஐலசா
வெற்றிபெற்று வாழலாம் ஏலேலோ ஐலசா

மூன்றுதேவி வணங்கலாம் ஏலேலோ ஐலசா
ஊன்றுகோல் பெற்றிடலாம் ஏலேலோ ஐலசா

கலங்கரை விளக்கமே ஏலேலோ ஐலசா
உலகத்தைக் காக்குமே ஏலேலோ ஐலசா

சுந்தரத் திருமணமே ஏலேலோ ஐலசா
மந்திர மறைபொருளே ஏலேலோ ஐலசா

கலியனார் பக்தியே ஏலேலோ ஐலசா
கலியுலக முக்தியே ஏலேலோ ஐலசா

பட்டினத்தார் கரும்பே ஏலேலோ ஐலசா
மட்டில்லா மூர்த்தியே ஏலேலோ ஐலசா

நுனிக்கரும்பும் இனிக்குமே ஏலேலோ ஐலசா
துணிவான தோணியே ஏலேலோ ஐலசா

பசிதீர்த்த அன்னையே ஏலேலோ ஐலசா
புசிக்க அருளினாளே ஏலேலோ ஐலசா

பிடிப்பில்லா வாழ்விலே ஏலேலோ ஐலசா
துடுப்பான துணையே ஏலேலோ ஐலசா

ஆதியாகி அந்தமில்லா ஏலேலோ ஐலசா
மீதியாகி முழுதாகும் ஏலேலோ ஐலசா

பூரணமான பொலிவே ஏலேலோ ஐலசா
பூரண நிலையே ஏலேலோ ஐலசா

http://temple.dinamalar.com/New.php?id=592

# 255. திருவல்லீஸ்வரர் - பாடி திருவலிதாயம்

திருவல்லீஸ்வரர் - பாடி திருவலிதாயம்
தினம் ஒரு பாடல்
நாள்-378
276 பாடல் பெற்ற சிவஸ்தலங்கள்-258

குருவின் சாபத்தை குறைத்த குருவே
குருவாய் வந்து அருளும் குருவே

குருவும் கரம் கூப்பிய குருவே
குருவியின் பிள்ளை கும்பிட்ட குருவே

வலியவந்து எங்களை வாழ்த்திடும் குருவே
வலிதாய தலத்தின் வலியநாத குருவே

வல்லிகமலி மணந்த விநாயக குருவே
வல்லீஸ்வர நாதனை பாடவைத்த குருவே

வழியினைக் காட்டும் வசந்த குருவே
விழியினைத் திறக்க வேண்டினேன் குருவே

பொங்கிடும் தையில் பூத்திடும் குருவே
மங்காத செல்வமான மறைபொருள் குருவே

http://temple.dinamalar.com/New.php?id=13

# 256. மாசில்லாமணீஸ்வரர் - வடதிருமுல்லைவாயில்

மாசுகள் இல்லாத  மணியான மணியே
வீசும் கத்தியில் வெட்டுப்பட்ட மணியே

மன்னன் வருத்தத்தில் மாய்க்க முனைய
அண்ணலாய்  ஓடிவந்து அருளிய மணியே

தூய்மை வடிவான துல்லிய மணியே
ஓய்வின்றி உலகைக் காக்கும் மணியே

தொண்டை மான் தொழுத மணியே
அண்டம் காத்திடும் அழகு மணியே

ஓம்கார நாதத்தில் ஓங்கிடும் மணியே
சாம்பல் சிவனான சாத்திர மணியே

முல்லை வாயிலில் ஒலிக்கும் மணியே
இல்லாத இடமே இல்லாத மணியே

திருமேனி கண்டிட திருவருளும் மணியே
திருவடி கண்டிட வரம்தருவாய் மணியே

# 257. வேதபுரீஸ்வரர் - திருவேற்காடு

வேதபுரீஸ்வரர் - திருவேற்காடு
தினம் ஒரு பாடல்
நாள்-380
276 பாடல் பெற்ற சிவஸ்தலங்கள்-260

திருமணக் கோலமாய் திருவேற்காடு தலத்திலே
திருவருள் புரியும் திருக்கோவில் தெய்வமே

வேதங்கள் இத்தலத்தில் வெள்ளெருக்கு மரங்களே
வேதபுரி ஈச்வரர் வேண்டுவதை அளிப்பாரே

பாலாம்பிகை ஜகதாம்பிகை வடிவாம்பிகை காணுவோமே
காலகாலமாய் முக்தியும் கைக்கெட்டும் அதிசயமே

தலத்தில் சிவனின் தாளடி தொழுவாரே
வலம்புரி சங்கை மாலனும் பெறுவாரே

வழிபட்ட ஆதிசேடன் வாசம் செய்வாரே
அழிக்க விடம்தீண்டாது அருளி நிற்பாரே

சோர்வின்றி அடியாரை சேவித்து வருவாரே
மூர்க்கமாய் பக்திசெய்து முக்தியும் பெறுவாரே

திருமணக் கோலமாய் திருவேற்காடு தலத்திலே
திருவருள் புரியும் திருக்கோவில் தெய்வமே

http://temple.dinamalar.com/New.php?id=304

# 258. கபாலீஸ்வரர் - மயிலாப்பூர்

கயிலையே மயிலை மயிலையே கயிலை

நர்த்தன விநாயகர் நடுநாயக மயிலையே
அர்த்தங்கள் புரியவைக்கும் ஆண்டவ கயிலையே
கயிலையே மயிலை மயிலையே கயிலை

மயில்கள் உலவிய மண்ணிலே நின்றவரே
மயில்வடிவ நாயகியை மணந்த ஈஸ்வரரே
கயிலையே மயிலை மயிலையே கயிலை

சிங்கார வேலவன் சிரிக்கும் மயிலை
மங்காத செல்வம் மணக்கும் மயிலை
கயிலையே மயிலை மயிலையே கயிலை

பூம்பாவை பூத்தெழுந்த புதியதொரு மயிலை
பாம்பின்கடி மீட்டெழுந்த பரவச மயிலை
கயிலையே மயிலை மயிலையே கயிலை

பாடிடும் பதிகத்தில் பரமசிவ மயிலை
ஆடிடும் தைப்பூசத்தில் அழகான மயிலை
கயிலையே மயிலை மயிலையே கயிலை

அறுபத்தி மூவரின் அருள்தல மயிலை
சிறுமைகள் களையும் சிறப்பான மயிலை
கயிலையே மயிலை மயிலையே கயிலை

அகத்தினை கவர்ந்த அழகான மயிலை
அகக்கண் திறந்திடும் அற்புத கயிலை
கயிலையே மயிலை மயிலையே கயிலை

http://temple.dinamalar.com/New.php?id=628

# 259. கச்சபேஸ்வரர் / மருந்தீஸ்வரர் /விருந்திட்ட ஈஸ்வரர்

மலை மேல் மருந்தே மண்ணே மருந்தே
விலை இல்லா மருந்தே வியப்பான மருந்தே

மறுக்க இயலாத மருந்தே மாணிக்க வாசக மருந்தே
கருவைக் காக்கும் மருந்தே கருத்தினைக் காக்கும் மருந்தே

இந்திரன் பிணிபோக்கிய மருந்தே இந்திரிய பிணிபோக்கும் மருந்தே
மந்திர மொழி மருந்தே மாறாத மறைபொருள் மருந்தே

பசியினைப் போக்கும் விருந்தே பாரில் கண்ணுக்கு விருந்தே
ருசியை தந்திடும் விருந்தே ருத்திர தாண்டவ விருந்தே

சுந்தரர் உண்ட விருந்தே சுவையினைத்  தந்த விருந்தே
மந்தம் போக்கிடும் விருந்தே மனதை மயக்கும் விருந்தே

கச்சப விஷ்ணு வணங்கிய கச்சப ஈஸ்வர மருந்தே
அச்சங்கள் போக்கிடும் அன்பான ஈஸ்வர மருந்தே

நோய்கள் விட்டகல நொடியில் காக்கும் மருந்தே
தாய் போல் பரிவாய்  தரணியில் அருளும் மருந்தே

மருத்துவ அறிவுக்கு எட்டாத மகத்தான அருமருந்தே
விருந்தாய் கிடைத்த விண்தொடும்  மலைமருந்தே

http://temple.dinamalar.com/New.php?id=260

# 260. மருந்தீஸ்வரர் - திருவான்மியூர்

அறிவியல் அறிந்த நோய்களின் அருமருந்தே
அறிவியல் அறியாத நோய்களின் அருமருந்தே

அகத்தியர் அறிந்திட அறிவுறுத்திய மருந்தே
அகமும் அறிந்திட அறிவிறுத்தும் மருந்தே

வால்மீகி திருந்தி வணங்கிய மருந்தே
கால் தூக்கியாடும் களிப்பான மருந்தே

வன்னி மரத்தடியில் வசிக்கும் மருந்தே
அன்னையாய் எம்மை அரவணைக்கும் மருந்தே

முகத்தைக் காட்டிட மேற்குதிரும்பிய மருந்தே
சுகத்தை அளிக்கும் சுகந்த மருந்தே

பால் சொரிந்து பசுவும் வணங்கிய மருந்தே
பால் வண்ண நாதராய் அமைந்த மருந்தே

சிந்தை மயக்கும் சிகிச்சை மருந்தே
பந்தங்கள் அறுக்கும் பவித்திர மருந்தே

உலகின் நோய்களை தீர்க்கும் மருந்தே
அளவில்லா அமுதாய் அருளும் மருந்தே

http://temple.dinamalar.com/New.php?id=14

# 261. இடை சுர நாதர் -ஞானபுரீஸ்வரர்

இடையிலே விட்டு சென்ற இடைசுர நாதா
இடையனாய் வந்து இதயம் கவர்ந்த நாதா

மடையாய் அருள் மழை பொழியும் நாதா
விடையாய் கேள்விக்கு விளங்கும் நாதா

சம்பந்தர் பசியாற்ற சட்டித்தயிர் தந்தநாதா
அம்மை அப்பனாய் அருளும் ஆருயிர் நாதா

ஞானத்தை பாலாய் பொழிந்த அன்னையே
ஞாலத்தைக் காக்க காலெடுத்த அன்னையே

பால்சுரக்கும் பசுமூலம் பாதைகாட்டும் நாதா
கால் தூக்கிய ஆடல்மூலம் அருளும் நாதா

ஜோதி வடிவமாய் இருளகற்றும் நாதா
ஆதியும் அந்தமுமாய் அகிலம் காப்பாய் நாதா

http://temple.dinamalar.com/New.php?id=262

# 262. வேத புரீஸ்வரர் - திருக்கழுகுன்றம்

நீரிலே வலம்வந்து நிறையும் வலம்புரிசங்கே
பாரிலே நடக்கும் பன்னிரண்டாண்டு அதிசயமே

தொழுது வழிபடும் முனிவரின் சாபமே
கழுகாய்  அமுதுண்டு களிப்புறும் அதிசயமே

காதல் கொண்டு கழுக்குன்றில் தங்கியவரே
வேதங்கள் வணங்கும் வேதகிரி ஈஸ்வரரே

மனநிலை சரியாக்கும் மகத்தான தீர்த்தமே
சினங்களைப் போக்கும் சிங்கார தீர்த்தமே

சுரகுரு மன்னனின் சுயம்பு தலமே
வரங்கள்  வாரிவழங்கும் வள்ளல் தலமே

நோய்களை போக்கிடும் நூதன தலமே
சேய்தனை காக்கும் சுயம்பு தலமே

# 263. ஆட்சீஸ்வரர் - அச்சிறுபாக்கம்

அச்சை முறித்த அச்சுமுறி விநாயகரே
அச்சங்கள் களைந்து அருளைப் பொழிவாயே
தொழில்தடை நீங்கிட தொய்வுகள் அடங்கிட
வழியும் வகுத்து வகைதனை செய்வாயே

உடும்பாய் வந்து உமைஆட்சி செய்தவரே
தடுக்கும் தீயசக்தியை தவிடுபொடி ஆக்குவாயே
உடும்பு வடிவெடுத்து உள்ளத்தை ஆள்பவரே
இடுக்கண் களைந்து எமைஆட்சி செய்வாயே

முக்கண் முனிவரை முன்னின்று காத்தவரே
முக்கண் கடவுளாய் முழுமுதல் பொருளானவரே
இக்கணம் காத்து எக்கணமும் காப்பவரே
அக்கரை பசுமையை இக்கரை காட்டுவாயே

கண்ணுவ முனிவர் கண்ணால் கண்டவரே
மண்ணில் கவுதமர் மனதால் வழிபட்டவரே
எண்ணத்து குழப்பங்கள் எளிதில் கரைப்பாயே
அண்ணலாய் ஆட்கொண்டு அனுதினம் காப்பாயே

http://temple.dinamalar.com/New.php?id=66

# 264. சந்திரமவுலீஸ்வரர் -வக்ராபுரி

முக்காலமும் உணர்ந்த மும்மூர்த்தி முகமே
முக்கண் கொண்ட மூன்றுமுக லிங்கமே

வக்கிரங்கள் அழிக்கும் வக்கிர தலமே
வக்கிரமும் அழகென வக்கிர மூலமே

துன்முகி அழித்த வக்கிரகாளி தலமே
அன்போடு சாந்தப்படுத்திய ஆதிசங்கரர் தலமே

வக்கிர அசுரதங்கை அழித்த வக்கிரகாளியே
சக்கிர எந்திரம் சாகச நாயகியே

இடப்புறம் காகம் கொண்ட வக்கிர சனியே
இடர்களை களையும் இத்தல சனியே

எல்லாம் காக்கும் எம்பிரான் ஈசனே
சொல்லாது காக்கும் சொக்கநாத ஈசனே

சந்திரபிறை கொண்ட சந்திர மவுலீஸ்வரரே
சந்திராமனம் கவர்ந்த சந்திர மவுலீஸ்வரரே

http://temple.dinamalar.com/New.php?id=239

# 265. அரசலீஸ்வரர் -ஒழிந்தாயம்பட்டு

அரச மரத்தடியில் அமர்ந்த லிங்கமே
அரசனுக்கென மானாய் அவதரித்த லிங்கமே

வாமதேவருக் கருளிட வந்த லிங்கமே
காமனை வதைத்த கயிலாய லிங்கமே

மலர்களை உண்ட மானாகிய லிங்கமே
மலர வைத்திடும் மரகத லிங்கமே

ஞானத்தை உபதேசிக்கும் ஞான லிங்கமே
ஞாலத்தைக் கண்காணிக்கும் கால லிங்கமே

தாண்டவ வடிவத்து தாரக லிங்கமே
ஆண்டவ வடிவான ஆளுமை லிங்கமே

ஒழிந்தாயம் பட்டில் ஒளிரும் லிங்கமே
அழியா காவிய அழகு லிங்கமே

ஆணவத்தை ஒடுக்கும் அரசமர லிங்கமே
காணக் கண்கோடி வேண்டும் லிங்கமே

பிறந்தது எதெற்கென  புரிந்தது லிங்கமே
சிறப்பை பாடவே சிந்தைமகிழும் லிங்கமே

http://temple.dinamalar.com/New.php?id=179

# 266. மகாகாளேஸ்வரர் -இரும்பை

கடுவெளிச் சித்தரின் கடுந்தவ ஈஸ்வரரே
அடும்பஞ்சம் தாக்க ஆடும் ஈஸ்வரரே

தவம் கலைக்க தேவதாசி ஆடினாளே
தவமும் கலைய சித்தர் எழுந்தாரே

பஞ்சம் நீங்கிட சிவப்பணி செய்தாரே
தஞ்சம் என்று திருவிழா எடுத்தாரே

ஆடும் சதங்கை அவிழ சரிசெய்தாரே
பேசும் ஏவலுக்கு பெருங்கோபம் கொண்டாரே

சித்தரின் பெருமைக்கு சிதறிய லிங்கமே
புத்தியை புகட்ட வெடித்த லிங்கமே

சித்தரின் பதிகத்தில் சேர்ந்த பாகங்களே
உத்தம சித்தரின் உண்மை ஈஸ்வரரே

குயில் மொழி நாயகி குணவான் தலைவரே
மயில் மகன் முருகனின் தகப்பன் ஆனவனே

அம்பாசுரன் அழிக்க அம்மை மகாகாளியே
அம்மையின் தோஷம்தீர்த்த மகாகாளி ஈஸ்வரரே

http://temple.dinamalar.com/New.php?id=159

# 267. மகாதேவர் -திருவஞ்சிக்குளம்

ஆயிரம் பாடல் பாடியும் நின்னே
அறியாது ஞான் இங்கே உள்ளேன்
வாயினால் பாடி வஞ்சிக்குளம் தேடி
வந்திடும் திவசம் வணங்கிடும் உள்ளம்

சுந்தரர் நோக்கிட சுந்தர ஆனையே
சேரமான் உடன்வரிக செளகர்ய குதிரா
கந்தனும் கணேசனும் அச்சனும் நின்னலே
காத்திட வந்திடும் கயிலாய தெய்வமே

மகாதேவ க்ஷேத்ர மகேச தெய்வமே
மன்னவன் ஸ்நேகித மகிமை கதையே
மகாதேவ மலைநாடே மனசும் சந்தோஷமே
மாலை தலையான மகாதேவ தேவனே

கேரள நாட்டிலே கோவில் கொண்டவரே
கேள்வியும் விடையும் கோலமான ரூபமே
தூரத்து கயிலையே தூமலர் பர்வதமே
துயரத்தைப் போக்கிடும் தோணியே தேவனே

http://temple.dinamalar.com/New.php?id=101

# 268. மகாபலேஸ்வரர் -திருக்கோகர்ணம்

தலையில் குட்டுவாங்கி தலத்தின் கணபதியே
மலையான  சிவனை மண்ணிலே வைத்தகணபதியே
தேவரைக் காக்க திருத்தல கணபதியே
தேவரின் தேவராய் திருக்கோல கணபதியே

கட்டை விரலளவு கருமேனி லிங்கமே
பட்டை திருநீறு பளிச்சிடும் லிங்கமே
எட்டவும் முடியா எழிலான லிங்கமே
குட்டவும் தரையிலே கோவிலான லிங்கமே

பிராண லிங்கத்தைப் பெற்ற கதையே
புராண லிங்கத்தை பெற்ற கதையே
இராவணன் லிங்கத்துடன் இலங்கை சென்றகதையே
தரையிலே இறக்க திருமால்  செய்தகதையே

படைப்பை உருவாக்க பாதாள ருத்திரனே
அடைய முடியா அண்டம் தடுத்ததுவே
ருத்திரன் கோபத்தை பூமாதேவி குறைக்கவே
பத்திரமாய் காதில் பாதையும் தந்தாளே

கோகர்ணம் உருவான காரணக் கதையே
மகாபலேஸ்வர் உருவான மகத்தான கதையே
கர்நாடக மாநில கருத்துள்ள கோவிலே
அர்த்தங்கள் பலபொதிந்த அலங்காரக்  கோவிலே

http://temple.dinamalar.com/New.php?id=501

# 269. மல்லிகார்ஜுனர் - ஸ்ரீசைலம்

மல்லிகையே அர்ஜுனா மலரே எந்தன்
மனதின் குழப்பத்தை மாற்றி விடுவாயே
சொல்லாமல் வாழ்வின் சுமைகளை போக்கி
சுகமான மோட்சம் சோபித்து அருள்வாயே

சாட்சிக்கு கணபதி சத்தியம் பேச
சங்கடம் போக சாத்தியம் செய்வாயே
ஆட்சியின் அரசன் அவரைக் காணவே
ஆனதும் செய்து அவ்வழி காட்டுவாயே

பாதை காடாக பகலும் இரவாக
பாரில் வழிகாட்ட ஒளியும் நீயே
வாதை நோயும் வயதும் படுத்த
வாயிலில் நிற்பதோ வலிமை நந்தியே

நந்தியும் வாகனமாகி நல்லதும் செய்ய
நமச்சிவாய நாமம் நம்முடன் வந்திட
அந்தியும் ஆதியும் ஆனவன் நீயே
அண்டத்து பாவங்கள் அழிக்கும் ஸ்ரீசைலமே

கங்கையின் முழுக்கும் காசியின் வாழ்வும்
கடமை தவறாத நர்மதை  தவமும்
அங்கே செய்யும் ஆயிரம் புண்ணியமும்
இங்கே தரிசிக்க இனிமையாய் கிட்டுமே

அற்றைக்கு இரைதேடும் அவலமும் இன்றியே
அனைத்தும் நீயேயென அனுதினம் உணர
பற்றில்லா வாழ்வை என்னுள் பற்றவைப்பாயே
பரசிவனடி தொழுதிட பரவசம் தருவாயே

http://temple.dinamalar.com/New.php?id=496

# 270. கோணேஸ்வரர்- திரிகோணமலை

ஆயிரம் கால்மண்டபத்தால் அளக்கதான் முடியுமோ
ஆயிரம் நாமத்தால் அர்ச்சிக்கத்தான் முடியுமோ

வட்டம் முக்கோணம் வரையறுக்க முடியுமோ
சட்டமிட்டு உன்னை சதுரமாக்க முடியுமோ

காலத்தால் உன்னை கணிக்கத்தான் முடியுமோ
ஆலகாலமும் உன்னை அழிக்கத்தான் முடியுமோ

கல்வெட்டு நடப்பதை கணித்து சொல்லுமோ
கல்லிலும் மண்ணிலும் கடவுளும் தெரியுமோ

செல்வங்கள் பறிபோனாலும் செழுமை குறையுமோ
இல்லாத இடமும் இங்கேயேதும் இருக்குமோ

மலையைப் பிளந்தாலும் மகத்துவம் குறையுமோ
அலைகள் ஓய்ந்தாலும் ஆறுகாலபூஜை குறையுமோ

எல்லாமே அடங்கினாலும் எல்லாமே இருக்குமே
எல்லாமே இருந்தாலும் எதுவுமே இருக்காதே

உன்னருள் இருந்திட உலகமும் ஆகுமே
உன்புகழ் பாடிட உணர்வது ஆனந்தமே

http://temple.dinamalar.com/New.php?id=1736

# 271. திருக்கேதீஸ்வரர் - மன்னார் மாவட்டம் இலங்கை

அந்நியர் பலர்வந்தாலும் அழியா தலமே
வன்னிமர ஈஸ்வரர் வலிமை அறிவாயே

போர்த்துக்கீசிய படையில்  போகாத பெருமையே
கோர்த்த பாமாலையில் கொண்டாடும் அழகே

ஆங்கிலேயர் அழித்தாலும் அழியா ஆளுமையே
பாங்காய் இலங்கையில் பாதை காட்டியவரே

மண்ணில் புதைத்தாலும் மறையாத மறைபொருளே
கண்ணில் கனவாய் கனவானுக்குத் தெரிந்தவரே

மீண்டும் கோவிலெழுப்ப மீண்டுவந்த மகாலிங்கமே
ஆண்டாண்டு காலமாய் அழியாத ஆனந்தமே

கேடுகள் போக்கிட  கேதுதோஷம் போகுமே
வாடும் மனமும் வளமும் பெறுமே

பாலாவி கரையின் பவித்திர தலமே
தாலாட்டு பாடிட தாளமும் சேருமே

http://temple.dinamalar.com/New.php?id=1730

# 272. புண்ணியகோடியப்பர் - திருவிடைவாய்

விடையாய் கேள்விக்கு விரியும் அழகே
படையாய் காக்கும் பரசிவ பெருமையே
தடைகள் நீக்கிடும் தரணியின் ஒளியே
சடைமுடி தவழும் சாகச விடைவாயே

மறைகள் போற்றும் மகத்துவ உண்மையே
பறையென முழங்கும் பேரொலி ஓங்காரமே
திரையை விலக்கி திசைகள் காட்டுவாயே
இறையாய் விளங்கும் இவ்வுலக விடைவாயே

இருளைப் போக்கும் இனிய சந்திரனே
அருளை பொழியும் அமுத வருணனே
இறுமாப்பை விலக்கும் இலக்கான கயிலையே
மறுப்பே இல்லாத மாசில்லா விடைவாயே

நால்வர் பாடிய நான்மறை விடையே
கால் தூக்கியாடும் காலத்தின் நடனமே
வேள்வியின் மையமாய் வீற்ற வேந்தனே
கேள்விக்கு விடையாகும் கீர்த்திமிகு விடைவாயே

தேவாரப் பாடல்கள் துதிபாடும் தேவரே
சாவா வரம்தரும் சாத்திர தேவரே
பிறவா வரமான பேருண்மை முக்தியே
மறவா வரத்தை அருளும் விடைவாயே

http://temple.dinamalar.com/New.php?id=1093

# 273. அகஸ்தீஸ்வரர் - கிளியனூர்

அகத்தியர் கண்ட அதிசய திருமணமே
அகத்திலே தெரியும் அறிவான நறுமணமே

வலியினைப் போக்கும் மருந்தான அமிர்தமே
வழியினைக் காட்டும் வாகான வாயிலே

நோயினைப் போக்கும் நூதன மருந்தே
சேயினைக் காக்கும் சிறப்பான தாயே

சோழனைக் காத்த சோர்வில்லா வேந்தனே
வாழவும் வைக்கும் வைகறை ஒளியே

சேரமான் சேர்ந்திட சேவகம் செய்தவனே
பாரத்தை குறைக்க பாதை காட்டுபவனே

பாண்டியன் சங்கத்தில் பாடிட  வளர்ந்தவனே
ஆண்டவன் கோயிலாய் ஆங்காங்கே நின்றவனே

கொடியவர் நெஞ்சில் நெருங்காத நிறைவே
அடியவர் குறையை அணுகித் துடைப்பவரே

பாடல் பெற்ற தலங்கள் பாடப்பாட நீளுமே
ஆடல் சிதம்பரத்தின் ஆலயம் கோடியே

எண்ணிக்கை இல்லாத எம்பிரான் பெருமானே
எண்ணத்தில் நிறைந்த என்னருமை பிரானே

http://temple.dinamalar.com/New.php?id=1066

# 274. கேதாரீஸ்வரர் - கேதார்நாத்

உருவம் இல்லாத உணர்வான உண்மையே
அருவமாகி யெங்கும் அண்டமாய் நின்றவனே
எருமை வடிவில் எழிலாய் வந்தவனே
கருமை வடிவான காருண்ய சலங்கையே

பாண்டவர் கண்டிட பாதத்தின் சலங்கையே
ஆண்டவன் எனவும் அதுவும் காட்டியதே
தாண்டவ மூர்த்தியை தடவிய பீமனே
வேண்டவும் பூமிக்குள் விளையாட்டாய் ஒளிந்தவனே

ஆதிசங்கரர் பூஜித்த ஆதிநிலை பிரம்மமே
ஜோதிவடிவாய் இமயத்தில் சோபிக்கும் லிங்கமே
பாதிவடிவில் கொண்ட பார்வதியின் அழகே
வேதியர் போற்றிடும் விரிந்த அண்டமே

பனியில் மூழ்கிடும் பாதையும் மூடுமே
பணியாய் சம்சார அலையும் வருடுமே
அணியாய் சந்திரன் அழகாய் வருமே
துணிவைத் தந்து தோணியும் தருமே

காத்திருந்து பக்தர் கண்டிடும் அதிசயமே
பூத்திடும் கமலம் பிரம்மத்தின் வடிவமே
முக்தியை அளிக்கும் பக்தியைத் தருமே
சக்தியும் அளித்து சங்கடம் தீர்க்குமே

http://temple.dinamalar.com/New.php?id=1668

# 275. பசுபதிநாதர் - நேபாளம்

கரைகளைக் கடந்து காட்டிலே திரிந்தவரே
குறைகளே இல்லாது  கோவிலில் இருப்பவரே
உரைக்க முடியாத உன்னத திருவுருவே
இறையாய் எங்கும் இனிதே இருப்பவரே

நேபாள அழகில் நேர்த்தியாய் அமர்ந்தவரே
பூபாள இராகமாய் புத்துயிர் அளிப்பவரே
பசுவாய் இருப்பேனென்று பறை சாற்றியவரே
அசுரகுணம் அழிக்க அங்கங்கே வருபவரே

நாட்டின் எல்லைகள் நாளும் கடந்தவரே
காட்டின் அழகில் கருத்தும் கொண்டவரே
வீட்டின் ஒளியாய் வீற்று இருப்பவரே
வாட்டங்கள் களைய வந்திங்கு நிற்பவரே

அமெரிக்க மண்ணில் அருளிட வந்தவரே
சுமைகள் போக்க சுகமும் தருபவரே
பாடலாய் தினமும் பவனி வருபவரே
ஆடலாய் அண்டத்தை ஆட்டி வைப்பவரே

# 276. அனேகதங்கநாதர்- கௌரிகுண்ட்

பார்வதி உறையும் பவித்திர தலமே
பார்தனில் உயரிய பரவச தலமே
ஊர்தனில் கண்டிட உலகநாதர் வந்திட
ஆரென்று அறியாது தடுத்த மகனே

காவலுக்கு நின்ற கணபதி தலையை
கோபத்தில் வெட்டிய கௌரி மணாளனே
நம்மகன் இவனென நங்கையும் மொழிந்திட
அம்மகன் தலைபெற யானைமுகம் வந்ததே

அன்றுமுதல் இன்று வரை ஆனைமுகன் காவலே
நின்று அமர்ந்து நித்தம் செயல்களின் மூலவனே
பாடலாய் பாடிட பாமாலை சாத்திட
கூடவே இருந்து குறைதீர்த்த நாயகனே

காதலைச் சொல்லிட காவியம் பாடிட
ஆதரவு தந்திட ஆண்டவனாய் இருந்திட
வேதங்கள் போற்றும் வேள்வியின் நாயகனே
பாதங்கள் தழுவியே பாடிதினம் நிற்பேனே

ஓம் நமச்சிவாய !

https://en.wikipedia.org/wiki/Gauri_Kund

# ஜோதிர்லிங்கம்-12

1- இராமநாதலிங்கேஸ்வரர் -இராமேஸ்வரம்



சிவபக்தன் இராவணன் சிவனடி சென்றிட
அவனியில் தோஷம்நீங்க அனுமனும் கொண்டுவர
நேரம் பொறுக்காது நேர்த்தியாய் இராமனுக்கு
தாரம் செய்தாளே தளிர்மணல் லிங்கம்
ஆதியாய் அமைந்து அண்டம் எங்கும்
ஜோதியாய் பரவிய சுயம்பு லிங்கம்

2- மல்லிகார்ஜுனர் - ஶ்ரீ சைலம்



மகனாய் பிறந்து மல்லிகார்ஜுனை நினைத்து
அகத்தில் தியானம் அனுதினம் செய்து
ஆகாத தொன்றும் அண்டத்தில் இல்லையென்று
சாகாவரம் பெற்று சரித்திர நந்திதேவர்
ஆதியாய் அமைந்து அண்டம் எங்கும்
ஜோதியாய் பரவிய சுயம்பு லிங்கம்

3- குஷ்மேஸ்வரர் -குங்குமணேஸ்வரர்
அவுரங்காபாத்



குங்கும அர்ச்சனையில் கும்பிட்ட லிங்கம்
அங்கத்தில் அழகாய் அரும்பிய லிங்கம்
பார்வதியின் கையில் பவித்திர லிங்கம்
சோர்வை நீக்கிடும் ஜோதிர் லிங்கம்
ஆதியாய் அமைந்து அண்டம் எங்கும்
ஜோதியாய் பரவிய சுயம்பு லிங்கம்

4- பீமாசங்கர் -பூனே




பீமாசுரன் தவத்தில் பிரம்மனும் அருளிட
பீமாசங்கர் பூமியில் பிறந்தே அழிக்க
ஆடாத அமைதியாய் ஆமையும் இருக்க
ஓடாமல் பூனாவில் ஓயாமல் தரிசிப்போம்
ஆதியாய் அமைந்து அண்டம் எங்கும்
ஜோதியாய் பரவிய சுயம்பு லிங்கம்

5- திரியம்பகேஸ்வரர் -நாசிக்



மாயப்பசுவை வதம்செய்த மருவும் நீங்கிட
தீயமுனிவர் எண்ணங்கள் திருத்தவும்  வழிபட
கங்கையின் நீரே கோதாவரியாய் ஓடிட
பாங்காய் அமைந்த பரசிவ லிங்கம்
ஆதியாய் அமைந்து அண்டம் எங்கும்
ஜோதியாய் பரவிய சுயம்பு லிங்கம்

6- சோமநாதர் -குஜராத்



சந்திரன் பெற்ற சாபமும்  நீங்கிட


மந்திரம் சொல்லி மகேசனை வணங்க

வளர்பிறை தேய்பிறை வற்றாத அழகும்

உளமார தந்து உலகம் காத்தலிங்கம்

ஆதியாய் அமைந்து அண்டம் எங்கும்
ஜோதியாய் பரவிய சுயம்பு லிங்கம்

7- நாகநாதர் -குஜராத்



அகந்தையை அழிக்க ஆனந்த மூர்த்தியாய்

அகத்தினில் புகுந்த அதிசய மூர்த்தியாய்

நாத்திகம் அழிந்திட நல்முனிவரும் திருந்திட

ஆத்திகம் வளர்ந்திட அமைந்த லிங்கம்

ஆதியாய் அமைந்து அண்டம் எங்கும்
ஜோதியாய் பரவிய சுயம்பு லிங்கம்

8- மகாகாளேஸ்வரர் -உஜ்ஜயினி



தூஷணன் அசுரனை துவம்சம் செய்திட

வேஷமாய் காளர் வெளியிலே வந்திட

அரக்கனும் அழிந்து ஆனந்தம் பிறந்திட

இரக்கத்தில் இங்கே  இனிமையான லிங்கம்

ஆதியாய் அமைந்து அண்டம் எங்கும்
ஜோதியாய் பரவிய சுயம்பு லிங்கம்

9- ஓம்காரேஸ்வரர் - மத்திய பிரதேசம்



ஓங்காரமாய் என்றும் உலகை காக்கும்

தாங்கியே  என்றும் தாரணி காக்கும்
பாங்காய் பிளந்து பாதை காட்டும்
ஏங்கும் விழிகளுக்கு எழிலாய் காட்டும்
ஆதியாய் அமைந்து அண்டம் எங்கும்
ஜோதியாய் பரவிய சுயம்பு லிங்கம்

10- வைத்தியநாதர் -பீட்




சூரனை அழிக்க சுந்தர முருகனை
வீரனை அனுப்பி வீற்ற லிங்கம்
தீரமாய் அமைந்த திவ்ய லிங்கம்
ஈரமணலும் இணைந்திட எழிலான லிங்கம்
ஆதியாய் அமைந்து அண்டம் எங்கும்
ஜோதியாய் பரவிய சுயம்பு லிங்கம்

11- காசி விஸ்வநாதர் -வாரணாசி




திருமாலே இணைத்த திருஉருவ லிங்கம்
திருநீறுடன் வழியும்  தீர்த்த கங்கை
அருமையாய் இணைந்த அம்மையும் அப்பனும்
முறுவலாய் முளைத்த  முதன்மை லிங்கம்
ஆதியாய் அமைந்து அண்டம் எங்கும்
ஜோதியாய் பரவிய சுயம்பு லிங்கம்

12- கேதாரீஸ்வரர் -கேதார்நாத்



எருமை உருவில் எழுந்தருளிய எம்பிரானே
வெறுமை முழுமை வெட்டவெளியென  இருப்பவனே
கருமை அழகில் கருத்தில் தெரிபவனே
உருவமாய் அருவமாய் உலகில் நின்றவனே

ஆதியாய் அமைந்து அண்டம் எங்கும்
ஜோதியாய் பரவிய சுயம்பு லிங்கம்

ஓம் நமச்சிவாய !